
# கனிச்சாறு



8

## பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்

பாட்டரங்கப் பாடல்கள்

# பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்

(கனிச்சாறு)

**படையல்**

- எதிர்காலத் தமிழின மீட்பர்களுக்கும்
- தமிழீழ விடுதலைத் தலைவர்களுக்கும் மறவர்களுக்கும்
- அயல்நாடுகளில் வாழும் தமிழின மக்களின் முன்னேற்றத்திற்காக ஆங்காங்கு பாடுபடும் தமிழினத் தலைவர்களுக்கும்

**இந் நூற்றொகுதிகள் படையலாக்கப்படுகின்றன.**

– எட்டாம் தொகுதி

| | | |
|---|---|---|
| முழுமையான முதற்பதிப்பு | : | தி.பி. 2043. துலை ( அத்தோபர் 2012 ) |
| நூல் தலைப்பு | : | **பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்** (கனிச்சாறு - எட்டாம் தொகுதி) |
| ஆசிரியர் | : | *பாவலரேறு பெருஞ்சித்திரனார்* |
| வெளியீடு | : | *தென்மொழி பதிப்பகம்*<br>செந்தமிழ் அடுக்ககம்<br>(சி.கே. அடுக்ககம்)<br>மேடவாக்கம் கூட்டுச்சாலை,<br>மேடவாக்கம், சென்னை - 600 100<br>94444 40449 |
| அச்சாக்கம் | : | *தென்மொழி அச்சகம்,*<br>சென்னை - 600 100 |
| உரிமை | : | *தாமரை பெருஞ்சித்திரனார்* |
| பக்கங்கள் | : | 14+186 |
| தாள் | : | படத்தாள் (மேப் லித்தோ 18.6) |
| அளவு | : | தெம்மி (1/8) |
| படிகள் | : | 1000 |
| விலை | : | உரு. 220.00 |

# முன்னுரை

இயற்கை ஓர் ஒழுங்குடையது. நிலம் நெறியான ஓர் இயல்போட்டத்தை உடையது.கதிரவனும் விண்மீனும் ஓர் ஒழுங்கான அசைவை உடையன. புடவியும் பேரண்டமும் அவற்றுள் இயங்கும் பல்லாயிரங்கோடி இயற்கைக் கோளங்களும் சுடர்த் தொகுதிகளும் சிறிதே ஒழுங்கின்றி இயங்கத் தொடங்கினும் உடனே பேரழிவு நேரும்.

இவ்வியற்கை நிலையினைப்போல், இயற்கையுட்பட்ட அனைத்து நிலைகளிலும் அதனதற்குப் பொருந்திய ஓர் ஒழுங்கு கடைப்பிடிக்கப் பெறுதல் வேண்டும். இயற்கை அறிவிக்கும் இவ்வொழுங்கு சிதைவுறின், அச் சிதைவுக்கேற்ப, படிப்படியான அழிவுநிலைகளே நேரும் என்பதில் துளியும் ஐயமின்று.

உயிர்கள் அனைத்தினும் மேம்பட்டு விளங்கும் மாந்த இயக்கமும் அதன் பரும, நுண்ம நிலைகளுக்கு ஏற்ப, ஒழுங்குற இயங்குதல் வேண்டும் என்பதே இயற்கையின் உட்கோளாதல் வேண்டும். ஒழுங்கற்ற பரும இயக்கத்தால் உடல் சிதைவுறுதல்போல் ஒழுங்கற்ற உணர்வியக்கத்தால் உள்ளமும் சிதைவுறும். உள்ளச் சிதைவு மாந்தப் பேரழிவையே தோற்றுவிக்கும்.

உணர்வியக்கத்தின் தலைமைக்கூறு மொழி. மொழியின் படிநிலையுற்ற ஒழுங்கியக்கம் இலக்கணம். எனவே, இலக்கணச் சிதைவு மொழியைச் சிதைப்பதும், மொழிச் சிதைவு கருத்தைச் சிதைப்பதும், கருத்துச் சிதைவு உணர்வைச் சிதைப்பதும், உணர்வுச் சிதைவு உளத்தைச் சிதைப்பதும், உளச்சிதைவு உலகியலைச் சிதைப்பதும் ஒன்றினின்று ஒன்றெழும் தொடர் விளைவுகளாகும்.

மொழியின் மலர்ச்சியே பாட்டு. பாட்டுணர்வால்தான் மாந்தன் மீமிசை உயிருணர்வை எட்டுகின்றான். மற்ற உணர்வுகள் மாந்த உணர்வுகளிலேயே அவனைத் தேக்கி வைத்திருக்கையில், பாடல் உணர்வே புறவுணர்வுத் தளைகளைக் கட்டறுத்து, உலகியல் கூறுகளினின்றும் விடுவித்து, அவனை மீமிசை மாந்த நிலைக்கு உயர்த்து கிறது. பாட்டுணர்வு தாழ்ச்சியுறுதலால் அவன் உணர்வுயர்ச்சிக்குச் சறுக்கல் ஏற்படுகின்றது; உயிர்மைக்கு அயர்வு ஏற்படுகின்றது. இதனால் இயற்கைத் துய்ப்பு கெடுகிறது. உயிர்மை குன்றுகிறது; உலகியல் உணர்விருள் அவனைப் பற்றி

அலைக்கழிக்கின்றது. இவ் வியற்கைப் பொது நிலைகளை யொட்டி, ஒவ்வொருவரும் சில இன்றியமையாக் கலை, இலக்கியக் கூறுகளை உணர்ந்திருத்தல் வேண்டும். இவற்றுள் கலை புறமும் இலக்கியம் அகமும் ஆகும். இலக்கியத்தின் கொடுமுடி பாடல்! பிற அவற்றினின்று விரிந்து படரும் கொடிகளையும் கிளைகளையும் போன்றவை.

ஒழுங்கற்ற ஓசையைவிட ஒழுங்கான ஒலி உயிர்க்கவர்ச்சி உடையது. ஒலியொழுங்கோடு உணர்வும் சேருமாயின் உயிர்க் கவர்ச்சியுடன் உளக்கவர்ச்சியையும் அஃது உண்டாக்கி, அறிவுணர்வு உயர்ச்சியுடைய மாந்தனை அது தன்வயப்படுகிறது. இனி, உணர்வு சேர்ந்த ஒலியொழுங்குடன் ஏற்ற இறக்க அலைவொலிகள் அளவொத்து இணைதலும், பின் அவற்றுடன் ஏதாமொரு மொழி சேர்தலும், அவற்றைப் **பண்** என்றும் **பா**வென்றும் உயர்நிலைப்படுத்துவிக்கும். இப் பண்ணொடு தாளம் சேர்ந்து **இசை**யென்றும், பாவொடு கருத்துச் சேர்ந்து **பாடல்** என்றும் தமிழில் வழங்கும். இனி, பண்ணும் பாடலும் சேர்ந்து நடக்கும் இசைத்தமிழ் என்னும் ஒரு மொழியியல் மரபையே பண்டைத் தமிழ்மொழி முனைவோர் உலகோர் உணர்ந்துய்ய உண்டாக்கித் தந்துள்ளனர். வேற்றுமொழிகளில் இம் மொழியியல் கூறு தோன்றியிருப்பினும் தமிழ்மொழியில் உள்ளதுபோல், அஃது அத்துணையளவு தனித்தோ, சிறந்தோ இயங்கவில்லை யென்பதை அறிவினார் உணர்வர்.

இனி, பாடல் என்பது **பா தழுவிய கருத்துமொழி** என்று பொதுவில் பொருள் தரினும், அதற்கெனப் பல தனிக்கூறுகள் உண்டு. பாடல் இயற்கையாக வெளிப்படுதல் வேண்டும். மனமும் அறிவும் வயப்பட, உணர்வும் எழுச்சியும் மேம்பட்டுப் புறநிலையழுத்தத்தால் பீறிக் கொண்டு வெளியேறும் பாடலிலேயே இயற்கைச் சாயல் படிந்திருக்கும். **மொத்தத்தில் அஃது ஒரு வெளிப்பாடாக இருத்தல் வேண்டுமேயன்றி, வெளிப்படுத்துதலாக இருத்தல் கூடாது**. அவ்வாறு உள்ள நிலையில் அது சிறவாது; நிலைத்து நிற்காது; அதுவன்றிக் காலத்தில் கரைந்து போகும் தன்மையுடையதாக அஃது இருக்கும்.

ஓர் உணர்வு சான்ற இயற்கைப்பாடல் உணர்வுள்ள உள்ளங்களை மட்டுமேயல்லாது, உணர்வற்ற உள்ளங்களையும் அவையளவில் தொடுதல் வேண்டும். அப்பொழுதுதான் அஃதால் உயிர்க்கூறு படிப்படியாக மலர்ச்சி எய்துதல் முடியும். பிற உள்ளங்களை

ஆட்கொள்ளும் நிலையில் அஃது ஒரு மண்வெட்டியைப்போல் பயன்படுதல் வேண்டும். மண்வெட்டி பள்ளம் மேடுகள் நிறைந்த நிலத்திற்கே மிகுதியும் பயன்படுவதாகும். சமமான தரையில் அதன் பயன்பாடு மிகவும் குறைவே. வெறும் சுவைக்காக மட்டுமே வெளிப்படும் பாடல்கள் மாந்த உள்ளுணர்வுகளை வளர்த்து வாழ்விக்காமல் அவற்றை மழுங்கடித்துவிடும்.

பாட்டுணர்வு இயற்கையேயாயினும், அதன் புறக்கூறுகள் உலகியல் சான்றனவே. அப் புறக்கூறுகள் அசை படிந்த சொற்களாலும், சொற்களமைந்த சீர்களாலும், சீர்கள் இணைந்தியங்கும் யாப்பாலும், யாப்புடன் கூடிய அணியாலும், அணிபெற்றியங்கும் கருத்தாலும் விளங்கித் தோன்றுனவாகும். அவையே பாடலுக்குரிய தகுதிகளும் ஆகும். அவை பதினான்கு இன்றியமையாக் கூறுகளைக் கொண்டவை. அவை இவை:

அ. சொற்கள்

1. கருத்தாழம் நிரம்பிய தேர்ந்த சொற்கள்.
2. சுற்றி வளைக்காத சொல்லாட்சி.
3. வளங்கொழுவிய பொருத்தமான சொற்கள்.
4. குறைவான இடைச் சொற்கள்.

ஆ. சீர் அமைப்பு:

1. ஒலிநயத்தால் இணைகின்ற சீர் அமைப்பு.
2. கருத்தின் உணர்வுக்கேற்ற சீர் நீளம்.
3. வகையுளி அல்லது சொற்பிரிப்பால் பாட்டின் ஓட்டத்தையும் அழகையும் குறைக்காமல், முழுச் சொல்லால் அல்லது சொற்களால் அமைந்த சீர்கள்.

இ. யாப்பு

1. பிழையற்ற யாப்பு.
2. கூறப்போகும் கருத்தின் உணர்வை மழுங்கடிக்காத யாப்பு வகை.
3. உணர்வுயர்ச்சிக்கும் கருத்தகலத்திற்கும் ஏற்பத் தெரிந்தெடுக்கப் பெற்ற யாப்பு.

ஈ. அணிகள்

1. எளிதே விளங்கிப் பாடற் கருத்துடன் உடனே பொருந்துமாறு இருக்கும் உவமைகளும் உருவகங்களும்.

2. பாட்டின் பெருமையைக் குறைக்கும் பிற ஆரவார அணிகள் பெரிதும் தவிர்க்கப் பெறுதல்.

உ. கருத்து

1. மயக்கம் தராது உடனே புலப்படும் தெளிவு நிறைந்த கருத்து.
2. பொது மனத்திற்குப் புலப்படாத உயர்ந்த கருத்து.

இனி, முன்னைக் காலத்து, இயற்கை உணர்வின் ஒலியொழுங்குக் கொத்த மரபு தழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பிய ஓரிளம் பெண் பெற்றெடுக்கும், நல்ல அழகிய அறிவறிந்த நிறைமாதக் குழந்தைகள் போன்றவை. சோம்பலாலும் அறிவுக் குறுக்கத்தாலும் மன இழிவாலும் பிதுக்கப்பெறும் இக்காலத்து மரபு நழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பாத பெண்ணுரு சான்ற ஒருத்தி, அரைகுறை முதிர்ச்சியோடு பெற்றெடுக்கும், உறுப்புகள் குறைவுற்று அழகும் அறிவும் குறைந்த, குறைமாதக் குழந்தைகள் போன்றவை. நன்கு வளர்ச்சியுறாத உறுப்பு நிலைகளும், உணர்வு நிலைகளும், அக் குழந்தைகளைக் கவர்ச்சியற்றனவாகவும் நீடிய காலத் தங்குதலற்றனவாகவும் ஆக்கிவிடுகின்றன.

ஒழுங்கற்ற ஓசை இசையாகாததுபோல், ஒழுங்கான கட்டுக் கோப்பற்ற கருத்து வெளிப்பாடும் பாடலாகாது.

பாடல் உள்ளத்தின் மலர்; உணர்வின் மணம்; உயிரின் ஒலி யொழுங்கு.

பாடல் மலரிலிருந்தே உரைநடையென்னும் காய் தோன்றிக் கதையாகக் கனிகிறது.

பாடல் உணர்வு சிதைவுறுமானால் உரைநடையாக அது தத்துகிறது. உரைநடையில் பாடல் உண்டு. பாடலில் உரைநடை இல்லை. பாடல் உரைநடையாவது, மலர் தன் மென்மையையும் மணத்தையும் இழந்து பருமையும் வெறுமையும் உறுவது போன்றதே. அத்தகைய பாடற்போலிகள் தேங்காய் மட்டையின் ஊறலின்று அடித்தெடுக்கும் நார் போன்றவை.

இனி, உண்மையான பாடலை வெளிப்படுத்துபவனே உயர்ந்த பாவலன். **பாவலன் பிறக்கிறான்; பாடல் தோன்றுகிறது.** பாவலன் படைப்பாளன். அவன் உண்டாக்கித் தரும் உணர்வுருவாய கற்பனை மாந்தர்களையே இயற்கை பருவுருவாக உலகுக்குப் படைத்துத் தருகிறது. எனவே உலகின் இயற்கைப் படைப்புக்கே அவன் உணர்வுக் கருவைத் தருபவனாகிறான்.

உயர்ந்த உண்மைப் பாவலனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பத்து. அவை, நுண்ணோக்கு, இயற்கையீடுபாடு, சொல்வன்மை, பாத்திறன், யாப்பறிவு, மொழியறிவு, கற்பனையாற்றல், மனவியல், நடுவுநிலைமை, துணிவு என்பனவாகும். இவை ஒன்றின் ஒன்று சிறந்து விளங்கிப் பாவலன் ஆற்றலைப் படிப்படியாக மிகுவிக்கின்றன. இத் தகுதிகளின் பொருத்தத்திற்கேற்பவே ஒவ்வொருவனின் பாடலும் ஒளிர்ந்து சுடரும்; காலத்தை வெல்லும்; மக்கள் கருத்தினை ஆட்கொள்ளும்; அறிஞர் மதிப்பினைப் பெறும்.

**கனிச்சாறு** என்னும் இப்பாடல் தொகுதி பல நூறு கற்பனைத் தோற்றங்களை உங்கட்குக் காட்டுவதாகும். பல வாழ்வியல் கூறுகள் இதில் சொல்லப் பெறுகின்றன. அறிவுநிலை விளக்கங்கள்,உரிமை உணர்வுகள், மாந்தநிலை உயிரெழுச்சிக் கூறுகள், உள்ளுணர்வெழுப்பும் மெய்யறிவு நிலைகள், மொழியியல், இனவியல், நாட்டியல் புரட்சிக்கு வித்தூன்றும் அடிப்படை வரலாறுகள் முதலியன இப் பிழிவில் கலந்திருப்பதை நீங்கள் சுவைத்து உணரலாம்.

**கனியைப் பிழிந்திட்ட சாறு - எம்**
**கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!**

என்றும்,

**கனிச்சாறு போல்பல நூலெல்லாம் கண்டு**
**காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு!**

என்றும், பாவேந்தர் பாரதிதாசன் தமிழையும் தமிழ்ப் பனுவலின் இனிமையையும் உணர்த்தக் கனிச்சாற்றை உவமை பேசுவார்.

எனவே தமிழும் தமிழுணர்வும் செறிந்து விளங்கும் இப்பாடல் தொகுதிக்குக் **கனிச்சாறு** என்று பெயர் தரப்பெற்றது. மிக அரும்பாடுபட்டு இத் தொகுதித் தொடர்கள் வெளியிடப் பெறுகின்றன.

தமிழினம் தன் நிலைப்பாட்டு மேன்மைக்கு இத் தொகுதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாக.

சென்னை - 5 அன்பன்

14-4-1979 **பெருஞ்சித்திரன்**

# முதல் பதிப்பு - பதிப்புரை

உலக வரலாற்றிலேயே தலைசிறந்தது மாந்த வரலாறாகும். அதனுள்ளும், நம் முதுபழங் குமரித் தமிழிய வரலாறோ, மூல முதன்மையும், உயர் மாந்தத் தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும்.

அத் தென்குமரித் தலைக்கழக(சங்க)க் காலத்து முத்தமிழ் மீமிசை மாந்த வாழ்வியலின் ஏந்திய பண்பு நலன்கள் யாவும், அடுத்து வந்த இடைக்கழகக் காலந்தொட்டே, (பிற்காலக் கீழை) வேத ஆரியத்தின் நுழைவால் தாக்குண்டு சீர்குலையத் தொடங்கின. அதுமுதலே, ஆரிய எதிர்ப்பியக்கங்களும், தொடர்ந்து, பரவல் சிதறலாகத் தமிழகத்தில் தோன்றி வரவே செய்தன. ஆனால், அவை எவற்றுக்கும் ஆரியத்தை அடிதுமித்துச் சாய்த்துத் தமிழ் மீட்பினை நிலைநாட்டித் தரும் மொய்ம்புரம் வாய்க்கவில்லை.

இறுதியாக, சென்ற நூற்றாண்டில், மேலைநாட்டு நல்லறிஞரால் விழிப்புறுத்தப் பெற்றும், **மறைமலையடிகளாரின்** தனித்தமிழ்த் தொண்டினாலும், **பெரியாரின்** இனமானத் தொண்டினாலும் இந் நூற்றாண்டில் புத்துரமூட்டப் பெற்றும், பல மறுமலர்ச்சி இயக்கங்கள் தமிழகத்தில் தோன்றலாயின. அவற்றின் ஒட்டுமொத்த முயற்சிகளின் மெய்வருத்தக் கூலியாக, இன்று **மொழிஞாயிறு பாவாணர்** அவர்களின் மொழிமுதற் புலத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் உரன்வல அறிவாண்மைப் படை கொண்டு முனைந்துழுது, 'தென்மொழி' என்னும் இதழ்வாயிலாக, தேடரிய தெளிவியக்கம் ஒன்று புரட்சிக்கால் ஊன்றி, ஆள்வினையும் ஏற்றுள்ளது.

அத் 'தென்மொழி இயக்க'த்தின், வினை வேளாண்மைக்கென மொழி - இன - நாடு தழுவிய பல்வேறு துறைகளிலும், **பாவலரேறு** அவர்கள், முப்பது ஆண்டுகட்கும் மேலாக, பன்னூற்றுக் கணக்கில் பாடிக் குவித்துள்ள அரும்பாடற் கனிகளையே இங்ஙனம் தொகுத்து, '**கனிச்சாறு**' ஆகப் படைத்துள்ளோம். அவ்வமிழ்தச் சாற்றினை ஆரப் பருகும் எவரும், தமிழியக் குடிசெயலுக்கு வேண்டிய 'வீறெய்தி மாண்ட' வினைத் திட்பம் பெற்று, தொண்டாற்ற முன்வர வேண்டுதலே எமது பெருநோக்கம் ஆகும்.

இப் பாடற் களஞ்சிய வெளியீட்டுத் திட்டம், கோவை மாவட்டத் தமிழன்பர்களின் அருமுயற்சியால் இயல்வதாகி, தி.பி. 2006இல் அறிவிக்கப் பெற்று, தி.பி. 2008 முதல் செயலாக்கங்

கொண்டு, இக்கால் முழுமையாக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்தை வினைப் படுத்திய **தென்மொழி ந. முத்துக்குமரனார்**, அவர் துணைவர் **தென்மொழி மறை. நித்தலின்பனார்**, ஊக்கப்படுத்திய **திரு.க. ஆகுன்றன்**, கொடை நல்கி வலந்தந்த புரவலன்மார் ஆகிய அனைவரும் தமிழின மீட்பு வரலாற்றில் என்றும் நீங்கா இடம்பெறும் சிறப்புடையர். வெல்க எம் தமிழம்! மலர்க நல்லுலகம்!

பணிவுடன்,

*14.4.1979* **'கனிச்சாறு வெளியீட்டுக் குழு'**

# வெளியீட்டுரை

கனிச்சாறு(பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்) தொகுதி முதற்பதிப்பு 1979இல் வெளிவந்தபின், 1995 இல் பாவலரேறு மறைவுவரை வெளிவந்த அனைத்துப் பாடல்களும் தொகுக்கப் பெற்று முழுமைபெற்ற முதற்பதிப்பாக இப்போது வெளிவருகிறது.

முதற்பதிப்பின் முத்தொகுதிகளும் தென்மொழியில் சுவடி : 14; ஓலை : 12 வரையிலும் மற்றுத் தமிழ்ச்சிட்டில் குரல் : 9; இசை: 12 வரையிலும் வெளிவந்த பாடல்கள் அளவிலேயே அமைந்தன. அதன்பின் தொடர்ந்து வந்த இதழ்களின் பாடல்கள் அனைத்தும் துறைவாரியாகப் பிரிக்கப்பெற்று எண்தொகுதிகளாக இப் பதிப்பு நிறைவு செய்யப்பெற்றுள்ளது. மேலும், ஐயா அவர்கள் தம் இளமைக் காலத்தில் எழுதியனவும் இதுகாறும் அச்சுக்கு வராதனவுமான பாடல்கள் சில, பழைய குறிப்புச் சுவடிகளினின்றும் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன; அன்றியும் ஐயா அவர்கள் அன்பர்கள் பலருக்குப் பல்வேறு நிகழ்வுகளையொட்டி எழுதியனுப்பிய பாடல்கள் பல, அவ் அன்பர்களிடமிருந்து பெறப்பட்டும், சில ஐயா அவர்களின் சுவடிகளிலிருந்து எடுத்தும் இணைக்கப்பட்டுள்ளன. (பழைய பாடல்களில் ஒரோவழி இடம் பெற்றிருந்த அயன்மொழிச்சொற்கள் வரிவடிவில் வேறுபடுத்திக் காட்டப் பெற்றுள்ளன.)

மொத்தத்தில், ஐயா அவர்களின் தனி இலக்கியங்களான கொய்யாக்கனி, ஐயை, பாவியக்கொத்து, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, நூறாசிரியம், உலகியல் நூறு, கழுதை அழுத கதை, அறுபருவத் திருக்கூத்து ஆகியன அல்லாத பிற பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பெற்றுப் **'பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தனிப்பாடல்கள் _ அடங்கல்'** என்னுமாறு இப்பதிப்பு முழுமையான பதிப்பாக வெளிவருகிறது. அவ்வகையில் இதுவே முதற் பதிப்பு எனலாம்.

பாடல்கள் அனைத்திற்கும் முன்னைப் பதிப்பின் போக்கிலேயே தொடர்ந்து பாடல்கள் விளக்கக் குறிப்புகள் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இயற்றப்பெற்ற அல்லது வெளிவந்த காலத்தையொட்டி ஆண்டு, மாத முறைப்படி பாடல்கள் வரிசைப்படுத்தப்பட்டிருப்பது இப்பதிப்பின் தனிச்சிறப்பாகும்.

பழைய பாடல்கள் சில எழுதப்பெற்ற காலம் தெளிவாகத் தெரியாமையால், அப்பாடற்குரிய ஆண்டையொட்டி வினாக்குறி யிடப்பட்டுள்ளது.

இக் கனிச்சாறு தொகுதிகளில், தமிழ்,இந்தி யெதிர்ப்புப் பற்றிய பாடல்கள் முதல் தொகுதியாகவும், இன எழுச்சிப் பாடல்கள் இரண்டாந் தொகுதியாகவும் அமைந்துள்ளன; நாட்டுரிமை பற்றிய மூன்றாந் தொகுதியில் நாட்டுரிமை, தமிழீழம் என்னும் பிரிவுகளிலான பாடல்கள் இடம்பெற்றுள்ளன; இளைய தலைமுறை, பொதுமை, இயக்கம் ஆகியன பற்றிய பாடல்கள் நான்காந் தொகுதியாகவும், குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழி மாலை என்னுந் தலைப்புகளில் அமைந்த பாடல்கள் ஐந்தாந் தொகுதியாகவும் கொள்ளப்பெற்றுள்ளன; ஆறாந் தொகுதியாவது காதல், இயற்கை, இறைமை என்னும் பிரிவுகளைக் கொண்ட பாடல்கள்; **தன்னிலை விளக்கம், பெருமக்கள் சிறப்பு, திருநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, மதிப்புரைகள்** முதலியனவாகிய பாடல்கள் ஏழாந் தொகுதியில் வைக்கப் பெற்றுள்ளன. பாட்டரங்கப் பாடல்கள் எட்டாந் தொகுதி.

2009இல் தமிழக அரசு, பாவலரேறு அவர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கிப் பெருமை கொண்டது. அதனால் அவர்தம் படைப்புகளைப் பலரும் வெளியிட வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் வெளிவராத பாடல்கள் பலவற்றையும் நாம் வெளியிட்டால் மட்டுமே மற்றவர்கள் வெளியிட வாய்ப்பு ஏற்படும் என்பதால் நாம் முழுமையாக வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்டது.

எட்டுத் தொகுதிகளையும் ஒரே நேரத்தில் வெளியிடுவதற்குப் பெரும் பொருள் தேவைப்பட்டதால், முன்வெளியீட்டுத் திட்டம் ‘தென்மொழி’யில் அறிவிக்கப் பெற்றது.

தென்மொழி அன்பர்கள் பலரும் முனைந்து தொகை அனுப்பி வைத்திருந்தனராயினும், அத் தொகை, தேவையான எல்லைக்கு மிகவும் குறைவான அளவையே நிறைவு செய்தது. நாமும் அந்தக் காலக்கட்டத்திற்குள் வெளியிட இயலாமல் சற்று காத்திருக்கநேர்ந்தது.

அவ்வாறு காத்திருக்கும் காலத்திற்குள்ளும் எதிர்மம், அச்சுக்கூலி, தாள் இவற்றின் விலையேற்றம் அளவு கடந்து உயர்வும் பெற்றன. அவற்றையும் நெருக்கியே வெளியிட வேண்டியதாயிற்று.

இனி, தமிழ்மக்கள் தம் மொழிநலத்தையும் வாழ்வியற் சிறப்புகள் சீரழிவுகள் ஆகியவற்றையும் உணர்ந்து, அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்து, எழுச்சிபெற்று, இனநலம் பேணி, நாட்டுரிமை பெற்று வாழ்வாங்கு வாழ வகைசெய்யும் கருத்துத் தெளிவும் உணர்வுச் செழுமையும் வாய்ந்த பாடல் திரட்டான இக் கனிச்சாறு தொகுதிகளைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்றுப் பயன்கொண்டு சிறக்கும் என்று நம்புகின்றோம்.

– தென்மொழி பதிப்பகத்தினர்

# கனிச்சாறு எட்டாம் தொகுதி

(பாட்டரங்கப் பாடல்கள்)

## பொருளடக்கம்


| பாடல் எண் | பாடல் தலைப்பு / குறிப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | 'தமிழியக்கம்' எழுச்சி ! (29.3.68இல் மதுரை தியாகராயர் கல்லூரி முத்தமிழ் விழாவில் பாட்டரங்கத் தலைமை யேற்றுப் பாடிய தலைமையுரை) | 3 |
| 2. | திருவள்ளுவர் விழாவா ? பயனென்ன ? (திருவாரூரில் (2.3.69) கும்பம் 16 அன்று தொடங்கி நடந்த திருவள்ளுவர் ஈராயிரமாண்டுக் கிழமை விழாவில் முதல்நாள் நடந்த பாட்டரங்கத்தின் தலைமையுரை) | 10 |
| 3. | பாவேந்தர் பாரதிதாசன் விழாவில் பாப்பொழிவு ! (நீலமலை, பெகும்பகல்லா திருவள்ளுவர் மன்றச் சார்பில், திபி. 2000, விடை கஉ (14-6-69)இல் நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் விழாவில் தலைமைதாங்கி, விழாமன்றத்தினர் விரும்பிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆற்றிய பாப்பொழிவு இது.) | 14 |
| 4. | உலகத் தமிழ்க் கழக முதல் மாநாடு ! (திபி. 2000 சிலை கங-ஆம் நாள் (28.12.69இல்) பறம்புக்குடியில் நடைபெற்ற உலகத் தமிழ்க் கழக முதல் மாநாட்டில் நிகழ்த்திய பாட்டரங்கத் தலைமையுரை) | 27 |
| 5. | தமிழ் மேன்மையுற... ! (6.2.70இல் நடந்த மதுரைத் தியாகராசர் பொறியியற் கல்லூரி முத்தமிழ் விழாப் பாட்டரங்கத் தலைமையுரை) | 42 |
| 6. | பாவேந்தர் பாரதிதாசன் ! (காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் 9.2.73இல் நடைபெற்ற முத்தமிழ் விழாப் பாட்டரங்கில் பாடியது) | 50 |
| 7. | இக்காலத் தமிழ் மாந்தர் ! (வேலூர், ஊரீசுக் கல்லூரித் திரு.வி.க. தமிழ்மன்றம் 1973 பிப்ரவரி 14 இல் நடத்திய முத்தமிழ்க் கலைவிழாப் பாட்டரங்கத்தில் தலைமையேற்றுப் பாடியது.) | 77 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு / குறிப்பு | பக்க எண் |
|---|---|---|
| 8. | திரு.வி.க. வாழ்வில் பெரும்பங்கு கொண்டது மொழித்தொண்டா, பொதுத்தொண்டா ? | 87 |
| | (தி.பி. 2004 நளி17 (2.12.73) இல் ஆண்டு திருவாரூர் திரு.வி.க சிலைதிறப்பு விழாவில், மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர், தமிழக முதலமைச்சர் மு. அருட்செல்வனார், குன்றக்குடியடிகளார்., பாவோகி சுத்தானந்த பாரதியார் முதலியோர் முன்னிலையில் நடந்த பாப் பட்டிமன்றத்தில் நடுவராக வீற்றிருந்து பாடியது) | |
| 9. | அரசுயர் பள்ளி, உரத்தநாடு ! | 99 |
| | (தி.பி. 2006 விடை 17 (31.5.75) அன்று உரத்தநாடு அரசுயர்பள்ளியில் நிகழ்ந்த பாரட்டரங்கத் தலைமையுரை) | |
| 10. | மது ஒழிப்பு ! | 108 |
| | (தி.பி. 2006 விடை 22 (5.6.75)ஆம் நாள் அன்று நடைபெற்ற உரத்தநாடு வட்ட மதுஒழிப்புச் செயற்பாட்டு மாநாட்டில் நடந்த பாட்டரங்கத்தில் தலைமையேற்றுப் பாடியது) | |
| 11. | பாவேந்தர் விழாப் பாட்டரங்கம் ! | 116 |
| | (தி.பி. 2008 விடை 2 (15.5.77) அன்று பகுத்தறிவாளர்கள் சார்பில் வேலூர் நகர மன்ற அரங்கில் நடைபெற்ற பாவேந்தர் பிறந்த நாள் விழாப் பாட்டரங்கத்தின் தலைமையுரை) | |
| 12. | புரட்சிப் பாவேந்தர் விழாப் பாட்டரங்கம் ! | 142 |
| 13. | பாவேந்தர் உள்ளம் ! | 163 |
| | (புதுச்சேரி கம்பன் கலையரங்கத்தில் பாவேந்தர் தமிழ் இயக்கத்தின் சார்பில் 1.6.87 அன்று நடைபெற்ற பாவேந்தர் விழாப் பாட்டரங்கில் தலைமையேற்றுப் பாடியது.) | |
| 14. | பாவேந்தர் பாராட்டரங்கம் ! | 179 |
| | (முத்தமிழ் மன்றம், ஊரகம் (B.H.E.L) திருச்சி, பாவேந்தர் நூற்றாண்டு விழா - 22-1-91) | |

# பாட்டரங்கப் பாடல்கள்

# 1. 'தமிழியக்கம்' எழுச்சி!

(29.3.68 இல் மதுரை தியாகராயர் கல்லூரி முத்தமிழ் விழாவில் பாட்டரங்கத் தலைமை யேற்றுப் பாடிய தலைமையுரை)

எங்கும் நிறைந்த இறைவன் கழல்வாழ்த்திப்
பொங்கும் அவன்றன் புகழ்வாழ்த்தி உள்ளவுயிர்ப்
பூட்டரங்கம் என்ன உலகோர் உவந்தேற்கும்
பாட்டரங்கம் வாழ்த்தவந்த பைந்தமிழ்ச் சான்றோரே!
வீட்டரங்கம் விட்டு வியன்தமிழில் என்னசுவை

காட்டுகின்றார் பார்ப்பமெனக் காணவந்த தாய்மாரே!
"எந்ததமிழ்காண்! எங்கள் இருவிழி காண்! உடல்காண்!
அந்தமிழ்தான் எங்களுடை ஆருயிர்காண்! சீர்காண்!
இயக்கங்காண்! எம்வாழ்வுக் கேற்றங்காண்! பூண்காண்!
மயக்கறுக்கும் உள்ளொளிகாண்! மாய்தலிலாப் பண்காண்!

விடிந்ததுகாண் நற்பொழுதும்! வீறுகிளர்ந் தோம்காண்!
பொடிந்ததுகாண் வெம்பகையும்! பூத்ததுகாண் மாட்சி!
எழுந்ததுகாண் எம்கூட்டம்! எங்கெங்கும் தூள்தூள்!
விழுந்ததுகாண் தாழ்ச்சியெல்லாம்! வீழ்ந்தது காண்மடமை!"
என்றெழுச்சிப் பண்பாடி ஏறுநடை போட்டுவரும்

மன்றஞ்சேர் கல்விவளர் மாணவர்காள்! மாணவிகாள்!
நீட்டுறக்கம் கொள்ளுகின்ற நீணிலத்தோர் நும்பாடல்
கேட்டுறக்கம் கொள்ளாமல் உள்ளம் கிளர்ந்தெழுந்தே
இன்பம் சிலிர்த்தும் இளைத்தவுடல் பூரித்தும்
துன்பம் தொலைக்கின்ற தொல்பெருமை கேட்டுணர்ந்தும்

நாட்டரங்க வாழ்க்கையிலே நல்வடிவம் கொள்ளவைக்கும்
பாட்டரங்கம் ஏறுகின்ற பைந்தமிழ்ப் பாவலர்காள்!
செந்தமிழ்தான் வெல்லாதோ? இந்தவுல குய்யாதோ?
அந்தமிழ்தான் நம்மையர சாளாதோ? ஈங்கிருக்கும்
மாந்தக் குலமெல்லாம் மண்ணுலகில் விண்சுடர்போல்
காந்தத் தமிழால் கனவுலகம் காணாதோ?
எல்லை பொடிந்தே இருங்கடலும் தான்விலகித்
தொல்லை மடிந்த துயர்மாந்தர் எல்லாரும்

எந்தமிழால் கூடி இசைத்தமிழைப் பாடிநடந்
தந்தோம்தந் தோமெனவே தாளங்கள் போடாரோ?
வாழ்க்கைத் துயரெல்லாம் வன்பொடியாய்ப் போகாதோ?
பாழ்க்கை மனப்பூசல் பாழ்வெளிக்கே ஏகாதோ?
சாதிச் சழக்கெல்லாம் சாத்திரத்தின் பூசலெல்லாம்
ஊதிப் புறந்தள்ளி ஓங்குநிலை காணாரோ?
அற்றைப் புலவரெல்லாம் ஆங்கொருங்கே வீற்றிருந்தே
இற்றைப் புவிமாந்தர் ஏற்றமிகக் கொள்ளுதற்கே
காட்டிநின்ற நல்வழியைக் கண்ணெடுத்துப் பாராரோ?
வாட்டும் வறுமைக்கே வல்லுறக்கம் வாய்க்காதோ?
கொட்டிவைத்த முத்தளந்து கொண்டுவந்த பொன்னளந்தே
கட்டிவைத்த நற்புகழால் காணியெலாம் தாமளந்த
பாண்டியனார் மக்கள் பழம்புகழைத் தேராரோ?
மீண்டுமிந்தச் செந்தமிழை மேன்மைப் படுத்தாரோ?
சோழன் அறப்பெருமை சொந்தமெனக் கொள்ளாரோ?
வீழாத தோளான் வியன்சேரன் சீர்த்தியெல்லாம்
பாட்டாகப் பாடிப் பைந்தமிழைப் பாய்ச்சாரோ?

கூட்டாக நின்றியங்கிக் கோடா அறம்வளர்த்துச்
செந்தமிழை வான்தூக்கிச் செங்கதிர்க்கு மேல்நிறுத்தி
இந்தவுல குய்ந்திடவே ஏற்றம் உரைக்காரோ?
வள்ளுவனார் வாய்மை வழிவழிக்கே நின்றிருக்க,
கொள்ளும் உயர்வாழ்க்கைக் கூறுகளை மக்களினம்

ஏற்று வழிநடக்கும் இன்பநிலை வாயாதோ?
வேற்றூர் அயலர்எனும் வேற்றுமைகள் சாயாவோ?
மண்ணாவல் கொண்டுலக மாந்தர் மடிவதையும்
எண்ணாமல் வாய்மையறம் ஏற்காமல் தீமைசெயும்
வல்லரசப் போக்கை வழிமடக்க மாட்டாரோ?
நல்லரசால் இவ்வுலகை நல்லுலகாய் மாற்றாரோ?
தம்மனைவி தம்மக்கள் தம்வாழ்க்கை தாம் என்றே
தம்மனத்துக் கொள்ளும் தருக்கெல்லாம் வீழாதோ?
இவ்வுலக வாழ்க்கைநலம் எல்லாம்எல் லார்க்குமெனும்
அவ்வுரையெங் காதில்தேன் ஆறாகப் பாயாதோ?

காற்றேபோல் செங்கதிர்போல் காருலவும் வானம்போல்
ஊற்றேபோல் மண்ணின் உடைமை பொதுவென்னும்
ஏற்றவுரை என்றன் இருசெவியால் கேளேனோ?
மாற்றத்தை என்றன் மணிவிழிகள் காணாவோ?

பூசிக் கழுவிப் புனுகு குழைத்திட்டுப்
பாசி உடலுக்குப் பட்டுடைகள் தாமணிந்து
செல்வச் செருக்காலே சீர்த்தநடை போடுகின்ற
புன்மைக் கயவோர்கள் போக்கில் அடிநசுங்கும்
கோடான கோடி ஏழைக் குறுமக்கள்
பாடாகப் பட்டும் பசியடங்க உண்ணாமல்
வெள்ளெலும்புக் கூடாக வீதிப் புறங்களிலே
தள்ளப் படுகின்ற தாழ்ச்சிநிலை சாகாதோ?
புண்ணுக்கே அப்பும் பொடிமா முகத்தப்பிக்
கண்ணுக்கு மையிட்டுக் கார்குழலைக் கொண்டையிட்டுப்
பெண்ணுக்கு வாய்த்த பெருமையெலாம் கால்மிதித்துக்
கண்ணாடிச் சேலையினைக் கால்தெரியக் கைதெரியப்
பின்முதுகு காணப் பிறைவயிறு தோன்றிடவே
முன்னுடுத்துப் போகின்ற முச்சந்தி நாகரிகம்
செந்தமிழ்ப் பண்பாட்டின் சீர்மையினைச் சீய்க்காமல்
வந்தவழிப் போகுமொரு வாய்ப்பையிங்குக் காண்பேனோ?

முத்துத் தமிழால் உலகம் முழுதளந்தே
எத்திசையும் பேர்மணக்க எந்தமிழர் வாழாரோ?
பூக்காரோ? வாழ்க்கை புதுக்காரோ? நூல்பலவும்
ஆக்காரோ? செந்தமிழால் ஆகாத தில்லையெனக்
காட்டாரோ? வேற்றுலகம் காணாரோ? எந்தமிழின்
பாட்டாலே இவ்வுலகப் பான்மை உயர்த்தாரோ?
ஊர்ஊராய்ச் சென்று, தெருத்தெருவாய்க் கால்நடந்து
வார்கடலைத் தாண்டி வளர்மலைகள் ஏறிப்போய்
வேற்றுநில மாந்தர் விழிப்புறவே நந்தமிழின்
ஊற்றுப் பெருக்கை உயிராம் கலைப்படைப்பைக்

காட்டி மயர்வறுத்துக் காட்சிநிலை சேர்ப்பாரோ?
ஏட்டில் எழுத்தில் இடைநடக்கும் சொற்பெருக்கில்
எந்தமிழின் ஏற்றம் எடுத்தே முழக்கமிடச்
செந்தமிழின் மாணாக்கர் சேர்ந்தொருங்கே செல்லாரோ?
'என்றே பலவாறாய் எண்ணி வருந்துகையில்,
"இன்றே புறப்பட்டோம்! ஏற்றமினி நாட்டுவம்காண்;
வீணாக்கோம் ஓர்நொடியும்" என்றே விரைந்தெழுந்து
மாணாக்கர் கூட்டம் மடிதட்டி நின்றதுகாண்'
என்னவடா சொல்வேன்? எடுத்தெங்ஙன் பாவிரிப்பேன்?
முன்னர் தமிழ்க்குடிசெய் மூண்ட தவப்பயனோ?
வள்ளுவர்தம் வாய்மை வளங்கொண்டு விட்டதுவோ?

உள்ளுவர்தம் நெஞ்சமெல்லாம் ஊற்றாய்ப் பெருகிற்றோ?
நக்கீரன் சொல்துணிவும் நற்கபிலன் பாத்திறனும்
ஒக்க இணைந்தவர்தம் உள்ளத்துப் பொங்கினவோ?
பாண்டியர்தம் பூட்கை பனிமலைக்கண் நின்றிருந்து
மீண்டுமிவர் உள்ளத்தே மின்னலிட்டுப் பாய்ந்ததுவோ?
சோழர் குடிப்பெருமை சோர்ந்தயிவர் நெஞ்சத்தே
வேழப் பெருமுழக்காய் வீறுபெறக் கிண்டதுவோ?
குன்றத்துச் சேரன் குலையாத வில்மறவன்
மன்றத்தே வந்து மறவிதையை நட்டானோ?
யாங்ஙன் பொருள்விரிப்பேன்? யாப்பில் கருத்தெடுப்பேன்?
தூங்காத எந்தமிழர் தோளுயர்த்தி நின்றுவிட்டால்,
ஆழிமுழக் கென்னாகும்? ஆன்றமலை தூளாகும்!
'வாழிதமிழ்' என்றொலித்தால் வாரிடியும் மேற்பொடியும்!
மின்னல் முறிந்தொசியும்! விண்கோள்கள் அற்றுதிரும்!
துன்னும் ஐம் பூதங்கள் தோற்றே அடிவணங்கும்!
வெங்கதிரும் நுண்பொடியாய் விண்டுதிர்ந்து வான்சிதறும்!
பொங்குணர்வு விண்ணெல்லாம் போர்த்துப் புடைநிரம்பும்!
ஊழி பெருக்கெடுக்கும்! ஓங்காரம் சங்கார்க்கும்!
நாழி தவறுமோ? என்றே நனிமகிழ்ந்து
திந்தோம்திந் தோமெனவே திக்கெட்டும் கால்தாவத்
துந்துபி பாடத் துடிமுழக்கம் ஆர்த்தெழவே
உள்ளம், உயிர், அணுக்கள் எல்லாமும் ஒக்கநின்று
வெள்ளப் பெருக்கேபோல் வீங்கும் பெரும்புயல்போல்
கற்பனை நெஞ்சம் கரைமீறி ஆர்த்ததுகாண்!
சொற்புனைவால் வல்லுணர்வு சூர்த்தல் விளக்குவதோ?
ஆர்த்தெழுந்த மாணவரை ஆரத் தழுவி, எனை
ஈர்த்த குளிர்தமிழால் இஃதுரைப்பேன்; கேளீர்;
"தமிழியக்கம் காணத் தலைப்பட்டீர்! வாழ்வீர்!
சிமிழ்த்தெழுந்த தொல்மறவக் கூட்டமே, சீர்த்துவரும்
வேங்கைக் குருளைகளே! வல்லரிமாக் குட்டிகளே!
ஈங்கெழுந்த பேரெழுச்சி இந்நாள் பெருமுயற்சி!
வீங்கிநின்ற குன்றத்தோள் வீழாமுன் உள்ளத்தே
தேங்கிநின்ற வல்லுணர்வு தேய்ந்து குறையாமுன்,
செந்தமிழை மேல்நிறுத்தி, சீர்த்த பகையழித்தே
எந்தமிழ்ப் பண்பாட்டை, நாட்டை இடைமீட்க
வேண்டி வழுத்துகின்றேன்! வெற்றிவந்து வாய்த்திடுக!
ஈண்டெழுந்து நிற்போம் இணைந்து!"

**1. வாணிகர் என்னுந்தலைப்பில் பாடிய திரு. தமிழண்ணல் பாடற்கு அறிமுகம்**

புத்துணர்வு வேட்பாளர்; புலிப்போலும்
பாய்ந்துபகை வெல்லும் தொண்டர்!
தொத்துணர்வால் பாடிநலம் ஊட்டவல்ல
பாவலர்; செந் **தமிழ அண்ணல்**
கத்துகடல் போல்முழங்கித் தமிழகத்து
வாணிகரை ஒன்று கூட்டி
முத்தமிழ்சேர் நல்லியக்கம் காணுதற்கு
முனைந்திடுவார்; காண்போம் இங்கே!

**2. அரசியலார் என்னுந்தலைப்பில் பாடிய திரு. நா.காமராசு பாடற்கு அறிமுகம்**

செந்தமிழ் காக்கச் சிறைசென்ற வல்லரிமா!
இந்திக்கு முன்னம் எரிபுயல்! இன்றே
விடுதலை வேண்டுமெனில் வெற்புத்தோள் தூக்கிக்
கொடுதலை என்றாலும் கூனாத் தமிழ்மறவன்
நற்காம **ராசன்!** இங்கு நல்லர சாளுநர்க்குப்
பொற்பா புனைவான் பொலிந்து!

**3. செல்வர் என்னுந்தலைப்பில் பாடிய திரு.காளிமுத்து பாடற்கு அறிமுகம்**

தனித்தமிழ்க்குப் பெருந்தொண்டர் தகுகா**ளி**
முத்தென்னும் தனிமுத் தென்பார்.
குனித்தமுது கெழும்வகையில் கூடியுள்ளார்
கொளும்வகையில், கொம்புத் தேன்போல்
இனித்ததமிழ்ப் பேச்சாளர்; எந்தமிழ்க்கே
மூச்சாளர்; இனிமேல் இங்குப்
பனித்தமிழில் தமிழியக்கம் பாடிடுவார்
செல்வருடைப் பங்கு சொல்வார்!

**4. மாணவர் என்னுந்தலைப்பில் பாடிய திரு. மு.இராமச்சந்திரன் பாடற்கு அறிமுகம்**

ஈர்க்கின்ற மொழியாலும் இசைத்தமிழின்
நயப்பாலும் இணைந்து நின்று
சேர்க்கின்ற மொழிநடையால் சொல்முறையால்

செந்தமிழ்ச்சீர் காட்டி இன்பம்
வார்க்கின்ற பாட்டுணர்வில் வல்ல,திரு.
இராமச்சந் திரன்என் பாரை
ஆர்க்கின்ற மாணவர்தம் தமிழியக்க
அணிசேர்க்க அழைப்போம் இங்கே!

**5. இதழாசிரியர் என்னுந்தலைப்பில் பாடிய திரு சு.ப.முருகபாரதி பாடற்கு அறிமுகம்.**

பாவேந்தர் கான்முளையாப் பைந்தமிழ்க்குத்
தொண்டாற்றிப் புலவோர் தம்மைச்
சாவேந்திப் போகாமல் புறங்காத்துத்
தமிழியக்கம் சார நின்று,
மூவேந்தர் தமிழ்காக்கும் சு.ப.முருக
பாரதி வாய் மூண்டு நிற்கும்
பாவேந்தும் இதழாளர் செவிகளோடு
நம்செவியும் பயன்பெ றட்டும்!

## தலைவர் முடிவுரை

பாவலர்கள் தமிழியக்கம் பாடக் கேட்டீர்!
பைந்தமிழின் பேருணர்வு கொண்டிருப்பீர்!
ஆவலுறப் பெற்றிருப்பீர்! அகத்தே வாழும்
அன்னைமொழி காத்திடுவீர்! தமிழ்க்கே என்றும்
காவலிருக் கின்றார்கள் தமிழ்மா ணாக்கர்!
கட்டளைக்குக் காத்திருப்பார்! தமிழியக்கம்
மேவலுற வளர்ந்திட்டால் மேன்மை பொங்கும்!
மீமிசைசேர் மாந்தரினம் தோன்றும் இங்கே!

மாணவர்கள், வாணிகர்கள், அரசாள் வோர்கள்
மக்களிடைப் பேசுகின்ற பேச்சா ளர்கள்
மாணொக்கும் இதழாளர் செல்வர் எல்லாம்
மங்காத தமிழியக்கம் வளர்ப்பா ராயின்
தூணெனவே செந்தமிழும் உலக மன்றில்
துலக்கமுறக் கால்கொள்ளும்! வளமுற் றோங்கும்!
வீணரென வாழாமல் பயன்சேர் வாழ்க்கை
விளைத்திடுக! எல்லார்க்கும் விளையும் இன்பம்!

கல்விவல்ல சான்றோர்கள் கருத்தால் காக்க!
கருத்துவளம் மிக்கோர்கள் நூலால் காக்க!
செல்வவள முற்றவர்கள் செழிக்கச் செய்க!
செய்வினைகள் விரும்பிடுவார் பொறுப்பை ஏற்க!
சொல்வளங்கொள் பேச்சாளர் ஊர்கள் தோறும்
சோர்வின்றிப் பொழிந்திடுக! புரிவீ ராயின்
வெல்வழியும் தொலைவிலில்லை! தமிழி யக்கம்
விரைந்துலகில் மறுமலர்ச்சி கூட்டும் நன்றே!

# 2. திருவள்ளுவர் விழாவா? பயனென்ன?

[திருவாரூரில் (2.3.69) கும்பம் 16 அன்று தொடங்கி நடந்த திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழாவில் முதல்நாள் நடந்த பாட்டரங்கத்தின் தலைமையுரை]

பேரன் புடைய பெரியோரே! தாய்மாரே!
சீரன்பு கொண்டிருக்கும் மாணவச் செல்வங்காள்!
பாட்டரங்கம் ஏறவந்த பாவலர்காள்! அன்பர்காள்!
கூட்டிருக்கும் ஆவி குழைய வணங்குகிறேன்.

இங்கு, திரு வள்ளுவரின் ஈரா யிரமாண்டு
பொங்கி நிறைந்தவொரு பூரிப்பால் நம்முள்ளம்
விம்மும்; புளகமுறும்; வெற்றி விழாவெடுக்கும்!
எம்மூரும் எந்நாடும் எவ்வினமும் வள்ளுவரைத்
தம்மூரான் தம்நாட்டான் தம்மினத்தான் என்று கொள்ளும்
பெற்றித் திருமான், பெறலரிய மெய்ப்புகழோன்,
வற்றியநம் வாழ்க்கை வளம்பெருக்கும் நல்லாசான்,
நல்லறத்தின் வித்து, நடுவூர்ப் பழுத்தமரம்!
இல்லறத்தைக் காத்த எழில்தந்தை, நற்செவிலி,
ஆட்சி வகுத்த அறவாணன், செந்தமிழ்க்கு
மாட்சி கொடுத்துயர்ந்த மாப்புலவன், பாட்டிறைவன்,
கல்விக் கதிரோன், கருத்துக்குச் சொல்லுழவன்,
பல்துறைக்கும் உள்ளொளியால் பாட்டுரைத்த செம்புலவன்,
தன்பெயரைக் கூறாத் தனித்தகையோன், கல்விவள்ளல்,
அன்புரையால் தீமை அறக்கடியும் நன்னெஞ்சன்,
ஆழ்ந்தகன்ற பேரறிவால் ஆன்ற முதல்நூலான்,
காழ்த்த அறிவுமணி, கங்குகரை யற்றகடல்!

அன்ன பெரும்புலவர்க் கான்ற திருவிழவில்
என்னை, சிறியேனை, எற்றுக்கும் பற்றாத
துன்னுஞ் சிறுதுரும்பைத் தூணென்று கொண்டதுபோல்
மன்னும் பெருவிழவின் மன்றத் தலைவனெனக்
கொண்டு புகழ்கொண்டீர் கூற்றிற் குறைபொறுப்பீர்!
தொண்டேஎம் வாழ்வெனலால் தோல்வியும்எம் வெற்றியன்றோ?
வாழுந் தமிழ்க்குலத்தீர்! வாழ்க்கை பலகோடி!
சூழுகின்ற வாழ்க்கையெலாம் சோற்றுக்கே என்போம் நாம்!

நல்லறங்கள் செய்யோம்; நலந்தேடி நாம்போகோம்,
வல்லமற நெஞ்சால் வருந்துயருக் காட்பட்டோம்!
ஈட்டலெல்லாம் தீநெறியே! ஈவதெல்லாம் தீநெறிக்கே!
நாட்டலெல்லாம் பொய்யுரையே! நாடலெல்லாம் போலிகளே!

மெய்யுரைக்கச் சொல்லிடுவோம்; மெய்பேச நாம் விரும்போம்!
பையுறைக்குள் பைவைத்துக் காசைப் பதுக்கிடுவோம்!
தொண்டைக் குழிநிறைந்து துப்பித் தொலைத்தாலும்
அண்டையயல் உள்ளார்க் கணுவளவும் நாம் கொடுக்கோம்!

பட்டென்றும் சீமைப் பருத்தித் துணியென்றும்
கட்டிக் கிழித்தாலும் கட்டாது போனாலும்
இல்லாத ஏழையர்க்கோர் கந்தையினை ஈந்தறியோம்!

கல்லாத நூலில்லை; கண்டஅறம் பல்கோடி!
என்றாலும் நாமோ இருந்தபடி யேயிருப்போம்!
குன்றாத செல்வம்! குலையாத நல்விளைவு!
தெய்வங்கள் கோடி! திருவிழா பல்கோடி!
மெய்யாக எண்ணுங்கள்! மேன்மை அடைந்தோமா?
என்ன நிலையால், என்ன நிகழ்ச்சியினால்
என்னபடி நாமுயர்ந்தோம் என்றே உரைப்பீர்கள்?
நாம்பெற்ற நாகரிகம் எல்லாம் அயல்நாட்டார்
தாம்கண்டு ஈந்த தவப்பயனா இல்லையா?

நாளிரவாய்க் கண்விழித்தும் நல்லவுணா வுண்ணாதும்
ஆளரவங் காணா நடுக்காட்டில் ஆன்றலைந்தும்
கண்டளித்த நற்பொருள்கள் அல்லால்நாம் கண்டதென்ன?
பெண்டளித்த இன்பமும் பிள்ளைப்பே றும்அல்லால்
நாம்கண்ட தென்னவென நாட்டுதற்கு வல்லோமா?
ஆம் கண்டோம் என்றொன் றறைதற்கே உண்டென்றால்
அன்பும் அறனுமல்லால் வேறென்ன? ஆய்ந்தறிவீர்!
இன்பமெல்லாம் இவ்விரண்டே என்றே குறள்முழங்கும்!
பண்பும் பயனுமதாம் என்னும் பழநூற்கள்!

இத்தகைய அன்பெங்கே? இற்றை அறமுண்டா?
பொத்தகத்துள் அல்லாமல் போக்கினிலே பண்புண்டா?
எங்ஙன் பயன்கிடைக்கும்? ஏனிவ் விழிந்தநிலை?
உங்கள் மனமழுந்த எண்ணி உரைத்திடுங்கள்!
வள்ளுவரைக் கொண்டாடி வான்முட்டப் பேசிடுவோம்!
கொள்ளளவே அவ்வுரையை நம்முளத்துக் கொண்டோமா?

நூலெங்கே? நூல்கள் நுவன்றே அறமெங்கே?
கோலெங்கே? நேர்மைக் குணமெங்கே? பண்பெங்கே?
மெய்யெங்கே? வாழ்வென்னும் மேன்மைச் சிறப்பெங்கே?
வெய்ய கொடுவாழ்க்கை! வீணான பொய்வாழ்க்கை!
ஒவ்வொருவர் இல்லத்தும் ஒவ்வொருவர் உள்ளத்தும்
இவ்வினா நிற்கட்டும்! இன்பத் தமிழ்எங்கே?

மெய்வருந்த நாமுழையோம்! மேலோட்ட வாழ்வறிந்தோம்!
பொய்யஞ்சா நெஞ்சும் புளுகுரைக்கும் நாவுமல்லால்
இன்றைக்கு மீந்ததென்ன? ஏன்இம் மறவாழ்க்கை!
அன்றைக்கு யாத்த அறநூல் திருக்குறள்தான்!
ஆனாலும் அந்த அறநூல் உரைத்தவற்றை
ஏனோ மறந்தோம்; இனைய நிலைக்கிழிந்தோம்!
செப்பவாழ் வென்றுரைத்தோம்; செப்பமுற்று வாழவில்லை!
ஒப்புரவு கூறினோம்; நாம்காண ஒப்பவில்லை!

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை நன்றென்றோம் நாம்செய்ய எண்ணவில்லை!
அல்லவை தேய அறம்பெருகும் என்றுரைத்தோம்!
சொல்லியவை நூலிலுள; வாழ்விற்குச் சோறென்றோம்!
ஒல்லும் வகையால் அறவினைகள் ஓம்பென்றோம்!
சொல்லும் வகையெல்லாம் பொய்சொல்லி வாழுகின்றோம்!
ஓம்பும் ஒழுக்கம் உயிரென்றோம்; அம்மாவோ
தீம்புச் செயலே ஒழுக்கமெனத் தேர்ந்துவிட்டோம்!
வெஃகாமை வேண்டும் பிறன்பொருளென் றோதினோம்!
அஃகாவென் றங்காந் தலைகின்றோம் செல்வமெனில்!

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை உயிர்க்கென்றோம்; ஆனாலும்

நம்பால் ஒருவன் நடையாய் நடந்தாலும்
இம்மி யளவும் எடுத்தீய ஒப்புகிலோம்!

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவென்றோம் என்றாலும்
பத்துருபாத் தாள்களைநான் நூறாக்கு வேனென்றால்
ஒத்தவன்பின் ஓடி ஒருநூறு தாள்தந்தே
ஏமாறிப் பல்லிளித்தே இல்லம் திரும்புகின்றோம்!
நாமாறிப் போனோம்; நமதுள்ளம் மாறியது!

நாகரிக ஆர்ப்பரிப்பில் நல்லுளத்தை மாய்த்து விட்டோம்!
ஈகம் அறிந்தோம்; இரப்புமேற் கொண்டோம்;
குடிமை நலனழித்தோம்; கூட்டுணர்வை விட்டோம்;
அடிமை மனங்கொண்டோம்; ஆளுடைமை நீக்கி விட்டோம்;
வள்ளுவனார் யாத்தளித்த வாய்மைத் திருக்குறள்போல்
வெள்ளம்போல் நூல்கள் விளங்கக் கற்றாலும்
நம்கீழ்மை நம்மைவிட் டிம்மி நகரவில்லை;
நம் மான நல்லுணர்வு நாற்றுத் துளிர்க்கவில்லை;

அன்புடையீர் என்சொல் அழல்போற் பாய்ந்தாலும்
மன்பதையுள் நாம்விட்ட மாண்பை நினையுங்கள்
ஓர்மின் குறளை! உணர்மின் பொதுநோக்கு!
பார்மின் உலகம்! பழிதுடைமின்! மக்கட்கே
தொண்டு புரிமின்! துடைமின் துயரங்கள்!
பண்டு மொழிந்த நலங்கள் பலகோடி!
எண்ணம் புதுக்குமின்! இன்பம் பெருக்குமின்!
பண்ணும் புதுமையினும் பண்டைப் பழமையினும்
நல்லவற்றைத் தேர்மின்! நயன்மை கடைப்பிடிமின்!
அல்லவற்றை நீக்குமின்! அன்புணர்வை வித்துமின்!

- இன்ன விளைவுக்கு எருப்போலும் நற்கருத்தைக்
கன்னல் தமிழால் கவின்பெறவே கூறுதற்குப்
பாவலர் இங்கே பலர்வந்து நிற்கின்றார்
ஆவல் பெருக அருந்தமிழ்த்தேன் பெய்வார்கள்!
நல்லமைச்சு சொல்வார்; நயன்பெறவே ஆசிரிய
வல்லாண்மை கூறுவார்; வாய்மைச்சான் றோர் விரிப்பார்
நண்பர் உழவர் நறுங்காத லர்துறவி
என்னுந் தலைப்பெடுத்தே எந்தமிழிற் பாவடிப்பார்
இவ்வரிய பாவிருந்தை இங்கிருக்கும் பாவலர்கள்
ஒவ்வொருவ ராய்ப்படைப்பார் உண்பீர்! அவர்நாவில்
தவ்வி அமர்வாளெந் தாய்!

# 3. பாவேந்தர் பாரதிதாசன் விழாவில் பாப்பொழிவு!

(நீலமலை, பெகும்பகல்லா திருவள்ளுவர் மன்றச் சார்பில், தி.பி. 2000, விடை கஉ (14-6-69)இல் நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் விழாவில் தலைமை தாங்கி, விழாமன்றத்தினர் விரும்பிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆற்றிய பாப்பொழிவு இது.)

பேரன்பு மிக்க பெரியோரே! தாய்மாரே!
ஈரத் தமிழால் எனைவர வேற்ற
பெகும்ப கல்லா வள்ளுவர் மன்றத்துத்
தகுதமிழ் அன்பரீர்! தமிழ்நலம் சான்ற
பேரா சிரியரீர்! புலவரீர்! வணக்கம்.

பாரதி தாசன் நினைவு விழாவிது!
இவ்விழா விற்கெனைத் தலைமை ஏற்றிட
ஒவ்வி அழைத்த உழுவலன் புடையோர்
அனைவர்க் கும்என் அகம்நிறை நன்றி!
இனைய நல்விழா எந்தமிழ் நாட்டில்
ஊர்தொறும் நடைபெறும் காலம் எதுவோ?
பார்தொழும் பாரதி தாசனார் பாநலம்
சிறுவர் வாயிலும் பயிலும்நாள் எதுவோ?
அதுவே தமிழர் விழிப்புற்ற காலமாம்.
அதுவே தமிழ்த்தாய் அரசுசெய் நாளாம்.

பாரதி தாசனைப் பலரறிந் திருக்கலாம்.
பாரதி தாசனார் பாடலின் திறத்தைச்
சிலரறிந் திருக்கலாம்; சிலர்க்கவர் யாரெனத்
தெரியா திருக்கலாம்! உண்மை என்னெனில்,
பாரதி தாசனார் பைந்தமிழ்ப் பாக்களை
ஊரறி யும்படி விட்டுவிட் டோமெனில்,
மூவா யிரமாண்டு முக்காடு போட்டுச்
சாவா மலும், இரு கண்விழி யாமலும்
தூங்கிக் கிடக்கும் தமிழனின் தொடையில்
கயிறு திரிப்ப தெப்படி? அதன்பின்
வயிறு கழுவுவ தெப்படி நாமெலாம்?

- என்றே ஆரியப் பார்ப்பன முதலைகள்
பாரதி தாசனார் பாடிக் குவித்த
இலக்கக் கணக்கான பாடலை எல்லாம்
திட்ட மிட்டுப் பரவாமல் தடுத்தன.
தில்லிக் கவைதாம் தெரியா திருக்கக்
கொல்லைக் கதவை இறுக்கிப் பூட்டின!

இருபதாம் நூற்றாண் டெல்லை வரைக்கும்
பாரதி யாரே **'மகாகவி'** என்று
காவடி எடுத்துக் 'காழ்காழ்' என்றன.
பாரதி யாரைநாம் பழித்திட வில்லை;
பாரதி யாரை, நாம் பகைக்கவும் இல்லை!
பாரதியார் ஒரு பார்ப்பனன் என்பதால்
பாரறி யும்படி செய்தனர் பார்ப்பனர்,
அப்படிச் செய்திட ஆரியப் பார்ப்பானுக்
கெப்படி முடிந்தது என்கின் றீர்களா?
செப்படி யாட்டம் குறளி மாயங்கள்
அவன்அறி வானா? என்கின் றீர்களா?

அப்படி ஒன்றும் அறிவிலான் அலன்அவன்!
இப்படிப் பட்ட அறியாமை யெல்லாம்
தமிழனுக் கிருக்கும் தாழிட்ட சொத்துகள்!
பார்ப்பான் திறமையோ தனிப்பட்ட திறமை!
ஆர்ப்பரிப் பென்பதோ அணுவிருக் காது!
கொப்படிக் குரங்காய்க் குந்தி யிருப்பான்!
இப்படிப் பட்டதோர் நிலையெதிர்ப் பட்டால்
தப்படி யாக அடித்துத் தள்ளுவான்.
கடுகைக் குன்றெனக் கதைத்துத் தள்ளுவான்.
குன்றைக் கடுகெனக் குறைத்துக் காட்டுவான்.
தரையில் கிடப்பதைத் தலைமேல் வைப்பான்.
தலைமேல் வைத்ததைத் தரையில் கிடத்துவான்.

பொய்யும் புரட்டும் போட்டுக் கலந்து
செய்வதை எல்லாம் செய்துவிட் டிதுதான்
தெய்வத் திருவுளம் எனச்சொல்லி நம்மை
நம்பவும் செய்வான்; தான்நம்ப மாட்டான்;
வெம்பச் செய்வான் இனத்தையும் மொழியையும்!

இப்படிச் செய்திட எவையவன் கருவிகள்
தெரியுமா? உங்கட்குத் தெரியினும் சொல்லுவேன்!
புராண வேதங்கள் புகன்ற பொய்க் கதைகள்!
சடங்குகள்! சாதிச் சழக்குகள்! மதங்கள்!
செய்தித் தாள்கள்! வானொலி நிலையம்!

பொய்த்துத் தள்ளப் போதா வா, இவை?
இத்தனைக் கருவியும் அவனுக்குச் சொந்தம்!
செத்த தமிழன் பிழைப்ப தெப்படி?
அத்தனைத் தமிழனும் அவன் சொல்லும் பொய்களை
ஒத்துக் கொண்டுதான் ஒன்றிரண் டன்று
மூவராயிரம் ஆண்டுகள் முடங்கிக் கிடந்தான்!
நாவால் உரைக்கவும் உளமுயிர் நடுங்கும்!

பாரதி தாசனார் பாட்டுகள் ஆரியர்
வேரை அறுப்பன! விளைவைத் தடுப்பன!
வேதப் புரட்டுகள் தலைவெருட் டுவன!
புராணப் புளுகினைப் புதைத்து மூடுவன!
சாதிக் கொள்கையைச் சாகடித் திடுவன!
மதப்புரட் டுகளை மாய்த்துத் தொலைப்பன!
மூடக் கொள்கைக்குத் தீமூட் டுவன!
தமிழனுக் குணர்வைத் தந்திடும் தணல்அவை!
அமிழாக் கொள்கையை ஆர்க்கும் முரசவை!
வளைந்த கூனை நிமிர்த்தும் வகையின!
குலைந்த அவன்றன் குலத்தை இணைப்பன!
தமிழ்மொழிக் கவை எரு! தாழ்ச்சிக்கு நெருப்பு!
அமிழ்ந்த புகழ்ச்சியை அகழ்ந்த, மண் வெட்டிகள்!

பாரதி தாசன் பகர்ந்த மொழியிது :.

**‘நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்**
**நான் நான் நான்’**

பாரதி தாசனார் உரைத்த சூள்இது :.

**‘எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்**
**தமையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்**
**தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்**
**செத்தொழியும் நாளெனக்குத் திருநாள் ஆகும்’**

பாரதி தாசனார் நெகிழ்ந்துரைத் ததுஇது:.

'செந்தமிழே! உயிரே நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!
நைந்தா யெனில் நைந்து போகுமென் வாழ்வு'

தமிழனைப் பார்த்துச் சாற்றிய மொழியிது.

'தமிழனே! இதுகேளாய். உன்பால்
சாற்ற நினைத்தேன் பலநாளாய்!'
கமழும்உன் தமிழினை உயிரென ஓம்பு!
காணும் பிறமொழிக ளோவெறும் வேம்பு
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு!
நம்முரி மைதனைக் கடித்ததப் பாம்பு! (தமிழனே)

வஞ்சகர் வந்தவர் தமிழால் செழித்தார்;
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்;
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்;
நாமுயர்ந்தோம் இந்நாள் அவரஞ்சி விழித்தார்! (தமிழனே)

தனித்தியங் கும்தன்மை தமிழினுக் குண்டு!
தமிழே ஞாலத்தின் தாய்மொழி பண்டு;
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு! (தமிழனே)

பாவேந்தர் சாற்றிய ஆணை மொழியிவை;

தாயின்மேல் ஆணை தந்தைமேல் ஆணை
தமிழக மேல் ஆணை!

தூயஎன் தமிழ்மேல் ஆணையிட்டே நான்
தோழரே உரைக்கின்றேன்.

நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்

ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்.

தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய்தடுத் தாலும் விடேன்.

எமைநத்து வாயென எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும் தொடேன்.

ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்!

ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்
குவப்புடன் நான் சேர்ப்பேன்.

பாவேந்தர் பாடிய பள்ளி எழுச்சி!

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன்முன் னேற்றம்

கண்டறிவாய்! எழுந்திருநீ;
இளந்தமிழா, கண்விழிப்பாய்!
இறந்தொ ழிந்த

பண்டைநலம் புதுப்புலமை
பழம்பெருமை அனைத்தையும்நீ
படைப்பாய்! இந்நாள்

தொண்டுசெய்வாய்! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
துடித்தெ ழுந்தே!

உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில்
அடைகின்ற வெற்றியெல்லாம்
உன்றன் வெற்றி!

அயராதே! எழுந்திருநீ!
இளந்தமிழா அறஞ்செய்வாய்!
நாம டைந்த

துயரத்தைப் பழிதன்னை
வாழ்வினிலோர் தாழ்மையினைத்
துடைப்பாய் இந்நாள்!

செயல்செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
சீறி வந்தே!
வாழியநீ! தமிழ்த்தாய்க்கு வரும்பெருமை உன்பெருமை
வயிற்றுக் கூற்றக்

**கூழின்றி வாடுகின்றார் எழுந்திருநீ இளந்தமிழா**
**குறைத விர்க்க**

**ஆழிநிகர் படைசேர்ப்பாய்! பொருள்சேர்ப்பாய்! இன்பத்தை**
**ஆக்கு விப்பாய்!**

**ஊழியஞ்செய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும்**
**உணர்ச்சி கொண்டே!**

**உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு வருந்தீமை உனக்குவரும்**
**தீமை அன்றோ?**
**பிணிநீக்க எழுந்திருநீ இளந்தமிழா, வரிப்புலியே,**
**பிற்றை நாளுக்**
**கணிசெய்யும் இலக்கியம்செய்! அறத்தைச்செய்! (விடுதலைகொள்**
**அழகு நாட்டில்!**
**பணிசெய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும்**
**பழநாட் டானே!**

**எதுசெய்ய நாட்டுக்கே எனத்துடித்த சிங்கமே!**
**இன்றே இன்னே**
**புதுநாளை உண்டாக்கித் தமிழ்காப்பாய் புத்துணர்வைக்**
**கொணர்வாய் இங்கே!**
**அதிர்ந்தெழுக! தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும்**
**அழகு காப்பாய்**
**இதுதான்நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாம்**
**எழுக நன்றே!**

புரட்சிப் பாவலர் புகட்டிய மறப்பால்
குறட்டை விட்ட தமிழரின் குரலையும்
வறண்ட நெஞ்சையும் நனைத்ததும் தமிழர்
அரண்டு விழித்தனர்; ஆர்த்தெழுந் துருமினர்!
மறந்த தமிழ்நலம் பேணத் தொடங்கினர்!
இறந்த பழம்புகழ் தமிழ்மேல் ஏற்றினர்!
ஆரியப் பகையின் அடிவயிறு கலக்கினர்!
ஏறிய அவர்திறம் இறக்கிக் காட்டினர்!
விழித்த தமிழரின் வீறுற்ற செவிகளில்
மொழித்திறம் மிக்க பாவலர் மொழிந்தார்;

**‘குறியுற்ற மறவர்களே இப்பணியை முடிப்பதற்கோர்**
**கூட்டம் வேண்டும்!’**

**'பேச்சாலும் எழுத்தாலும் பாட்டாலும் கூத்தாலும்**
**பிறர் உவக்க**
**ஓச்சுகவே மணிமுரசு! வீதியெலாம் வரிசையுற**
**உலவா நிற்பீர்!**
**ஏச்சாலும் எதிர்ப்பாலும் வருகின்ற இன்னலுக்குள்**
**இன்ப வெள்ளம்**
**பாய்ச்சாதோ பொதுத்தொண்டு? பைந்தமிழ்க்குச் செயுந்தொண்டு**
**பருக வாரீர்!'**

தமிழியக்கம் எனும் ஒரு நூல் தாமியற்றித் தமிழர்களைத்
தணலச் செய்தார்!
நமில்நாமே ஒருவரையிங் கொருவரெனும் விழுக்காட்டில்
தாழ்த்திச் சென்றால்
நமிலுயர்வு காண்பதென்றோ? நந்தமிழீர் தமிழொன்றால்
நாமி ணைந்தால்
உமியன்றோ பெரும் பகையும்? உகக்காதோ பெருவெற்றி?
உணர்வீ ரென்றே

பாவேந்தர் குரல்கொடுத்தார் பல பாக்கள் குயிலேட்டில்
பாடித் தீர்த்தார்!
ஈ.வே.ரா. தொடங்குபகுத் தறிவியக்கக் கொள்கைகளை
எடுத்துக் காட்டிச்
சாவேந்துந் தமிழர்க்கோர் கலங்கரையின் ஒளிவிளக்காய்
நின்றார்; அன்னார்
ஈவேந்தி நிற்பதனால் தமிழர்நிலை இமிஇமியாய்
ஏறிற் றின்றே!

தூங்கிக் கிடந்த தமிழர் தோள்களை
வீங்க வைத்தன பாவலர் பாக்கள்!
வாடிக் கிடந்த தமிழர் நரம்பினில்
ஓடிக் கிளர்ந்தது செந்தமிழ்க் குருதி!
அடைத்துக் கிடந்த தமிழரின் உணர்வுகள்
புடைத்துப் பொருமின பாவலர் பாவால்!
பாரதி தாசன் புரட்சிப் பாவலன்!
ஊரதிர் வுண்டதே அன்னவன் உணர்வால்!
மூலை முடுக்கெலாம் அதிர்ந்த தவன்குரல்!

**'வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!**
**கையி ருப்பைக் காட்ட எழுந்திரு!**

**குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?**
**மறிக்கொணாக் கடல் போல் மாப்பகை மேல்விடு!**

**நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு.**
**பொன்மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்!**
**மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!**
**செந்தமிழ்ச் சொல்லால் செயலால் தடம்பெருந்**
**தோளால் தொடங்குக பணியை'**

**'சிறுத்தையே வெளியில் வா!**
**எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்**
**புலியெனச் செயல்செயப் புறப்படு'**

**'மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று**
**இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!**
**தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!**
**மீசையை முறுக்கி மேலே ஏற்று!**
**விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!**
**நகைப்பை முழக்கு, நடத்து உலகத்தை!'**

சொற்களா இவை? இல்லை; உணர்வுப் பிழம்புகள்!
எஃகுக் குழம்பில் ஈட்டியைத் தோய்த்துக்
கருங்கற் பாறையில் எழுதிய வரிகள்!
வருங்கா லத்துத் தமிழினத் துக்கும்
தாங்கா வெப்பத் தணல்வரிப் பாக்கள்!
ஈங்கிது நாள்வரை எழுந்திடா உணர்வு!
தமிழர் மடிதுயில் நீக்கிய வெந்தணல்!
இமிழா தவருளத் தேற்றிய மறவரி!
தமிழனின் ஒவ்வொரு குருதித் துளியினும்
அமிழ்ந்து கிடந்த ஆர்ப்பும் உணர்வும்
பாரதி தாசனார் பாக்களால் விம்மின!
வீறு பெற்றன! கோழைமை வீழ்த்தின!
இன்ன எழுச்சியைப் பார்ப்பனர் ஏற்பரா?
என்ன திறமை எனினும், அத் திறமை
ஆரிய நலன்களுக் குதவினால் அன்றோ

'சீரிது; நேரிது; சிறந்த நூலிது;
முன்னோர் எவரும் மொழிந்திடாக் கருத்திது;

பின்னோர் எவர்க்கும் பிழைபடா நூலிது;
இதனை யாத்தவர் மாந்தராய் இருக்கார்,
அதனினும் உயர்ந்த தேவரே ஆவர்!''
என்னும் பல பொய்யுரை இட்டுக் காட்டி
'இன்னும் பல பேறுகள் எய்துக' என்று
வாழ்த்தி வணங்கிப் பொன்பொருள் கொடுத்து
வீழ்த்துவர் அன்னவர் காலடி? -ஆனால்
பார்ப்பன மரத்தைப் பலகையாய் அறுக்கும்
யாப்பன் றோ, இப் பாவலர் யாப்பு?
ஆரிய மெழுகை அனலிட் டுருக்கும்
சீரிய தன்றோ அன்னவர் செழும்பா!
'புராண'ப் புளுகைப் படைப்படை அரியும்
கருக்கரி வாளன் றோ, இவர் பாக்கள்!
பன்னூ றாண்டாய்ப் பலபட ஏய்த்தவர்
வல்லூறு கண்ட எலியாய் நடுங்கினர்.
ஆகவே அவர்பா அமுக்கப் பட்டது!
வேகும் நெஞ்சொடு விலக்கப் பட்டது.
என்னினும் தமிழர் இவரால் விழித்தனர்.
பொன்னினும் பொருளினும் மேன்மை என்றனர்!
பாவேந்தர் செய்த ஆரியப் புரட்சி
சாகுந் தமிழரைச் சாகாது காத்தது.
ஆரிய இருளைச் சீய்த்த பாவலர்
நேரிய பிறிதொரு புரட்சியும் செய்தார்.
குமுகாய நிலையினில் தமிழர்கள் குமைந்த
ஒரு புடைத் தீமை உணர்த்திய பின்னை
அரசியல் வலிவால் வடவர்பால் அடிமை
யுற்றுக் கிடந்த தமிழரை நோக்கினார்.
எற்றித் திரிந்திடும் வடவரைச் சாடினார்.

பாவேந்தர் உள்ளம் பாடுதல் கேண்மின்:

> **"ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ**
> **அல்லல்கள் வரின் ஏற்பேன்**
> **ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு**
> **உவப்புடன் நான் சேர்ப்பேன்."**

> **"செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க**
> **நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்**
> **வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று**
> **குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!"**

**"எரிகின்ற எங்களின் நெஞ்சுமேல் ஆணை!**
**இனியெங்கள் ஆட்சியிந் நாட்டிலே"**

பாரதி தாசனார் கண்ட கனவிது:

**"என் தமிழ் அன்னை துன்பம் நீங்கித்**
**தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்.**
**என் தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்**
**துலங்குதல் காண்பேன்; தமிழர்**
**நலங்காண் பேன்நான் நானில மீதிலே."**

மொழிவிடு தலையும் இனவிடு தலையும்
பழியிலாப் பாவலர் விரும்பிய கொள்கை!
பாவேந்தர் முழக்கம் தில்லி ஆட்சியை
நடுங்க வைத்தது; வடவரின் நரம்புகள்
புடைத்துத் தெறித்தன.

**"வீடெலாம் விடுதலை முழக்கம் மேவுக!**
**ஊரெலாம் விடுதலை முழக்கம் உயர்க!**
**காலையில் விடுதலை முழக்கம் காட்டுக!**
**உண்ணுமுன் விடுதலை முழக்கி உண்க!**
**உறங்குமுன் விடுதலை முழக்கி உறங்குக!**
**சிங்கக் குகையினில் நரிக்கிடம் தந்தோம்**
**செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம்**
**பொங்கும் உணர்வால் எழும்தமி ழரசு**
**போர்தொடங் கிற்றுக் கொட்டடா முரசு"**

- என்று பாவலர் முரசு கொட்டினார்;
முடியர சேற்றவர் கலங்க முழங்கினார்;
அடிமை விலங்குகள் தெறித்து விழுந்தன;
விடுதலை உணர்வு எங்கணும் படர்ந்தது;
ஆயினும் விடுதலை அரும்பிட வில்லை;

அடிமையைத் தமிழர் சாய்க்குநாள் எதுவோ,
மிடிமையைத் தமிழர் போக்குநாள் எதுவோ,
தமிழரைத் தமிழரே காட்டிக் கொடுக்கும்
கயமைத் தனங்கள் மாயுநாள் எதுவோ,
தமிழ்முன் னேற்றம் தனக்கெனத் தமிழன்
இணைந்து நிற்கும் இன்பநாள் எதுவோ,
சாதிப் பேய்கள் தலைவிரித் தாடும்
மடமைத் தமிழகம் தன்னிருள் நீக்கிப்

பகுத்தறி வென்னும் பகலவன் நல்லொளி
முகிழ்த்துப் படரும் மொய்ம்புநாள் எதுவோ,
மாந்தர் மனத்தின் ஏற்றத் தாழ்வுகள்
தீண்டத் தகாத குமுகாயக் கொடுமைகள்
எத்துப் புரட்டுகள் எந்தமி ழகத்தை
விட்டு விலகின என்னுநாள் எதுவோ,
அதுவே தமிழக விடுதலை நாளாம்!
அதுவே ஆரியம் கெடுதலை நாளாம்!
அந்தநாள் நோக்கிய அரசியற் புரட்சியைச்
செந்தமிழ்ப் பாட்டால் பாவேந்தர் செய்தார்.
முன்அவர் செய்த செந்தமிழ்ப் புரட்சியும்
பின்அவர் செய்த அரசியல் புரட்சியும்
இடையிற் செய்த குமுகாயப் புரட்சியும்
கடைசியிற் செய்த இலக்கியப் புரட்சியும்
தமிழுள் ளளவும் தமிழர்க்குத் துணையாம்.
தொழிலா ளர்க்கெனப் பாடிய பாக்கள்
எழில்கொழிப் போடே உளம்இயக் குவன!

பாவேந்தர் கேட்பார்:

**"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும், ஆறு**
**தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி**
**நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்**
**நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்?**
**கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்**
**கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?**
**பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்**
**போயெடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?"**

- எப்படிக் கேள்விகள்? செந்தமிழ்க் கணைகள்!
எத்தனைப் பேர்களின் நெஞ்சைத் துளைத்தன?
ஒவ்வொரு சொல்லுமோர் கோடரிப் பிளப்பு!
எத்தனைப் பேர்களின் கல்மனம் பிளந்தது?
பாட்டின் வரிகளில் எத்துணை இரக்கம்?
எத்துணை அக்கறை? எத்துணைத் துடிப்பு?

மேலும் கேளுங்கள்:

**"சித்திரச் சோலைகளே! - உமைநன்கு**
**திருத்தஇப் பாரினிலே - முன்னர்**

எத்தனைத் தோழர்கள் ரத்தம் - சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே!

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே - உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

தாமரை பூத்த தடாகங்களே! .உமைத்
தந்த அக் காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே!

மாமிகு பாதைகளே! உமை இப்பெரு
வையமெலாம் வகுத்தார் - அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்.

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே, சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ? - இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?''

புதியதோர் உலகு செய்யப்
புறப்பட்டார் பாவின் வேந்தர்!
பொதுமையங் கிருந்த தன்புப்
புனிதமங் கிருந்த தாட்சிப்
புதுமையங் கிருந்த தெல்லாம்
புத்துணர் வுற்ற செய்தி!
எதனையிவ் வுலக மெல்லாம்
ஏற்குமோ அதனைச் சொன்னார்!

இதுவரை தமிழில் இல்லா திருந்த
புதிய நினைவுகள்! புதிய கருத்துகள்!
யாப்பிலும் மொழியிலும் எளிமையைக் காட்டிப்
பாப்புனைந் திட்ட பாவலர்க் கரசர்!
சீதையை இராமனைப் பாடிய பாட்டன்று!
கோதையை மாலினைப் புனையும் கதையிலை!
தமிழ்க்குமு காயம் உலகினில் தழைக்கவும்

தமிழர்க் குள்ளொளி ஏற்றவும் பாடிய
புரட்சிக் கருத்துகள் புனைந்த பாக்கள்!
மருட்சிக் கொண்டவர் மயக்கம் தெளியச்
செந்தமிழ் தன்னைக் கருவியாய்க் கொண்டு
எந்தமிழ் நாடு செழிக்கப் பாடினார்.

இத்தகு பாவலர் ஏற்றம் போற்றிட
எத்தகு புலவரும் ஏற்றம் பெற்றிலர்.

புரட்சிப் பாவலர் நினைவு விழாவில்
திரட்சி யான செந்தமிழ்ச் சொல்மழை
பொழிவித் திடற்கே புலவர் இருவர்
வந்திருக் கின்றனர்; அவரையும் வாழ்த்துவேன்!
எந்தமிழ் மொழியின் ஏற்றம் விளக்கிட
அன்னர் தம்மையும் யானழைக் கின்றேன்.
என்றன் முன்னுரை இதனொடு முடித்துப்
பின்னுரை யாக இனும்சில பேசுவேன்.
பாட்டுரை செய்கெனக் கேட்டுக் கொண்டதால்
பாட்டால் பாவேந்தர் திறத்தைப் பாடினேன்.
கேட்டுக் கொள்ள அணியமாய் இருந்தே
இறுதி நொடிவரை இருப்பீ ராயின்
உரையால் பின்னுரை சொல்வேன்; யாவரும்
இரையாதிருந்து விழாச்சிறப் புறும்படி
அமைந்து கேட்க அன்பினால் வேண்டுவேன்.

(பின்னுரை உரையாக நிகழ்த்தியதால், இங்குத் தொகுப்பில் இடம்பெறவில்லை.)

# 4. உலகத் தமிழ்க் கழக முதல் மாநாடு

(தி.பி. 2000 சிலை கஙு-ஆம் நாள் (28.12.69இல்) பறம்புக்குடியில் நடைபெற்ற உலகத் தமிழ்க் கழக முதல் மாநாட்டில் நிகழ்த்திய பாட்டரங்கத் தலைமையுரை)

**முன்னுரை:**

பெயரா வியற்கைப் பெருவானும், வானத்(து)
அயரா தியங்குகின்ற ஆர்கதிரும் விண்மீனும்
திங்களும் கோளும் திரிகின்ற செம்போக்கும்
எங்குமோர் ஆற்றல் இருக்கின்ற மெய்ம்மையும்
உள்ளத் திருத்தி உறுபொருளை ஆங்கிருத்தித்
தெள்ளத் தெளிந்தநறுந் தீந்தமிழாய் ஊற்றெடுக்கும்
வெள்ளத் துணர்வை விரித்துரைப்பேன்; செம்புலவர்
கொள்ளத் தகுமளவோர் குன்றிமணி ஆனாலும்
செந்தமிழ்த்தாய்க் கேற்ற செழும்பொன் மணியென்றே
எந்தமிழைப் பேண இறைஞ்சி வணங்குகின்றேன்!

பேரறிவு சான்ற பெரியோரே! தாய்மாரே!
ஆர்தலுறும் செந்தமிழ அன்பரீர்! நல்லிளைஞீர்!
பாட்டரங்கம் ஏறவந்த பாவலர்காள்! நும்மை - தமிழ்ப்
பூட்டறுக்க வந்தவர்போல் போற்றிவர வேற்கின்றேன்.
செந்தமிழைப் பாடுதற்குச் சேர்ந்தொருங்கே வீற்றிருப்போம்
எந்தமிழை நாம்பாட என்னதிறன் பெற்றுவிட்டோம்?
அன்றுதிரு வள்ளுவனார் ஆன்ற திருக்குறள்போல்
ஒன்றுசெய்ய வல்லோமா? ஓங்குயர்ந்த நற்சிலம்பு
மேகலைபோல் தெய்வத் திருமூலர் மந்திரம்போல்
சாகாப் பெருநூல்கள் சாயலிலே நாமொன்று
செய்திறன் பெற்றோமா? இல்லெனினும் செந்தமிழ்க்கே
வெய்யபகை தானும் புறத்தே வெருட்டினமா?

செந்தமிழ்க்கு வந்தபகை மாய்த்திடவே சேர்ந்தமெனத்
தொந்தோம்தொந் தோமெனவே துள்ளிக் குதிப்பதல்லால்
எந்தப் பகைகளைந்தோம், எல்லாரும் உட்பகைத்தோம்!
சொந்த நலங்கண்டோம்; சொந்த இனமறந்தோம்!
வாழ்கதமிழ் வாழ்கதமிழ் என்றபடி வாழ்த்திவிட்டு
“வாழ்வதற்கே என்ன வகைகிடைக்கும்” என்றெண்ணி
நன்மை கிடைக்குமெனில், நாற்காசு சேருமெனில்,

புன்மையொடு புன்மை புகுவதுபோல் தொண்டுசெய்யப்
போகின்றோம் நாமும்; புதுமையென்ன நாட்டிவிட்டோம்!
ஆகும் வினையில் அணுவளவும் செய்தோமா?

எத்தனையோ கட்சி, கழகமென்றும் மன்றமென்றும்
எத்தனையோ பேச்சு! எழுத்தெல்லாம் தீப்பறக்கும்;
எத்தனையோ தீர்மானம்! எத்தனையோ மாநாடாம்!
அத்தனைக்கும் இன்னபயன் என்றே அளந்துரைக்க
யாரேனும் உள்ளாரா? யாக்கைக்கு மெய்யென்று
கூறி அழைத்ததுமே கூற்றை உதைத்துவிட்டோம்
என்ற தருக்கும் செருக்கும் இருக்கட்டும்!
இன்றளவில் நாம்கண்ட தென்ன அளவிருக்கும்!
பொய்ம்முட்டை ஒன்றால் புளுகுமுட் டையல்லால்
மெய்ம்முட்டை என்ன விளைவிருக்கும், மேதகையீர்!

நாடெல்லாம் மாநாடு! நாள்தோறும் பாட்டரங்கம்!
வீடெல்லாம் ஊரெல்லாம் வெற்றி விழாக்கூட்டம்!
வானொலியில் பாட்டரங்கம்! வாய்கிழிக்கும் சொல்லரங்கம்!
வீணுக்குக் கைத்தட்டல்! வீழ்கின்ற பூமாலை!
"ஆகாகா! செந்தமிழ்க்கே ஆக்கமிது ஆக்கம்" எனும்
வேகாத பேச்சுகள்! வீழ்த்துகின்றோம் பல்கோடி!

நீண்டதொரு துண்டு! நிலம்பெருக்கும் மெல்வேட்டி!
ஆண்ட தமிழ்ச்சொல் அடுக்கிவைக்கும் சொற்சுவர்கள்!
என்னே தமிழ்வளர்ச்சி! என்னே புகழ்மாலை!
என்னே தமிழன் இருந்தநிலை! - என்றுரைத்துத்
தம்முதுகில் தாமே தடவித் தருங்காட்சி!
அம்மவோ! ஒன்றிரண்டா! அன்றாட வாழ்க்கையிது!

இன்றிந்தச் சூழலில்தான் நாமும் இருந்துகொண்டு
வென்று குவிப்பதுபோல், வெற்றிபல சாய்ப்பதுபோல்
பாட்டரங்கம் கூட்டிவிட்டோம்; பாடுகின்ற நேரமிதா?
நாட்டரங்கில் நம்பெயரோ நல்லடிமை! நாம்கொண்ட
வல்லடிமைத் தன்மைக்கு நல்லுணர்வு வந்துவிட்டால்
இல்லடிமை நீக்கி எழுந்ததோள் தாழுமுன்னர்
வேட்டரங் கங்காண வேண்டுமல்லால் இஃதைப்போல்
பாட்டரங்கம் பாடிப் பயனென்ன பைந்தமிழீர்!

பாவேந்தர் போர்ப்பாட்டுப் பாடியது போதாதா?
மூவேந்தர் கூட்டிவைத்த முக்கழகம் போதாதா?
எல்லாம் இருந்தும்நாம் இன்னுமெழ வில்லையெனில்
நல்ல அடிமைநலம் நாம்சுவைத்து வந்தகுறை!
இன்றுமுதல் நாம்செய்யும் எந்தவினைப் பாட்டுக்கும்
ஒன்று, பயன் வேண்டும்; இன்றேல் ஊமைத் தனம்வேண்டும்!
"பாட்டரங்கம் கேட்டவொரு கோழை புடைத்தெழுந்தான்;
நீட்டுவாள் தூக்கியவன் நெற்றிக்கு முன்னிறுத்தி
ஏடா தமிழ்ப்பகையே! என்னநீ சொல்கின்றாய்!
கூடா? உயிரா? எதுவேண்டும் கூறென்றான்".
என்றோர் கதைநிகழ்ந்தால் இத்தகைய பாட்டரங்கால்
முன்னோர் விளைக்கா முழுப்பயனும் வாய்த்த தென்பேன்!
அவ்வுணர்வை ஊட்டாத பாட்டாலே ஆவதென்ன?
இவ்வரங்கும் அந்த எழுச்சியிலோர் எள்முனையே!

இக்கால் இலக்கியமும் சொற்பொழிவும் எங்ஙனென்றால்
முக்காலும் பொய்ப்படியில் மூழ்கிக் கவிழ்த்தளந்து
மெய்யாய் அளந்தமென மெய்யடித்துச் சொல்லுவதாம்!
உய்யாது நின்றென்ன? உய்ந்தென்ன? போயென்ன?
நம்பிழைப்பு நன்றாய் நடந்துவரும் என்றாலோ
கும்பிக்குக் கேடில்லை என்றறிந்து கொண்டாலோ
எப்படியும் பாடலாம்! எப்படியும் பேசலாம்!
எப்படியும் தாளில் எழுத்தெழுத்தாய்த் தீட்டலாம்!
அப்படியே நாமுமதை ஆமாமாம் என்றுசொல்லி
ஒப்படிக்கு மேல்படியில் ஒன்றிரண்டு மேலேறி
நின்றால் பிழைக்கலாம்; நிற்கவில்லை என்றாலோ
என்றுமே ஏற்றம் இருக்காதே! இன்றெல்லாம்
மானத்தை விட்டால் மறுநொடியில் நற்பதவி!
ஏனம் நிறைய, இடுகின்ற வாய்நிறைய
வெண்சோறு! வெள்ளைஉடை! வேளைக்குப் பால்பழங்கள்!
மண்தரையில் கால்படுமா? போக மகிழுந்து!
வேறென்ன வேண்டும்? தமிழால் எதுவேகும்?
சேறு குழம்பிடுமா? செந்நெல் விளைந்திடுமா?
ஆகவே தமிழ்வளர்ச்சி என்பதெல்லாம் ஆர்ப்பரிப்பே!
ஈகம் பொதுத்தொண்டிங் கென்பவெல்லாம் ஏய்ப்பதுவே!
இன்றைக் கிருக்கும் நிலையிதுவே! இந்நிலையிற்
குன்றைத் தகர்க்கக் குறிவைத்துப் பாடுகின்றோம்!
பொய்புளுகு மூட்டைகளைப் பொத்தலிட்டுப் பார்க்கின்றோம்!
செய்பயனை நம்பியுள்ளோம்! செல்வத்தை எண்ணவில்லை!

தன்னறிவும் தன்திறனும் அல்லால் துணையில்லை
முன்னறிவும் உண்டெனினும் உட்பகையும் மூள்வதுண்டாம்!
ஏதோ முனைந்துவிட் டோம்! ஏதோ இணைந்து விட் டோம்!
காதோடு காதாகக் கசமுசப்புக் கேட் டாலும்
ஒன்றுபட்டு விட் டோமென் றூர்முழங்க வந்து விட் டோம்!
நன்றுபட வாழ்வோம்நாம்; அல்லால் நயந்திரவோம்!

எங்களுடை வாழ்வும் இனிமேல் வருஞ்சிறப்பும்
தங்குதமிழ் ஒன்றே! தனித்துணையும் அஃதொன்றே!
எங்கள் தனிக்குலமும் எங்கள் பெரும்புகழும்
மங்காத் தமிழ்ஒன்றே! மாயாத வாழ்வதுவே!
அந்தத் தமிழே அனைத்துச் சிறப்புக்கும்
உந்துகின்ற வல்விசையாய், ஊறும் அரத்தமாய்
நாடி நரம்பாய், நலமிக்க ஊன்தசையாய்
ஆடி அசைக்கும் அரசாணைக் கொம்பொலியாய்
வீற்றிருக்கக் காண்கின்றோம்! வேறியக்கம் கண்டதில்லை;

மாற்றுரைகள் கேட் டதில்லை! மண்ணில்வே றாக்கமில்லை;
வாழ்க்கைவே றில்லை; வளத்துக்கு வாய்பிளக்கோம்!
பூழ்க்கைப் புகழ்ச்சிக்குப் பொக்காய்ப் பறந்துவரோம்!
செல்வம் செருப்பு! சிறப்புக்குச் செக்காகோம்!
வெல்வ துறுதி! விளை(வு)அதற்கு மேலுறுதி!
அந்த உறுதிக் கணிவகுத்த பாவலர்யாம்!
எந்தப் புகைக்கும் பகைக்கும் இடமில்லை!

எந்தமிழின் ஏற்றம் எடுத்துரைக்க வந்தோம்யாம்!
செந்தமிழின் எண்மைச் சிறப்புரைப்பார் எண்புலவர்!
இந்தவுல கத்தரையில் ஏந்தும் மொழிக்கெல்லாம்
செந்தமிழே **தாய்மைச்** சிறப்புப் பெறுவதுவாம்!
செந்தமிழே **தூய்மைச்** செழுமை பெறுவதுவாம்!
செந்தமிழே **நல்லினிமை** சேர்ந்து வழங்குவதாம்!
செந்தமிழே வேறு கலவாத் **தனிமை**யதாம்!
செந்தமிழே என்றும் **புதுமை** சிறப்பதுவாம்!
செந்தமிழே என்றும் **பழமை** திகழுவதாம்!
செந்தமிழே சொல்**வளமை** சேர இயல்வதுவாம்!
செந்தமிழே நல்**லிளமை**ச் செவ்வி கொழுவியதாம்!

அந்த வகையெல்லாம் அறிவும் அழகுமிகக்
கூறி உணர்வு கொளுத்துதற்கே பாட்புலவர்

ஏறி இருக்கின்றார் பாட்டரங்கம்! இன்னோர்
உரைக்கும் தமிழ்ப்பாட்டில் உண்மை இருக்கும்!
கரையற்ற நீர்க்குக் கரைபோல யாப்பிருக்கும்!
இன்பத் தமிழிருக்கும்! ஏற்றம் குறைந்தார்க்குத்
தெம்பிருக்கும்! சொல்லில் தெளிவிருக்கும்! நீங்களெல்லாம்
கேட்கின்ற பாட்டரங்கில் கேளாச் சுவையிருக்கும்!
வேட்கின்ற செந்தமிழும் வீறிவரும் நல்லுணர்வும்
சொல்லுக்குச் சொல்லிருக்கும்! சொல்லில் பொருளிருக்கும்!
பல்லுடைக்கும் எங்கள் தனித்தமிழ்தான் என்பார்க்கே
ஏற்ற மருந்திருக்கும்! எம்வழியில் அன்னவரை
மாற்ற வகையிருக்கும்! மற்றவர்க்கும் வாய்ப்பிருக்கும்!
மற்றே இனியிருக்க வேண்டுவதென் னென்றாலோ
சற்றேனும் நீங்கள் அமைந்துசெவி சாய்ப்பதுவே!

பாவலர்கள் பாடி முடித்தவுடன் பாட்டரங்கில்
ஆவலுடன் நீங்கள் அமைதியுடன் வீற்றிருந்தால்,
பின்னுரையில் செந்தமிழர் பீடுறவே இன்றுவரை
மன்னுந் தமிழ்மொழியின் மாண்புரைக்க எண்ணுகின்றேன்.
அன்பர்கள் எல்லாம் அமர்ந்திருக்க வேண்டுகின்றேன்.
இப்பொழுது செந்தமிழின் எண்மைச் சிறப்புரைக்க
ஒப்பும் புலவோரை ஒவ்வொருவ ராய் அழைப்பேன்.
முப்பாலும் ஆய்ந்த முதுபுலவோர் வீற்றிருக்கத்
தப்பாமல் வாழுந் தமிழ்!

**பின்னுரை:**

பாவலர்கள் எல்லாரும் பைந்தமிழைப் பாய்ச்சி விட்டார்;
நாவளங்கள் காட்டிவிட்டார்; நல்லுணர்வைத் தூண்டி விட்டார்!
செந்தமிழின் எண்மைச் சிறப்பினையும் பாடலுற்றார்
எந்தமிழ்க்கே மேலுஞ்சீர் ஏற்றிவிட்டார்; உங்களொடு
யானுஞ் செவிமாந்தி இன்பத்தில் ஆழ்ந்திருந்தேன்!
தேனருவி பாய்ந்ததுபோல், தீங்குழல்யாழ் நல்லிசை போல்
பாட்டருவி ஆடினோம்! ஆதலினால் பைந்தமிழீர்
நாட்டும் முடிவுரையும் நாகம்போல் காதுபுகும்!
ஆனாலும் சிற்சிலசொல்! ஆங்கொருவர் ஈங்கொருவர்
போனாலும் போகட்டும்! போக்கற்றார் கேட்கட்டும்!
முன்னுரையைக் கேட்டு முடிவுரையைக் கேளாதார்
என்ன பயனும் இலராகச் சென்றிருப்பார்!
செந்தமிழின் எண்மைச் சிறப்புரைத்த பாவலர்கள்

தந்த கருத்தில் தாராத சிறப்புசில
காட்ட விருக்கின்றேன்; காதலினால் இஃதுரைப்பேன்
நீட்டுகின்றேன் என்றாலும் நேயமொடு கேட்க!

**தாய்மை**

இமிழ்கடல் நல்லுலகின் இற்றை இயல்பால்
தமிழ்க்கன்று; மங்கையர்க்கே தாய்மைச் சிறப்பில்லை.
கன்னியரும் வந்து கருத்தடைசெய் காலமிது!
மன்னுதமிழ்த் தாய்மை மறுக்கா திருப்பாரோ?

செந்தமிழ்த்தாய் வாய்த்தபெருந் தாய்மைச் சிறப்புரைக்கின்
இந்தியா ஆசியா ஏர்ந்த அமெரிக்கா
தென்கிழக்குத் தீவுகள் யாவிலுமே தேர்ந்தபசும்
பொன்கொழிக்கும் நாகரிகம் ஒன்று புலர்ந்ததுண்டே!
அக்காலம் இற்றைக்கே ஆறா யிரமாண்டு
முற்கால மாகும்! முதல்மாந்தக் கூட்டத்தின்
கற்கால மாகும்! கழிந்த சுமேரியத்தும்

பொற்பழிந்த டைகரிசு யூப்பிரடீ சாற்றிடையும்
வாழ்ந்திருந்த மக்கள் வழங்கிநின்ற பேச்சினிலே
செந்தமிழும் வாழ்ந்த சிறப்பைஎவ் வாறுரைப்பேன்.
அந்தமிழே தாயாய் அனைத்து மொழிக்கெல்லாம்
வாய்ந்ததென்று கூறும் வரலாற்றை யார்மறுப்பார்?
தாய்த்தமிழை எண்ணித் தருக்குவதால் என்னபிழை?

ஈரா யிரத்திருநூ றாண்டுக்கு முற்பட்ட
ஆரியர் வேதத்தும் **சாயம், தா, முத்**தென்னும்
சொற்கள் உளவென்றால் சொல்வதெவர் இல்லையென்று?
முற்கால **பாபிலோன்** மூத்த **எபிரேயம்**
நல்ல **எகுபதியம்** நண்ணும் **அரபிமொழி**
இன்னவற்றில் எந்தமிழ்ச்சொல் ஏற்றம் விளைத்த தென்றால்
அன்ன திலையென்பார் ஆர்?

(வேறு)

**குப்பா** என்பது **ஜிப்பா** என்றும்
**கூலி** என்பது **ஒலிமா** றாமலும்
**ஞாலம்** என்பதோ **ஆலம்** என்றும்
**நீலம்** என்பது **நீலா** என்றும்

கதம் என்பது கடப் என்றும்
நெருப்பு என்பது நபிர் என்றும்
அராபி மொழியில் வழங்கிய ஆட்சியும்,

அப்பன், செவ்வை, அம்மை, மெத்தை,
ஊர், பழம், சாய், மாறு என்பன முறையே
ஆப், ஷாவாஹ் ஏம், மித் தாஹ்” என்றும்
ஆர், பெரி, ஷா, மூர் ஆகவும் திரிந்தே
அற்றை எபிரேயத் தின்தமிழ் ஆட்சியும்
அது- தெ;இரு- சுர்;தா-து; மனை-மென்;
செம்மை-செஸ்ப்;மாத்திரை-மெத்தர்;
நக்கு-லெக்கு;வாரி-மெர் என்றும்
பண்டை எகுபதில் பைந்தமிழ் ஆட்சியும்
தமிழின் தாய்மையைக் காட்டும் அன்றோ?

இன்னும்
ஆப்பிரிக்கா அடுத்த நாடுகள் அனைத்திலும்
மூப்பற வழங்கும் செமிதிக் இனமாம்
அரமியம், கல்தேயம், சீரியம், பெர்சியம்,
அசீரியம், சுமாரித்தம், பொனிசியம் என்னும்
மொழிகளும் அவற்றின் கிளைமொழி தாமும்

ஆசி யாவில் தென்பால் வடபால்,
பகுதியில் வழங்கும் துரானிய இனமெனும்
தைக்கம், மலாயம், காங்கையம், முண்டா,
பர்மியம், சிங்களம், துருக்கியம், சீனம்,
பின்னிய மொழிகளும் கிளைமொழி தாமும்

இக்கால இந்திய வடபால் வழங்கிடும்
ஒரியா, சிந்தி, வங்காளி, அசாமி,
பலுசியம், மராத்தி, பஞ்சாபி, கூர்க்கம்,
கோட்டு, கோண்டு, கூய், ராசு மகாலி,
மாலடா, காசுமீரி, நேபாலி என்னும்
மொழிகளும் இவற்றின் கிளைமொழி தாமும்

தாய்த்தமிழ் பெற்ற சேய்மொழி என்ப,
ஆய்மதி மொழியியல் அறிஞர் தாமே!

**தூய்மை:**

எந்தமிழ்த் தூய்மையை எடுத்துப் பேசின்
செந்தமிழ் உணர்வு சிலிர்சிலிர்த் தோடும்.
ஏறத் தாழ மூவா யிரமாண்(டு)
ஊறிக் கிடந்த வடமொழி உணர்வினால்
மாறிக் கிடக்கும் தமிழனின் மனத்துள்
ஏறி மிதித்தது **ஆங்கிலர்** ஆட்சி!
பிற்கால் **பிரஞ்சும்** அதனொடு சேர்ந்தது.
**போர்த்துக் கீசியம்** அதன்பின் புகுந்தது.

மொகலாயர் ஆட்சியில் உருது முளைத்தது.
தகவுடைத் தமிழன் தமிழினை மறந்து
கலப்படத் தமிழினில் கால்கைப் பிடித்துப்
பிழைப்பை நடத்தினான். அதற்குப் பின்னரும்
தமிழ்தன் தூய்மையில் துளிகெட விலையெனின்
அமிழ்தென இதனை, அறைவதும் தவறோ?

இத்தனைக் கலப்பினை ஒருமொழி ஏற்றால்
இத்தனைக் காலத்து உருவம் இராது.
செந்தமிழ் முனைந்தால் இன்றையும் செழிக்கும்!
இந்திமற் றில்லைவே றெந்த மொழியொடும்
தூய்மை கெடாது துலங்குதல் தமிழே!
நோய்மை புகுத்திடில் தனித்தமிழ் நொடியும்!

**சத்தியம்** என்பதை **உண்மை வாய்மை**
**மெய்ம்மை** எனமூன்று சொற்கள் முழங்கும்!
**ஊர்ஜிதம்** நீங்கிடில் **உறுதி** உண்டு!
**உபதேசம்** போயின் **அறிவுரை** உண்டு.
**அநுபவம்** என்பதைப் **பட்டறி**வடக்கும்.
**அகங்கா ரத்தினைச் செருக்கு** நீக்கும்.
**இரேகை** போனால் **வரை**நின் றிலங்கும்
**இரகசியம்** தன்னைக் **கமுக்கம்** காத்திடும்
**எடுத்துக் காட்டு**ண்டு, **உதாரணம்** ஏகின்!
**பரிசுத்தம்** போனால் **தூய்மை** ஆகும்.
பிறமொழிக் கலப்பை இன்று பிரிக்கினும்
உரமொழி, தூய்மை யுறுமொழி தமிழ்போல்
உலகினில் வேறெதும் இல்லென உணர்வீர்.

**இனிமை:**

இனிமை என்பது தமிழின் மறுபெயர்
**“இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு**
**இன்பந் தரும்படி வாய்த்தநல் அமுது.”**

- என்பார் பாவேந்தர்.
இன்பத் “தமிழ்போல் இனிதாவ தெங்கும்
காணோம்” என்பார் பாவலர் பாரதி!
தனிப்பால் கசக்குமோ? புளிக்குமோ தனித்தேன்!
தனித்தமிழ் அவைபோல் தருவது இனிமையே!
தனித்தமிழ் புளிப்பெனல் நாவினது தவறே!
ஒன்றால் அவன்நா ஒருமொழிக் கடிமை!
அன்றால் அவனுடை மனமயக் காகும்!
அதுவும் இல்லெனின் அறிவுச் செருக்கால்
புதுவது நயக்கும் புன்மையால் மொழிவான்!
மொழி இனிமையா? பாஷை,லாங் வேஜா?
முதுமை இனிமையா? வயோதியம் சுவையா?
மனைவியா - தாரமா? மங்கையா - ஸ்திரியா?
நாம தேயமா? ‘நேமா’ பெயரா?
உறவு இனிமையா? பந்துகள் வேண்டுமா?
அறமன் றம்மா? நியாய ஸ்தலமா?
இளமை இனிமையா? யௌவனம், யூத்தா?
குளிர்ந்த நீரா? தூத்தமா? ஜலமா?
உலகியல் இனிமையா, லோகா யதமா?
கலைமகள் இருக்கையா, சாரதா பீடமா?
மந்தமா ருதமா? நல்லிளந் தென்றலா?
அந்தமா, முடிவா? ஆதியா முதலா?
அங்கயற் கண்ணியா; மீனலோ சனியா?
பங்கஜம் பத்மமா? தாமரை முளரியா?
ஜனநா யகமா, மக்க ளாட்சியா?
மனம், உளம் இனிமையா? ஹிருதயம் நன்றா?
ராஜாதி ராஜனா, மன்னர் மன்னனா?
ஜேஷ்ட புத்திரனா, மூத்த மகனா?
பேறு இனிமையா? பிரஸவம் இனிமையா?
விவாஹக் கிரமமா? திருமண முறையா?
வேண்டு கோளா, விக்ஞா பனமா?
விஜயமா வருகையா? விருக்ஷமா மரமா?
புஜமா தோளா? புஷ்பமா மலரா?
மயூரமா மயிலா? மார்க்கமா நெறியா?

விரைவா ஜல்தியா? விசாரணையா உசாவலா?
வருஷமா ஆண்டா? வருகையா ஆஜரா,
ஸ்நானமா குளிப்பா? ஸ்நேகமா நட்பா?
திவ்வியம் தேவையா? இனிமை தேவையா?
இவ்வகை தொடர்ந்தே? இயம்பிப் போகலாம்.
எனவே அன்பரீர் இனிமை என்பது
கனவோ நனவோ அன்று, தனித்தமிழ்
தனிச்சுவை பொதுளத் தான்நடப் பதுவே!

**தனிமை:**

தனிமை என்பதும் தமிழ்மொழிச் சிறப்பே!
பனிமலை வரையே பரவிய மொழிகளுள்
இராச மாலம் குடகம் கோண்டு,
மகா ராட்டிரம் கூர்க்கம் இவற்றொடு
தெலுங்கங் கன்னடம் துளுமலை யாளம்
முதலிய திரவிட மொழிகள் பிரியினும்
தனித்து நிற்கும் தமிழ்மொழி போல
இனித்த மொழியினை எங்ஙன் காண்குவம்?

**புதுமை:**

புதுமை பேசலும் பொதுமை கூறலும்
மதுநிகர் தமிழ்க்கலால் மற்றதற் கியல்வதோ?
மூலத் தனிப்பெயர் எதுவானாலும்
கோலத் தமிழில் கூறுதல் புதுமையே!

புகைவிடும் வண்டியைப் **புகைவண்டி** என்றது
பகையினாலா? புதுமையின் பயில்வா?
மிளகுபோற் காயை **மிளகாய்** என்றதும்
அழகுக் காகவா? புதுமையின் ஆய்வா?
இன்னும்
உருளைக் கிழங்கும் உந்து வண்டியும்
கருத்தடை, புகைப்படம், நாடாப் பதிவு,
திரைப்படம், வானொலி, அச்சு, தட்டச்சு,
இரையொலி பெருக்கி, இசைத்தட்டு, அஞ்சல்,
தொலைபேசி யோடு தொலைவரி, காட்சி,
வானூர்தி மற்றும் உந்தம், மதிவண்டி,
வேதியல், விளங்கியல், விலங்கியல் யாவும்

புதுமை நோக்கினால் புலர்ந்த சொற்களே!
எதுமுடி யாதென எவர்தாம் இயம்புவார்?
ஆரியப் பார்ப்பான் அப்படி மொழிந்தால்
சீர்சால் தமிழனும் சேர்ந்து மொழிவதா?

**பழமை:**

புதுமை என்பதால் தமிழ்மொழிப் பழமை
கதையெனக் கதைப்பதா? கதைப்பது நாமா?
ஆரியக் கதைப்புக் களவொன் றேது?
பூரியர் பொய்யைப் புராணங்கள் கூறும்.
தென்தமி ழகமே மக்களின் தொட்டில்!
அந்தமிழ் பிறந்து . ஐம் பதாயிர மாண்டுகள்
ஆயின என்பதை அறிஞர்க் கறிஞர்
மொழிநூல் முதுவர் **பாவாணர்** மொழிவர்.
பழமைக்கும் பழமையாய்ப் பைந்தமிழ் வாழ்வதைக்
கிழமையால் தமிழ்மொழிக் கிளர்வினால் அன்று,
நுண்மாண் நுழைபுல வன்மையாற் கண்டார்!
பன்மொழி யறிஞரும் பகர்ந்த கூற்றிது.
**'உணர்ச்சி மிகுதியால் உரைப்பதால்,** தமிழர்
**அறிவிற் குறைந்தவர்'** என்று மொழிவார்
**சட்டர்சி** என்னும் வடமொழிச் சார்பினார்.
திட்டமாய் அவர்க்குத் தெரிவித் திடுவோம்;
**உணர்ச்சி உள்ளவர் தமிழர் என்றால்**
**உணர்ச்சி யற்ற உருவமா சட்டர்சி?**
**'உணர்வது உடையார் முன்சொலல்'** என்று
நுணங்கிய அறிவினார் வள்ளுவர் நுவன்றது
அறிவிலை என்றே அவர்மொழி வாரா?
செறிவிலா துரைப்பது செப்பமென் பாரா?
சட்டர்சி போன்ற வடமொழி அடிமைகள்
இட்டதே சட்டம் இயன்றதே உண்மை
என்பது அரசியல் ஏற்றத்தால் வந்தது.
தின்பதற் கேதேனும் சொல்ல வேண்டுமே!

**வளமை:**

அடுத்தது வளமை!
வளமை என்பது தமிழ்க்கே வாய்த்ததாம்.

அளவறப் பரந்து விரிந்துயர் ஆல்போல்
அகற்சியும் விரிவும் கொண்ட தாகையால்
நுகர்ச்சி தமிழர்க்கு நுண்ணிய தெனவே
ஒருசொல் பலபொருள், பலசொல் ஒருபொருள்,
அருமைத் தமிழில் ஆயிரம் உண்டு!
தமிழில் உள்ள ஓரெழுத்து மொழிபோல்
இமிழ்கடல் உலகில் யாங்கணும் இல்லை.
ஏறத்தாழ அறுபத்து நான்காம்
ஓரெழுத்து மொழிகள் தமிழில் உண்டே!
**ஆ, ஈ, ஐ, கா, கூ, கோ, கை, தை**
**மே, மூ, யா, மோ, வீ, வா, தா, வை**
**மா, மை, பை, தே, போ, மீ, நா, நீ**
எனவரும் சொற்களை எண்ணிப் பார்மின்!
புல்லைப் **'பிடுங்கு'** எனல், பூவைக் **'கொய்'** எனல்
வல்ல காயைப் **'பறி'** எனல் வழக்கு.
உலகம் அளாவிய ஆங்கிலத் துரைத்தால்
**'பிக்'** கெனும் ஒருசொலே மூவிடம் பயிலும்
திக்கெலாம் பரவிய ஆங்கில மொழியில்
காய்க்கென ஒருசொல் இல்லெனக் காண்க.
சோறாய் வெந்ததை அரிசி யாய்ச் சொல்லுவர்!
எந்தமிழ் மொழியில் சொற்சோர்வு இல்லை;
செந்தமிழ் என்றும் செழுந்தமிழ் என்றும்
கொழுந்தமிழ் என்றும் தமிழையே கூறுவர்;
**யானை**யைக் குறிக்க முப்பத் தெண் சொல்!
ஆன **'மது'**விற்கோ அறுபது சொற்கள்!
**'சூரிய'**னுக்கு இருபத்து இரண்டு!
மூரி **'முகிற்'**குப் பத்தொன் பதுசொல்!
**உளை, நவிர், குடுமி, பித்தை, ஓரி**
**தளை, குழல், குஞ்சி, கார், முடி, தொங்கல்**
**பங்கி,** எனவரும் பன்னிரு சொற்களும்
தங்கும் ஆடவர் தலைமயிர் குறிக்கும்!
**குருள், குழல், ஓதி, கூழை, கூந்தல்**
**குரல், ஐம் பாலொடு, மராட்டம், அளகம்**
ஒன்பதும் பெண்டிர் தலைமுடிப் பெயர்கள்!
**பின்னகம், முச்சி, கொண்டை, சிகழிகை**
**கொப்பம்; தம்மிலம், பந்த**மென் பனஅவர்
குழல்புனை பெயர்கள்! இன்னும் கூறுவேன்.
**தும்பி, மா தங்கம், தூங்கல், கறையடி,**
**உம்பல், எறும்பி, வாரணம், புழைக்கை**

**தோல், வல் விலங்கு, நாகம், கும்பி**
**நால்வாய், பூட்கை, குஞ்சரம், அத்தி**
**வேழம், கரி, உவா, கைம்மா, சிந்துரம்**
**களிறு, இபம், வயமா, கைமுகம், புகர்முகம்**
**தந்தி, மதாவளம், கயம், பகடு, ஒருத்தல்**
**வழுவை, ஆம்பல், மந்தமா, மருண்மா**
**மாதிரம், போதகம்,** என்பன யானையின்
புதுப்பெயர் அல்ல! பழந்தமிழ்ப் பெயர்கள்!
ஒவ்வொரு பெயரும் யானையின் பண்புகள்!
எவ்வொரு மொழியில் இருந்ததிவ் வாறு?
அவ்வள வானே அமர்ந்திலர் தமிழர்.
**தால வட்டம்** - என்பது யானைவால்!
**வேசகம்** என்பது - யானை வால்நுனி!
யானையின் முதுகை **மஞ்சு** என மொழிவர்.
யானை மத்தகம் - **கும்பம், மதகம்**!
யானை மதம்பாய் **கவடு** - **கரடம்**!
யானைக் **கைந்நுதி** - **புழைக்கை** யாகும்!
**கடம், கடாம், தானம்** என்ப ததன்மதம்!
**கோடும், எயிறும்** - யானைக் கொம்புகள்
**நிரியாணம்** - என்பது யானையின் கடைக்கண்
யானைச் செவியடி - **சூளிகை** ஆகும்.
கவுள் - **கதுப்பு;** உமிழ்நீர் - **விலாழி.**
யானைப் பல்லடி - **கரீரம்** ஆகும்.
துதிக்கை - **தொண்டை, தொண்டலம், சுண்டை**!
**வடவை, அத்தினி, கரிணி, பிடி** - பெண்ணே!
கயந்தலை, போதகம், துடியடி, களபம்
**கயமுனி** என்பன யானைக் கன்றுகள்!
**கடகம்** - என்பது யானைக் கூட்டம்.
யானைப் படுகுழி **பயம்பு** - எனப் பகர்வர்.
**பாகலம்** என்பது யானைக்கு வருநோய்!
அம்மவோ! எத்தனை அருந்தமிழ்ச் சொற்கள்
எம்மருந் தமிழில் எத்துணை வளமை!
சொல்லிலை என்பான் சோம்பேறி யல்லனோ!
பல்லெலாம் எண்ணுக யானையின் பெயர்க்கே!
எந்த மொழியில் இத்தனைச் சொற்கள்?
அந்த மொழியைத் ‘தென்மொழிக்’ கனுப்புக!
யாவரும் கற்றிட யானே வேண்டுவேன்!
ஆவலால் முந்தி அதனைக் கற்கலாம்!
முத்தமிழ் மொழிவளம் மூங்கிலும் உரைக்கும்!

**முந்தூழ், பாதிரி, முடங்கல், காம்பு**
**ஆம்பல், வேழம், அரி, அமை, திகிரி**
**தூம்பு, வேய், தட்டை, துளை, வேல், வேரல்**
**கிளை, கழை, விண்டு, பணை, வரை, வெதிரி**
என்பன மூங்கிலின் இன்றமிழ்ப் பெயர்கள்!
கன்னி மொழியில் காடு . அறு நான்குசொல்!
மரங்களில் ஆண்பெண் மரபு தெரியுமா?
**கருங்காலி** முதலிய **வன்மரம்,** ஆண்கள்.
**தெங்கு, பனை, மூங்கில் வன்புல்,** பெண்கள்,
**முருங்கை** முதலிய **அலிமரம்** என்பர்,
அகக்காழ் உற்றன ஆண்; பெண் புறக்காழ்!
தொகவெளி றுற்றன எல்லாம் அலிமரம்!
எத்துணை மொழிவளம்! எத்துணை அறிவு!
எத்துணை மெய்யுணர் விருந்த தமிழ்மொழி!

**இளமை:**

வளமை உடைய தமிழ்கண் டீர்கள்
இளமை உடைய தமிழைக் காட்டுவேன்.
ஆயிரம் இரண்டொடு முந்நூறாண்டுகள்
வாயுரைக் கெளிதெனின் வரையறை நீண்டது.
தொல்காப் பியத்தின் தொன்மை அதுவென
பல்கால் ஆய்ந்த பாவாணர் உரைப்பார்.
அத்துணைப் பழமை வாய்ந்தஅந் நூலில்
வந்த சொற்களில் பலஇற வாதன.
'விளிம்பு'ம் 'தொகுதி'யும் 'உடைமையும்' போன்ற
இளமைச் சொற்கள் எண்ணி றந்தன.
'தந்தையர் ஒப்பர் மக்கள்' எனும்வரி
முந்தைத் தமிழ்வரி! முதிரா இளமை
பொருந்திய சொற்கள் இன்றும் பொருந்துவ.
முதுமொழி விளக்கிய நூற்பா ஒன்று.
**"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்**
**எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி''** - என்பது
நூற்பா வாகும்! இன்று நுதலினும்
வேறுபொருள் பெறுமோ? வேறொன்று காண்மின்,
**"சூத்திரந் தானே**
**ஆடி நிழலின் அறியத் தோன்றி**

நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்து அமைப் பதுவே''
- சாசர் காலத்து ஆங்கிலம் வேறு!
சாக்சா னியரின் ஆங்கிலம் வேறு.
சேக்சு பிரியரின் ஆங்கிலம் வேறு!
இக்கால் மொழிந்திடும் ஆங்கிலம் வேறு!
துளசி தாசர் எழுதிய இந்தியும்
வழங்கும் இந்தியும் வேறு வேறு!
ஆனால் தமிழில் அப்படி இல்லை.
மேனாள் எழுதிய புறப்பாட் டிதுவாம்!
"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே''
சொற்கள் எத்துணைத் தெளிவொடு தோன்றின.
இக்கா லத்துப் பாடல் போல
எத்துணை இளமையோ டுள்ளது பாடல்!
எனவே தமிழரீர்! இதுவரை ஆற்றுப்
புனலோட் டம்போல் தமிழ்நலம் பயின்றோம்.
இன்பத் தமிழின் எண்மைச் சிறப்பைத்
தம்பாத் திறமையால் பாவலர் தந்தனர்.
நம்மருந் தமிழை நாடிப் புகுந்தால்
செம்மைப் பண்பின் சிறப்புகள் தெளிவீர்!
மொழிநலம் ஒன்றே தமிழரின் முனைப்பாம்!
மொழிநலங் குன்றின் தமிழன் முடங்குவான்.
அறிவிய லுக்கென ஆங்கிலம் படிக்க!
நெறியெனும் வாழ்விற்குத் தமிழ்வழி நிற்கெனக்
கேட்டுக் கொள்ளுவ தோடு
பாட்டரங் கினையுமென் பாட்டையும் முடிப்பனே!

# 5. தமிழ் மேன்மையுற...!

(6.2.70இல் நடந்த மதுரைத் தியாகராசர் பொறியியற் கல்லூரி முத்தமிழ் விழாப் பாட்டரங்கத் தலைமையுரை)

**முன்னுரை:**

தாய்மொழிமேல் பற்றும் தமிழ்நிலத்தின் மேல்பற்றும்
வாய்மொழியாய் மட்டுமின்றி வல்ல வினைவழியும்
காட்டிவரும் மாணவரீர்! கல்வி வளர்குலத்தீர்!
ஊட்டிவரும் தாய்ப்பால் உணர்வால் உயர்ந்துவரும்
நல்லிளைஞர் கூட்டமே! நாளைத் தமிழுலகே!
அற்றைப் பிறப்பை, அனைத்துக்கும் தாயான
ஒற்றைத் தமிழை, உலகத் தனிமுதலை
இற்றைக்கும் நாளைக்கும் ஏந்துகின்ற தோள்களே!

**"விற்றுண்ணற் கன்று; விளைத்துண்ணற் கேதமிழைப்**
**பேணுவோம்; யாமும் பிழைத்திருப்போம்; வல்லுறுதி**
**பூணுவோம்"** என்றடிமைப் பூட்டறுக்கும் காளையரே!

**"ஒட்டாத 'சாதி'ப் பிரிவை உடைத்தெறிவோம்!**
**வெட்டாத நம்பகையை வெட்டிச் சிதைத்திடுவோம்!**
**பாவேந்தர் நற்கனவை, பாவாணர் எண்ணத்தைச்**
**சாவேந்தி னாலும் சழக்கர் தடுத்தாலும்**
**மெய்ப்பித்துக் காட்டுவோம்; மேலும் விளைவிப்போம்!**
**பொய்ப்பித்துக் கொண்டன்று! புகழ்ப்பித்துக் கொண்டுரைப்போம்'**
- என்று முழக்கி எழுந்த களிறுகளே!

நின்று நிமிர்ந்தநடை நீட்டும் வரிப்புலிகாள்!
கண்கள் அனலுமிழக் காட்டுகின்ற வல்லரிகாள்!
"புண்களல்ல; வெற்றிப் புகழ்குறிக்கும் பூண்களிவை;
செங்குருதி யன்று; செருக்களத்துச் சேறு" என்று
வல்லமறம் கூறியொரு வாகைப்பண் பாடுகின்ற
கொல்லேற்றுக் கூட்டமே! குன்றன்ன தோள்மறவீர்!

அன்றிருந்த முத்தமிழ்க்கே ஆன விழாவெடுத்தீர்;
நின்றிருந்த தீமைகொல்ல நேரம் பிறந்ததுவோ?
ஏற்றிருந்த பேரிழிவை எற்றும் பொழுதிதுவோ?
வீற்றிருந்த நீள்பகையை வெட்டுகின்ற காலமிதோ?

பாசி பிடித்த பழங்குப்பை கூளங்கள்
மாசு விளைவிக்கும் ‘சாதி’ மதப் பகைகள்
பொல்லாப் புராணங்கள், பூழ்க்கை இழிகதைகள்
எல்லாமும் தீயிட் டெரிக்கின்ற நாளிதுவோ?

முந்தைப் பிரமன் முகத்தொருவன், தோளோருவன்,
அந்தப் பிரமன் அடித்தொடையி னின்றொருவன்,
பீக்காலி னின்றொருவ னாகப் பிறப்பெடுத்தார்!
. கேட்க அருவருப்பு! கேளுங்கள் மாணவரே!
மூக்கில் முகத்தில் முளைத்தொருவன் தோன்றுவனேல்
மூக்கா கருவாய்? முகமா கருப்பை?
மயிர்முளைக்கும் மாந்த முகத்திலென்றால் உண்மை;
உயிர்முளைக்கும் என்றால் உலகத்தார் ஒப்புவரா?
தோளில், தொடையில், காலிலெல்லாம் தோற்றமென்றால்
மூளையில்லா மக்களாநாம்? முக்காலும் நம்பிட!
அங்கெல்லாம் தோன்றியதும் ஓரிருவர் அல்லராம்!
உங்கள் பகுத்தறிவை ஓட்டிவிட்டுக் கேளுங்கள்!
ஓரினமே தோன்றிற்றாம்! என்ன, உயிர் நூலறிவு!
ஓரிடமே வாயாய் இருந்துபிறக் கும்பொழுதே,
காற்றாய்ப் பறந்து கருக்குழியை மூடென்போம்,
ஊற்றுப் பெருக்காய் உடம்பெல்லாம் தோற்றமென்றால்
நாமென்ன செய்வோம்? நடுவணர சென்செய்யும்?
ஆமென்றால் சொல்லுங்கள்; அப்படியே விட்டிடுவோம்!

இன்னொன்றே செய்தி; எதுவென்று கேளுங்கள்.
அன்ன முகந்தோள் அடித்தொடை காலிலெல்லாம்
பெற்றுப் பிறப்பிப்ப தாரென்று பார்த்தீரா?
அற்றைப் பிரமன்தான்; ஆணாய்ப் பிறந்தவன்தான்!
தேவப் பிறவியிலே ஆண்,இத் திறம்படைத்தால்
தேவியரும் தாம்முனைந்தால்....! தீர்ந்த துலகெல்லாம்!
செவ்வாய் உலகம், நிலாவுலகம் எல்லாமும்
ஒவ்வுமிவ் வேலையாம் ஒன்றால் நிரம்பிவிடும்!

தார்வினது கொள்கையெல்லாம் ஓபாரின் கொள்கை யெலாம்
யார்நினைத்துப் பார்த்தார்கள்? யார்விரும்பி யேற்றார்கள்?
ஒப்புமா இந்த உலகமென்பீர்? ஒப்பியதே.
இப்பொழுது மா?. என்பீர். ஆமென்பேன்! என்ன சொல்வீர்
ஓரிரண்டு பொய்யையன்று; ஓரா யிரம்பொய்யை!
ஓரிரண்டு நாளன்று;நான்கா யிரமாண்டு!

நம்தந்தை, பாட்டன், அவன்தந்தை தந்தையெல்லாம்
தம்தந்தை சொன்னதென்று தாம்நம்பி வந்தார்கள்!
ஏனென்று யார்கேட்டார்? எப்படியென் றார்எதிர்த்தார்?
நானென்று வந்தவரை நாலினத்தா ரும்கடிந்தார்!

எந்தமிழர் மூளை இருளில் புதைந்தகதை,
வந்தார் அவர்தம்மை வாழாமல் செய்தகதை,
செந்தமிழை விற்றகதை, செத்தொழிந்து போனகதை,
எந்தமிழர் அந்நாள் இடுப்பொடிக்கப் பட்டகதை,
- என்ற கதையெல்லாம் என்றைக் கொழியுமோ
அன்றன்றோ முத்தமிழ்க்கே ஆன்ற விழாநாளாம்!
அந்தநாள் வந்ததுவோ? ஆர்த்தனரா எந்தமிழர்?
இந்தநாள் தானதுவோ? ஏற்றதிரு நாளிதுவோ?
மாணவரோ? அற்றை மறக்குலமோ? இல்லையிவர்
வீணவரோ? இன்றும் விழிபுலராப் பேதையரோ?
- என்று பலவாறாய் எண்ணியுளம் மாழ்குகின்றேன்.
“அன்றன்று, நாங்கள் அடிமைத் தமிழ ரல்லர்!
வேல்மறவர் கூட்டம்! விறல்பாண்டி யக்கூட்டம்!
ஆல்போற் பரந்துயர்ந்த அற்றைத் தமிழ்க்கூட்டம்!
ஒக்கூர்மா சாத்தி உரைத்த மறக்கூட்டம்!
நற்காவற் பெண்டு நவின்றசோ ழக்கூட்டம்!
நக்கண்ணை வேண்டிநின்ற நாணாச்சே ரர்கூட்டம்!
இக்கூட்டம் தன்னை எவர்வெல்வார்?”. என்பீரால்
அக்கூட்டந் தன்னை அடிவணங்கி வாழ்த்துரைப்பேன்.

நல்லறிவு தோன்றிவிடின் நல்லுணர்வு வீறாதோ?
நல்லுணர்வு வீறிவரின் நாமுயர்வு காணோமோ?
நாமுயர்வு கண்டுவிடின் நன்முயற்சி முங்காதோ?
நன்முயற்சி முங்கிவிடின் நம்மிழிவும் நீங்காதோ?
நம்மிழிவு நீங்கிவிடின் நம்மடிமை சாகாதோ?
நம்மடிமை செத்துவிடின் நம்தமிழும் மேன்மையுறும்!
நந்தமிழும் மேன்மையுறின் நந்தமிழர் ஒன்றாரோ?
நந்தமிழர் ஒன்றியபின் நம் நாட்டை வெல்லோமா?
நம்நாட்டை வென்றுவிடின் நம்வாழ்வும் பூக்காதோ?
நம்வாழ்வு பூத்துவிடின் நல்வளமும் காய்க்காதோ?
நம்வளமும் காய்ப்பின் பொதுமை கனியாதோ?
ஆகவே மாணவரீர்! ஆர்த்து நடையிடுவீர்!
ஏகுகின்ற போக்கில் இடர்வந்தால் தூள்! தூள்! தூள்!
எந்தமிழின் மேன்மைக் கெழுவரிங்கு பாடுகின்றார்!
அந்தமொழி கேட்போம் அமர்ந்து.

**பின்னுரை:**

எந்தமிழன் மேன்மைக் கெழுவரிங்கு பாடி விட்டார்.
சிந்துமிழும் பாட்டாகச் சிற்றருவித் தண் சிலிர்ப்பாய்
வெள்ளப் பெருக்காய் விரிந்தது செந்தமிழ்ப்பா!
உள்ளங் குளிர்ந்தோம்! உலகம் மறந்துவிட்டோம்!
பாட்டரங்கம் கூடிப் பலர்பாடி நிற்பதுவும்
கேட்டு அரங்கக் கூரை கிடுகிடுக்கக் கைகொட்டிப்
பாராட்டிப் போவதுமே பார்க்கின்றோம் நாட்டிடையில்!
பாராட்டல் தீதன்று! பாராட்டால் என்னபயன்?

நாமணந்து கொண்டபெண்ணை நான்குபேர் முன்னிறுத்தி
நாமணக்க வாய்மணக்க நல்லோர் செவிமணக்கப்
பாராட்டிப் பேசிப் பலவாய்ப் புகழ்ந்துரைத்துச்
சீராட்டிக் கொண்டிருப்ப தொன்றே சிறப்பாமோ?
இல்லறம்மேற் கொண்டொழுக வேண்டாவா? இல்லறமும்
நல்லறவோர் கண்டு நயந்துரைக்க வேண்டாவா?

அவ்வுரைக்குப் பின்னும் அனைத்துலகும் தாமகிழ
ஒவ்விப் பொதுத்தொண்டால் ஓங்குயர வேண்டாவா?
இந்தப் பயன்தானே எல்லாரும் கண்டபயன்!
அந்தப் பயன்தான் அனைத்துக்கும் வேரென்பேன்!

செந்தமிழும் மேன்மையுறச் செப்பினார் பல்வழிகள்.
அந்தவழி கேட்டபின்னும் அப்படியே நின்றமெனில்
பாட்டரங்கால் கண்ட பயனென்ன? மாணவரீர்!
கூட்டுக்குள் ஆவி குடிகொண்ட நாள்தொடங்கி
நாம்தமிழர் என்றே நனியுரைத்துக் கொள்கின்றோம்!
ஆம் தமிழர் தாம்; அதற்கே அட்டியில்லை; ஆனாலும்
எப்படிநாம் வாழ்கின்றோம்? எப்படிநாம் வாழ்ந்திருந்தோம்?
அப்படிக்கு மேலே அரைப்படியைத் தாண்டினமா?

மாணவர் தம்பணி சொன்னார்ஓர் மாண்புலவர்!
மாணவர் தம்மின் மனத்துள் தமிழ்உளதா?
மாணவர் வாயில் மணப்பதுவும் செந்தமிழா?
நாணவேண் டாவா? நடப்பதென்ன? சொல்வதென்ன?
அற்றைத் தமிழை அறிந்துணர வேண்டாவா?
கற்றை உருபாத்தாள் கண்டுவிட்டால் நாம்தமிழை
முன்னர் இழப்போம்! முழுமனமும் பின்னிழப்போம்!
இன்னுயிராம் மானம் இழப்போம்; நாம் வாழ்விழப்போம்!

எண்ணுங்கள்! எண்ணி இழிவுயர்வு காணுங்கள்!
மண்உங்கள் மண்! மற்றும் மாத்தமிழும் உங்களது!
தாய்மொழியைப் பேணினமா? பேணத் தவறினமே!
காய்மொழியைக் கொண்டோம்; கனிமொழியை விட்டுவிட்டோம்!
எந்த அறிவியலிங் கேற்காது செந்தமிழ்க்கே!
அந்த அறிவியலைச் செய்யஅறி வற்றோமா?

கூறுங்கள்; என்னுடைய கூற்றில் குறையிருந்தால்
மீறுங்கள்; நீங்கள் மிதித்தவழி யான்நடப்பேன்!

மாணவரைச் சொன்னேன்; நம் மாணவரைத் தோற்றுவிக்கும்
பூணவராம் ஆசிரியர்! அன்னார் புகல்வதென்ன?

பேரா சிரியப் பெருமக்கள் எல்லாரும்
சீராகச் செந்தமிழ்க்குச் சீர்செய்ய எண்ணு வரேல்
இன்பத் தமிழ்மொழிதான் மேன்மையினை எய்தாதா?
முன்பிருந்த வாழ்க்கை முழுவாழ்க்கை இல்லையா?
இன்றா தமிழன் எழத்தொடங்கி நிற்கின்றான்?
ஒன்றா இரண்டா? உயர்நூற்கள் எத்தனையோ?
அன்னவற்றில் எல்லாம் அருந்தமிழன் வாழ்விலையா?
சொன்னவற்றில் என்ன பிழைகண்டீர் சொல்லுங்கள்.
ஆசிரியன் மாரை அறைகூவிக் கேட்கின்றேன்.
காசிற் குழைத்தீர்; கருத்திற் குழைத்தீரா?
தாய்த்தமிழ் என்ன தரங்குறைந்து விட்டதென்பீர்!
வாய்மொழிப்போ ராட்டம் நடத்த வருவீரா?
ஆங்கிலமே நல்ல அறிவியலைச் செய்யுமெனில்
ஈங்கிருக்கும் சப்பான், எதிரிருக்கும் சீனம்,
உருசியா போன்ற உலக நாடெல்லாம்
பெருமை அறிவியலை ஆங்கிலத்தா பேசுகின்றார்?
தாய்மொழியில் அன்றோ அறிவியலைத் தாங்கற்பர்!
தாய்மொழி யன்றோ உள்ளுணர்வு தாங்கொளுத்தும்!
ஆகவே கல்வி சொல் ஆசிரியர் எல்லாரும்
ஈகை உளத்தாலே எந்தமிழ்க்கு மேன்மைசெய்தால்
நாமும் உயர்ந்திடலாம்; நாடும் உயர்ந்துவிடும்!
ஊமைக்கும் கல்வி சொல்லும் காலமிது; ஓர்ந்துணர்வீர்!
மற்றுந் தொழிலாளர் மாப்பணியில் ஒன்று. தமிழ்
கற்றுப் பெருமையுறல்! காற்றைக் கடந்துசெல்லும்
காலத்தில் வாழ்கின்றோம்! வெண்ணிலவில் கால் வைத்தோம்!
ஞால உருண்டையினை நாளொன்றில் சுற்றுகிறோம்!
ஆனாலும் உள்ளத் தமைதியிலை; மக்களுக்குள்

ஏனோ ஒழுங்கில்லை; எப்படியோ வாழ்கின்றோம்!
மேற்புறத்தை வென்றோம்; அகப்புறத்தை வெல்லவில்லை!
நாற்புறத்தைக் கண்டோம்;நமதுளத்தைக் காணவில்லை
உள்ளந் திரிந்தும் உடல்திரிந்தும் வாழுகின்றோம்!
வெள்ளப் பெருக்கேபோல் வீணான நாகரிகம்!
ஊர்திகளின் ஓலங்கள். ஓசையெழும் கூட்டங்கள்!
நேர்கின்ற முன்னேற்றம் யாவும் நிழல்போல!
இல்லறத்துப் பாங்கில்லை; எங்கணுமே இன்பமில்லை!
சொல்வதற் கோஅச்சம்; செய்வதற்கோ பேரச்சம்!
காசுபணம் தந்தால் கயமை செயத்தயங்கார்!
பேசுவது வேறு! பிழைக்கும் வழிவேறே!
இந்த நிலையில் தொழிலாளர் என்செய்வார்?
தத்தம் மொழியன்றோ தம்மினத்தைக் கூட்டுவிக்கும்!
கூட்டுவிக்கப்பெற்ற இனத்தன்றோ கூடும் இன்பம்!
நாட்டின் நலமுழுதும் நாட்டாரே துய்ப்பதெனில்
அன்னவர்பால் நாமிங் கனைவோரும் ஒன்றென்னும்
பொன்னுணர்வு முற்படவும் பூத்துவரல் வேண்டாவோ!

தாய்மொழியொன் றன்றோ தமையிணைத்துக் கட்டுவது!
தாய்மொழியைத் தள்ளுவது தாய்மை தவிர்ப்பதுவே!
இற்றைத் தொழிலாளர் இஃதுணர்ந்தால் செந்தமிழும்
அற்றைப் பொலிவை அடைந்து சிறக்காதோ?
ஊர்க்காக்கும் நல்லுழவர் வாழ்க்கையிலும் ஒண்தமிழே
சீர்காக்கும்! அன்புச் செறிவை உணர்த்துவிக்கும்!
பண்டைத் தமிழில் உழவுப் பயன்மிகுதி!
கெண்டை புரளும் வயலில் கிடந்துழலும்
பெண்டிர்தம் பாட்டால் பெறும்விளைவு கோடிபெறும்!
கண்டன்ன தென்பாங்கு காற்றில் மிதந்துவரின்
ஏற்றம் இறைப்போர் இடுப்புவலி போகாதா?
மாற்றம் இருந்தால் மனமகிழ்ச்சி கூடாதா?
மக்கள் உழவில் மனம்புகுதல் இன்றில்லை!
ஒக்க தமிழென் உணர்ச்சி தளர்ந்ததுவே!
தக்கபடி அன்னார் தமிழில் உணர்வுபெறில்
மிக்க பயனிருக்கும்! மேன்மை யுறுந்தமிழும்!
தாய்தமிழைப் பேணுவது தாயர் கடனாகும்!
வாய்வைத்தே யுண்ணும் வளர்குழவிக் கின்னமுதோ
டெந்தமிழை ஊட்டுவதே எப்பணிக்கும் மேற்பணியாம்!
செந்தமிழின் சொற்கள் செழுந்தாய்மைச் சொற்களன்றோ?
பெற்றுயிர்க்கும் மக்களிடைப் பெற்றி குலைவதெலாம்

வெற்றொலியாய் வேறுமொழி வேண்டிப் பயிற்றுவதே!
தாய்மை உயர்ந்ததெனில் தாய்மொழியும் தாழ்ந்திடுமோ?
தாய்ப்பால் தவிர்த்தொருதாய் தன்குழவி வாயிலொரு
நாய்ப்பால் புகட்டியதை நாள்தோறும் பேணட்டும்!
தாயுடலின் மேலாகத் தன்னுடலைக் கண்டாலும்,
நற்றாய் குணம்வருமா? நாயின் குணம்வருமா?
கற்றார்கள் ஆய்ந்து கருத்தைத் தெரிவியுங்கள்!
ஆகவே தாய்மாரை அன்பாலே வேண்டுகின்றேன்.
வேக உலகின் விழல்நா கரிகத்தை
மேலென்றே எண்ணற்க! மேன்மையுறச் செந்தமிழ்த்தாய்ப்
பாலைப் புகட்டுக! பைந்தமிழைக் காத்திடுக!
பேசும் மொழிக்கன்று, பேசாத எத்துறைக்கும்
மாசு விலக்கி மலர்ச்சியுறச் செய்வதெலாம்
நல்லரசின் மெய்க்கடனாம்! நாட்டு வரலாற்றில்
வல்ல மொழிவளர்க்கா வல்லரசு வாய்த்ததுண்டா?
தாய்மொழியிற் கல்வி தருகின்ற எவ்வரசும்
ஆயமிக நல்லரசாய் மக்கள் அகப்படுக்கும்!
செந்தமிழின் மேன்மை செழிப்பதெனில் நம்மரசும்
எந்தமிழைப் பல்துறைக்கும் ஏற்றுக் கொளல்வேண்டும்!

பல்துறையில் நூலெழுதும் பன்னூல் அறிஞர்க்கும்
ஒல்லும் வகையில் உதவிதந்தே, அந்நூற்கள்
எல்லாமும் அச்சேற்றி யாவருக்கும் போக்குவிக்கும்
நல்லறத்தைச் செய்தற்கு நாட்ட முறல்வேண்டும்!
எத்துறையில் யாவர் இறங்கியுழைக் கின்றனரோ
அத்துறையில் அன்னார் அறிவுரைகள் மேற்கொண்டு
நல்லபடி ஆய்ந்து நடுநின்று பின்பற்றி
மெல்லப் படிப்படியாய்ச் செந்தமிழை மேலேற்றல்
தம்மின் கடனாய்த் தமிழ்அரசு கொண்டிடுமேல்
எம்மருங்கும் நற்பண் பெளிதே இலங்குமென்பேன்!
எம்மொழிக்கும் தம்மொழியில் ஏற்ற மொழிநூற்கள்
செம்மையாய்ச் செய்வித்தல் ஆளுநர்க்குச் செய்கடனாம்!
செந்தமிழ்க்கும் அன்ன சிறப்பிழைத்தல் மேன்மை யன்றோ?
எந்தமிழ நல்லரசும் இத்துறையில் எண்ணிடுக!
பாவலர்கள் செந்தமிழில் பாடல் குவித்திடுக!
தூவல் எடுத்தெதையும் தூவிவிடல் பாட்டாகா!
தந்தம் உணர்வுக்குத் தக்கதெல்லாம் பாட்டென்றால்
இந்த உலகில் இலக்கியமென் றொன்றேது?
மூட்டை சுமைக்கும் முழுக் கழுதை நெட்டுயிர்ப்பும்,

சாட்டையடி தாளாத சண்டிக் குதிரையதும்,
கல்பட்ட நாயின் கடிந்த குரைப்பொலியும்,
வில்பட்ட வேங்கை வெருவுதலும் பாட்டன்றோ?
வேற்று மொழிவிலக்கி, வெல்லுகின்ற சொல்லடுக்கி
நாற்று நடுதல்போல் நல்யாப்பில் கட்டுவிக்கும்
பாட்டன்றோ பாட்டு! பயன்விளைக்கும் மெய்ப்பாட்டு!
திட்டுதிட் டென்று திசைபோன பக்கமெல்லாம்
போவதுபோல் கல்லாப் புரைதமிழை வைத்தடுக்கி,
ஆவதா கட்டுமென அல்லாரும் பாட்டுரைத்தால்,
தெய்வத் திருக்குறளும் வல்லதிரு மந்திரமும்
செய்யரிதாம் சாத்தன் சிலம்பும்நன் மேகலையும்,
பாட்டுந் தொகையும் பயனுள்ள நூற்பிறவும்
நாட்டில் உலாவருமா? நல்லோர்கள் எண்ணிடுக!
பைந்தமிழில் வல்லாரே பாட்டியற்ற எண்ணிடுக!
உயர்ந்த பிறரோ உரைநூல் வரைந்திடுக!
பாடித் தமிழுயர்த்த எண்ணுகின்ற பாவலர்கள்
நாடித் தமிழ்கற்க! நல்லறிவு பெற்றிடுக!
நல்ல தொருகருத்தை நல்லமொழி, நல்லநடை,
நல்ல முறைப்பாவால் நாட்டுவித்தல் பாட்டாகும்!
செந்தமிழும் பாவலரால் சீர்பெறுதல் வேண்டுமெனில்
சந்தப்பா மட்டுமன்று; சாற்ற விரும்புகின்ற
எந்தப்பா வானாலும் ஏதுந்தப் பாவகையில்
சொந்தப்பா வாகச்சொற் சோர்வின்றிச் செய்திடுக!
முந்தப்பா வில்சிலசொல் மூலப்பா வில்சிலசொல்
கந்தப்பா வில்சிலசொல் காட்டிப்பா பாரென்றே
எந்தப்பா சொன்னாலும் ஏலாதப் பாவென்பேன்!
இந்தப்பா தோன்றுவதால் எந்தமிழ்ப்பா வாழாதே!
ஆகவே மாணவரும் ஆசிரிய நல்லாரும்
வாகாய்த் தொழில்புரியும் வன்மை மறவோரும்,
ஏருழவர் யாவரும் எந்தாய் மகளிரும்
ஆர்கொடி தாங்கும் அரசரும் பாவலரும்
செந்தமிழும் மேன்மையுறச் செய்க; பணி செய்கவென்றே
இந்த வுரைமுடிப்பேன் ஈண்டு!

# 6. பாவேந்தர் பாரதிதாசன்

(காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் **9.2.73**இல் நடைபெற்ற முத்தமிழ் விழாப் பாட்டரங்கில் பாடியது)

பாப்புலவர் தந்திறமை பாடும் அரங்கிற்கு
மாப்புலவ ராய்த்தலைமை சான்ற மதிமிகுந்தீர்!
பேரா சிரியப் பெருமாண்பீர்! கல்வியெனும்
ஆரா வமிழ்துண்ணும் ஆண்மைமிகு மாணவரீர்!
எல்லார்க்கும் என்றன் இனிய தமிழ்வணக்கம்!

சொல்லார்க்கும் பாட்டில் சுவையார்க்கும் வண்ணம் இங்குத்
தெய்வப் புலவர் **திருவள் ளுவர்ப்**பற்றி,
கைவருசெஞ் சொற்புலவர் **கம்பர்** திறம்பற்றி,
ஈட்டுபுகழ் மாயா **இளங்கோ** எழில்பற்றி,
பாட்டுக் கொருபுலவன் **பாரதி** சீர்பற்றிப்
பாப்பொழிந்து வைத்தார்கள்; பாராட்டிக் கேட்டீர்கள்!
நாப்பொழிவால் உள்ளம் நனைந்து பதம்பட்டு
வித்துதற்கு நல்ல விளைநிலமாய்த் தோன்றுகின்றீர்?
கத்துதற்குத் தேவையில்லை; கன்னித் தமிழ்விதைகள்,
**பாவேந்தன்** பாவிதைகள் பன்னூறு வைத்துள்ளேன்.
சாவேந்தா நல்விதைகள் சாவியாய்ப் போவதில்லை.
அந்த விதையெல்லாம் அள்ளித் தெளிக்கின்றேன்.
எந்த வகையாய் விளையுமென எண்ணுகின்றீர்,
உள்ளத்தே ஊன்றி உயிரில் முளையெடுக்கும்.
வெள்ளத் துணர்வில் விளைந்து பயிராகும்.
காலத்தே முற்றிக் கருத்துக் கதிர்சாய்க்கும்.
ஞாலத்தே நம்விளைவு நல்ல விலைபோகத்
தக்கவொரு நேரமிது! நல்ல தமிழ்விளைச்சல்
மிக்க பரவுமொரு மேலான காலமிதாம்!

அக்காலந் தன்னில் அடியெடுத்து வைக்கின்றோம்!
எக்காலும் ஞாலம் இருண்டிருக்கப் போவதில்லை.
போர்த்த இருளொருநாள் போகத்தான் போகும்;எழில்
ஆர்த்த ஒளிவந்தே ஆளத்தான் ஆளும்;எமை
மாய்த்த இழிநிலைகள் மாளத்தான் மாளும்;இதை
வாய்த்த பெரும்புலவன் வான்முட்டச் சொல்லி விட்டான்!
**பாரதிதா சன்**,அவன்பேர்; பாரதிக்கும் நல்லாசான்!
ஈரமிகு நெஞ்சால் இவனவற்குத் தாசனென்றான்!

மற்றபடி தாசனென்றால் மாண்புகுன்றப் போவதில்லை.
கற்றபடி தானே கணக்குவரும்; பாட்டுவரும்!
நல்லபடி பாவேந்தன் தன்னை அளப்பதற்கு
வல்லபடி ஒன்றில்லை; வாய்த்தபடி தள்ளுபடி!
அப்படியாய்ச் செய்தி அளந்தபடி யாயிருக்க
எப்படி யாய்வீர் எழிற்பாவேந் தன்பாட்டை?
பாருங்கள், பாவேந்தன் பாரதிதா சன்திறத்தை!
ஓருங்கள்! நான்சொன்ன துண்மையா பொய்யாவென்
றப்போது சொல்லுங்கள்! ஆன்றமைவாய்க் கேளுங்கள்.
எப்போதும் காணீர் இடர்.

பாரதி தாசன் பகருவான் தன்னை:
**'நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும்**
**நான் நான் நான்'** - என்றே
இதைவிடத் தன்னை எளிதாய் எவன்சொன்னான்?
புதைவிடந் தோண்டி ஆராய்ச்சி பண்ணி
இதோ,இவன் இப்படி; அதோ அவன் அப்படி
எனவோர் அறிஞன் இயம்பிட வேண்டும்!

மனத்தைத் திறந்து மற்றும் உரைப்பான்:
**'சீர்த்தியால் அறத்தால் செழுமையால் வையப்**
**போர்த்திறத் தால்,இயற்கை புனைந்த ஓர் உயிர்நான்!**
எப்படி அவன்திறம்? அவனே உரைத்தது!
அப்படிப் புனைந்த ஆருயிர் அவனுக்குக்
கைவரும் பாட்டுத் திறத்தைக் கணிக்கிறான்.
பொய்வரா வாயால் புகல்வதைக் கேளுங்கள்;

எப்படி அவன்றன் கொள்கை?
எப்படி அவன்றன் வேகம்?
தப்படி அடித்துத் தள்ளித்
தலைகீழாய்ப் பொய்யைப் பேசிச்
செப்படி வேலை செய்யும்
சிறுமதிப் புலவன் அல்லன்.
இப்படி நான், காண் - என்பான்.
இதுவேயென் கொள்கை என்பான்.
**'இருளினை வறுமை நோயை**
**இடறுவேன்'** என்பான்; இன்னும்
**'ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ**
**அல்லல்கள் வரின் ஏற்பேன்.**

**ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு**
**உவப்புடன் நான் சேர்ப்பேன்.'**
- என்பான் புலமை இறுமாப் போடு!
தன்பாத் திறத்தைத் தனித்தனி யாகச்
சொன்னால் அஃதொரு சுவைதரு விருந்தாம்!
என்னால் முடியுமோ இல்லையோ! எதற்கும்
இயன்ற வரைநான் எடுத்துக் கூறிட
முயன்று பார்க்கின்றேன். முடிவது முடிக!

பாவலர் ஒருவர்க்குப் பதின்திறம் வேண்டும்.
நுண்ணோக்கு, கற்பனை, உவமை, பாத்திறன்,
எண்ணும் இயற்கை ஈடுபாடு, உலகியல்,
மனவியல் அறிவு, மற்றுமொழி யறிவு,
புரட்சி யுள்ளம், பொதுவுணர்வு - இவற்றில்
வரட்சி யில்லா மனநிலை வேண்டும்!
பார்க்கும் பொருளெலாம் பசையொடு நோக்கி
ஆர்க்கும் அழகை அறியும் நற்றிறன்
புலவோர்க் கல்லால் புறத்தார்க்கு வருவதில்!
பலவோர் புலவராய்ப் பயின்று திரியலாம்!
உண்மைப் புலவோர்க்கு உள்ளமும் அறிவும்
நுண்மையாய்ப் படிந்து நோக்குதிறம் வேண்டும்!

எல்லாப் பொருளையும் யாவரும் பார்க்கலாம்.
எல்லார்க்கும் அவற்றின் இயல்புகள் தெரியா!
மாலைப் பொழுதை நாளும் பார்க்கிறோம்?
வேலை யிருந்ததா, நமக்கந்த வேளையில்?
பாவேந்தர் மாலையைப் பார்ப்பதைப் பாருங்கள்;
நாவேந்திச் சொன்னால்தான் நல்லது தெரியும்!

**'அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்;**
**அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்**
**பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?**
**பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே, நீதான்?**
**சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்**
**சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி**
**இந்தாவென் றேயியற்கை அன்னை வானில்**
**எழில்வாழ்வைச் சித்திரித்த வண்ணந் தானோ?'**
எப்படி அவர்க்கு மாலை இருந்தது?
அப்படி நாமதை அறிந்திட வில்லையே!
காரிருள் நிலவைக் 'கவின்நிலா' வென்றே

யாருந்தான் புகழ்வார்; மகிழ்வார்; யாப்பிலே!
ஆனால், பாரதி தாசற் கந்நிலா
ஈனா நின்ற எழுச்சியைப் பாருங்கள்.

'உனைக்காணும் போதினிலே என்னுள் ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தை கிடைத்திடுவ தில்லை;
நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே உனைக்காணும் இன்பந் தானோ?'

முழுமை நிலாவை மேலும் காண்கிறார்;
கொழுமை அழகுக் குலாவலைப் பாருங்கள்!
சிறுவர்க் கிதனைச் செப்பிப் பாருங்கள்!
உருவம் மாறும்; உணர்வும் பெருகும்!

"முழுமை நிலா! அழகு நிலா!
முளைத்ததுவிண் மேலே - அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந்தாற் போலே!

அழுதமுகம் சிரித்ததுபோல்.
அல்லி விரிந்தாற்போல் - மேல்
சுழற்றி எறிந்த வெள்ளித்தட்டு
தொத்திக் கிடந் தாற்போல்!

குருட்டு விழியும் திறந்ததுபோல்
இருட்டில் வான விளக்கு - நம்
பொருட்டு வந்தது பாடி ஆடிப்
பொழுது போக்கத் துவக்கு!

மரத்தின் அடியில் நிலவு வெளிச்சம்!
மயிலின் தோகை விழிகள்! - பிற
தெருக்கள் எல்லாம் குளிரும் ஒளியும்
சேர்த்து மெழுகும் வழிகள்!"

எப்படி அவரின் நிலவுக் காட்சி?
இப்படி யாநாம் எழிலைக் காண்கிறோம்?

காட்டைப் பற்றியவர் கழறுதல் கேண்மின்!
காட்டையே கண்முன் நிறுத்துதல் காண்மின்!

"முட்புதர்கள் மொய்த்ததரை எங்கும் - எதிர்
முட்டுகருங் கற்களும் நெருங்கும் - மக்கள்
இட்டடி எடுத்தெடுத்து வைக்கையிலே
கால்களில் தடுங்கும் உள்- நடுங்கும்!

கிட்டிமர வேர்கள் பலகூடும் அதன்
கீழிருந்து பாம்புவிரைந் தோடும் - மர
மட்டையசை வால்புலியின்
குட்டிகள்போய்த் தாய்ப்புலியைத் தேடும் - பின்வாடும்.

நீள்கிளைகள் ஆல்விழுதி னோடு - கொடி
நெய்துவைத்த நற்சிலந்திக் கூடு - கூர்
வாளெயிற்று வேங்கையெலாம்
வால்சுழற்றிப் பாயவரும் - காடு - பள்ளம் மேடு.

கேளொடும் கிளம்பிவரும் பன்றி - நிலம்
கீண்டுகிழங் கே,எடுத்த தன்றி - மிகு
தூளிபடத் தாவுகையில்
ஊளையிடும் குள்ளநரி, குன்றில் - புகும் ஒன்றி!

வானிடை ஓர் வானடர்ந்த வாறு - பெரு
வண்கிளை மரங்கள் என்ன வீறு - நல்ல
தேனடை சொரிந்ததுவும்
தென்னைமரம் ஊற்றியதும் ஆறு - இன்பச் சாறு.

கானிடைப் பெரும்பறவை நோக்கும் - அது
காலிடையே காலிகளைத் தூக்கும் - மற்றும்
ஆனினம் சுமந்தமடி
ஆறெனவே பால்சுரந்து தீர்க்கும் - அடை ஆக்கும்!"

பாவேந்தர் நுண்ணோக்குப் பாடல்கள் ஏராளம்!
ஆவலால் ஒன்றிரண் டழகைக் காட்டினேன்!
எத்துணை எளிமை! எத்துணை இனிமை!
கொத்தும் கிளியும் கொய்யாப் பழமும்போல்!
அடுத்து, அவர் கற்பனை எடுத்துக் கூறுவேன்.
மடுத்துளம் மகிழ்வீர்! மயக்கம் தவிர்ப்பீர்!
வானொருஆடையாம்! நிலவு பெண்ணாம்!
மானுடல் மறைத்து மதிமுகம் காட்டுமாம்!
என்னே புலவரின் கற்பனை எழுச்சி!

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்க வெள்ளிப் பாற்குடமோ? அமுதஊற்றோ?
காலை வந்த செழும்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்போ?"

புலவர் பாடல் தீட்டுவ தற்கே
எழுதுகோல் எடுத்தார்; ஏடும் எடுத்தார்!
வந்த கற்பனை வடித்துத் தருகிறார்
எந்தப் புலவன் இப்படி எழுதினான்!

"ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான்!
ஓடையுந் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியந் தீட்டுக என்றுரைக்கும்!
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்
ஆடும் மயில்நிகர் பெண்களெல்லாம் உயர்
அன்பினைச் சித்திரம் செய்க, என்பார்!

சோலைக் குளிர்தரு தென்றல் வரும் - பசுந்
தோகை மயில்வரும் அன்னம் வரும்
மாலைப் பொழுதினில் மேற்றிசையில் வந்து
மாணிக்கப் பரிதி காட்சி தரும்!
வேலைச் சுமந்திடும் வீரரின் தோள் உயர்
வெற்பென்று சொல்லி 'வரைக' எனும்!
கோலங்கள் யாவும் மலைமலையாய் வந்து
கூவின என்னை இவற்றிடையே,

இன்னிலிலே தமிழ் நாட்டினிலே உள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே!
இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக் கும்நிலை எய்திவிட்டால்,

**துன்பங்கள் நீங்கும் சுகம்வரும் நெஞ்சினில்**
**தூய்மையுண் டாகிடும், வீரம் வரும்!'**

புதுவைப் புலவன் கற்பனை வளத்தில்
எதுவெடுத் துரைப்பேன்? எதனை விடுப்பேன்!
கற்பனைத் தேனாறு! கவின்நிலா வானம்!
பொற்புனைந் தெடுத்த புதுமணப் பூக்கள்!

**'முல்லையிலே சிரித்தபடி தென்றலிலே சொக்கி**
**முன்னடியும் பெயர்க்காமல் இன்னும் இருக்கின்ற**
**பொல்லாத மாலைக்குப் போக்கிடமோ இல்லை'**
- என்று, அவர் காயும் தலைவியின் ஏசலில்
நின்ற கற்பனை நினைத்து மகிழ்மின்!
மேலும் அத்தலைவி பகலினைக் கடிவாள்!
ஏலுமா நமக்கு? இத்தகு கற்பனை!

**''மேற்றிசையில் அனற்காட்டில் செம்பரிதி வீழ்ந்து**
**வெந்து நீறாகாமல் இருப்பதொரு வியப்பே''**
பாரதி தாசன்,தன் உள்ளக் கொதிப்பைப்
பாரதிர முழக்குதல் பாருங்கள் இங்கே;

**'மண்மீதில் உழைப்போ ரெல்லாம்**
**வறியராம்: உரிமை கேட்டால்**
**புண்மீதில் அம்பு பாய்ச்சும்**
**புலையர்செல் வராம்;இ தைத்தன்**
**கண்மீதில் பகலி லெல்லாம்**
**கண்டுகண் டந்திக் குப்பின்**
**விண்மீனாய்க் கொப்ப ளித்த**
**விரிவானம் பாராய் தம்பி!'**

எப்படி? அவர்தாம் இயம்பிய கற்பனை?
இப்படிப் புரட்சியாய் எழுதிய தவர்மனம்!

அடுத்து, ஒரு புலவருக் கிருக்கும் ஆற்றல்
எடுத்தது உவமையால் விளக்குதல்; இல்லையா?
பாவேந்தர் உவமைகள் பழுதிலா உவமைகள்.

**'பொரியலோ பூனைக்கண்போல் பொலிந்திடும்'** என்பார்.
**'குத்துண்ட கண்ணாடி கொண்டபல வீறல்கள்போல்**
**துத்திக்காய் போலச் சுடர்முகத்தை நீசுருக்கி ஏனழுதாய்'**
- என்று கேட்பார்!

**'கேள்வியால் அகலும் மடமைபோல்**
**நள்ளிரவு மெதுவாய் நடந்துகொண் டிருந்தது'**
என்றே அறிவோடு உவமையைப் பொருத்துவார்.

பரிதியின் வரவால் இருள்வில கியதை,
**'தொட்டியின் நீலத்தில் சுண்ணாம்பு கலந்த**
**கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது'**
- என்பார்!

- இங்கோர் ஏழைக் குடிசை!
மிகவும் சிறியது; மிகமிகச் சிறியது!
புகவும் இயலாப் புன்மைக் குடில் அது!
எப்படிச் சொல்வீர் அதனை? எண்ணுங்கள்!
அப்படிச் சொன்னால் அனைவர்க்கும் விளங்குமா?
இப்படிச் சொன்னால் எல்லார்க்கும் தெரியுமா?
என்றே எண்ணி, எண்ணி இயம்புதற்
கொன்றும் இயலாமல் உழல்கையில் சொல்வார்:
**'கூனன் புகுந்தாலும் குனிந்து புகும்குடிசை'**

எப்படி அவர்தம் உவமை இயல்திறம்?
சிட்டுக் குருவியை எல்லோரும் கண்டோம்!
**"கொத்தும் அதன்மூக்கு முல்லை யரும்பு!**
**மல்லிபிளந்தது போன்றது அதன்கண்"!**
என்றுசொன் னோமா? பாவேந்தர் சொன்னார்!
**'பின்னிய ஆடை காற்றில்**
**பெயர்ந்தாடி அசைவ தைப்போல்**
**நன்னீரில் கதிர் கலந்து**
**நளிர்கடல் நெளிதல்'** கண்டார்!
நாம்கண் டோமா? நறுக்கென
ஊம்எனும் முன்னே, உவமையால் விளக்கிய
புலவன் பாரதி தாசனைப் போலச்
சிலபேர் இருப்பார்; பலபேர் இருக்கார்!
**"காலுக்குப் புன்னையிலை போலும் செருப்பணிந்து**
**கையில் விரித்தகுடை தூக்கி - நல்ல**
**கல்விக் கழகமதை நோக்கி - காய்ச்சும்**
**பாலுக்கு நிகர்மொழிப் பாவைநீ செல்லுவதைப்**
**பார்க்கும் இன்பந்தானடி பாக்கி!**

**மேலுக்குச் சட்டையிட்டு மெல்லியசிற் றாடைகட்டி**
**வீட்டினின்றும் ஆட்டமயில் போலே - கைம்**

**மேற்சுவடி யோடுதெரு மேலே - கூர்**
**வேலுக்கு நிகர்விழி மெல்லிசெல் வதைக்காண**
**வேண்டுமே இப் பெற்றவள் கண்ணாலே!**

.................................................................

**மாவடு நிகர்விழிச் சின்னஞ் சிறுமியே, நீ**
**மங்கை எனும் பருவம் கொண்டு - காதல்**
**வாழ்வுக்கோர் மாப்பிள்ளையைக் கண்டு - காட்டித்**
**'தேவை இவன்' எனவே செப்பும்மொழி எனக்குத்**
**தேன்! கனி! தித்திக்குங்கற் கண்டு!"**

கோடிக் கணக்கில் உவமைகள் கூறுதல்
வாடிக்கை அவர்க்கு! வரட்சியங் கில்லை!
அடுத்தது பாத்திறன் அத்திற மைக்கும்
எடுத்த புலவன் 'பாரதி தாசனுக்'
கீடில்லை என்பேன்! எனைமறுப் பீரா?

**"கண்ணுக் கொரு வண்ணப்புறா!**
**காதுக்கவள் கானக் குயில்**
**பெண்ணுக்கர சானவளை**
**வந்தால் வரச்சொல் - எனக்கே**
**பேச்சுப்படி ஆசைமுத்தம்**
**தந்தால் தரச்சொல்!"**

சொல்லச் சொல்ல சுவைத்திடும் கட்டி
வெல்லச் சொற்கள்! துள்ளு நடை!

**"ஓர்நிலவே அவள்தானோ கதிர்தானோ?**
**கொம்புத் தேனோ - நடை**
**ஓவியமோ புள்ளி மானோ?"**

சிந்துத் தேனிசை வந்திடும் பாக்கள்!

"கைப்பிடியில் கூட்டிவரக் கட்டளையிட் டாளெனவே
செப்புகின்றாய் வாழியவே வாழி! - நான்
ஒப்பவில்லை என்றுரைப்பாய் தோழி!'

"மந்தையின் மாடு திரும்பையிலே - அவள்
மாமன் வரும் அந்தி நேரத்திலே
குந்தியிருந்தவள் வீடு சென்றாள் - அவள்
கூட இருந்தாரையும் மறந்தாள்!"

தொந்தி மறைந்திட வேட்டிகட்டி - அவன்
தூக்கி வந்தானொரு வெல்லக்கட்டி
இந்தா எனக்கொடுத் திட்டான்டி - அவன்
எட்டி ஒரே முத்தம் இட்டான்டி!

'கட்டிவெல்லத்தைக் கசக்கு தென்றாள் - அவன்
கட்டாணி முத்தம் இனிக்கு தென்றாள்!
தொட்டியின் நீரில் குளிக்கச் சென்றான்! - அவன்
தோளை அவள்ஓடித் தேய்த்து நின்றாள்!''

'கொட்டிய நீரில் குளிர்ச்சி உண்டோ - இந்தக்
கோடை படுத்திடும் நாளில்' என்றாள்!

'தொட்டியின் தண்ணீர் கொதிக்கு' தென்றான் -நீ
தொட்ட இடத்தில் சிலிர்க்கு' தென்றான்.

இசைத்தேனில் காதலைப் பிசைந்த பாக்கள்!
பேச்சுப் போலவே பாநடை யிருக்கும்!
மூச்சுப் பிடித்துப் பாடிட வேண்டா!
இதோ பாருங்கள் பாநடை எழிலை!

"கிழக்கு வெளுக்கக் கிளிமொழியாள் தங்கம்
வழக்கப் படிவீட்டு வாயிற் படிதுலக்கிக்
கோல மிட்ட பின்பு குடித்தனத்துக் கானபல
வேலை தொடங்கி விரைவாய் முடிக்கையிலே
ஏழுமணிக் காலை எழுந்தாள் அவள்மாமி!
'வாழுகின்ற பெண்ணாநீ வாடி' என்றாள் தங்கத்தை!
'இந்நேரம் தூங்கி இருந்தாயா? என்பிள்ளை
எந்நேரம் காத்திருப்பான் இட்டளிக்கும் 'காப்பிக்கும்'?
என்றே அதட்டி இழுத்துத் தலைமயிரை
நின்ற பொற்பாவை நிலத்தில் விழச்செய்தாள்''

எப்படிப் பாநடை? யாப்பெலாம் இவர்க்கு
ஒப்பஅடி போட்டே உடன்வர வில்லையா?
புலவர்க்குத்தான் தமிழ் என்ற போக்கினை
இலையென் றாக்கிய ஈடிலாப் பாவலர்!

இப்படிப் பாத்திறன்! அடுத்தது இயற்கை,
ஈடு பாட்டினை இயம்பவே வேண்டா!
பாடு பட்டே இயற்கையைப் பாடும்
கேடுகெட்ட கீழ்மைப் புலவர்கள்
போல்இல்லை இந்தப் புரட்சிப் புலவன்!
ஓலைச் சுவடிக் காலத்தும் இவன்போல்
இயற்கையைப் பாடுவோர் அரியராய் இருந்தனர்!

எடுத்துக் காட்டாய் இரண்டொரு பாடல்கள்
மடுத்துக் கேட்போம்! மாண்பது விளங்கும்!

காலை, கதிர், கடல், செம்பொன் வானம்!
கோலக் காட்சியைப் பாவலன் கூறுவான்:

'எழுந்தது செங்க திர்தான்
கடல்மிசை! அடடா எங்கும்
விழுந்தது தங்கத் தூறல்!
வெளியெலாம் ஒளியின் வீச்சு!''

'அழகின் சிரிப்பு' எனும் நூல்,அவர் சுவைத்த
இயற்கை ஓவியக் கோப்பென் றியம்பலாம்!

'அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச் செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்
சிந்தைஉடல் அணுஒவ்வொன் றும் சிலிர்க்கச்
செல்வம்ஒன்று வருமதன்பேர் தென்றற் காற்று!'

இருள்போய் ஒளிந்த இடத்தைத் தேடி
அருள்தோய் பாவலர் அடைந்ததைக் காண்மின்!

'அடுக்கிதழ்த் தாம ரைப்பூ
இதழ்தோறும் அடிப்புறத்தில்
படுத்திருப் பாய், நீ' . என்றே
இருளினைப் பாடுகின்றார்!

"களிச்சிறு தும்பி பெற்ற
கண்ணாடிச் சிறகில் மின்னித்
துளிச்சிறு மலர்இ தழ்மேல்
கூத்தாடித் துளிதேன் சிந்தி,
வெளிச்சிறு பிள்ளை யாடும்
பந்தோடு விளையா டிப்போய்க்
கிளிச்சிற காடை பற்றிக்
கிழிக்கின்றாய் தென்ற லே, நீ!

செருந்தி, ஆச்சா, இலந்தை
தேக்கிந்து, கொன்றை, எல்லாம்
பெருங்காட்டின் கூரை! அந்தப்
பெருங்கூரை மேலே நீண்ட
ஒரு மூங்கில்; இரு குரங்கு
கண்டேன் பொன் னூசல் ஆடல்!

ஆனையொன் றிளம ரத்தை
முறித்திடும்; ஆந்தைக் கூட்டைப்
பூனையொன் றணுகும்; அங்கே
புலியொன்று தோன்றும்; பாம்பின்

பானைவாய் திறக்கக் கண்டு
யாவுமே பறக்கும்; கன்றோ
மானைக் காணாது நிற்கும்!
அதைஒரு நரிபோய் மாய்க்கும்!

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்குதொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கென இழுத்ததைப் போல்
கிளைதொறும் தாவித் தாவி
விழுதெல்லாம் தொங்குகின்ற
ஒளிப்பாம்பாய் எண்ணி அஞ்சி
உச்சிபோய் தன்வால் பார்க்கும்!''

காட்டிடை நடந்ததொரு காட்சியைப் பாவலர்
காட்டும் வகையிது! காணுங்கள் மேலும்!

'அருவிகள் வயிரத் தொங்கல்!
அடர்கொடி பச்சைப் பட்டே!
குருவிகள் தங்கக் கட்டி!
குளிர்மலர் மணியின் குப்பை!
குறத்தியர் கவண்எ டுத்துக்
குறிபார்க்கும் விழி,நீ லப்பூ!
எறியும்கை செங்காந் தட்பூ!
உடுக்கைதான் எழில் இடுப்பே!'

தத்தும் அருவியாய்த் தாவும் கருத்துகள்!
முத்தும் பவழமும் வயிரமும் மிடைந்த
பன்மணி மாலை! பாவியக் கொத்து!
என்வகை யாயிதை இயம்புவேன்? கேளீர்!
வெள்ளப் பெருக்கை விரிப்பதைக் காண்மின்!

"இருகரை ததும்பும் வெள்ள
நெளிவினில் எறியும் தங்கச்
சரிவுகள்! நுரையோ முத்துத்
தடுக்குகள்! சுழல்மீன் கொத்தி
மரகத வீச்சு! நீரில்
மிதக்கின்ற மரங் களின்மேல்
ஒருநாரை, வெண்டா மும்பூ!''

எதுகை மோனைக்கு இறவானம் பார்க்கும்
புதிய தலைமுறைப் புழுக்கை யலன், அவன்!

அகர முதலியைத் தேடி அலையும்
பகற்கனா காணும் பாவலன் அல்லன்!
எண்ணிய பொழுதெலாம் எதிர்வந்து நிற்கும்
வண்ணச் சொற்கள்! வனைகின்ற ஓவியம்!
பாடிக் கொண்டே பறக்கும் வண்டுபோல்
நாடிக் கொண்டே நாட்டிடும் பாவலன்!
இதோ, பாருங்கள் இன்னொரு பாடல்!
எதோ, இதன்பொருளை எண்ணுங்கள் பார்க்கலாம்!

**"இருநிலா இணைந்து பாடி**
**இரையுண்ணும் செவ்வி தழ்கள்**
**விரியாத தாம ரைபோல்**
**ஓர்இணை! மெல்லி யர்கள்**
**கருங்கொண்டை! கட்டி ஈயம்!**
**காயாம்பூக் கொத்து! மேலும்**
**ஒருபக்கம் இருவா ழைப்பூ!**
**உயிருள்ள அழகின் மேய்ச்சல்!"**

அழகின் மேய்ச்சலை அறிந்துகொண் டீரா?
புலவர் மொழிகின்றார் பொருள்விளங் கிற்றா?
இருநிலா இரையுண்ணும் என்கின்றார் புலவர்!
கருங்கொண்டை இரண்டு; கட்டி ஈயம்!
தாமரை ஓர்இணை இருவா ழைப்பூ!
ஆம்,இவை புறாக்கள்; அறிந்து கொள்க!
பாடலை மீண்டும் படித்துப் பார்க்க!
ஆடலை - அழகின் ஆடலை - அருந்துக!
அடுத்து, அவர் உலகியல் அறிவைப் பார்ப்போம்.

**'வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால்**
**சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்'**

என்கிறார் புலவர், என்ன சரிதானே?
தின்கிறோம் இவற்றைத் திரும்ப நினைத்தோமோ?

**"வானளவும் அங்கங்கள், வானரங்கள், ராமர்கள்,**
**ஆனது செய்யும் அநுமார்கள், சம்பவந்தர்,**
**ஒன்றல்ல; ஆயிரம் நூல்கள் உரைக்கட்டும்!**
**விஸ்வரூ பப்பெருமை மேலேறும் வன்மைகள்**
**உஸ்என்ற சத்தங்கள் அஸ்என்ற சத்தங்கள்**
**எவ்வளவோ நூலில் எழுதிக் கிடக்கட்டும்!**

செவ்வைக் கிருபை, செழுங்கருணை, அஞ்சலிக்கை
முத்தி முழுச்சுவர்க்கம் முற்றும் உரைக்கட்டும்!
இத்தனையும் சேரட்டும் என்ன பயனுண்டாம்?''

- என்றே உலகியல் இயம்பக் கேண்மின்!
அன்றே எழுதியதால் ஆறேழு வடசொற்கள்
வந்து கலந்ததலால் கருத்தில் வழுவுண்டோ?
சொந்த வெறுப்பின்றிச் சொல்லுவதற் காருளரே!
பொதுக்கருத்து போகட்டும்! புலவர் புகன்ற
புதுக்கருத் தொன்றைப் புரட்டிப் பார்ப்போம்!
மருமகட்கு மாமி விருந்தோம்பும் மாண்பை
அருமைத் தமிழில் அறிய உரைக்கின்றார்!

“முன்வைத்த முத்துத் தயிரிருக்கும்; பின்னறையில்
வெண்ணெய் விளாங்காய் அளவிருக்கும் - கன்றே
மறக்கினும் அம்மாவென் றழைத்து மடிப்பால்
கறக்கப் பசுக்காத் திருக்கும் - சிறக்கவே''

“சேலத்து அங்காடிச் சேயிழையார் நாள்தோறும்
வேலைக் கிடையில் மிகக்கருத்தாய்த் - தோலில்
கலந்த சுளைபிசைந்து காயவைத்து விற்கும்
இலந்தைவடை வீட்டில் இருக்கும் - மலிந்துநீர்
பாய்நாகர் கோயில் பலாச்சுளையின் வற்றலினைப்
போய்நீபார் பானையிலே பொன்போல - தேய்பிறைபோல்
கொத்தவரை வற்றல்முதல் கொட்டிவைத்தேன், கிள்ளையே
வைத்தவரை உண்டுபின் வையாமைக் - குத்துன்பம்
உற்றிடச்செய் ஊறுகாய் ஒன்றல்ல கேட்பாய்நீ
இற்றுத்தேன் சொட்டும் எலுமிச்சை - வற்றியவாய்
பேருரைத்தால் நீர்சுரக்கும் பேர்பெற்ற நாரத்தை!
மாரிபோல் நல்லெண்ணெய் மாறாமல் - நேருறவே
வெந்தயம் மணக்கஅதன் மேற்சாயம் போய்மணக்கும்
உந்துசுவை மாங்காயின் ஊறுகாய் - நைந்திருக்கும்
காடி மிளகாய் கறியோடும் ஊறக்கண்
ணாடியிலே இட்டுமேல் மூடிவைத்தேன் - தேடிப்பார்!
..........................................................................
கீரை தயிர் இரண்டும் கேடு செயும் இரவில்!
மோரைப் பெருக்கிவிடு முப்போதும் - நேரிழையே
சோற்றை அள்ளுங்கால் துவள்வாழைத் தண்டில்உறும்
சாற்றைப்போ லேவடியத் தக்கவண்ணம் - ஊற்றுநெய்யை!

வாழை இலையின் அடிஉண்பார் வலப்புறத்தில்
வீழ விரித்துக் கறிவகைகள் - சூழவைத்துத்
தண்ணீர்வெந் நீரைத் தனித்தனியே செம்பிலிட்டு
வெண்சோ றிடுமுன் மிக இனிக்கும் - பண்ணியமும்
முக்கனியும் தேனில் நறுநெய்யில் மூழ்குவித்தே
ஒக்கநின்றே உண்டபின் சோறிட்டுத் - தக்கபடி
கேட்டும் குறிப்பறிந்தும் கெஞ்சியும் மிஞ்சுமன்பால்
ஊட்டுதல்வேண் டும்தாய்போல் ஒண்டொடியே கேட்டுப்போ
எக்கறியில் நாட்டம் இவர்க்கென்று நீயுணர்ந்தே
அக்கறியை மேன்மேலும் அள்ளிவை - விக்குவதை
நீமுன் நினைந்து நினைப்பூட்டு நீர் அருந்த!
ஈமுன்கால் சோற்றிலையில் இட்டாலும் - தீமையம்மா!''

- என்றே குடும்ப விளக்கில் எழுதுகின்ற
பொன்னேர் வரிகளாற் பாவேந்தர் பூண்விளங்கும்!
அடுத்து, அவர் மனவியல் அறிவை உரைக்கிறேன்.
தந்தை குழந்தையைத் தாவி யணைத்துப்
பள்ளிக் கனுப்பும் பாங்கை உரைக்கிறார்!

“தலைவாரிப் பூச்சூடி உன்னை-பாட
சாலைக்குப் போ என்று சொன்னாள்உன் அன்னை!
சிலைபோல ஏனங்கு நின்றாய் - நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?

விலைபோட்டு வாங்கவா முடியும் - கல்வி
வேளைதோறும் கற்று வருவதால் படியும்!
மலைவாழை யல்லவோ கல்வி - நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!

படியாத பெண்ணா யிருந்தால் - கேலி
பண்ணுவார் என்னைஇவ் வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடுமுன் ஓடு! - என்
கண்ணல்ல? அண்டை வீட்டுப் பெண்களோடு!''

‘கடிதாய் இருக்குமிப் போது! - கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது!
கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு - பெண்
கல்வி,பெண் கல்வி என்கின்ற தன்போடு!'

பள்ளிப் பிள்ளையின் பச்சை மனத்தைத்
தெள்ளத் தெளிவாய்த் தெரிந்திருந் தாலன்றி
இப்படி எழுதிட இயலுமோ புலவர்க்கே!
அப்படியே கன்னியின் மனத்தை அறிந்தவர்!

**'நான்குபக்கமும் வேடர் சுற்றிட**
**நடுவில் சிக்கிய மான்போல் - இங்**
**கேன் பிறந்தேன் இவர்கள் வீட்டில்**
**கரையி லிட்டதோர் மீன்போல்!'**

**'நூறுமுறை அவள்பார்த்தாள், அவனை! ஆளன்**
**நூறுமுறை நோக்கினான். இனிது பெற்ற**
**பேறுதனை இழப்பாள்போல் குறட்டினின்று**
**பெயர்த்தஅடி கீழ்ப்படியில் வைக்குமுன்னர்**
**ஆறுமுறை அவள்பார்த்தாள், அவனும் பார்த்தான்!**
**அவன்வண்டிப் படிமிதித்தான் திரும்பிப் பார்த்தான்!**

இளைஞனின் இளைஞையின் இனிய மனங்களைக்
களைந்திடா வண்ணம் கையகப் படுத்திடும்
பெருந்திறன் பாவேந்தர் பிறப்பிலே முகிழ்த்தது!
அருந்திறன் பிறர்க்கே! அடுத்தது பாருங்கள்!

**"நகைமுத்தை விரும்பு கின்றேன்;**
**நாளைக்கே மணக்க வேண்டும்!**
**வகைசெய்க அப்பா' வென்று**
**வாய்விட்டு நானா சொல்வேன்?**
**நிகரற்றாய்! உன்பெற் றோர்பால்**
**நீசொன்னா லென்ன வென்றான்."**

**'மகளுக்கு நாண மில்லை**
**என்பார்கள் மாட்டேன்' என்றாள்**

இதைவிட மணக்கப் போகும்
இருவரின் மனத்தும் உள்ளே
புதைந்துள கருத்தை யார்தாம்
புகன்றிட வல்லார்? மற்றார்
கதைவிடு வார்கள்; நெஞ்சக்
கருத்தினை உணர மாட்டார்!
எதைவிட? எதைநான் சொல்ல?
இன்னொன்று, மணந்தோர் காதல்!

**'தொண்டையினில் ஒன்றுமே அடைக்கவில்லை!**
**துணைவனவன் சிறுகனைப்புக் கனைக்கலுற்றான்.'**

எத்துணை நயமாய் எடுத்துச் சொல்கிறார்!
பித்தனைப் போலப் பிதற்றவா வேண்டும்?
சமையல் செய்யும் குடும்பப் பெண்ணின்
அமைவான மனத்தை அளந்து தருகிறார்.

**"கொண்டவர்க் கெதுபி டிக்கும்?**
**குழந்தைகள் எதைவி ரும்பும்?**
**தண்டூன்றி நடக்கும் மாமன்**
**மாமிக்குத் தக்க தென்ன?**
**உண்பதில் எவரு டம்புக்**
**கெதுவுத வாதென் றெல்லாம்**
**கண்டனள்; கறிகள் தோறும்**
**உண்பவர் தம்மைக் கண்டாள்!'**

கன்னித் துடிப்பையும், கணவனை மணந்த
பெண்ணின் துடிப்பையும் பிரித்துப் பேசியோர்,
ஊருக்குச் சென்றான் ஊர்வரக் கண்டதும்,
மோருக்குள் சிலிர்க்கும் மத்தென உணர்ச்சிகள்
கொப்ப ளித்தன! ஆயினும் மாமியார்
செப்பும் பகடிக்கு உள்ளம் நாணி
ஒப்பனை செய்வதும் உலாவரத் திரிவதும்
செப்பமாய்ச் செய்யும் மருமகள் செயல்களை
ஊன்றி நோக்கி உரைப்பதைக் கேளுங்கள்:

**'தென்றல் அடிக்கையில் பச்சிளங் கீற்றுச்**
**சிலிர்த்து நிலைகுலைந் தாடுதல் போல்**
**இன்றைக்கு நீகொண்ட பூரிப்பின் காரணம்**
**என்னடி மின்னல் இடைச் சிறுக்கி?**
**நின்றஉன் கால்கள் நிலைக்கவில்லை; கடல்**
**நீராய் நெளிந்தது பொன்னுடலும்!**
**அன்றைக்குச் சென்றவன் என் மகன் வீட்டை**
**அடைந்த மகிழ்ச்சித் திருக்கூத்தோ?'**

**'மாற்றியணிவதும் சேலையினை, மலர்**
**வாங்கி யணிவதும் கூந்தலிலே, ஒரு**
**காற்றென ஓடிச் சிரிக்கும் முகத்துக்குக்**
**கண்ணாடி காட்டிப்பின் மீளுவதும்'**
**நேற்றில்லையே! இன்று பூரிப்ப தென்னடி**
**நீள்புருவத்து நிலாப் பிறைச்சி?**
**வேற்றூர்க்குச் சென்றவன் என்மகன் வீட்டுக்கு**
**மீண்ட மகிழ்ச்சித் திருக்கூத்தோ?'**

வெளிப்படை யாகப் பொருள்தரும் சொற்கள்!
விளக்கிடப் பிறரோ உரைகளோ வேண்டா.
துளிப் பிச காதத உணர்வின் தொடையல்!
தோகைக் குறும்பினை இன்னும் கேளுங்கள்:

**'கறிகள் சமைத்தபின் தெருவினில் விற்றிடும்**
**காய்களை ஓடி அழைப்பதுவும்**

**சிறுவிரல் மோதிரம் பார்ப்பதுவும், பார்த்து**
**மகிழ்வதும், செவ்விதழ் சேர்ப்பதுவும்**
**அறையினை நோக்கலும் நேற்றிலையே, இன்று**
**அப்படிப் பூரிப்ப தேதுக்கடி?**
**பிறநகர் சென்றவன் - என்மகன்- ஊர்வரப்**
**பெற்ற மகிழ்ச்சித் திருக்கூத்தோ?**

**கச்சையை நோக்கலும், கண்கள் மலர்வதும்**
**கைவளை யைச்சரி செய்வதுவும்,**
**மொச்சை உரிக்கையில் முன்கட்டில் ஓடி, மு**
**ழங்கும் சிலம்படி மீளுவதும்,**
**பச்சைப் பசுங்கிளி தானெனக் கொஞ்சலும்**
**பார்த்தில னேஇன்று பூரிப்பதேன்?**
**அச்சீமை சென்றவன் - என்மகன் - வீட்டை**
**அடைந்த மகிழ்ச்சித் திருக்கூத்தோ'?**

மருமகள் பூரிப்பை மகிழ்வொடும் குறும்பொடும்
அருமையாய் உரைக்கும் பாவேந்தர் அருந்திறன்
எத்துணைப் பெரியது! எத்துணைச் சிறந்தது!
இத்துணைச் சிறப்பாய் எவரெடுத் துரைத்தார்?
இக்கா லத்துத் திரைப்படப் பாடலை
முக்கலும் முனகலும் முறுகலும் திருகலும்
கெக்கலி இசையொடு கேட்டுமுகஞ் சுளிக்கும்
அருவருப் புணர்ச்சியிப் பாடலில் உண்டா?
பெருமகிழ் வன்றோ பின்னிப் பிணையும்!
காசடிக் கின்ற கயவரின் கண்கள்
மாசிலா இத்தகு மாண்புடைப் பாடல்கள்
பக்கந் திரும்புமா? பயனும் விளையுமா?
எக்காலத் தந்நிலை எய்துவ திங்கே?

புதிய மனநிலை புகட்டும் பாவலர்
முதியோர் காதலை முழக்குதல் கேளீர்!

**'அறம்பெய்த கையும் ஓயும்;**
**மக்களை அன்பால் தூக்கிப்**
**புறம்போன காலும் ஓயும்;**
**செந்தமிழ்ப் புலவர் சொல்லின்**
**திறங்கேட்ட காதும் ஓயும்!**
**செயல்கண்ட கண்ணும் ஓயும்!**
**மறவனைச் சுமக்கும் என்றன்**
**மனம்மட்டும் ஓய்தல் இல்லை!'**

மறவனைச் சுமக்குமாம் மங்கையின் முதியவுள்ளம்!
மனம்மட்டும் ஓயாதாம்;! புலவரின் மனவியல்
எத்தகு சிறப்பாய் இருந்தது பாருங்கள்!
மெத்தவும் சிறப்பாய் மேலும் உரைக்கிறார்!

**'அருகரு கிருவர்; மிக்க**
**அன்புண்டு, செயலே இல்லை!'**

இரண்டே அடிகளில் முதுமையின் இன்பம்
திரண்டு வெளிப்படல் புலமையின் திறமே!
அடுத்தது பாவலர் **மொழித்திறன்;** அதனையும்
எடுத்துச் சொல்வேன்;! இருந்து கேளுங்கள்:
புலவர் ஒருவர் புகன்ற சொற்களின்
வளத்தை யறிந்தால் மொழித்திறன் உணரலாம்!
பாவேந் தர்க்குப் பழந்தமிழ்ப் பயிற்சியின்
ஈவாய் அமைந்தது சொல்திறன்! இதோ! ஒன்று

**'நூலைப்படி - சங்கத்தமிழ் நூலைப்படி - முறைப்படி**
**காலையில்படி! கடும்பகல்படி!**
**மாலையிரவு பொருள்படும்படி - நூலைப்படி - சங்கத்தமிழ்**
**நூலைப்படி - முறைப்படி**
**கற்பவை கற்கும்படி - வள்ளுவர் சொன்னபடி.**
**கற்கத்தான் வேண்டுமப்படி!**
**கல்லாதவர் வாழ்வதெப்படி - நூலைப்படி - சங்கத்தமிழ்**
**நூலைப்படி - முறைப்படி**
**அறம்படி - பொருளைப்படி - அப்படியே இன்பம்படி .-**
**இறந்ததமிழ் நான்மறை**
**பிறந்ததென்று சொல்லும்படி - நூலைப்படி - சங்கத்தமிழ்**
**நூலைப்படி - முறைப்படி**
**தொடங்கையில் வருந்தும்படி - இருப்பினும் ஊன்றிப்படி**
**அடங்கா இன்பம் மறுபடி**
**ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி - நூலைப்படி சங்கத்தமிழ்**
**நூலைப்படி- முறைப்படி**

**பொய்யிலே முக்காற்படி - புரட்டிலே காற்படி**
**வையகம் ஏமாறும்படி**
**வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி? நூலைப்படி**
**- சங்கத்தமிழ் நூலைப்படி - முறைப்படி**
**அகப்பொருள்படி அதன்படி புறப்பொருள்படி நல்லபடி**
**புகப்புகப் படிப்படியாய்ப்**
**புலமைவரும் என்சொற்படி - நூலைப்படி - சங்கதமிழ்**
**நூலைப்படி - முறைப்படி'**

எப்படி? படிபடி! எத்தனைப் படிகள்?
செப்படி வேலையா, சொற்படி கட்டுதல்?
எழுதிப் பாருங்கள்; இழுப்பு தெரியும்!
பாரதி தாசனோர் புலவனா என்பான்.
பாரதிர முழக்குவேன்! பாரதி தாசன்
உன்னை விட, உன் அப்பனை விடவும்
மன்னாதி மன்னன்! பாட்டிலே மன்னன்!
பொழுதிருந் தால், நான் புரட்டிக் காட்டுவேன்!
அழுமூஞ்சி களுக்கே அடிமுடி தெரியுமா?
எதுகைத் தொடையால் எம்பா வேந்தன்
புதுவகைப் பாநடை புனைந்து காட்டினான்!
சத்தி முத்தப் புலவர் மாக்கதை!
பத்தன்று; ஒன்றைப் பகர்வேன் கேளுங்கள்;
அரசி இரவெலாம் அரசனின் வரவை
எதிர்பார்த் திருந்தாள்! இவனோ விடியலில்
பள்ளி எழுச்சி பாடுவான், வந்து!

**'இருள் மடிந்தது !**
**கூவும் சேவல் கழுத்தோ ஒடிந்தது!**
**கதிரொளி எங்கும் படிந்தது!**
**துயில் எழுப்புவோரின்**
**இசைத்தேன் காதில் வடிந்தது!**
**பெண்ணே விழி, பொழுது விடிந்தது!**

கதவைத் திறந்து அரசி சொல்கிறாள்:

**இரவுநான் தூங்கியபின் வந்தீர்கள் போலும்!**
**வழிபார்த் திருந்தன இருவிழி வேலும்!**
**உலாவி அலுத்தன என்இரு காலும்!**
**துவண்டு போயிற்று என்இடை நூலும்!**

**ஆறிப் போயிற்றுப் பாலும்!**
**அழகு குன்றின முப்பழத் தோலும்!**
**வாடின கட்டிலில் மலர்வகை நாலும்!**
**கண்விழிக்க எவ்வாறு ஏலும்!**
**மேலும்!**
**மேலும்!**

எத்துணை இனிய சொற்கள்?
எத்துணை எளிமை பாட்டில்!
எத்துணைக் கருத்துத் தேட்டம்!
எத்துணை நயங்கள்! இன்பம்!
எத்துணை யளவு கல்வி
யறிந்தவர் எனினும் பாட்டை
எத்துணை எளிதாய்ப் பாடி
இலக்கிய இன்பம் காண்பார்?
புலமக்கள் கண்ட இன்பம்
பொதுமக்கள் காணு மாறு
சிலபல சொற்க ளாலே
செய்தவர் பாவின் வேந்தர்!
இலைஇலை என்பார்க் கின்னும்
எடுத்தெடுத் தீவேன்; ஆனால்
நிலையிலை நேரம்; ஆக
மொழித்திறம் நிறுத்து கின்றேன்.

அடுத்தது புரட்சி யுள்ளம்!
பாவலர்க் கதுதான் நற்பேர்
கொடுத்தது; அவர்க்கும் பீடு
கொடுத்தது! தமிழ்ச்செம் மாப்பால்
எடுத்தது; நேற்றும் இன்றும்
இருக்கின்ற புலவர் யார்க்கும்
மடுத்திலாப் பெரிய செல்வம்!
மற்றதன் சிறப்பைப் பார்ப்போம்!

**'விடுதலை பெறுவது முதல்வேலை!**

**அடிமையில் உழல்வது முடியாது!**

**விழிதுயில் வதுமிகு தவறாகும் - எழுவீரே!'**

**'செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க**
**நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்**
**வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று**
**குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!'**

என்றே குயிலைக் கூவச் செய்தவர்!

'சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று!
பாதியை நாடு மறந்தால் - மற்ற
பாதி துலங்குவ தில்லை!'

சாதிமேல் அடித்த சம்மட்டி அடியிது!

'இந்த உலகில் எண்ணிலா மதங்கள்!
கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்!
சாதிக்குச் சாவுமணி அடிக்க!'

சாதிக்கு அடித்த சாவு மணியிது!

'அடக்குமுறை செய்திடல் முடியும் . கொள்கை
அழிக்குமுறை எவ்வாறு முடியும்?
ஒடுக்குசிறை காட்டுதல் முடியும்! . உணர்
வொடுக்குதல் எவ்வாறு முடியும்!'

அடக்கு முறைமேல் அடித்த அடியிது!

"தமிழர்க்குத் தொண்டுசெயும் தமிழ னுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்!
தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவ தில்லை.'

தமிழ்த்தொண்டு செய்வோர்க்குத் தந்த துணிவிது!

'சிம்புட் பறவையே சிறகை விரி,எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திற!விழி!
இங்குன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?
வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையிருப்பைக் காட்ட எழுந் திரு.
குறிக்கும் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக் கொணாக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!
பொன்மொ ழிக்குநீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை!'

தொய்ந்த தமிழனைத் தூக்கி நிறுத்தும்
வெய்யுரை! அழல்சேர் வீர வரிகள்!

'உரம்பெய்த செந்தமிழுக் கொன்றிங்கு
நேர்ந்ததென உரைக்கக் கேட்டால்

**நரம்பெல்லாம் இரும்பாகி நனவெல்லாம்**
**உணர்வாகி நண்ணி டாரோ?**
**'இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சிமனப் பான்மை**
**ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்!'**

என்று புரட்சிக் கெழுத்தா ளர்களே
நின்றிங் குதவுதல் வேண்டும் என்பார்!

இவைபோல் பாடல்கள் ஏராளம் உண்டு
அவையெலாம் கூறிட ஆகிடும் ஒருநாள்!
இறுதியாய் அவரின் புரட்சியுள்ளத்தை
உறுதியாய் விளக்கும் ஒரேஒரு பாட்டு!
நகைச்சுவைப் பாடல்! நன்றாய்க் கேளுங்கள்!

ஏசு நாதர் ஏன்வர வில்லை
என்னுந் தலைப்பில் எழுது கின்றார்:

**'தலை, காது, மூக்குக்,க ழுத்துக், கை, மார்பு, விரல்**
**தாள் என்ற எட்டுறுப்பும்,**
**தங்கநகை, வெள்ளிநகை, ரத்தினமி ழைத்த நகை**
**தையலர்கள் அணியாமலும்,**
**விலைகுறையும் ஆடைகள் அணிந்துமே கோயில்வர**
**வேண்டுமென்றே பாதிரி**
**விடுத்த ஒரு சேதியால் விஷமென்று கோயிலை**
**வெறுத்தார்கள் பெண்கள், புருஷர்!**
**நிலைகண்ட பாதிரி, பின் எட்டுறுப் பேயன்றி**
**நீள்இமைகள் உதடு நாக்கு**
**நிறைநகை போடலாம், கோயிலில் முகம்பார்க்க**
**நிலைக்கண்ணா டியும் உண்டென**
**இலைபோட் டழைத்ததும், நகைபோட்ட பக்தர்கள்**
**எல்லாரும் வந்து சேர்ந்தார்!**
**ஏசுநாதர் மட்டும் அங்குவர வில்லையே,**
**இனிய பாரத தேசமே!'**

பத்தர்கள் மண்டையில் படீரென அடிக்கும்
முத்திப் பாடல் இதுவென முழங்கலாம்!
நகைச்சுவை யோடு நயமாய்ச் சொல்லி
வகையாய்ப் புரட்சியை மனத்தினில் விளைத்தார்.
புரட்சிப் பாவலர் பொதுமை உணர்வினை
இறுதியாய்க் கூறுவேன் இருந்து கேட்பீர்!

'புதியதோர் உலகுசெய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்!'

- என்று பொதுமை உலகம் புனைய விரும்பினார்!

'மனிதரில் நீயுமோர் மனிதன், மண்ணன்று!
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி, மேலே ஏற்று'
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!
உன்வீடு - உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்!
ஏறு விடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறி நின்று பாரடா எங்கும்;
எங்கும் பாரடா இப்புவி மக்களை!
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்துகொள்! உன்னைச் சங்கம மாக்கு!
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும்! பேத மில்லை!
உலகம் உண்ணஉண்; உடுத்த உடுப்பாய்!
புகல்வேன் உடைமை மக்களுக் குப்பொது;
புவியை நடத்து பொதுவில் நடத்து!'

எத்துணை எழுச்சி; எத்துணை உயர்ச்சி!
எத்துணை விரிந்த எண்ணக் குவியல்!
சடசட சடவெனச் சொற்கள் ஆட்சி!
மடமட மடவெனும் கருத்து மாமழை!
உணர்வு மின்னல்; உருட்டும் இடிகள்?
இதைவிடப் பொதுமை என்ன வேண்டும்?
புதுக்கருத் தெவர்தாம் புகன்றிடப் போவார்?
வெறுப்பிலா திருந்து பொதுமையாய் விளக்கினால்
மறுப்பிலா தவரை மாப்புல வோனாய்
ஏற்றுக் கொள்ளுவார்; இல்லெனின் தூற்றுவார்!
மாற்றுக் கொள்கையர் மறுத்திட முடியுமா?

**'எல்லார்க்கும் தேசம்; எல்லார்க்கும் உடைமையெலாம்**
**எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!'**

என்றே உரிமைப் பட்டையம் எழுதுவார்!

**'இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்**
**இலேசுவழி ஒன்றுண்டு; பெண்களை ஆடவர்கள்**
**எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்,**
**தாய்மையினை இழித்துரைக்கும் நூலும்ஒரு நூலா?**

பாவேந்தர் காட்டிய பொதுமை வழியிது!
தீண்டாமை பற்றிப் பாவலர் சாற்றுவார்.

**'அற்பத் தீண்டாதார் என்னும் அவரும் பிறரும் ஓர்தாய்**
**கர்ப்பத்தில் வந்தா ரன்றோ? - சகியே (கர்ப்பத்தில்)**

**பொற்புடை முல்லைக் கொத்தில் புளியம்பூ பூத்ததென்றால்**
**சொற்படி யார் நம்புவார்? - சகியே (சொற்படி)**

**ஏகபரம் பொருள் என்பதை நோக்க எல்லாரும்**
**உடன் பிறப்பே - ஒரு**
**பாகத்தார் தீண்டப் படாதவர் என்பதி லே உள்ள**
**தோ சிறப்பே?'**

எப்படி அரசியல் இருக்க வேண்டுமாம்.

**'ஒப்பிட எவர்க்கும் ஒருவீடு, ஒருநிலம்**
**ஒருதொழில் ஓர்ஏர் உழவு மாடுகள்'**

என்னும் சமநிலை எய்த வேண்டுமாம்!
பின்னும் பாவலர் கனல்எழப் பேசுவார்:

**'ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்**
**உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்.'**
**'எல்லார்க்கும் எல்லாம் என்றிருப் பதான**
**இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்!'**

என்று பொதுமைக்கு முத்தாய்ப்பு இடுவார்!
ஒன்று மட்டில் உண்மையென் றறிவீர்!
உலகப் பாவலர்க் குண்டான சிறப்புக்கும்
கழகப் புலவர்பால் காணும் பெருமைக்கும்
மேலாம் இவர்க்கொரு மேன்மை இருந்தது!

தமிழ்உள்ளம் நாட்டுப்பற்று தகுவுயர் சீர்திருத்தம்
இமியுமே குறையாவாறு இருந்தன அவர்பால்!
தமிழ்உள்ளம் அவர்க்கே உள்ள தனியுள்ளம்!
இதற்குமுன் யார்க்கும் இல்லா தது,அது!

**'இன்பத் தமிழ்மொழி எமது! - எமக்**
**கின்பம் தரும்படி வாய்த்தநல் லமுது!' - என்றதும்,**

**'கனியிடை ஏறிய சுளையும் - முற்றற்**
**கழையிடை ஏறிய சாறும்**
**பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சும்**
**பாகிடை ஏறிய சுவையும்**
**நனிபசு பொழியும் பாலும் - தென்னை**
**நல்கிய குளிரிள நீரும்**
**இனியன என்பேன் எனினும் தமிழை**
**என்னுயிர் என்பேன் கண்டீர்!' - என்றதும்,**

**'செந்தா மரைக்காடு பூத்தது போல**
**செழித்த என்தமிழே ஒளியே வாழி!' - என்றதும்,**

**'செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!**
**செயலினை மூச்சினை உனக்களித் தேனே!**
**நைந்தாய் எனில் நைந்து போகும் என் வாழ்வு!**
**நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே?' - என்றதும்,**

**'எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்**
**தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்**
**தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்**
**செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்! - என்றதும்,**

தமிழ்மேல் அவர்க்குள்ள காதலைக் காட்டும்!
தமிழ்க்காக வாழ்ந்தார், தமிழைப் பாடினார்;
தமிழைத் தொழுதார்; தமிழைப் புதுக்கினார்!

**'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை - என்**
**தாய்தடுத் தாலும் விடேன்' - என்று**

தமிழ்க்காகப் போரிட்டார்;

**'இன்பத் தமிழ் குன்றுமேல் தமிழ்**
**நாடெங்கும் இருளாம்' - என்று**

கவன்றார்; அறிவுறுத்தினார்; கண்ணிமையாது காத்தார்!

**'தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தால்**
**தூய்தமிழ் பிதற்றும் என்வாய்'**
என்று, தமிழும் தாமுமாய்
ஒன்றிக் கிடந்தார்; உயிரொடு பொருத்தினார்.
அந்தத் தமிழே அவரையும் உயர்த்தி
இந்த நாட்டையும் இனிதுயர்த் துவது!
இவர்க்குத் தமிழ்மேல் எத்துணை ஆவலோ
அத்துணை அக்கறை தொழிலா ளர்மேல்!

**'குடிக்கவும் நீரற்றிருக்கும் . ஏழைக்**
**கூட்டத்தை எண்ணாமல் கொடுந்தடியர்க்கு**
**மடங்கட்டி வைத்ததினாலே - தம்பி**
**வசங்கெட்டுப் போனது நமதுநன் னாடு!'**

என்றவர் கூறுதல் எவ்வகை யில்பிழை?

**'சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் . ஆறு**
**தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி**
**நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்**
**நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?**
**கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்**
**கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?**
**பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்**
**போயெடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?'**

என்றஅவர் கேள்வி ஏற்றதோர் கேள்வியே!

தமிழ்க்கவர் தந்த தாழாத உழைப்பும்
தொழிலா ளர்க்கவர் தோள்தந்த மாண்பும்
பாரதி தாசனைப் பாவேந்தர் ஆக்கிப்
பாரறி யும்படி பண்ணி வைத்தன!

இத்தகு புலவர்போல் எந்தமிழ் மொழியிலோர்
ஒத்த புலவரை உணர்ந்திட வில்லை!'
வீரமும் தமிழும் வியத்தகு புலமையும்
ஈரமும் ஏழைமேல் இரக்கமும் சேர்ந்தால்
பாரதி தாசனென் பாவலர் தெரிவார்!
ஊரதி ர,அவர் ஒண்புகழ் வாழ்கவே!

# 7. இக்காலத் தமிழ் மாந்தர்!

(வேலூர், ஊரீசுக் கல்லூரித் திரு.வி.க. தமிழ்மன்றம் 1973 பிப்ரவரி 14 இல் நடத்திய முத்தமிழ்க் கலைவிழாப் பாட்டரங்கத்தில் தலைமை யேற்றுப் பாடியது.)

**முன்னுரை**

ஓங்கு புகழ்கொண்ட ஊரீசுக் கல்லூரி
தாங்கு முதல்வரீர்! தண்டமிழ்நாட் டுக்கல்வி
பேணிவரும் பேரா சிரியப் பெருமாண்பீர்!
தூணிகர்த்த வாறாகத் தோளோடும் நெஞ்சோடும்
செந்தமிழ்க்குக் காப்பாய்ச் சிறப்புக்குக் கொள்கலனாய்,
எந்தமிழ் நாட்டின் எதிர்கால நற்குடியாய்,
ஆளும் அமைச்சராய் ஆன்றஅதி காரிகளாய்
நாளும் வளர்ந்து வரும் நல்விளைவின் மாணவரீர்!
எல்லார்க்கும் என்றன் இனிய தமிழ் வணக்கம்!

சொல்லார்க்கும், பாட்டில் சுவையார்க்கும், அச்சுவையைக்
கள்ளாரும் வண்டாய்க் களிப்பாரும் உள்ளமுடன்
வெள்ளமென இங்குவந்து வீற்றிருப்பீர்; போற்றுகின்றேன்!

இக்காலை பாட்டரங்கம் என்றாலே மக்களிடை
தக்க விறுவிறுப்பு! தாவிவரும் சொற்களிலே,
சொல்லின் பொருள்களிலே, சொல்லும் வகையினிலே,
சொல்லுக்குச் சொல்லிடையில் சூழும் நகைச்சுவையில்
உள்ளம் பறிகொடுத்தே, உள்ளுணர்வு தாம் பெருகக்
கள்ளமின்றி, வாழ்க்கைக் கனமின்றிச், சின்னேரம்
இன்பத்தில் தோய்ந்திடவே எண்ணி வருகின்றார்!
துன்பத்தை நீக்கும் துடிப்பிருக்கும் எல்லார்க்கும்!

அந்தத் துடிப்பறிந்தே ஆர்வமொடு பாவலரும்
எந்தச் சொல் போட்டால் எதிரிலுள்ள மக்களெல்லாம்
பல்லெல்லாம் நன்றாய்ப் பளிச்சென்று காட்டி, யுடன்
'கொல்'லென்று தாம்சிரிப்பார்; கூடிக் கை தட்டிடுவார்.
என்றே பகலிரவாய் எண்ணி யெண்ணி, ஆய்ந்தாய்ந்து
நன்றாகச் சொல்லை நகைச்சுவையில் தோய்த்தடுத்து
வந்திங்குப் பாடும் வழக்கத்தை நானறிவேன்!
இந்தவழக் கத்தை எவரும் எதிர்க்கவில்லை!

நன்றாய்ச் சிரிப்பதற்கே நாம் பிறந்தோம்; நல்லபடி
என்றும் சிரித்தே இருப்போம்; மகிழ்ந்திருப்போம்!

ஆனாலும் சொல்லுகிறேன்; அன்புடைய மாணவரீர்!
தேனும் தினையும் தெவிட்டுகின்ற **செந்தமிழை** -
**செந்தமிழ் நாட்டைச்** - சிறிதே நினையுங்கள்!
எந்தமிழ மாந்தர் இருக்கும் நிலையறிந்தால்
இக்கால் நகைத்திருக்க ஏது இடம்? கல்வியினால்
முக்காலும் நல்லபயன் மூண்டிருக்க வேண்டாவா?

கொஞ்சம் உமைமறந்து, என் கூடவரு வீர்களெனின்,
பஞ்சம், பசித்துயரம், பாடுபட்டும் உண்ணாமல்
உள்ளொடுங்கிப் போன உலர்வயிறு, கூன்முதுகு,
முள்ளெழுந்து நின்றதுபோல் மொய்த்த தலைமயிர்கள்
சப்பைத்தோள், வெள்ளெலும்பு, சாறுபிழிந் திட்டவுடல்,
குப்பைமேல் வாழ்க்கை, குழந்தையெனும் கொத்தவரைப்
பிஞ்சுகளைத் தாம்சுமந்த பீற்றைச் சடலங்கள்,
குஞ்சு குளுவான்கள், குந்தவழி யில்லாமல்,
சாலையோ ரத்தும், சகதியிலும், பொட்டலிலும்,
ஆலையிலே நுண்பஞ் சலைவதுபோல் தாம்அலைந்து,
வாழாமல் வாழ்ந்திருக்கும் வாழ்க்கையினைக் காட்டிடுவேன்!
சூழாமல் சூழ்ந்திருக்கும் கொல்வறுமை என்சொல்வேன்?

உண்ணுவதோ கூழ்தான்! உடுத்துவதோ கந்தைதான்!
எண்ணுவதே இல்லை; எதிர்ப்படுவ தெண்ணுவது!
தின்னுவதில் ஆவலில்லை; தென்படுவ தின்பதுதான்!
என்னயிது புன்வாழ்க்கை என்னும் சலிப்பில்லை!
வாழ்ந்திருக்க ஆசையில்லை; வாய்ந்திருக்கப் பாசமில்லை!
சூழ்ந்திருக்கும் இவ்வுலகம் சுற்றுவதா? நிற்பதுவா?
தட்டையா? இல்லை, தனியுருண்டை யா வென்னும்
நெட்டை நினைவில்லை; ஏதோ நிலத்திடையில்
வந்து பிறந்துவிட்டார்; வாழ்கின்றார்! தீம்பசிக்கு
வெந்ததுவோ? வேகா ததுவோ? விழுங்கிவிட்டால்
நல்ல நிழலோ? நடுத்தெருவோ? தூக்கந்தான்!
கல்லொன்றோ, கையோ, தலைக்கு; கருத்திருந்தால்!
இன்னவர்கள் எங்கோ இருப்பாரென் றெண்ணாதீர்!
அனைவரும் நம்மிடைதான் அன்றாடம் வாழ்கின்றார்!
இத்தகைய காட்சிகண்டே, இப்புறமாய் நாம் நகர்ந்தால்
மெத்தைகள், மாடிகள், மேன்மாட மாளிகைகள்,

வண்ணங்கள் தோய்ந்த வழவழப்பு வன்சுவர்கள்,
கண்ணாடிச் சாளரங்கள், காற்றுலவும் மாடங்கள்,
மின்னோடுங் கூடம், மினுமினுப்பு மென்தரைகள்,
முன்னே இருக்கைகள், மூசைப்பொன் பூச்சுகள்,
கட்டிலிலே மெத்தை, கதவு பலகணிக்குப்
பட்டாலே தொங்கு திரை, பல்வண்ணப் பேழைகள்,
பற்பலவாய் உள்ளறைகள், பாங்கான காப்பறைகள்,
கற்பதித்த தட்டுகள், காட்சிக் கவின் பொருள்கள்,
உள்ளே குளியலறை, ஒன்றிரண்டு நீந்துகுளம்!
கள்ளின் இளமயக்கம், காற்றோ கதகதப்பு,
முல்லைக் கொடிபோன்ற மின்னிழையார் மூசுகின்ற
மல்லிகைக் காடு, மணக்கின்ற மென்தென்றல்,
சொற்புனைந்து வாழுகின்ற சோர்விலாப் பாவலர்கள்
கற்பனையில் காட்டும் கனவுலகக் காட்சியெல்லாம்
மெய்யாய் விரிந்திருக்கும் மேம்பட்ட கோலங்கள்!
பொய்யன்றே இங்குப் புகன்றிருத்தல் கொஞ்சந்தான்!

அப்படிப் பட்டதோர் அண்ணாந்த வாழ்க்கையிலே
எப்படிப் பட்டோர் இருப்பாரென் றெண்ணுங்கள்!
அன்னவர்கள் வாழ்முறைகள்! அன்றாட உண்டிகள்!
மின்னிழைகள் ஓடுகின்ற மேலுடைகள்! கண்கவரும்
பொன்னிழைகள் என்ன! பொலிவுநிலை என்னென்ன!
இன்னிசைகள்! ஆடல்கள்! என்றும் ஒளி மழைக்குள்
வாழ்ந்திருக்கும் வாழ்க்கையினை வண்ணிக்க நாமறியோம்
சூழ்ந்திருக்கும் வெற்றுநிலைச் சூழலிலே வாழ்கின்றோம்!
இப்படியோர் வாழ்க்கை!

இதைவிட்டு நாம்நகர்ந்தால்,
முப்படியாய்த் தம்முடலை முப்பொழுதும் வாட்டுகின்ற
அன்புத் தொழிலாளர் அன்றாட வாழ்க்கையினைத்
துன்பமுறக் காண்போம்! துயரத்திற் கென்னகுறை?
என்பை முறுக்கி, எழிலுடலைத் தாம்உருக்கி,
மன்பதை தன்னலத்தில் முற்றும் மனந்தோய்ந்து,
தம்பெண்டு பிள்ளைத் தனிநலத்தைக் காணாமல்,
கம்புண்டும், மொத்தைக் களியுண்டும், ஆண்டுக் கோர்
நல்லுடையைக் கண்டும், நலமின்றி வாழ்பவர்கள்!
கல்லுடைப்போர், மண்ணெடுப் போர், காட்டுமரமறுப்போர்,
பாதை அமைப்போர், பயிர்த்தொழில்கள் செய்திடுவோர்,
காதை அடைக்கும் கடும் இரைச்சல் போடுகின்ற
ஆலையிலே பஞ்செடுப்போர், நெய்வோர், அழலிரும்புச்

சாலையிலே தம்முடலைச் சாறாய்ப் பிழிந்திடுவோர்,
ஊர்திகளை ஓட்டிடுவோர், ஓடாக வெய்யிலிலே
சேர்துகளும் தூசிதும்பும் சேர்ந்திடவே கைவண்டி
தள்ளல், இழுத்தல், தலை - முதுகில் தூக்கிவரல்,
அள்ளல், அடைத்தலெனும் ஆன்றபணி அத்தனைக்கும்
பொன்னுடலை ஆட்படுத்தும் புண்பட்ட நெஞ்சாளர்,
என்னபடி யாயுழைத்தும் ஏறாத வாழ்க்கையிலே,
சீறும் கடல்விளைவைச் சென்று கொணர்ந்துவந்தே
ஊறும் குருதிக்கே ஊட்டமென விற்றுவிடும்
மீன்பிடிக்கும் தோழர், மிகப்படிப்பார் கல்விக்குத்
தான்படிக்கா வாழ்க்கையினைத் தந்துதவும் அச்சாளர்,

- என்று பலவாறாய் இவ்வுலகம் வாழ்வதற்கே
அன்றாடம் தாம்சாகும் அருமைத் தொழிலாளர்!
அன்னவர்வாழ் கின்றநிலை! அங்கே எழுகின்ற
சின்ன தெருச்சண்டை! சிற்சிலகால் குத்து வெட்டு!
கம்புகத்தி மோதும்; கணக்கு மருத்துவர்க்கே!
வம்புவழக் காகும்; வழக்குரைஞர் பைநிறையும்!
இப்படியோர் வாழ்க்கை!

இதைவிட்டு நாம்நகர்ந்தால்
எப்படிப்பும் வாய்க்க இருக்கின்ற கல்வியகம்!
அங்கிருக்கும் ஓருலகம்! ஆசிரியர் மாணவர்க்குப்
பங்கிருக்கும் அவ்வுலகில்! பண்பும் மிளிர்ந்திருக்கும்!
என்றாலும் சிற்சிலகால் தொல்லை எழுந்துவிடும்!
நின்றாலும் தப்பாய், அமர்ந்தால் நெடுந்தப்பாய்
நேர்ந்துவிடும்! அக்கால் நிகழ்ந்துவிடும் போராட்டம்!
ஆர்ந்துவிடும் காவலர்க்கோ ஆக்கம் பலவிருக்கும்!
குண்டாந் தடிகள் குலைநடுங்கச் சூழ்ந்தாடும்!
மண்டைக்குள் மாணவர்கள் வைத்திருப்ப தென்னென்று
காவலர்கள் சிற்சிலபேர் காண உடைப்பார்கள்!
ஆவலாய் உள்ளிருந்து மூளைவெளி யானவுடன்
'ஓகோகோ' வென்றே உரக்கச் சிரிப்பார்கள்!
சாகாக் கணக்குவரும்! ஆட்சியினர் சான்றுவரும்!
மன்றம் நிறுவார்! மாணவரும் ஒப்பிடுவார்!
ஒன்றிரண்டு மூன்றென்றே ஓடிவிடும் நாட்களெல்லாம்!
எல்லாம் மறந்துவிடும்! என்றேனும் மீண்டொருவர்
கல்லால் அடிப்பார்; கலகம் எழுந்துவிடும்!

அப்போதும் அப்படியே ஆட்டத்தின் காட்சிவரும்!
எப்போதும் போல்,பின் இறுதித் திரையிறங்கும்!

இப்படியோர் நல்லுலகம்! இங்கிருக்கும் மாணவரை
அப்படிநான் சொல்லவில்லை! ஆனாலும் சொல்லுகின்றேன்!
சொல்லுக்குச் சொல்லவில்லை; உண்மைக்குச் சொல்லுகின்றேன்!
மல்லுக்கா இங்குவந்தோம்? மற்றெதற்கு வந்தோம், நாம்?
வாழ்க்கைக்கிங் கேதான் வழியமைக்கப் பட்டிருக்கும்!
பூழ்க்கை விழைவிற்கும் இங்கேதான் போக்கமையும்!
நன்றாக எண்ணுங்கள்; நானுரைப்ப துங்களுக்கே!
ஒன்றும் கருத்தென்றால் - உண்மையென்றால் ஒப்புங்கள்!
கொள்ளத் தகுந்ததெனில் கொள்ளுங்கள்; குப்பையிலே
தள்ளத் தகுந்ததெனில் தள்ளுங்கள்; தாழ்வில்லை!
தோற்றம் முதலாத் தொடர்ந்திருக்கும் நல்லொழுக்கம்;
ஆற்றலுடல், அன்புமனம், அன்றாடம் கல்விநலம்,
போற்றற் குரிய - புகழ்தற்குத் தானுரிய
ஏற்றஞ்சேர் வாழ்க்கைக்(கு) எழுதுமொரு முன்னுரையாய்
மாணாக்கர் வாழ்க்கையொரு மாண்புலக வாழ்க்கை யென்பேன்;
வீணாக்க வேண்டாவென் றன்னவரை வேண்டுகிறேன்!
இக்கால மாணாக்கர் தோற்றத்தை என்னுரைப்பேன்?
முக்கால் முகத்தைவந்து மூடுகின்ற தொங்குமயிர்!
அந்த மயிர்ச்சுமைக்குக் கால்கள் அமைந்தன போல்
வந்திறங்கித் தாடைவரை வாய்ந்திருக்கும் கன்னமயிர்!
பல்வண்ணச் சட்டை! பருத்த தொடையிரண்டை
நல்வண்ண மாயெடுத்து நன்றாய்ப் புறங்காட்டும்
காற்சட்டை! போட்டுக் கழற்ற அரை நாளாகும்!
மேற்சட்டை பெண்களுடை போல மினுமினுக்கும்!
உள்ளக் கவர்ச்சிபோய் ஊனின் தசைக்கவர்ச்சி
எள்ளும் வகையாய் இருப்பதனைக் காண்கின்றோம்!

கற்கின்ற பொத்தகங்கள் தம்மிடையில் காசடிக்கச்
சொற்குன்று மாறுபல சோம்பல் எழுத்தாளர்
பாலியலைத் தூண்டிப் பணம்பறிக்கத் தாமெழுதும்
'காலிப்பயல்' . என்னும் "கௌபாய்' வெளியீடு!

---

(Cow Boy: Cow: காலி (ஆ) Boy: பையல் (பையன்)
*மேனாடுகளில் மாடு குதிரை மேய்ப்பவர்கள் அணியும்
உடை, பழகும் முறை இவற்றை அடிப்படையாகக்
கொண்ட அரையம்மண வெளியீடுகள்!)

அம்மணத்துக் காட்சியிலே ஆர்வமிகக் காட்டிவரின்
செம்மனத்தில் நஞ்சு சிறுது சிறிதாகச்
சேர்ந்தே உடல்கெடுத்தும் உள்ளச் சிறப்பழித்தும்
ஆர்ந்தபே ராண்மை அடியோடு வீழ்த்தியும்
வாழ்வைக் கெடுக்கும் வகையறிய மாட்டாமல்
தாழ்வெய்தும் நல்லிளைஞர் தம்மை எவர்தடுப்பார்?

மாணவியர் போக்கினிலும் மாண்பவியப் பார்க்கின்றோம்.
தூணவர்தாம்! வாழ்க்கைத் துணையவர்தாம்! தாயவர்தாம்!
ஆனாலும் இக்கால் அவர்தோற்றம், போக்கு . எல்லாம்
ஏனோ தெரியவில்லை; ஏற்றமின்றிக் காண்கின்றோம்!
கற்கின்ற பெண்டிர் கவனமெல்லாம் இற்றைக்கு
விற்கின்ற மேலாடை, நாகரிக வீண்பொருள்கள்
பூச்சுகள், சாயங்கள், பூணும் உடற்கவர்ச்சிப்
பேச்சு திரைப்படங்கள், தீமைதரும் பொத்தகங்கள்,
என்பவற்றில் தோய்ந்தே இருப்பதை நாம் பார்க்கின்றோம்!
தின்பவற்றைக் கூட அவர், தீர நினைப்பதில்லை!

நாகரிகம் என்பெயரால் நாமெல்லாம் தாழ்ந்துவிட்டோம்.
வாகாய் அதைப்பெறவும் உள்ளநலம் விற்றுவிட்டோம்.
கண்களை விற்றுக் கலைப்பொருளை வாங்குதல்போல்
பெண்மையை விற்றுவிட்டுப் பேய்மையினை வாங்கிவிட்டோம்.
ஆண்மையை விற்றே அடிமைநலம் வாங்கிவிட்டோம்.
மாண்புதனை விற்று மலத்தைவிலை பேசிவிட்டோம்!

கல்வி உயர்வில்லை; காசுவரும் எவ்வழியும்
நல்வழிதான் என்கின்ற நப்பாசை நம்மவர்க்கு!
இப்படியே போனால் நாம் எவ்விடத்தில் போய்ச் சேர்வோம்?
ஒப்புக்கே வாழ்கின்றோம்! ஓங்குமன வாழ்க்கையில்லை!
காசுபணம், நாகரிகம், காட்சிக் கலைகளின் மேல்
மூசுகின்ற ஈக்களென மொய்ப்பதுவே வாழ்வென்று
பேசுகின்றோம்; செய்கின்றோம்! உள்ளத்தைப் பேணவில்லை!
கூசுகின்றோ மில்லை; ஒன்றாய்க் கூடிப் புலைவிளைப்போம்!
இத்தகைய வாழ்வை - இதில்வாழும் மாந்தரினைப்
புத்துருவில் காட்டிப் புனைந்துரைக்கப் போகின்றார்
இங்கிருக்கும் பாவலர்கள்! இன்னவரின் பாட்டினிலே
பொங்கிவரும் நல்லுணர்வைப் பொக்கென்றே எண்ணாதீர்!
ஆசிரியர், மாணாக்கர், பெண்டிர், தொழிலாளர்,
காசற்ற ஏழையர், காசுநிறை செல்வர் - என
ஆறுவகை மாந்தரின் மாறுவகை ஆக்கமெல்லாம்

ஏறுவகை நல்லுணர்வோ டிங்கே உரைப்பதுடன்,
பெற்ற அழிவெல்லாம் பேச விருக்கின்றார்!
கற்றவர்கள் நீங்கள்! கருத்துநலம் கொண்டவர்கள்!
ஆகவே பாட்டை அமைந்திருந்து கேளுங்கள்!
போகவே கூடாது! புன்மைத் திரையரங்கில்
மூன்றுமணி நேரமும் மூச்சடைக்கும் வாறாக
ஆன்றமர்ந்து கேட்கிலையா? ஆங்கதுபோல் தீங்கின்றிப்
பாவலர்கள் கூறுகின்ற பாட்டரங்கைக் கேளுங்கள்!

தாவிவரும் இன்பம்! தழைத்துவரும் நல்லுள்ளம்!
மேவிவரும் வாழ்க்கை! மிளிர்ந்துவரும் நல்லாக்கம்!
தூவுகின்ற செந்தமிழால் தீங்குவரத் தோதில்லை,
ஆகவே பாவலரை அன்பால் அழைக்கின்றேன்
ஓகத் தமிழுரைக்க ஒவ்வொருவ ராய்வருவர்!

**முடிவுரை**

அன்புநிறை மாணவர்காள்! ஆன்றமைந்த சான்றோர்காள்!
இன்பமெழப் பாடி எழிற்றமிழின் நற்றிறத்தை
ஒவ்வொரு பாவலரும் இங்கே உரைத்திருந்தார்!
வெவ்வேறு பாச்சுவையால் உள்ளம் விரிந்திருந்தீர்!
சொல்லின் சுவைகண்டீர்! சொன்ன பொருள்கண்டீர்!
வெல்லத் தமிழிரின் விரிவான நற்கருத்தால்
இக்காலம் வாழ்கின்ற எந்தமிழின் மாந்தரையே
தக்கபடி காட்டிவிட்டார்; தங்கொள்கை சாற்றிவிட்டார்.
பாவலர்கள் மக்களையும் பாடிடுதல் நன்றென்னும்
ஆவலால் நாமும் அதைச் சுவைத்துக் கொண்டிருந்தோம்!
என்ன சுவை! என்ன சுவை! என்றே இடையிடையே
தின்னுந் தமிழ்ப்பாத் திறத்தினிலே மெய்மறந்தோம்!
அத்துடனே நம்கடமை ஆகி முடிந்த தென்றால்
மெத்தத் திருடர்நாம்! ஆமிதுவே மெய்யுரையாம்!

பல்வேறு மக்களையே பாவலர்கள் காட்டிவிட்டார்!
சொல்வேறு நம்மின் செயல்வேறா? சொல்லுங்கள்!
ஆசிரியர்க் கண்டோம்! அவர்வழியே கற்கின்ற
மாசற்ற உள்ளத்தின் மாணாக் கரைக்கண்டோம்!
இக்கால் இருவருக்கும் ஏற்றத்தாழ் வெல்லாமும்
தக்கபடி ஆய்ந்து, தகாதவற்றை நீக்கிவிட்டு,
மேலான கொள்கையினை மேற்கொண்டு வாழ்வதுவே

சால்பாகும்! அந்நிலையைச் சாற்றிடவும் தேவையில்லை!
மாணாக்கர் தம்நிலையின் மாண்புணர வேண்டுகின்றேன்!
வீணாக்க வேண்டா விளைபயிரை என்றே நம்
பேரா சிரியப் பெருமக்கள் எண்ணட்டும்!
வாராத வந்தெய்தும்! வந்தவிடர் மாண்டொழியும்!
நேராக யார்மேலும் குற்றம் நினைக்கவில்லை!
தேராமல் கூறுவது தேர்ந்தபின்னை மாறுவது
திரா இடர்ப்படுக்கும் என்று தெளிந்திருப்பீர்!
ஓராமல் யாருக்கும் ஓர்குறையும் சாற்றற்க!
அஞ்சுதற்கே அஞ்சுக! அஞ்சாமைக் கஞ்சற்க!
எஞ்சுகின்ற நாளெல்லாம் எந்தமிழ்க்கும் நாட்டுக்கும்
மக்களுக்கும் நற்றொண்டு மாண்புறவே செய்மின்கள்!
தக்கபடி வாழ்மின்கள்! தாழ்வகலக் காண்பீர்கள்

பெண்டிர் நலம்பற்றிப் பேசுகின்றோம்! பெண்களுக்குப்
பண்டைப் பெருமை பரக்கவுண்டாம்! ஆனாலும்
அன்னவர்க்குத் தக்க அறிவமைப்பு, செய்கடமை,
பன்னலமும் வாய்க்கும் பரந்த நறுங்கல்வி,
ஆகிய வற்றில் அறிவாய்ந்த சான்றோர்கள்
ஈக வுளத்தோடே எண்ணி வகுத்தளிக்க
வேண்டும்! அவர்க்குரிமை வேண்டும்! அவர்க் காடவர்போல்
யாண்டும் துணிந்துரைக்க - யாண்டும் துணிந்துசெய
வாய்ப்பளிக்க வேண்டும்! வளமாய் உடல்வேண்டும்!
தாய்ப்பெண்டிர் யாவர்க்கும் தன்னந் தனிச்சலுகை
நல்குவதே நல்லறமாம்! நஞ்சுமன ஆடவர்கள்
பல்குழந்தைப் பேறளித்துப் பாவையரைக் கொத்தவரைப்
பிஞ்சுபோ லாக்கிப், பிணந்தின்னுந் தீக்கழுகுக்
குஞ்சுகள்போல் ஏழெட்டைக் கொத்திப் பிடுங்குதற்கே
ஆளாக்கி விட்டே அவரைக்கை விட்டிடுவார்!
தூளாக்க வேண்டுமவர் தோளெலும்பை; மார்பெலும்பை!
கன்னி ஒருத்தியை,ஓர் காமுகனும் கற்பழித்தால்
அன்னவனின் பெற்றோர்க்(கு) அகலாச் சிறையென்று
சட்டமிடல் வேண்டும்! சரிக்குநிகர் வாழ்க்கையினைக்
கட்டியவன் தன்மனைக்குக் காட்டிவிடல் வேண்டுமென
வல்லார் வகுத்தளிக்கும் வாய்ப்புவரும் நாள்வரட்டும்!
நல்லார் பிழைபடவும் நாமிசையக் கூடாது!
பெண்டிர்க்குக் கற்பு பெரிதானால் ஆடவர்க்கும்
உண்டு அதுபோல் என்னும் உயர்நெறியும் வேண்டுமிங்கே!
கன்னியரை விற்றிங்குக் காசடிக்கும் பெற்றோர்க்கும்,

அன்னவரைத் தாம்கொள்ள ஆயிரம்பத் தாயிரமென்
றெண்ணிவை என்னும் இளைஞருடைப் பெற்றோர்க்கும்
நண்ணும் சிறையென்றால் நாடு திருந்தாதா?
மங்கையர் கூட்டம் மகிழ்ந்திருக்க மாட்டாதா?
இங்கிருக்கும் நல்லிளைஞர் எண்ணிச் செயற்கெழுக!
மற்றுத் தொழிலாளர் மாய்ந்துபோ கின்றநிலை
எற்றுக் கிருந்திடுதல் வேண்டுமிங்கே? எண்ணிடுவீர்!
வெற்றுக்கே கட்சி வெறியாட்டம், கொள்கை - எல்லாம்!
தொற்றுநோய் போலத் தொழிலாளர் போராட்டம்!
தன்னுடலால் மக்கள் தனிநலத்தைக் கூட்டுகின்ற
பொன்னேர் தொழிலாளர் உள்ளம் புகையாமல்
கண்ணெனவே காத்தல் அரசின் கடமையென்க!
உண்ணும் உணவும் உடையும் உறையுளுமென்
றெல்லாம் அவர்க்கிருத்தல் எல்லார்க்கும் நல்லதுவாம்!
கல்லா அவருடலம்? காய்ச்சி வைத்த வல்லிரும்பா?
உண்டது தான்செரியா தோர்கூட்டம் வாழுவதா?
உண்பதற்குக் கூழின்றி ஓர்கூட்டம் வாழுவதா?
பேச்சுப்பேச் சென்று நாம் பேசுகின்றோம்! செய்தோமா?
காச்சுமுச் சென்றே கதறுகின்றோம் கூட்டத்தில்!
வல்ல தொழிலாளர் வாழ்ந்திருந்தால் வாழ்வோம், நாம்!
அல்லதவர் வீழ்ந்தால் அனைவோரும் வீழ்ந்திடுவோம்!

ஏழையரின் தம்நிலையோ ஈண்டுரைக்க வொண்ணாது!
கோழையரைப் போலவும்நாம் கூனிவிடல் ஆகாதே!
இல்லையெனும் கூட்டத்தை இல்லாமல் ஆக்குவதில்
தொல்லையென்ன வந்ததுவாம்? தோது தெரியாதா?
ஏழையெனும் ஓர்கூட்டம் என்றும் இருந்திடவே
மோழை மனத்தினர், நாம் முக்காலும் எண்ணுகின்றோம்!
அல்லாக்கால் ஏனவர்க்கே ஆக்கம் ஒதுக்கவில்லை!
எல்லார்க்கும் எல்லாமும் என்னும் சமவுடைமைச்
சட்டமிட அஞ்சுகின்றோம்! உள்ளம் தயங்குகின்றோம்!
திட்டமிட ஏன்தயக்கம்! செல்வரிடம் ஏன்அச்சம்?
ஆள்கின்ற நாமும் அவர்போல வாழ்வதற்கே
மூள்கின்ற ஆசைவந்து மொய்த்துக் கிடக்கின்றோம்!
செல்வர்போல் வாழச் சிறியமனங் கொண்டுவிட்டோம்!
வெல்வர்போல் பேசி விளையாட்டுக் காட்டுகின்றோம்!
மெய்யாய் வினைபடவே உள்ளம் தயங்குவது
பொய்யன்றே! ஆகப் புரட்டுபல பேசுகின்றோம்!
நாட்டுடைமைச் சட்டமிங்கு நாளைக்கே வந்தாலும்
வாட்டுகின்ற கொல்வறுமை வாட்டம் தவிராதா?

குந்தக் குடிசையின்றிக் கொல்பசிக்குக் கூழின்றி
நொந்திருக்கும் ஓர் கூட்டம்! நோகாமல் மற்றொன்று
தொப்புளுக்கும் கீழாகத் தோள்வரைக்கும் தானுண்டு
கொப்புளிக்கப் பன்னீரைக் கேட்பதென்றால் யார் குற்றம்?
ஆள்வோர்கள் சட்டம் அரைநொடியில் அந்நிலையைத்
தூள்தூளாய்ச் செய்யாதா? தோல்விவந்து நேர்ந்திடுமா?
விண்வெளியும் விண்ணின்று வீழும் மழைத்துளியும்
நுண்ஒளியும் காற்றும் - எனும்பூத நுகர்ச்சியைப்போல்
மண்வெளியும் இங்கெல்லா மக்களுக்கும் சொந்தமென்றும்,
உண்வழியை எல்லாம் உழைத்தடைய வேண்டுமென்றும்,
ஏனிங்கோர் சட்டம் இயற்றிவிடக் கூடாதாம்?
ஏனிங்கோர் கூட்டம் எதிர்த்துரைக்க வேண்டுமிதை?

மண்ணுடைமை ஒன்றன்றோ மற்றுடைமை யாவைக்கும்
நண்ணுடைமை யாகநின்று நம்முயர்வை வீழ்த்தியது?
மண்ணைப் பொதுவென்றால் மண்விளைவுந் தான் பொதுவாம்!
பண்ணை முறையில் பயிர்விளைவும் கண்டிடலாம்!
அக்காலை ஏழையென்றும் ஆங்கொருவன் செல்வனென்றும்
செக்காலை மாடுகள்போல் சென்றுவரல் ஏலாது!
செல்வன் இருப்பானேல் ஏழ்மையும் சேர்ந்திருக்கும்!
செல்வம் எவரிடத்தும் சேர்ந்திருத்தல் கூடாது!
எல்லார்க்கும் ஊண் உடைகள், எல்லார்க்கும் வாழ்மனைகள்;
எல்லார்க்கும் வாழ்க்கை எனில், உழைப்பும் எல்லார்க்கும்;
என்றிங்கே ஆகுமட்டும் என்னெழுதி, என்பேசி,
வென்றுவிடப் போகின்றோம்? வீணவைதாம் என்றிடுக!
கற்றோர்கள் இந்தக் கணக்குவிடை கண்டிலரேல்
மற்றோர்கள் ஓர்நாள் மளமளனெத் தாமெழுந்து
கற்றோரின் முன்பே கணக்கெழுதித் தீர்ப்பார்கள்!
வெற்றுரை அன்று விளைவுரையே என்றுணர்க!

அந்தநாள் மட்டும் அடிபிடிகள் சண்டைகள்தாம்!
எந்தநாள் ஆனாலும் எத்தனைநாள் போனாலும்
அந்த ஒருநாள் அனைவருக்கும் நல்லநாள்
வந்துதான் தீரும் வரவேற்க நாமெல்லாம்
காத்திருப்போம்; உள்ளம் கனிந்திருப்போம்; அந்நாளில்
பூத்திருக்கும் இன்பம் பொலிந்து!

# 8. திரு.வி.க. வாழ்வில் பெரும்பங்கு கொண்டது மொழித்தொண்டா, பொதுத்தொண்டா ?

(தி.பி. 2004 நளி17 (2.12.73)இல் ஆண்டு திருவாரூர் திரு.வி.க சிலைதிறப்பு விழாவில், மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர், தமிழக முதலமைச்சர் மு. அருட்செல்வனார், குன்றக்குடியடிகளார், பாவோகி சுத்தானந்த பாரதியார் முதலியோர் முன்னிலையில் நடந்த பாப்பட்டி மன்றத்தில் நடுவராக வீற்றிருந்து பாடியது)

எந்தமிழை எந்தமிழ் நாட்டை அரசாளும்
செந்தமிழ்க் கலைஞ! செந்தமிழ் ஞாயிறீர்!
அடிகளீர்! புலவரீர்! அருமைத் தமிழகம்
விடிவுகொள் நாளில் விளங்கத் தோன்றிய
அன்புறு பெரியீர்! அன்பரீர்! தாயரீர்!
இன்புறு முணர்வால் பாமன் றேறும்
பாவலீர்! உங்கட்குப் பணிவுசால் வணக்கம்.

ஆவலால் பட்டிமன்ற ணைந்திருக் கின்றீர்!
செந்தமிழ்த் தாயின் சீரடி போற்ற
வந்திருக் கின்றீர் என்னினும் வழுவிலை!
திரு.வி.க. .வின் திருவுரு வாழ்த்த
மருவு காதலால் மண்டினீர் என்னினும்,
சான்றோர் சாதலை வாழ்தலாய் எண்ணும்
ஆன்றோர் வழியை அகலா நெஞ்சராய்
மீட்டும் புதுக்கிக் கொண்டீர் என்னினும்
காட்டுந் தவறோ கடுகள வில்லை!

எவ்வழி யாகவோ தமிழர் இழந்தவை
ஒவ்வொன் றாகப் பெறப்பெற உலகினில்
அவர்முன் னேற்றம்; அவர்மொழி, நாடு
துவளுதல் இன்றித் துலங்குதல் உறுதி!

அறிஞரைப் போற்றுதல் அறிவைப் போற்றலே!
அறிவைப் போற்றலே அனைவர்க்கும் கடமை!
கடமை தவறினால் காண்பது மடமையே!
மடமை சூழ்வதோ மாய்வதின் இலக்கணம்!
போற்றுதல் என்பது அன்பால் புரப்பது!
தூற்றுதல் என்பதோ துன்பால் தொடர்வது!
அன்பினால் ஒருவர் அறிவைப் புகழ்வதோ

இன்பம் பெறுவதும் இன்பந் தருவதும்!
எனவே அறிஞரை ஏற்றப் படுத்தினோம்!
கனவாய் இருந்ததைக் கல்லாய் நிறுத்தினோம்!
கல்லென் றாலும் சில்லாய்ப் போமென
வல்ல செம்பொனால் வடிவம் ஆக்கினோம்!

இங்கொரு கருத்தை எதிர்வைக் கின்றேன்:
திங்களும் கோளும் செல்கையில், இங்ஙன்
படிமமும் வடிவமும் பாங்குற நிறுத்தி
அடிதொழல் அறிவா? அன்பா? - ஆங்கதால்
எய்துறும் பயனோர் எள்மூக் கத்துணை
கொய்திட வருமோ? - என்றொரு கொள்கையர்
கேட்டு நிற்கலாம்! இனுஞ்சிலர் கிளர்ச்சியால்
நாட்டு நன்னலம் நாடுவோர் போல
உயிரோ டிருக்கையில் ஒருபயன் நல்கார்
உயிரது கழிந்தபின் உருவம் நிறுத்துதல்
என்னோ? என்னோ? - எனமுழக் கிடுவார்!
இன்னவர்க் கொன்றிங் கியம்பிடல் வேண்டும்!

முதற்கண் திங்களும் கோளும் முழக்கிடும்
எதற்கு, எது, ஏன்? எனும் எதிர்நெறிக் கொள்கையர்
தமக்கொரு கருத்தைச் சாற்றிடு கின்றேன்!
உமக்கெலாம் உண்மை உணர்த்துதல் எம்கடன்!

திங்களும் கோளும் செல்வதும் சிறப்பே!
இங்குள அறிஞரை, ஏத்தலும் சிறப்பே!
முன்னதே அறிவாம்; பின்னதோ அன்பாம்!
இன்னது இதற்கென இறப்ப அறியாது
என்னது ஏன்என - எடுத்ததற் கெல்லாம்
பன்னிப் பன்னி வினாவையே பன்னுதல்
முன்னிய அறிவென மூண்டு விடாது!
நன்னர் ஆய்ந்தால் நமக்கு இவ் வுலகில்
நெருப்பும் வேண்டும்; நீரும் வேண்டும்!
விருப்பும் வேண்டும்; வெறுப்பும் வேண்டும்!
நட்பும் வேண்டும்; பகையும் வேண்டும்!
கட்படு வனசில; கட்படா தனசில!

நீரைக் காய்ச்சிட நெருப்பே உதவும்!
நெருப்பை அவித்திட நீரே உதவும்!

மெய்யை விரும்பவும் பொய்யை வெறுக்கவும்
நல்லநட் பாடவும் தீயன பகைக்கவும்
வல்ல இருதிறன் வாய்த்தலே நன்றாம்!
எவைஎவை எதற்கென எண்ணாது கொளாது
"அவையவை யெல்லாம் அறிவற் றார்செயல்;
எவைதாம் எனினும் இங்கிருப் பவையெலாம்
கவைக்குத வாதன; கடலோ வானமோ
தாண்டி வருபவே தக்கவை" என்றால்,
ஈண்டிங் கிருப்பவர் யாவரும் மூடரோ?

**"வஞ்சகர் வந்தவர் தமிழால் செழித்தார்;**
**வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்**
**நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்!"**

- என்று முழங்கிய புரட்சிப் பாவலர்
நின்று முழங்கிய சொற்களை நினைமின்!

திரு. வி. க. வெனும் திருமிகு தலைவர்
ஒருதொழிற் புரட்சியை உண்டாக்க வில்லையோ?
உருசிய மண்ணும் சீன மண்ணுந்தாம்
பொருளறி வுற்றவோ? பிறவெலாம் பொக்கோ?

எதற்குச் சொல்கிறேன் - திரு. வி. க. என்போர்
சிதற்கும் பலிலே கட்டைச்செவ் வெறும்பு!
தொழில்,தொழி லாளர் எனின்தோள் புடைத்துப்
பொழிலென உள்ளம் புலர்ந்தெழும் தலைவன்!
இந்தியா முழுவதும் இணைதொழில் இயக்கம்
முந்திக் கண்ட முதுபெரும் புரட்சியோன்!
அவரைப் போற்றுதல் ஆகா தெனின்,வே
றெவரைப் போற்றுதல் ஏற்றதாம் என்பீர்?

அடுத்து, ஒரு கருத்து பொதுவாய் அறைவது!
"எடுத்ததோ எடுத்தீர், இருந்தபோ தெடுத்தீரா?
செத்தபின் தானே சிலையெடுக் கின்றீர்!
செத்தபின் தானே சிறப்புச் செய்கிறீர்?"

- என்பதக் கருத்து! இஃது ஏற்ற கருத்துதான்!
மன்பதை நினைதகும் மாசிலாக் கருத்துதான்!
இருப்பினும் இறந்தபின் படிமம் எடுப்பது.

விருப்பின் நிகழ்வதாம், வினையும் தூயதாம்!
உயிரோ டிருக்கையில் பாராட்டும் உவகையில்
செயிர்தீர் சான்றோர் ஆயினும் செருக்கினால்,
தன்வினை தளர்ந்து தன்முனைப் பெழுந்து
மன்வினை மறந்து, மற்று, அவர் அறிவே
உயர்ந்தது சிறந்தது ஒருகா லத்தும்
பெயரா நிலைப்பது; பிறவெலாம் பொய்ப்பது!

என்று நினைப்பவர் ஆகி இழிகிறார்.
நன்றினும் தீது நண்ணியே இருக்கும்!
எவ்வா றாயினும் இருக்குங் காலை
ஒவ்வா ராயினும் ஒப்பார் போலப்
பொருள்கொடுத் தேனும் புகழ்பெறத் துடிப்பர்!
மருள்தீர் அறிவும் மனமும் அன்றி,
உடல்நசை மிகுப்பால் . உலகியல் விருப்பால்
கெடலுறும் நடுநிலை! கேடும் செய்வார்!
ஆகவே மறைந்தபின் அறிஞரைப் போற்றுவர்!

சாகவே வேண்டும் எனயாம் சாற்றிலம்!
இருக்குங் காலை அறிவினை ஏற்றுப்
பெருக்க விதைத்திடப் பெய்தலே சாலும்!
புகழ்ச்சி என்பது தேவையில் புனைவே!
இகழ்ச்சி என்பது ஏற்றவர் செயலிலை!
ஒருவர்தம் அறிவின் உழைப்பையெல் லாரும்
பெறும்படி செய்வதே போற்றலிற் பெரியது!

மற்று, அவர் வாழ்க்கையில் மலைமலை யாக
வெற்றுப் புகழ்ச்சியை வீணே குவிப்பது
என்ன பயனையும் விளைத்தலிங் கில்லை;
கன்னலும் செந்நெலும் கழனி தருவதால்
எரு, நீர் இடுவமா? புகழ்ச்சியை இறைப்பமா?
திருவுடை யார்க்கெனின் தேவை புகழ்ச்சியே!
அறிஞர் தமக்கெனில் ஆக்கத்திற் குறுதுணை
செறியத் தந்து செறியப் பெறுதலே
சிறந்தது! ஆதலால் செத்தபின் புகழ்ந்தனர்!
இறந்தபின் புகழ்வதால் இறுமாப்பும் இராது!
புகழ்பெறார் தமக்குப் பொறாமையும் ஏழாது!
தகவும் அதுதான்; தகைமையும் அதுதான்!
சொல்லுதல் யாவரும் சொல்லலாம்; சொற்பொருள்

வெல்லுதல் காலத்து விளையும் நிகழ்ச்சியாம்!
ஈங்கிது நிற்க!
- இனி நாம் செய்தியைத்
தாங்கிப் பேசுவோம்! தகவுடைப் பெரியீர்!

பட்டி மன்றின் நடுமையைப் பற்றி
நெட்டுயிர்ப் புயிர்க்கும் நிலையினில் உள்ளேன்!
கொண்ட தலைப்போ கோடாத தலைப்பு!
கண்ட கண்ட தலைப்புகள் தந்து,
**'மண்டோ தரியா, சீதையா, கற்பில்**
**விண்டவர் யார்'** - என வினாவொன் றெழுப்பிப்
பட்டி மன்றினால் பரபரப் பூட்டி
வெட்டிக் கதைகளை விடிய விடிய
ஆயிர மாயிரம் ஆண்டுகள் பரப்பி
வாயுரம் பெற்றதே அல்லால் வாழ்க்கையில்
அடிமைநீங் கிற்றா? அறியாமை பெயர்ந்ததா?
மிடிமை செத்ததா? மேல்கீழ் என்னும்
குடிமை கொல்லும் கொடுமை தவிர்ந்ததா?
இல்லையே! பின்னும் ஏனிந்த ஆய்வுகள்?
சொல்லையே தவிர்க்கையில் பொய்களைச் சொல்வதா?
எல்லாரும் இன்புற் றிருக்க எண்ணிக்
கல்லையும் மண்ணையும் காதில் திணிப்பதா?
அப்படி யில்லா அருமைத் தலைப்பிதாம்!
ஒப்புமோர் தலைப்பே! உயர்ந்த தலைப்பிது!

**திரு. வி. க. வெனும் திருவுடைத் தலைவனின்**
**பெருமைத் தொண்டெலாம் பெற்றது மொழியா?**
**பொதுமை நெறியா ?** - எனும் புதுத் தலைப்பு!

**"மொழித் தொண்டு"** என்று மொழிகுவர், **கோவை**
**இளஞ்சேரல், இறைக்குரு வர், தொல் காப்பியர்!**
களஞ் சேர் மரபினால் **'பொது'** - எனக் கழறுவர்
**பாலசுந் தரனார், பன்னீர்ச் செல்வனார்,**
**ஞானச் செல்வராம்** நற்றமிழ்ப் பாவலர்!
தவமென வாழ்வையே தவறிலா நடத்தியோர்
திரு. வி. க. . வெனும் திருமா முனிவர்!
அன்னவர் ஆற்றிய மொழித்தொண் டாய்ந்து
பின்அவர் ஆற்றிய பொதுத்தொண்டு பேசி,

அறிஞர் பாவலர் புலவர் ஆகின்ற
செறிவுறு பட்டி மன்றிது; சிறப்புறக்
கூறுவ தென்னின் குறைவிலாப் பாவினால்
ஏறுகள் பொருதும் எழிற்பா மன்றமாம்!

சொல்தெறித் தோடும்; பொருள்மழை சொரியும்
வில்தெறித் தம்பு விரைவது போல
எதிரெதிர்ப் பாயும் எந்தமிழ்ச் சொற்கள்!
புதிரினிற் புதிரும் புதுமையிற் புதுமையும்
கேட்போர் நெஞ்சைக் கிளர்வுறச் செய்யும்!
வாட்போர் எனும்படி வாய்ப்போர் நிகழும்!
மற்போர் கண்ட மனமெல்லாம் மலைக்கச்
சொற்போர் பாச்செறி சுவைப்போர் காண்க!

கோவை இளஞ்சேரன் திரு.வி.க. வாழ்வின்
பெரும்பங்கு மொழித்தொண் டென்று பேசுவார்!
அவர் அணித் தலைவர்! அவருக் குப்பின்
பொதுத்தொண் டென்று பாலசுந் தரனார்,
எதிர்அணித் தலைவர் - எதிர்நின் றியம்புவார்!

முதற்கண் பாவலர் கோவை - பாக்கோவை,
கோவை இளஞ்சேரன் எனும் பாக்
கோவை அழைப்பேன் கொள்கை சாற்றவே!

(கோவை இளஞ்சேரனின் பாத் தருக்கம்)
(அது முடிந்து, பாலசுந்தரனார்க்கு அழைப்பு)

அடுத்தவர் புலவ ரேறு
ஆன்றவிந் தடங்கு கொள்கை
எடுத்தவர்; எந்த மிழ்த்தாய்
ஏற்புற எழிற்பா மாலை
தொடுத்தவர்; அவரை யாம் போய்த்
தொடுக்கநும் கருத்தை யென்றே
விடுத்தனம் வேண்டு கோளே!
விளைவிப்பார் கருத்தை! கேட்போம்!

(பாலசுந்தரனாரின் பாத் தருக்கம்)
(அது முடிந்து, புலவர் **இறைக்குருவனார்க்கு** அழைப்பு)

புலம்பெரிதால் ஆன்று பொலிந்ததமிழ் வாழும்
நிலம்பெரி தென்று நினைந்து - வலம்புரியால்
இன்றமிழைக் காக்கும் இறைக்குருவ னார்கொள்கை
மன்றமிசை நிற்க மணந்து!

**(இறைக்குருவனாரின் பாத் தருக்கம்)**
(அது முடிந்து, **பன்னீர்ச் செல்வனார்க்கு** அழைப்பு)

வேந்தம் எனுமோர் விறல்தமிழ்த் தாளிகை விண்டளித்துக்
காந்தம் எனநற் கவின்பாத் திறத்தால் கனிந்த தமிழ்
மாந்தம் உயர மனமொழி மெய்தரும் மாண்புடைய
ஏந்தல்பன் னீர்ச்செல்வன் காட்டுக ஏற்றம் எழுந்துவந்தே!

(**பன்னீர்ச்செல்வனாரின்** பாத் தருக்கம்)
(அது முடிந்து, **தொல்காப்பியனார்க்கு** அழைப்பு)

பாப்புலவர் தொல்காப் பியப்புலவர் பாய்ந்தெழுந்தால்
யாப்பவர்முன் மண்டியிட்டே யாக்காதோ - காப்புளரேல்
தப்புவர்காண்! மற்றுத் தலைதாழ்த்தித் தங் கருத்துக்
கொப்புவர் காண் மன்றோ டுவந்து!

(**தொல்காப்பியனாரின்** பாத் தருக்கம்)
(அது முடிந்து, **ஞானச் செல்வனார்க்கு** அழைப்பு)

பொதுத் தொண்டே திரு.வி.க. வின்
புகழ்த் தொண்டாம்; பொலிந்த தொண்டாம்!
மதுக் கிண்டும் பொறிவண் டேபோல்
மலர்த்தமிழ்க் குந்திக் கிண்டி
மிதக்கிலை இன்பத் தால்அம்
மேலான தலைவர் என்றே
புதுக்குவர் கருத்தை ஞானச்
செல்வர்யாம் புகழு மாறே!

(ஞானச் செல்வனாரின் பாத் தருக்கம்)
(மறு சுற்று - தலைவர்களுக்கு மட்டும்)

ஈரணி அறுவர் பாங்கும்
ஒரு சுற்று முடிந்த திங்கு;
யாரணி சிறந்த திங்கே?
எவரணி வென்ற, தென்றே
ஓரணி யான தீர்ப்பை
உரைக்குமுன் இன்னோர் சுற்று.
நேரணித் தலைவர் மட்டும்
நின்றிங்குப் பொருதக் காண்போம்!

மன்றத்தே வீற்றி ருக்கும்
மணித்தமிழ் நெஞ்சம் யாவும்
நன்றவர் கருத்தைக் கேட்பீர்!
நடுநிலை உள்ளத் தோடு,
வென்றவர் யாவர் என்றே
விளக்கமுற் றிருப்பீர்! வாழ்ந்து
சென்றவர் பெருமை யாவும்
செந்தமிழ்ப் பெருமை யன்றோ?

முன்னவர் பால சுந்தரம்
முதலணிக் கருத்தைப் பாவால்
சொன்னநற் கருத்தை யெல்லாம்
தொகுத்துரைத் தின்னுஞ் சொல்வார்!
பின்னணிக் கருத்தை யெல்லாம்
பேசுவார் கோவைச் சேரல்!
இன்னவர் முடிந்த பின்னர்
என்தீர்ப்பை வைப்பேன் இங்கே!

(கோவை இளஞ்சேனுக்கு அழைப்பு)
கோவை இளஞ்சேரன் கொள்கை தொகுத்துரைக்க
மேவுகயிம் மேடை மிசை!

(பாலசுந்தரனார்க்கு அழைப்பு)
இன்பால சுந்தரனார் ஏற்கும் திரள்கருத்தை
முன்பாக வந்து முழங்கிடவே . அன்பால்
அழைக்கின்றேன் ஈங்கவரை; ஆங்கவர்க்குப் பின்னர்யான்
இழைக்கின்றேன் தீர்ப்பை எடுத்து!

**முடிவுரை:**

இதுவரை இளஞ்சேர னார்இறைக் குருவனார்
புதுமுறை யால், தொல் காப்பியப் புலவனார்
மூவரும் திரு. வி. க. வெனும் முனிவனை
யாவரும் வியக்க மொழியா சிரியனாக்
காட்டி நின்றதும்,
கவின்மிகு புலவர்
பாட்டியல் வல்லவர் பாலசுந் தரனார்
பன்னீர்ச் செல்வனார் ஞானச் செல்வனார்
அன்னவர், மக்கள் அருந்தலை வரேயென
நாட்டி நின்றதும்,
நாமவர் பாக்களில்
ஓட்டிய உள்ளம் ஓரடி பெயராமல்
கேட்டு நின்றதும் கிளுகிளுப் புற்றதும்
வாட்டிய கோடைக்கு வந்த மழையால்
உயிர் தழைப் பெய்திய உயர்ந்த நிகழ்ச்சி!

மொழித்தொண் டென்று முழக்கிய முன்னணி
வழித் தொடர் புற்ற கருத்துகள் வருமாறு:

இளஞ்சேரர் அணியோ எந்தமிழ்த் தென்றல்
திரு.வி.க. எனும்பெயர் ஏற்ற தாலே
தமிழ்த்தொண் டாற்றி, தகுபடிமம் பெற்றார்!
என்று கொள்கை எடுத்துக் கூறும்!

பொதுத்தொண் டென்று பொருதிய மாற்றணி
புதுக்கிய கருத்துகள் புலப்படும் வகையிது:

இளவழ கர்தம் அணியோ அண்ணல்
திரு.வி.க. நம் தீந்தமிழ் மொழியைக்
கருவியாக் கொண்டன ரேனும் ஆங்கவர்
பொதுநலத் தொண்டே பொலிவுற் யுயர்ந்த(து)
இதுமெய் என்றே எடுத்து மொழியும்!

பட்டி மன்றம் பயனுறக் காட்டிய
நெட்டமை கருத்துக்கு நேரிய தலைவராய்
இருந்த தலைவர் திரு.வி.க. எனும்
அருந்தமிழ் ஆசான்! அவர்தம் வாழ்க்கையோ
தமிழ்முனி வாழ்க்கை! தவறிலா வாழ்க்கை!

அன்னவர் வாழ்க்கையால் தமிழ்அழ குற்றது!
நன்னரும் மேடைப் பேச்சு நயந்தது!

இனிய உரைநடை! எழில்தவழ் நறுந்தமிழ்!
கனியும் அன்பினால் கனிந்தசொற் பொழிவு!
மக்களை எழுப்பி மனத்தைத் திறந்தது!
தக்க கருத்தினால் தாளிகைத் தொண்டு
மிக்கசிறந்தது! தமிழ்நலம் மீண்டது
துயருற் றிருந்த தொழிலா ளர்கள்
மயலற நீங்கி மாண்புறப் பெற்றனர்!
பொதுமைக் கழகம் பொலம்பொலம் தோன்றி,
புதுமைக் கருத்துகள் விளைத்துப் பொலிந்தன.

இந்திய நாட்டில் இதுவரை இல்லா
முந்துதொழிற் கழகம் முதன்முதற் கண்டார்!
தொழிலாளர் இயக்கம் தோன்றிய பின்னை
வழியிலா வாழ்க்கை வழிகண் டுய்ந்தனர்!
சாதிக ளற்ற சமயப் பொதுமையால்
மோதல் குறைந்து முழுவலி திரண்டது.

பற்பல நூற்கள் பாவிலும் உரையிலும்
நூற்புல வோர்பலர் நயக்க எழுதிப்
பொய்மைக் கருத்துகள் புதைவுறச் செய்து
மெய்ம்மை நாட்டிய மேலவ ராயினர்.

சமயத் தொண்டினும் நாட்டுத் தொண்டினும்
அமைவுற் றிலங்கிய அருந்தமிழ்த் தொண்டினும்
புதுமைத் திருத்தம் புகுத்திய வகையினும்
பொதுமை அரசியல் புகன்ற நெறியினும்
தொழிற்பே ரியக்கம் தொடங்கிய திறத்தினும்
எழிலுறத் தாளிகை இயற்றிய முறையினும்
திரு.வி.க. . வெனும் திருத்தகு முனிவோன்
பெருவிறல் மறவனாய்ப் பிழையா தொழுகினான்!

அன்ன முனிவோன் ஆற்றிய தொண்டினில்
என்னென்ன சிறந்தவை; என்னென்ன குறைந்தவை.
என்றெடுத் தியம்பல் இயலாது எவர்க்கும்!
இயம்பற் பிழையால் எடுத்த கருத்து
மயங்கல் அடைவதும் மங்கல் அடைவதும்

நேருமே யன்றி நிகழ்த்திய தொண்டினில்
யாரும் ஏற்றமும் தாழ்வதும் யாக்கிலர்!
கதிருள் ளளவும் காற்றுள் ளளவும்
அதிரா நின்ற திரு.வி.க. . எனும்
மேதகு தலைவன் முனிவன் மிழற்றிய
தீதரு தொண்டின் திறங்குறை யாது!
காணுங் குறையெலாம் காண்பவர் குறையே!
காணும் நிறையெலாம் காட்சியின் நிறையே!
பெரியோன் தொண்டின் பெரும்பங்கு என்பதால்
உரியோ ரெல்லாம் தங்கருத் துரைத்தனர்!
மொழித்தொண் டேஎன அவரை மொழிந்தவர்
மொழிப்பற் றாலே அங்ஙன் மொழிந்தனர்!
பொதுத்தொண் டேஎன அவரைப் பேசியோர்
பொதுத்தொண் டார்வமோ டங்ஙன் பொழிந்தனர்!
இருவகை யோர்க்கும் ஏற்ற தொண்டராய்
அருமைத் தலைவராய் அவர்வாழ்ந் திருந்தார்!

ஏற்றவோர் கருத்தை இருபுடை தாங்கி
ஏற்றமும் இறக்கமும் கண்டிடும் இயல்பினால்
தக்க அறிஞரும் தகுபுல வோரும்
ஒக்க ஆய்ந்திரு கூறாய் உரைத்தனர்!
இருதிறத் தாரும் ஏற்க உரைத்ததை
ஒருதிறப் படுத்தி உரைப்பது கடினமே!
ஒருதிறம் போற்றின் ஒருதிறம் குன்றும்!
ஒருதிறம் கொள்ளின் ஒருதிறம் எஞ்சும்;
ஆய்பொருட் பெருமையால் ஆய்வு சிறந்தது!
மாய்பொரு ளென்னின் பெருமைமாய்ந் திருக்கும்!

தொட்டவர் கையும் மனமும் துலக்குறும்
மட்டறு சிறப்பின் மணவழ கோனை
எதனில் உயர்ந்தோன் எதிற்சிறந் தோன் - என
அதனதன் சீர்சொல்லி ஆய்வுரை கூறுதல்
எம்மோர்க் கரியதே! இருப்பினும் ஈண்டு
நம்முடை ஈரணி நாட்டிய திறத்தினை
கருத்து வலிவினை ஆய்ந்து கழறுதல்
பெருத்த மகிழ்ச்சியாம்! பிழையிலாச் செயலாம்!

தமிழ்த்தென்றல் மனத்தினராய்த்
தளராத பொதுத்தொண்டு செய்தார் அண்ணல்!

தமிழ்நாட்டின் அரசியலில்
தக்கதிறங் காட்டிநலம் சேர்த்தார் அன்னார்
தமிழருக்குத் திரு.வி.க.
கலங்கரையின் திருவிளக்கு! ஒளிவிளக்கு!
தமிழ்மனத்தால் பொதுத்தொண்டில்
தமைநனைத்துக் கொண்டவர்தாம் தமிழின் தென்றல்!

பயனுற முடிந்த பாப்பட்டி மன்றினை
நயனுறு வகையில் நடத்திய இயற்றமிழ்ப்
பயிற்றகத் தார்க்கும் - அதைப் - பயிற்றுறும் ஆசான்
குயிற்றமிழ்ப் புலவன் சரவணத் தமிழர்க்கும்
பாத்திறத் தோடு பட்டி மன்றினில்
நாத்திறம் நாட்டிய நற்புல வோர்க்கும்,
விருந்துத் தமிழை விழுமிய அமைவோ(டு)
இருந்து கேட்ட உங்கள் எல்லார்க்கும்
அன்புற நன்றியும் அமைவுற வணக்கமும்
இன்புறக் கூறி இதனை முடிப்பேன்!

# 9. அரசுயர் பள்ளி, உரத்தநாடு

(தி.பி. 2006 விடை 17 (31.5.75) அன்று உரத்தநாடு அரசுயர்பள்ளியில் நிகழ்ந்த பாரட்டரங்கத் தலைமையுரை)

**முன்னுரை:**

பேரன்பு கொண்டவரே! பெரியோரே!
தாய்மாரே! பெருமை மிக்க
காரம்பு மழைபொழியும் கழனிமிகு
எழிலுரந்தைக் கவின்மிக் கோரே!
நீரம்பொன் நெல்விளைத்துச் சோறுதரும்
நெடும்புகழ்சேர் தஞ்சை யோரே!
வீரம்பொய் யாத்தடந்தோள் இளைஞர்களே!
விறல்தமிழால் வணங்கு வேனே!

பாவேந்தன் பெருவிழாவாம்! இவ்விழாவில்
பாவலர்யாம் பாட வந்தோம்!
பாவேந்தன் பாட்டிலவன்; மறல்வேந்தன்
புரட்சியிலே! மலர்மி குந்த
காவேந்துங் கருங்குயில்போல் தமிழகத்தின்
கரையணைந்த புதுவை தன்னில்
சாவேந்தும் வரையினிலே செந்தமிழைச்
சலிப்பின்றிப் பாடி னானே!

இக்காலும் தமிழ்ப்பாடும் புலவருளார்:
இரந்துசோ றுண்ண வேண்டித்
திக்காலுக் கோரிருசொல் பழந்தமிழில்
திருடியொரு பாட்டைச் செய்து
முக்காலும் என்பாட்டே நம்புங்கள்
எனப்பொய்யால் முக்கா டிட்டுப்
பொக்காயும் பதராயும் தமிழ்வளர்ப்பார்;
போலிலனே புதுவை வேந்தன்!

(வேறு)

தக்கதமிழ்ச் செழுந்தீம்பா! நற்றமிழ்ப்பா!
தனிச்சுவைப்பா! தண்டமிழ்ப்பா! தப்பாதப்பா!
எக்காலுந் தமிழரிடை இருந்தமிழ்ப்பா!
இணையிற்பா! எழில்சேர்பா! இலக்கணப்பா!

முக்காமல் முணகாமல் முகிழ்த்ததப்பா!
முறுவல்பா! புரட்சிப்பா! முழுதுந்தேன்பா!
செக்காடும் ஓசைவராச் செந்தமிழ்ப்பா!
சிறப்புப்பா! சுவையப்பா! சொல்வா யப்பா!

காராடும் குளிரிருக்கும்! கதிராடும்
கனப்பிருக்கும்! காற்றிருக்கும்! ஊற்றிருக்கும்!
சீராடும் குழந்தைக்குச் சிணுங்காத
சிரிப்பிருக்கும்! செழிப்பிருக்கும்! செழும்பூஞ்சோலை

நீராடும் கன்னிக்கு நினைவிருக்கும்
படிகாதல் நிகழ்விருக்கும்! அன்பிருக்கும்!
போராடும் வீரர்க்குப் புரட்சியெனும்
புத்துணர்வால் தோள்களெலாம் புடைக்கும் அன்றோ!

(வேறு)

தமிழ்க் குடும்பத் திட்டம்
தந்திருப்பார் அங்கே!
குமிழ்த் தெழுந்த இன்பம்
குவித்திருப்பார் பாட்டில்!
சிமிழ்த் துவிழி யாத
செந்தமிழ வீரர்!
தமிழ்ப் புரட்சித் திட்டம்
தந்திருப்பார் பாட்டில்!

ஆரியத்துக் கோழைக்
கடிமையுற்ற போதில்
வீரியத்தை நாமும்
விட்டுவிட்ட போதில்,
கூரியசொல் வாளால்
குத்திமறம் கீண்டி
நேரியபு ரட்சி
நிகழ்த்திவைத்த கோமான்!'

(வேறு)

பாவேந்தன் சொல்லெடுத்துத் தன்மானந் தனைக்குழைத்துப்
பாட்டென்று தாரா விட்டால்,
நாவேந்தும்மொழி யெல்லாம் சமற்கிருதம்! கதைகளெலாம்
இராமன்கதை பாரத தந்தாம்!
பூவேந்தும் கைகளிலே புழுக்கையினை அன்றோநாம்

ஏந்திநிலம் புதைந்தி ருப்போம்!
ஈவேந்தும் கடமையினால் விழா வெடுப்போம்!
எனினும்வினை இம்மி செய்யோம்!

(வேறு)

செந்தமிழர் தோள்களிலே மறமேற்றி
வைத்தசெம்மல்! செழுந்தீம் பாவால்
எந்தமிழர் நாவினிலே இனித்ததமிழ்க்
கண்டெடுத்தே இழைத்த வேந்தன்!
அந்தமிழப் பெண்டிரெலாம் அணியணியாய்
ஆரியத்தால் அழிந்த போதில்
வந்துதமிழ் மானத்தைத் தூண்டுவித்து
மங்கையரைக் காத்த வீரன்!

கைம்பெண்கள் எழுகென்றான்! கடிமணங்கள்
செய்கென்றான்! கன்னிப் பெண்கள்
மொய்ம்புதரும் காதலினால் தாம்விரும்பும்
ஒருவனையே முடிக்க என்றான்!
செய்ம்புதுமை ஒன்றன்றே அவன்பாட்டில்!
சீர்திருத்தம் முழங்கச் செய்தான்!
பைம்புதரில் பூத்ததமிழ்ப் பூவானான்!
பைந்தமிழ்ப்பூந் தும்பி யானான்!

ஒட்டாரங் கட்டியொரு சொல்லுக்கே
ஊர்முழுதும் அலைந்து தேடிக்
கொட்டாவி விட்டுமுகம் மேல்பார்த்துக்
கீழ்பார்த்துக் குனிந்தெ ழுந்து
கட்டாத பாட்டெல்லாம் மொழிக்கயிற்றில்
கட்டியொரு 'கவி'யென் றூரைத்
தெட்டாமல் தெட்டிவரும் பொய்ப்புலவர்
போல்அல்லன் புதுவை வேந்தன்!

மாணிக்கச் செழும்பரிதி மேற்றிசையின்
வானத்தில் மறையும் போதில்
ஆணிப்பொன் முத்தெனவே கீழ்த்திசையில்
நிலவொளிரும் அழகைப் போல
ஏணிக்குப் படிபோல ஒருசொல்மேல்
ஒன்றுவந்தே இறங்கு கின்ற
பாணிக்கிங் கார்புலவன்; பாவேந்தப்
புலவனல்லால்? பாவல் லோரே!

கண்ணனுக்குத் தாசனென்பான் 'கவி'யெழுத
வல்லனென்பான்; கழுத்த றுப்பான்!
புண்ணுக்குச் சீழ்போலப் புழுவுக்கு
மலம்போலப் புதுமை யென்னும்
மண்ணுக்குச் செந்தமிழால் மாரடிப்பான்!
மாண்பிழப்பான்! மலத்தைத் தின்னும்
பெண்ணுக்குப் பிறக்கின்ற குட்டிகள்போல்
பாப்பலவாய்ப் பெற்றான் அங்கே!

ஆயிரம்பேர் நடுவினிலே பெண்விளக்கை
நிறுத்தியங்கே அவிழ்த்துப் போட்டு
வாயினிலே நீருற்றல் போல்மதுவை
வயிறார மண்டி விட்டுக்
காயாயும் பிஞ்சாயும் சொல்லுதிர்த்துக்
காட்டியவை கனிகள் என்றே
வாயுரமாய்ப் பேசுகின்ற வகையல்லால்
நல்லதமிழ் வழக்கங் குண்டா?

பளபளக்கும் திரைப்படத்துக் கூத்தியர்தம்
பண்பிழக்கும் பான்மை யெல்லாம்
வளவளக்கும் சொல்லாலே வழித்தெடுத்துப்
பாட்டென்னும் வடிவங் காட்டித்
தொளதொளக்கும் ஆடையினைச் சிறுகுழந்தை
போட்டதுபோல் துவளக் காட்டும்,
சளசளக்கும் ஓசையெல்லாம் பாட்டென்றால்
செந்தமிழும் சாதல் நன்றே!

ஆடையினை முற்றாக அவிழ்த்துப்போட்
டாடுவதே ஆடல் என்றால்,
ஓடையிலே நீர்போல ஒன்பதுகோ
டிப்பாடல் உரைக்க வல்லோம்!
கூடையிலே வாருகின்ற சரளைகள்போல்
கோடிப்பா குவித்தும் என்ன?
பாடையிலே போகின்ற பிணம்போலுன்
பாடலெல்லாம்! பயனென் காண்போம்!

பாவேந்தன் மொழியுணர்வுப் பாடலொன்றைக்
குழந்தைக்கும் படித்துக் காட்டில்
நாவேந்தும் செந்தமிழை! நல்லுணர்வை

நெஞ்சேந்தும்! நடையில் வீரம்
தாவேந்திச் சதிராடும்! இனப்பற்றுத்
தழைத்துவரும்! தமிழ்நாட் டுக்குக்
காவேந்தி வல்பகையை ஓட்டிவிடும்
திறம்முகிழ்க்கும்! காண்பாய் இன்றே!

அத்தகைய புதுமைப்பா, புரட்சிப்பா
ஆக்கிவைத்த அண்ணலுக்கே
இத்தகைய விழாவெடுப்பார் எந்தமிழர்
இழிவுக்கா ஏற்றஞ் செய்வார்!
புத்தகத்தைப் புரட்டாமல் புழுத்திருக்கும்
இந்துமதம் புரட்டு கின்ற
எத்தகத்தைக் கண்டுகொள்வார் எந்தமிழர்
இனிவருநாள்! ஏற்றங் காண்பார்!

**முடிவுரை !**

அன்புடைப் பெரியீர்! அருமைத் தமிழரீர்!
இன்பம் தந்த இனியபா வரங்கம்
ஒருவா றாக உய்வைத் தந்தது!
கருவாய் இருந்த தமிழ்நலம் கனிந்தது!
எண்ணிப் பாருங்கள்! எந்தமிழ் வாழும்
மண்ணில் பாரதி தாசனார் வந்து
பிறந்திரா திருந்தால்...! உணர்வு பிறக்குமா?
இறந்திரா திருந்தால்...! என்னென்ன விளையும்?
எண்ணிப் பாருங்கள்! எண்ணிப் பாருங்கள்!
கண்ணினா லன்று! கருத்தில் பாருங்கள்!

பாவேந்தர் பிறந்தார்! பாட்டினி லேஓர்
ஆவல் பிறந்தது! தமிழர் அனைவரும்
பாட்டுத் திறத்தினில் பாரையே வெல்லுவார்!
நாட்டுப் பற்றும், நன்மொழிப் பற்றும்
பாட்டால் வளரும் பான்மையை அறிக!
பாட்டுப்புலவன் பாரதி தாசன்
ஊட்டிய உணர்வால் ஊமையும் பாடினான்!
காட்டிய கருத்தால் கண்ணிலான் கண்டான்!
தென்றலாய்ப் பாடினான்! தீந்தமிழ் சொன்னான்!
தென்றலடிக்கும் திறத்தைப் பாருங்கள்!

**'தென்றலடிக்கையில் பச்சிளங்கிற்றுச் சிலிர்த்து**
**நிலைகுலைந் தாடுதல் போல்....'**

**'அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச் செந்நெல்**
**அடிதொடங்கும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்**
**சிந்தை, உடல் அணுஒவ்வொன் றுஞ் சிலிர்க்கச்**
**செல்வம்ஒன்று தவழ்ந்துவரும் அதன்பேர் தென்றல்!'**

(வேறு)

இனி,
பாவேந்தர் உள்ளத்துள்ளே எரிமலை புகைந்ததென்றால்
ஈவாக என்னநிற்கும்? என்பதை அறிய வேண்டும்!
சாவேந்திச் சென்ற தந்த தனிமகன் தனையென்றாலும்
தூவுந்தீக் கனப்பால் இன்றும் துவைகின்றார் பகைவர் அன்றோ?

(வேறு)

எரிமலைக் குமுறலை இதோ; இவண் காணுக!:
**'எரிகின்ற எங்களின் நெஞ்சுமேல் ஆணை!**
**இனியெங்கள் ஆட்சியிந் நாட்டிலே!''**
அடுத்தொரு குமுறலை அதோ கேளுங்கள்!
**'செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க**
**நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்**
**வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று**
**குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!'**

**'தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்!**
**செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்!'**

அடுத்து, அவர் புரட்சிப் பாவலர் ஆகிக்
கடுத்த நெஞ்சொடும் கனலொடும் பேசுவார்!
"வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையி ருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும்உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணாக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு!

பொன்மொ ழிக்குநீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை!"

**"இருக்கும் நிலைமாற்றஒரு புரட்சிமனப் பான்மை**
**ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்."**

அடுத்துப்
பெண்மை போற்றிய பெருமைப் பாவலர்
ஒண்மை பாரதி தாசப் பாவலர்!

**'பெண்களால் முன்னேறக் கூடும். நம்**
**வண்தமிழ் நாடும்எந் நாடும்'** - என்று
எடுத்த எடுப்பிலே முழக்கம் இடுவார்!
அடுத்த குரலிலே ஆணையே பிறக்கும்!

**'பெற்றநல் தந்தைதாய் மாரே நும்**
**பெண்களைக் கற்கவைப் பீரே!**

அடுத்தொரு பாடல் அடியைக் கேட்பீர்!
துடித்த அவர் உள்ளக் குமுறலைத் தோய்ப்பார்!

**'ஆண்உயர் வென்பதும் பெண்உயர் வென்பதும்**
**நீணிலத் தெங்கணும் இல்லை!**
**வாணிகம் செய்யலாம் பெண்கள் - நல்**
**வானூர்தி ஓட்டலாம் பெண்கள்!'**

தமிழகம் தன்னைக் காத்திடச் சொல்லிக்
கமழ்நறும் பெண்மைக்குக் கடமையைத் தூண்டுவார்!

**'தமிழ்காத்து நாட்டினைக் காப்பாய் - பெண்ணே**
**தமிழரின் மேன்மையைக் காப்பாய்!**
**தமிழகம் நம்மதென் றார்ப்பாய்!**
**தடையினைக் காலினால் தேய்ப்பாய்!'**

**'அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்**
**அழகிய தமிழ்நாட்டின் கண்கள்** - என்று
மெச்சும் பெண்மையின் மேன்மையைப் பாடியோர்
உச்சுக் குடுமிகள் காலத்தில் உண்டா?

**'கலியாணம் ஆகாத பெண்ணே! - உன்**
**கதிதன்னை நீநிச் சயம்செய்க கண்ணே!**
**வல்லமை பேசியுன் வீட்டில் - பெண்**
**வாங்கவே வந்திடு வார்சில பேர்கள்!**

**நல்ல விலைபேசு வார்கள் - உன்னை**
**நாளும் நலிந்து சுமந்துபெற் றோர்கள்;**

**கல்லென உன்னை மதிப்பார் - கண்ணில்**
**கல்யாண மாப்பிள்ளை தன்னையும் காட்டார்;**
**வல்லி உனக்கொரு நீதி - இந்த**
**வஞ்சகத் தரகர்க்கு நீஅஞ்ச வேண்டாம்!'**

- என்று கூறி,

**'கற்றவளே ஒன்று சொல்வேன் உன்**
**கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவன் நாதன்'**
. என்று முடித்தவர்,

**" ... ... ... ... அவர்**
**ஞாயந் தராவிடில் விடுதலை மேற்கொள்'**

- என்று துணிவையும் ஏந்திழைக் குரைப்பார்!
பெரிய உலகில் பெண்ணலம் பேசிய
அரிய பாவலன் பாரதி தாசன்!

அடுத்துப்,
பாவேந்தர் ஒரு பகுத்தறி வுணர்வினர்.
ஆவலால் இதனையும் அவர்வா யாலே
கேட்டு மகிழ்வோம்!

'குடிக்கவும் நீரற் றிருக்கும் - ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல் கொடுந்தடி யர்க்கு
மடங்கட்டி வைத்ததினாலே - தம்பி
வசங்கெட்டுப் போனது நமதுநன் னாடு!'

'கடவுள் கடவுள் என்றெதற்கும்
கதறுகின்ற மனிதர்காள்!
கடவுள் என்ற நாமதேயம்
கழறிடாத நாளிலும்
உடைமை யாவும் பொதுமையாக
உலகுநன்று வாழ்ந்ததாம்!
உடைசுமந்த கழுதைகொண்
டுழைத்ததோர் நிலைமையும்
உடைமை முற்றும் படையைஏவி
அடையும் மன்னர் நிலைமையும்
கடவுளாணை யாயின், அந்த
உடை வெளுக்கும் தோழரைக்
கடவுள்தான் முன்னேற்றுமோ? தன்
கழுதைதான் முன்னேற்றுமோ?

அடுத்துப்,
பாரதி தாசன் பைந்தமிழ் இனத்தையெந்
நேரமும் காலமும் நிமையமும் காத்தான்!
அவனின் காவல் எப்படிப் பட்டது?
அவன்குர லாலே அவனுளங் கேட்போம்!
அவனின் சூளுரை ஆர்ப்பரிப் பிஃதாம்!

**'ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ**
**அல்லல்கள் வரின் ஏற்பேன்!**
**ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு**
**உவப்புடன் நான் சேர்ப்பேன்'**

**'செந்தமிழே உயிரே நறுந்தேனே!**
**செயலினை மூச்சினை உனக்களித்தேனே!'**

- இப்படிப் பலவா றெடுத்தெடுத் துரைக்கலாம்!
அப்படி உரைக்கினும் அடிமைத் தமிழனுக்
குணர்வு கொளுத்துதல் உலகினில் கடினம்!
உணர்வுத் தீயினை ஊர்ஊ ராகப்
பாரதி தாசனின் பாடலால் பரப்புக!
வேர்அது தமிழர்க்கு! தமிழ்க்கது விளைவே!

# 10. மது ஒழிப்பு

(தி.பி. 2006 விடை 22 (5.6.75)ஆம் நாள் அன்று நடைபெற்ற உரத்தநாடு வட்ட மதுஒழிப்புச் செயற்பாட்டு மாநாட்டில் நடந்த பாட்டரங்கத்தில் தலைமையேற்றுப் பாடியது)

**முன்னுரை:**

பேரன்பு மிக்க வாய்மைப்
பெரியோரே! அன்னை மாரே!
கூரம்புச் சொல்லால் பாக்கள்
குமிழ்த்திடும் பாவல் லோரே!
சேரன்பாண் டியன்சோ ழன்கள்
சேர்ந்திங்கே இருப்ப தைப்போல்
ஈரன்பால் வந்தீர் இங்கே!
எல்லார்க்கும் வணக்கம் சொல்வேன்!

கற்றோரும் வந்தீர்! நூலைக்
கல்லாரும் வந்தி ருப்பீர்!
கற்றோரும் குடிக்கின் றார்கள்!
கற்றோரே குடிக்கும் போது
மற்றோரா விலக்கு வார்கள்?
மதுவைத்தான் சொல்லு கின்றேன்!
மற்றொரு - குடியு முண்டு;
மதியினால் குடிக்கும் பாட்டாம்!

பெண்களும் இக்கா லத்தில்
பெருமையாய்க் குடிக்கின் றார்கள்!
பண்களே அவர்கள் என்றால்
பாடல்கள் ஆண்கள் ஆகும்!
பண்களும் பாட்டும் சேர்த்தே
பயிலுதல் வேண்டும் அன்றோ!
பெண்களும் அதனால் தானோ
என்னவோ, பிழைசெய் கின்றார்!

(வேறு)

மதுவிலக்கு வந்தபின்னே மாநாடா என்பீர்!
மதுவிலக்கு வந்தாலும் மதிவிலக்கு வேண்டும்!
எதுவிலக்கு நேர்ந்தாலும் சட்டத்தால் நேரின்

எல்லாரும் மனத்தாலும் அதுவிலக்கல் வேண்டும்!
புதுவிளக்கு மாற்றுக்குப் பட்டுக்குஞ் சம்போல்
போற்றாத சட்டத்தால் யாருக்கென் பயனாம்?
புதுவிளக்கம் பெறவேண்டி மாநாடு வைத்தார்!
பொற்பதக்கம் தனில்வயிரம் பதித்ததுபோல் என்பேன்!

சட்டத்தால் தடுத்தாலும் பழக்கத்தால் செய்வோம்!
'சரிக்குச்சரி' என்பதெல்லாம் சட்டந்தான்! சாதிப்
பட்டத்தால் - சாதியினால் - வேறுபட்டுப் போனோம்!
பழக்கமென ஒன்றுண்டே யார்சொல்லிக் கேட்கும்?
திட்டத்தால் நடப்பதெல்லாம் பொருட்செலவாம் ஆட்சி!
திருப்பதிக்கும் பழனிக்கும் போய்ப்போய் வந்தாலும்
ஒட்டுவது தான்ஒட்டும்; முழுமையுமா ஒட்டும்?
உண்மையிலே மதுவிலக்கும் அப்படித்தான் என்பேன்!

மதுக்கடையை எடுத்தார்கள்; புதுக்கடைவைத் தார்கள்!
மதுவேண்டாம் என்றார்கள்; கலக்கல்குடித் தார்கள்!
எதுக் குறைவு நம்மவர்க்கு? எதையும்செய் வார்கள்?
எத்தனைதான் தடுத்தாலும் கள்ளப் பணத்தாள்கள்
புதுப்புதிதாய் அடித்துவர விலையா, நம் மக்கள்?
போட்டசட்டம் ஏட்டிலென்றால் புழங்குசட்டம் நாட்டில்!
பதுக்கலுக்குச் சட்டமிட்டார்! கடத்தல்செய் கின்றோம்!
பாதியினைச் சட்டத்தால்! பழக்கத்தால் மீதி!

எனவேதான் 'மதுவிலக்கு மாநாடென்' றில்லை!
'மதுவிலக்குச் செயற்பாட்டு மாநாடென்' றார்கள்!
முனமேதான் மதுவிலக்குச் சட்டத்தால் செய்தோம்!
முழுவதையும் விலக்கினமா? கள்ளமது வுண்டோம்!
மனமேதான் சட்டத்தின் செயற்பாட்டு மேடை!
மனந்திருந்தத் தானிந்த மாநாடு போட்டார்!
இனமெல்லாம் அப்படித்தான்; கோணிக்கொண்டு போகும்;

குடிக்காதீர் என்றுசொன்னால் யாரிங்குக் கேட்பார்!
குறள்முனிவன் காலத்தில் இருந்தேதான் சொன்னார்!
பிடிக்காத ஒன்றாநாம் விட்டுவிட்டுப் போக!
பெரியபுட்டில் ஒன்றென்றால் அடடா, நம் அண்ணன்
நடிக்காத நடிப்பெல்லாம் நடிப்பார்; வான் மேலே
நடப்பது போல் மனமகிழ்வர்! அதைவிலக்கு வாரா?
துடிக்காதா அவர்நெஞ்சம்! எண்ணி யெண்ணிப் பார்ப்பார்?
'தூதூதூ என்னசட்டம்?' எனத்தேடிப் போவார்!

துடிக்கின்ற நெஞ்சத்தை அங்கொருவன் பார்ப்பான்;
தோன்றுமவன் மூளையிலே புதுக்கருத்தாம் ஒன்று!
வடிக்கின்ற மறைவிடத்தைத் தேடிமது விற்பான்!
வந்துவிழும் அண்ணன்மார் தம்பிமார் கூட்டம்!
படிக்கின்றோம், சொல்கின்றோம்; பழக்கம்விட்டுப் போமா?
பழக்கத்திற் கிடம்விட்டால் முழுக்கஅது கேட்கும்!
நடிக்கின்றோம் திரைப்படத்தில் குடித்ததுபோல்! தம்பி,
நாள்தோறும் பார்க்கின்றான் ஒருநாளில் செய்வான்!

எனவேதான் நம்மக்கள் மனந்திருந்த வேண்டும்!
என்பதற்குச் செயற்பாட்டு மாநாடு போட்டார்!
தினவிருக்கும் மனத்தினிலே; ஆனாலும் அறிவால்
தேர்ந்துவிட்ட நல்லவற்றை நினைத்திருக்க வேண்டும்!
இனமிருக்கும் இருப்பினிலே செயலிழந்து போனால்
என்றென்றும் அடிமையராய் ஏழையராய்ப் போவோம்!
மனமிருக்கும் பெரியோரே! மதியிருக்கும் போதில்
மதுவெதற்கு? இழிவெதற்கு? மானம்விடல் எதற்கு?

குடித்தவனைப் பாருங்கள்; குடிக்கத்தோன் றாது!
குடித்தவனைப் பெற்றெடுத்த தாயும்மனம் வெறுப்பாள்!
குடித்தவனை மனைவியுமே உளம்விரும்ப மாட்டாள்;
குடித்தவனை அப்பன்என மகன்கூற விரும்பான்!
குடித்தவனுக் குறவு - எனச் சுற்றத்தார் சொல்லார்!
குடித்தவனை ஊர்வெறுக்கும்; உலகமெலாம் தூற்றும்!
குடித்தவனுக் கவனையன்றி யாருந்துணை யில்லை;
குடிக்கையிலே மதுத்துணை;பின் அதற்கவன்தான் துணையே!

மதுக்குடிப்பால் ஒருவனது மானமெல்லாம் போகும்;
மதுக்குடிப்பால் குலப்பெருமை மண்ணாகிப் போகும்;
மதுக்குடிப்பால் கல்விநலம் சீர்கெட்டுப் போகும்;
மதுக்குடிப்பால் அறிவுணர்வும் அழிந்துமடந் தோன்றும்!
மதுக்குடிப்பால் பொருளழியும்! உடல்நலமும் தாழும்!
மற்றுநம்மின் முயற்சியெல்லாம் வாழ்க்கையெலாம் சாகும்!
மதுக் குடிப்பு மதிகுடிக்கும்! உயிர்குடிக்கும்! மற்றும்
மாண்டபின்னும் குடும்பத்தின் பெயர்குடிக்கும் அன்றோ?

(வேறு)

மதுவால் அழிவது **மானம்** என்றே
**த. தோ ழப்பன்** சொல்வார்!
மதுவால் அழிவது **குலமும்** என்றே
**பன்னீர்ச் செல்வன்** சொல்வார்!
மதுவால் அழிவது **கல்வி**யென் பதையே
**பொன்னியின் வளவன்** சொல்வார்!
மதுவால் அழிவதே **அறிவு**தான் என்றே
**அரங்க சாமி**யிங் குரைப்பார்!

(வேறு)

"பொருளழியும் மதுக்குடிப்பால் எனும் பொருளின் பாட்டைப்
புலவர் **இரா.பண் டரிநா தன்**வந்திங் கிசைப்பார்;
இருள்சூழும் **முயற்சி**யெலாம் மதுக்குடிப்பால் என்றே
இங்குவந்து **தமிழேந்தி** எடுத்தெடுத்துச் சொல்வார்!
மருளழிந்த மதிமிகுந்தீர்! பெருமைமிகக் கொண்டீர்!
மானத்தை, நற்குலத்தை, கல்வியறி வதனை,
பொருள்முயற்சி தம்மையெல்லாம் யாரிழக்கச் செய்வார்?
பொதுமைநலம் வேண்டியதைப் பொறுமையுடன் கேட்பீர்!

(வேறு)

முதற்கண்,
மதுக்குடிப்பால் அழிகின்ற மானந்தன்னை
மதிமிகுந்த தோழப்பன் எடுத்துச் சொல்வார்!
மதுக் குடிப்புப் போலில்லை தமிழ்க் குடிப்பு;
மதிக் குடிப்பு! தேன்குடிப்பு! அமிழ்தம் தோய்ந்த
புதுக்குடிப்பு! பாக்குடிப்பு! பருகு தற்குப்
புளிப்பில்லை; தனியினிப்பு தமிழினிப்பு!
எதுக் குடிப்புத் தவிர்த்தாலும் தமிழ்க் குடிப்பை
எந்தமிழர் மேற்கொள்க! உயிரி னிக்கும்!

(தோழப்பன் 'மானப்' பாட்டு)

அடுத்து,
புலவர்பொன்னி வளவனையே அறியார் இல்லார்;
பொலமிகுந்த புலமைநலம் வாய்ந்தார் அன்னார்,
சிலவர்போ லன்றியிவர் சிரிப்பை மட்டும்
சிந்துகின்ற புலவரல்லர்; கருத்தை வாரிக்
கலகலெனப் பாக்கள்விளைக் கின்ற உள்ளம்!
கனித்தமிழைப் பெற்றெடுக்கும் தாய்மைமிக்க
புலவரிவர்; அவர்பாட்டில் மதுவினாலே
கல்விநலம் போக்கடிக்கும் புதுமை காண்போம்!

(பொன்னி வளவனின் **'கல்விப்'** பாட்டு)

இனி,
அறிவழியும் மதுக்குடிப்பால் என்று சொல்வார்;
அ. அரங்க சாமியென்னும் புலவர் இங்கே!
பொறிவழியே அறிவியங்கும் உளமி யங்கும்;
பொன்னான வாழ்வியங்கும் உணர்வோம் நாமே!
நெறிவழியே போவதற்கு விரும்பு கின்றோம்;
நேர்வழியில் போகாமல் குறுக்கே போவோம்!
குறிவழியில் போவதெனின் குடிக்கா தீர்கள்!
குடும்பவழிச் செலமாட்டீர், கெட்டுப் போவீர்!

(அரங்சாமியின் **'அறிவுப்'** பாட்டு)

அடுத்து,
பண்டரி நாத னென்னும்
பாவலர் இனிமேல் இங்குக்,
கொண்டநற் பொருளைப் போக்கும்
குடித்தீமை எடுத்துச் சொல்வார்!
மண்டையில் உறைத்தால் உண்டு;
மனத்தினில் பதிந்தால் உண்டே!
அண்டையின் குப்பை மேட்டில்
அதைப்போட்டால், நாமும் குப்பை!

(பண்டரிநாதனின் **'பொருள்'** பாட்டு)

இனி,
பன்னீர்ச் செல்வப் பாவலர் வந்து
நன்னெறிக் குலத்தை நசுக்கும் மதுவினைப்
பற்றிப் பாடுவார்! பயன்பெறக் கேட்போம்.

(பன்னீர்ச் செல்வத்தின் **'குலப்'** பாட்டு)

(வேறு)

இனி,
கோவி . தமிழேந்தி கொண்ட முயற்சியெல்லாம்
தாவி யழியும் தகைகாண்பார் - கேவி
அழச்செய்யும்; ஆற்றழிக்கும் ஆன்றவறந் தீய்க்கும்;
விழச்செய்யும் கட்குடியால் வீண்!

(கோவி. தமிழேந்தியின் **'முயற்சிப்'** பாட்டு)

**முடிவுரை:**

பல்வகையாய்க் குடித்தீமை பாடிவைத்தார் முன்பு
பாவலர்கள் இன்றைக்கும் பாடிவிட்டார்; ஆனால்
வெல்வகையைக் கண்டோமா? நல்லனபெற் றோமா?
விறலழிக்கும் மதுக்குடிப்பை விட்டோமா வாழ்வில்?
தொல்பெருமை கட்டழிக்கும் கட்குடிதான் என்று
தொன்மைதிருக் குறள்சொன்ன போதும்அதைத் தள்ளி
நல்வழியைப் பின்பற்றத் தயங்குகின்றோம்; நாளும்
நலிகின்றோம்; இழிகின்றோம்; நம்பெருமை விட்டோம்!

எத்தனையோ குடிப்புவகை இந்நாட்டி லுண்டாம்!
இருமல்வரும் புகைக்குடிப்பு; குளம்பியும்தே நீரும்
பித்தனைப்போல் அலைக்கழிக்கச் செய்யும்பெருங் குடிப்பு!
பேரளவில் விற்பவைதாம் பிழிவுகள்!என் றாலும்
அத்தனைக்கும் பெருங்குடிப்பு மதுக்குடிப்பாம் என்றே
அனைவரும்நாம் அறிந்திருப்போம்; ஆனாலும் நம்மில்
எத்தனைப்பேர் அதனைப்பின் பற்றுகின்றோம் இங்கே?
இருந்தாலும் குடிக்கின்றோம்; குடிகெட்டுப் போனோம்!

பெரும்பாலும் நல்லவற்றைக் கைக்கொள்வ தில்லை;
பேசுகின்றோம்; எழுதுகின்றோம்; பின்பற்று வோமா?
இரும்பாலும் கல்லாலும் கடவுளென்று நாளும்
எதையெதையோ வணங்குகின்றோம்; நாளெல்லாம் என்ன
அரும்பாடு படுகின்றோம்; உழைக்கின்றோம், செல்வம்
ஆக்குகின்றோம், ஆனாலும் மதுக்குடிப்பால் அதனை
விரும்பாத தீயவழி வகைகளிலே தேய்த்து,
வெறும்வாழ்க்கை வாழுகின்றோம்! இதையெண்ணிப் பாரீர்!

கட்குடியைக் கடியாத மதத்தலைவர் இலரே!
கட்குடியை மறுக்காத அறநூலார் இலரே!
கட்குடியை நீக்காத கல்வியினார் இல்லை;
கட்குடியை மறுக்காத பெரியோர்கள் இல்லை;
கட்குடிதான் நிலவுகின்ற தீமைக்கெலாம் முதலாம்;
கட்குடிதான் குடிகெடுக்கும் - என்றறிவோம்; ஆனால்
கட்குடியை ஒழித்தோமா? சட்டத்தால் ஒழித்தோம்!
கள்ளவழிக் காய்ச்சுகின்றோம் குடிக்கின்றோம் நாளும்!

தீமையென்றே உணர்ந்திருந்தும் தீமைசெய் கின்றோம்;
திருட்டாகக் குடிக்கின்றோம்; குடும்பநலம் தேய்ப்போம்!

ஊமையரைக் குருடர்களைப் போல்இருட்டில் நாளும்
உண்டுவிட்டு வருகின்றோம்! உள்ளத்தை மாய்த்தோம்!
ஆமையராய்க் கைசோர்ந்து கால்சோர்ந்து போக
அடுப்படியில் காய்கின்ற மனைவிநலம் காவாத்
தீமையராய் - குழந்தைநலம் தீய்த்தகொடி யோராய்த் -
திருடர்களாய் வாழ்கின்றோம்! இதையெண்ணிப் பாரீர்!

எத்தனையோ வாழ்வுநலம் நாம்பெறுதல் வேண்டும்!
என்றென்றும் அடிமையராய்க் கோழையராய் வாழ்ந்தோம்!
எத்தனையோ நாட்டார்கள் - நமக்குப்பின் எழுந்தோர்;
என்னென்ன வகையாக முன்னேறி விட்டார்!
அத்தனைக்கும் கேளாத - காணாத - வாறாய்
அன்றிருந்த படியாக இன்றுமிருக் கின்றோம்!
எத்தனைப்பேர் வந்தார்கள்; சொன்னார்கள்; ஆனால்
ஏனென்று கேட்டோமா? பின்பற்றி னோமா?

ஆனாலும் நமையடிமை செய்திடவந் தார்கள்:
ஆரியர்கள்! அவர்நம்மை அடிமைகொண் டார்கள்!
'வானாக வந்தவர்கள் தேவர்கள்யாம்' . என்றார்
'வாயில்வந்த சமற்கிருதம் தேவமொழி' . என்றார்
'ஏனென்று' கேட்கவில்லை; 'எப்படி''எவ் வாறாம்?'
என்றெல்லாம் கேட்கவில்லை; நம்பிவிட்டோம் அவரை!
கூனாத தமிழ்ப்பெருமை கூனிற்றவர் பேச்சில்!
குடிகெட்டோம்; மதிகெட்டோம்; கொடிவழியும் கெட்டோம்!

நம்பெருமை அவர்கொண்டார்; நாமவரைப் பற்றி
நல்லதில்லாத் தீமைகள் உடன்தழுவிக் கொண்டோம்!
நம்பெருமை தனைவிட்டோம்; நலிந்திழிந்து போனோம்!
நற்பிறப்பு தனைத்தவிர்த்தோம்; நாற்பிறப்புக் கண்டோம்!
செம்பொருள்சேர் தமிழ்மொழியைப் பழித் திழித்துப் பேசிச்
செப்பமிலா வடமொழிக்குத் தலைகுனிந்து நின்றோம்!
அம்பொருளாம் பரம்பொருளுக் கவன்தலைமை யென்றான்!
ஆமென்றோம்; அவர்க்கடிமை ஆகிவிட்டோம், தாழ்ந்தோம்!

எத்தனையோ தெய்வங்கள்! எத்தனையோ சாதி!
எத்தனையோ மூடங்கள்! இழிவுகளும் தாழ்வும்!
அத்தனையும் நாம்எண்ணிப் பாராமல் நம்மை
அணுஅணுவாய் நாள்நாளாய் மிகத்தாழ்த்திக் கொண்டோம்;
இத்தனைக்கும் அடிப்படைதான் என்ன? உணர்ந் தீரா?

இழிவான மதுக்குடி-தான்! எண்ணிப்பா ருங்கள்!
செத்துவிடும் போதொருவன் எதையெண்ணிப் பார்ப்பான்?
சீரழிந்த பின்னொருவன் எதையெண்ணிச் செய்வான்?

கருத்தழிக்கும் கட்குடியை நாம்விட்டு விட்டால்,
கண்திறக்கும்; செவி திறக்கும்; மதிதிறக்கும்; அக்கால்
உருத்தெரியாப் போனதமிழ்ப் பெருமையெலாம் எண்ணி
ஓ! வென்றே அழச்செய்யும்; அதன்பின்னர் நின்று
திருத்தமுறச் செய்திடுவோம் தமிழ்க்குடியை; மொழியை!
தீர்த்துவிட்ட பழம்பெருமை போராடி மீட்போம்!
பெருத்தவினை நமக்குண்டு! தெருத்தெருவாய் ஊராய்ப்
பேசிடுவோம்; எழுதிடுவோம்; செய்திடுவோம் வாரீர்!

நமைத்தீய்த்த சாதிகளை நாம்தீயில் தீய்ப்போம்!
நமைத்தாழ்த்த மதக்கீழ்மை நாம்தோண்டிப் புதைப்போம்!
இமைத்தாழ்த்தம் செய்தாலும் இனியழிந்து போவோம்!
எந்தமிழ்த் தந்தையரே! தாய்மாரே! இளைஞீர்!
எமைத்தாழ்த்தும் தீமைகளை இனிப்பொறுக் கோம்! நம்மை
எவரடிக்கும் கீழ்ப்படுத்தோம்! நாம்உரிமை பெற்றோம்!
உமைத்தாழ்ந்து வேண்டுகின்றேன்! ஒன்றுபட்டே உய்வோம்!
ஒழியுங்கள்! கட்குடியை! உழையுங்கள் நன்றே!

# 11. பாவேந்தர் விழாப் பாட்டரங்கம்

(தி.பி. 2008 விடை 2 (15.5.77) அன்று பகுத்தறிவாளர்கள் சார்பில் வேலூர் நகர மன்ற அரங்கில் நடைபெற்ற பாவேந்தர் பிறந்த நாள் விழாப் பாட்டரங்கத்தின் தலைமையுரை)

**முன்னுரை:**

பேரன்பு மிக்கவரே! பெரியோரே! எம்மைப்
பெற்றதமிழ்த் தாய்க்குலமே! இளைஞர்களே! வணக்கம்
சேரனொடு சோழனும்நற் பாண்டியனும் சேர்த்துச்
செந்தமிழை வளர்த்தகதை பழங்கதையாய்ப் போக,
வீரமிலா தன்புமிலா தார்வமும்இல் லாது
வீண்பகட்டுக் காரர்களாய் நாம்வாழும் போதில்
**'யாரவன்காண் எந்தமிழைப் பழித்தவன்'**என் றொருவன்
இடிக்குரலில் வினாவெழுப்பி எழுகளிறாய் வந்தான்!

இராவணனைச் சாய்த்தஇனம் - எந்தமிழ்மா வீரன்
இரணியனை ஒழித்தகுலம் - ஏற்றமிகு நூலால்
பராவியநம் முன்னோர்கள் வளர்த்திமைபோல் காத்த
பசுந்தமிழைத் தாழ்த்தியதோர் பழிவடவக் கூட்டம்
விராவியநம் பெருமை யெலாம் அடிவெட்டி வீழ்த்த
வீணர்குலம் - நம்நாட்டை வளைத்தழித்த பின்னைத்
திராவிடர்நம் திருநாட்டை மீட்பதற்கிங் கொருவன்
தெள்ளுதமிழ்ப் பாப்பாடி உயிர்த்தெழுந்து வந்தான்!

இன்னலிலே நாம்துயின்ற இழிவுநிலை கண்டே
**'எழுந்திடுக தமிழினமே தமிழினமே'** என்று
மின்னலிலே உயிர்கிளர்ந்து மேனியெல்லாம் பாயும்
மெட்டெடுத்தே உளம்புதுக்கும் உயிர்ப்பாட்டைப்பாடிக்
கன்னலிலே தமிழ்பிசைந்து காதினிக்கக் கூவிக்
கருத்தூட்டி உணர்வூட்டித் தமிழ்மறமும் ஊட்டித்
தென்னவரின் சூம்பிவிட்ட தோள்களிலே வீரம்
தெறித்தொளிரச் செய்யவொரு தீம்புலவன் வந்தான்!

பாழெடுத்த சொற்களிலே பைந்தமிழைக் கொல்லும்
பச்சைவெறிப் பாடல்களைப் பாடும்நரிக் கூட்டம்
காழெடுத்த ஓசையிலே காதறுந்து நின்ற
காலத்தில் - நேரத்தில் - ஈங்கொருவன் தோன்றிச்

சீழெடுத்த வரலாற்றைப் புதுப்பிக்க எண்ணிச்
செந்தமிழிற் சொல்லெடுத்துத் தேனினிமை சேர்த்தே
யாழெடுத்துப் பாட்டிசைத்தான் அவன்புகழைப் பாட
யாப்பொன்று போதாது; பாத்தோப்பே வேண்டும்!

பூவேந்தி மணியேந்திப் பொலிவேந்தி இளமை
பூரிக்கும் மார்பேந்திக் கிளிமொழியும் தோற்கும்
நாவேந்தி இளஎகின நடையேந்திக் கலையின்
நலனேந்தி நச்சரவம் பெண்களின்பேர் ஏந்தி
மூவேந்தைச் சாய்த்(து)அவர்பால் ஆரியத்தை ஊன்றி
முன்னிருந்த தமிழ்க்குலத்தின் சீர்சாய்த்த பின்னைப்
பாவேந்தாய் அக்குலத்தைக் காத்திடற்கு வந்தான்!
**'பாரதிதா சன்'** அவன்பேர்! பாவுலக வேந்தன்!

ஆரியர்பால் ஆங்கிலர்பால் வேற்றினத்தார் பலர்பால்
அழகுதமிழ் சிக்கியதன் சொல்திரிந்து பொருளும்
பூரியர்தம் வடமொழியால் உட்சிதைந்து பலவாய்ப்
புல்லுருவம் கொண்டுநமின் உள்ளுணர்வும் போக்கி
நேரியலா மறைமுகமாய் இனமழியும் போதில்,
நெட்டுயிர்த்துத் தமிழரெலாம் தத்தளிக்கும் நாளில்
சீரியசெம் பாவிசைத்தே இனம்புதுக்க வந்தான்!
**செந்தமிழ்பா ரதிதாசப் பாவேந்தன்** என்பான்

**'தமிழியக்கம்'** தொடங்கிவைத்தான்! செயல்முறைகள் தந்தான்!
தப்பறைகள் கிழித்தெறிந்தான்; தமிழ்முரசும் ஒச்சி!
அமிழ்தூற்றாய்ப் பாப்பெருக்கி **'அழகின்சிரிப்'** பீந்தான்!
அழியாநல் இலக்கியமாம் **'குடும்பவிளக்'** கென்னும்
கமழ்தரும்இல் லறநூலைக் கற்கண்டில் தோய்த்துக்
கசிகின்ற தீந்தமிழால் நாம்சுவைக்கத் தந்தான்!
உமிழ்கின்ற கொச்சைநடைப் பாவலர்தம் வாய்மேல்
உலக்கையடி தந்துமனம் கலக்குறவே வாழ்ந்தான்!

**'பாண்டியனின் பரிசி'**ந்தான்! **'கழைக்கூத்தி காதல்'**
'பாத்தொகுப்பு', 'நாடகங்கள்', எதிர்பாரா முத்தம்'
மூண்டதமிழ் கொழித்துவரும் **'இசையமுத'** நூல்கள்!
மொய்க்கும் **'இளை ஞர்விரும்பும் 'இலக்கியங்கள்', 'சேர
தாண்டவமும்'** 'நற்காதல் நினைவுகளோ' 'டமைதி'
**'நல்லதீர்ப்'** பெனும்நூலோ டின்**'குறிஞ்சித் திட்டு'**
கீண்டெழுந்த **'சௌமியன்' 'கண் ணகிபுரட்சிக் காப்பியம்'**
கெழு **'மணிமே கலைவெண்பா'** எனும்பலநூல் தந்தான்!

தாயின்மேல் ஆணையிட்டான்! தந்தையின்மேல் ஆணை.
தமிழகமேல் ஆணையிட்டான் செந்தமிழைக் காக்க!
தூயதமிழ் வளர்த்திடுவீர் தோழரீரென் றிசைத்தான்!
தொல்தமிழர் நாடியெல்லாம் நரம்பெல்லாம் மீட்டி
ஏயநறுந் தமிழுணர்வை ஓடவிட்டான்! தமிழை
**'இகழ்ந்தவனைத் தாய்தடுத்தாலும் விடே'**னென் றார்த்தான்!
நாயினுங்கீ ழாய்த்தமிழர் நலிவதுகண் டுள்ளம்
நைந்துருகி **'உடல்தருவேன் உயிர்தருவேன்'** என்றான்!

வெண்ணிலவும் வானும்போல் வீரனும்வா ளும்போல்
விரிவண்ணப் பூவும்அதன் மணமும்போல் யாழும்
பண்ணிவரும் இசையும்போல், கண்ணும்ஒளி யும்போல்
பைந்தமிழும் தானும்எனப் பண்ணிசைத்துப் பாடி
எண்ணிலவர் உணர்வுளத்தில் செந்தமிழ்த்தீ மூட்டி
எரிகின்ற நெஞ்சின்மேல் - செந்தமிழ்மேல் ஆணை
பண்ணியினப் புரட்சிக்கு நெய்யூற்றி விட்டான்!
பாவேந்தன் **பாரதிதா சன்**புரட்சி வேந்தன்!

மூவேந்தர் மனத்தொட்டில் துயின்றெழுந்தே அன்னார்
முடிமீது காலுதைத்து மடியில்விளை யாடி
நாவேந்தும் முக்கழகப் புலவர்கைத் தவழ்ந்து
நம்காலில் நசுக்குண்டு குற்றுயிராய்க் கிடந்தும்
சாவேந்தா நந்தமிழ்த்தாய் தனைப்பாடிப் பாடிச்
சலிப்படையாப் புலவன்பா **ரதிதாசன்** என்னும்
பாவேந்தன் திருவுளத்தின் கருத்துநலன் யாவும்
பாவலர்க்கோ உணர்வூற்று! கருத்துமழை! செந்தீ!

இயற்கையினில் அவன்தொட்ட இடமெல்லாம் சிரிக்கும்!
இனப்பேச்சில் அவன்மூச்சின் துடிதுடிப்பும் கேட்கும்!
மயற்கையிலாச் சீர்த்திருத்தம் அவன்பாட்டில் மணக்கும்!
மருண்டிருண்ட நாட்டில்அவன் பாவிளக்கை ஏற்றும்!
முயற்கையைத் தீண்டுதற்குள் முகம்வெயர்த்துக் கொட்டும்
மோழையனின் கோழைமனம் அவன்பாட்டைக் கேட்டால்
பெயற்கைமழை மேகமெனும் பெருங்களிற்றின் தலையைப்
பெயர்த்தெடுக்கும் எண்ணம்வரும் வீரம்வரும் என்பேன்!
அவன்பாட்டில் தமிழ்பொழிந்த அமிழ்தமழை போல
அன்றிருந்திந் நாள்வரைக்கும் அணியணியாய் நிற்கும்
எவன்பாட்டில் தமிழ்பொழிய நாம்கண்டோம்? கேட்டோம்
இதுவரைக்கும் இருந்ததில்லை; இனிமேலும் இல்லை!

சிவன்முதலாய் வீற்றிருந்த கழகமெனச் சொன்னார்!
செந்தமிழ்மேல் பாவேந்தன் உயிர்கிடந்து தூங்கி
உவந்துநிறை வுற்றதுபோல் ஒருபுலவர் வாழ்வும்
ஓ! ஓ! ஓ! எனவியந்து போற்றும்படி இல்லை!

**'கரும்புதந்த தீஞ்சாறே, கனிதருவின் சுளையே**
**கவின்முல்லை வெண்ணகையே'** எனும்பாட்டில் தமிழை
விரும்பியவன் **'அன்பே,அன் பே!யன்பே!'** என்று
விளித்திடுங்கால், உயிருடலம் அனைத்துந்தமி ழாக
அரும்பிமலர்ந் துலகமெலாம் அளாவியிருப் பதுபோல்
அரியவுணர் வொன்றுநம்மின் உள்ளத்தில் தோன்றும்!
பெரும்புதுமை இதுவன்றோ? எப்புலவன் தமிழைப்
பேச்சுக்கும் மூச்சுக்கும் 'அன்பே'என் றழைத்தான்?

இவ்வாறாய்ப் பாவேந்தன் கருத்துநலன் எல்லாம்
எடுத்தெடுத்து நீங்களெல்லாம் சுவைக்கும்படி ஈவர்,
இவ்வாறு தமிழ்ப் புலவர் - இன்றமிழ்ப்பா வாணர்;
இருந்துநலங் கேட்டிடவும் யான்வேண்டு கின்றேன்!
ஒவ்வாத பாடல்பல கேட்டிருப்பீர்! உங்கள்
உள்ளமெல்லாம் நாறடிக்கும் அப்புலவர் கூட்டம்!
அவ்வாறாய் இப்புலவோர் பாடஅறி யார்கள்!
அருந்தமிழ்கே ஒளிசேர்க்கும் புலவரிவர் காண்பீர்!

**பின்னுரை:**

பாவேந்தர் கருத்துநலன் பாப்புலவர் சொன்னார்!
பழகுதமிழ்ச் சொல்லருமை கேட்டிருந்தோம் நாமும்!
பூவேந்தும் நறுந்தேனைச் சுவைத்திடுந்தே னீக்கள்
போலன்றோ நாம்சுவைத்தோம்! புலவரெலாம் வாழ்க!'
சாவேந்திச் சென்றதெனப் பாவேந்தைச் சொன்னார்!
சரியில்லை என்போம்நாம்! செந்தமிழ்த்தீம் புலவர்
நாவேந்தி வாழ்கின்றார் பாவேந்தர்! உண்மை!
நாடெல்லாம் வீடெல்லாம் அவர் வாழ்கின் றாரே!

செந்தமிழ்க்கே அவர்பிறந்தார்; செந்தமிழ்க்கே வாழ்ந்தார்;
செந்தமிழ்க்கே மூச்சுயிர்த்தார், செந்தமிழ்க்கே பேசிச்
செந்தமிழ்க்கே அவருழைத்தார்; செந்தமிழாய் நின்றார்;
செந்தமிழ்க்கே ஒளியேற்றிச் செந்தமிழ்க்கே மாய்ந்தார்!
செந்தமிழ்க்கே பாவேந்தால் செழும்பெருமை அன்றோ!

செந்தமிழ்க்கே நாமிருப்போம் என்னில்அவர் கொடையே!
செந்தமிழ்க்கே வாழ்ந்தவரும் செத்தொழிவ துண்டோ?
செந்தமிழும் வாழும்வரை அவர்தமிழும் வாழும்!

## 1. இயற்கை

இருக்கின்ற பாவலர்கள் இருகோடி என்றால்
இயற்கைப்பா வலர்அவருள் இருபதுபேர் இருப்பர்!
கருக்குழியில் ஒளியேறி உணர்வேறித் திருவில்
கற்பனையாம் பொலிவேறிப் பாட்டுணர்வும் ஏறி,
உருக்கொண்டு தாய்மடிமேல் வீழ்ந்தபின்னே அவளின்
ஒளிமார்புக் காம்புவழித் தமிழேறிப் பாய்ந்தால்,
தெருக்கடையில் இறங்குகையில் பாட்டுவரும் தெளிவீர்!
தெம்மாங்கு செந்நாவில் எழுந்துவிளை யாடும்!

அன்னவரைத் தாம்இயற்கைப் பாவலர்கள் என்போம்!
அப்படித்தான் 'கனகசுப்பு ரத்தினம்' பாவேந்தன்!
இன்னவரைப் போல் இயற்கை இயற்றிவைத்த பேருள்
இவரவரின் ஆசானுக் காசான்என் றுரைப்போம்!
முன்னவரைப் பாரதியைக் குறைசொல்ல வில்லை!
மூச்சிலிவர் தமிழுயிர்த்தால் பேச்சிலவர் என்போம்!
என்னபடி பார்த்தாலும் பாரதிபாட் டுக்கே
ஏழுபடி மேலிருக்கும் பாவேந்தன் பாட்டு!

நடுநிலையில் லாமலிதை நாம்சொல்ல வில்லை!
நாமவரின் வழிவந்த நன்றியுரை இல்லை!
கெடுநிலையில் பார்ப்பனர்கள் பாவேந்தர் பாட்டைக்
கீழ்வைத்துப் பேசுகின்றார்; நாமவர்க்குச் சொல்வோம்!
தொடுநிலையில் பாட்டுணர்வில் தோய்கின்ற நிலையில்
தூய்தமிழை மனங்கொண்டு பாடுகின்ற நிலையில்
நெடுநிலையில் மலைப்புனலாய்ப் பொழிந்திருக்கும் நிலையில்
நிலைத்திருக்கும் நிலையினிலே பாவேந்தன் வெல்வான்!

தன்விளக்கம் பாடுகின்றான் பாவேந்தன் இங்கே!
தமிழ்ப்புலவன் செம்மாப்பைக் கேளுங்களிப் பாட்டில்!

> 'சீர்த்தியால் அறத்தால் செழுமையால் வையப்
> போர்த்திறத்தால் இயற்கை புனைந்தஓர் உயிர்நான்!'

இன்விளக்கம்! இதுவாகும் 'இயற்கைதந்த உயிர்நான்'
என்றுரைக்க வில்லையவன்; புனைந்தஉயிர் என்றான்!

என்விளக்கம்! உணர்ந்திரா? இருக்கும் உயிர் யாவும்
இயற்கைத்தாய் செய்தெடுத்து வீசிவிட்ட உயிராம்!
என்வியப்பு! பாவேந்தன் உயிரைமட்டும் நன்றாய்
எழில்சீர்த்தி அறம்செழுமை வீரத்தொடு புனைந்தாள்!

பாவேந்தன் சொல்லுகின்றான்; யாரிவன்போல் சொன்னார்!
பாருங்கள் மேன்மேலும் அவன்கையின் வண்ணம்!
நாவேந்திப் பிறர்சொன்னால் உணர்வேந்திச் சொல்வான்!
நல்லதமிழ் பிறர்சொன்னால் உயிர்த்தமிழைச் சொல்வான்!
காவேந்திக் கொண்டிருக்கும் பூவேந்தித் தேனைக்
களிமதர்ப்பக் குடித்திசைக்கும் தேனீப்போல் தமிழன்
ஈவேந்தித் தருகின்றான் செந்தமிழாய்! பாவாய்!
இயற்கையினை இவனைப்போல் படம்பிடித்த தெவரே?

'கடல்நீரும் நீலவானும் கைகோக்கும்' என்றே
கற்பனைக்கும் கற்பனையாய் யார்சொன்னார்! கேட்பீர்:

**'கடல்நீரும் நீல வானும்**
**கைகோக்கும்! அதற்கி தற்கும்**
**இடையிலே கிடக்கும் வெள்ளம்!**
**எழில்வீணை! அவ்வீ ணைமேல்**
**அடிக்கின்ற காற்றோ வீணை**
**நரம்பினை அசைத்தின் பத்தை**
**வடிக்கின்ற புலவன்! தம்பி**
**வன்கடல் பண்பாடல் கேள்!**

உடலிலவன் நறுந்தென்றல் உணர்வுபெற்றுப் பேசும்
ஒருபாட்டைக் காட்டுகிறேன் கேளுங்கள் நன்றாய்!

**"களிச்சிறு தும்பி பெற்ற**
**கண்ணாடிச் சிறகில் மின்னித்**
**துளிச்சிறு மலர்இ தழ்மேல்**
**கூத்தாடித் துளிதேன் சிந்தி**
**வெளிச்சிறு பிள்ளை யாடும்**
**பந்தோடு விளையா டிப்போய்க்**
**கிளிச்சிற காடை பற்றிக்**
**கிழிக்கின்றாய் தென்ற லே,நீ!"**

அடல்மிகுந்த கடுங்காட்டை அவன்காட்டு கின்றான்!
ஆனைஒன்றே இளமரத்தை முறித்திடுமாம் - பாரீர்!

**"ஆனைஒன் றிளம ரத்தை**
**முறித்திடும்; ஆந்தைக் கூட்டைப்**
**பூனைஒன் றணுகும்; அங்கே**

**புலிஒன்று தோன்றும்; பாம்பின்**
**பானைவாய் திறக்கக் கண்டு**
**யாவுமே பறக்கும்! கன்றோ**
**மானைக்கா ணாது நிற்கும்!**
**அதைஒரு நரிபோய் மாய்க்கும்!''**

தொடவில்லை; தொட்டாலே விடவில்லை என்பார்;
தொடாததெதும் பாவேந்த னிடமில்லை என்பேன்!

கூரையின்மேல் குரங்கூசல் காட்டுகின்றான் காணீர்!
குறத்தியர்கள் ஒளியழகைப் பேசுவதைக் கேளீர்!!

**“செருந்தி, ஆச்சா, இலந்தை**
**தேக்கிந்து கொன்றை யெல்லாம்**
**பெருங்காட்டின் கூரை! அந்தப்**
**பெருங்கூரை மேலே நீண்ட**
**ஒருமூங்கில்; இருகு ரங்கு**
**கண்டேன் பொன்னூசல் ஆடல்!''**

**‘குறத்தியர் கவண்எ டுத்துக்**
**குறிபார்க்கும் விழி,நீ லப்பூ!**
**எறியும்கை செங்காந் தட்பூ**
**உடுக்கைதான் எழில் இடுப்பே!’**

நீரையவன் காட்டுகின்றான்! அந்நீரில் மேயும்
நெளிவை அவன் காட்டுகின்றான்! அருவியதும் பாரீர்!

**‘பெருஞ்சிங்கம் அறைய வீழும்**
**யானைபோல் பெருகிப் பாய்ந்து,**
**வரும் வெள்ளம்!’**

**“இருகரை ததும்பும் வெள்ள**
**நெளிவினில் எறியும் தங்கச்**
**சரிவுகள்! நுரையோ முத்துத்**
**தடுக்குகள்! சுழல்மீன் கொத்தி**
**மரகத வீச்சு! நீரில்**
**மிதக்கின்ற மரங்க ளின்மேல்**
**ஒருநாரை வெண்டா மம்பூ!''**

**அருவிகள் வயிரத் தொங்கல்!**
**அடர்கொடி பச்சைப் பட்டே!**
**குருவிகள் தங்கக் கட்டி!**
**குளிர்மலர்; மணியின் குப்பை!''**

நீரினுள்ளே கதிர்நுழைந்து நெளிவதைச்சொல் கின்றான்!
நீங்களுந்தாம் பார்த்திருப்பீர்! நினைவுவந்த துண்டா?

**'பின்னிய ஆடை காற்றில்**
**பெயர்ந்தாடி அசைவ தைப்போல்**
**நன்னீரில் கதிர்க லந்து**
**நளிர்கடல் நெளிதல் கண்டேன்!**

வேரினுள்ளே தமிழ்பாய்ந்தால், தமிழெருவைப் போட்டால்
விளைவெல்லாம் தமிழ்ப்பாதான்! வேறென்ன தோன்றும்?

தோற்றுகதிர் கடல்மிசையில் எழுந்ததுவும் தங்கத்
தூறல்வந்து விழுந்ததென்பான்! ஒளிவெளியாம் என்பான்!
**'மேற்றிசையில் அனற்காட்டில் செம்பரிதி வீழ்ந்து**
**வெந்துநீ றாகாமல் இருத்தல்வியப்'** பென்பான்!
ஏற்றுகின்ற உவமையெல்லாம் இயற்கையினைக் காண்பான்!
எடுத்துக்காட் டங்கொன்றும் இங்கொன்று மாக!
போற்றுங்கள் கேட்டுவிட்டுச் சிறந்திருந்தால்! அன்றேல்
புலவன்எவன், மற்றவனைக் காட்டிவிட்டுப் போங்கள்!

**"உரித்தநற் றாழம் பூவின்**
**நறும்பொடி உதிர்ந்த தைப்போல், பெருமணல்'**
**"முதலைகள் கிடப்பதைப் போல்**
**சின்னதும் பெரிதுமான வெடிப்புகள்!"**
**'கீரியின் உடல்வண் ணம்போல்**
**மணல் மெத்தை'**
**'காலுக்குப் புன்னையிலை போலும் செருப்பு'**
**'வெண்தா மரையில் விளையாடும் வண்டுபோல்**
**கண்தான் பெயர,நீ என்ன கருதுகின்றாய்?"** தாலாட்டு
**'புன்னை மலர்க்காம்பு போன்றதோர் சிற்றடிப் புறா!**
**கிளிக் கழுத்தின் பொன்வரிபோல் அரும்பும் மீசை!'**
**'பொரியலோ பூனைக்கண் போல் பொலிந்திடும்'**
**'கறந்தபால் நிறந்திகழ் கவின்உடை பூண்ட**
**மருத்து வச்சி'**
**'காட்டுமுயற் காதிலையும் களியானைத் துதிக்கை**
**அடிமரமும் வானில்**
**நீட்டுகிளை கொய்யா?'**
**'ஓடுபிளந்தசெம் மாதுளைபோல் உதடு'**
**'காதோரத்து வண்டுவிழி'**
**'ஓடை மலர்முகம்'**
**'காடு சிலிர்க்கும்படி மேலாடு முன்தானை'**
(முழுப்பாட்டு வேண்டுமா?)

"ஓடு பிறந்தசெம் மாதுளை போல் உதட்டில்
உள்ளம் விளைத்தநகை மின்னவும் - கா
தோரத்து வண்டுவிழி ஓடை மலர்முகத்தில்
ஓடிஎன் உளங்கவர்ந்து தின்னவும்
காடு சிலிர்க்கும்படி மேலாடு முன்தானை
காற்றோடு காற்றாகப் பின்னவும்
காதற் கரும்பொன்று காலிற் சிலம்பணிந்து
கடிதில் இடைதுவள ஆடியதோ என்னவும்
ஆடற்கலைக் கழகு தேடப் பிறந்தவள்
ஆடாத பொற்பாவை ஆடவந்தாள்!"

"எளிய நண்டின் கட்சிறிய களாக்கனி"

"குத்துண்ட கண்ணாடி கொண்டபல வீறல்கள்போல்'
துத்திக்காய் போலச் சுடர்முகச் சுருக்கம்'

"மீன்வலை சேந்தும் கயிற்றை வேய்ந்த வளையம்போல்
(தேன்குழல்

"தாழையின் முள்போல் தகுசீ ரகச்சம்பா!"

"விழுந்துபடும் செங்கதிரை வேல்துளைத்த தைப்போல்
உழுந்து வடை"

"ஆனை அடிபோல் அதிரசம்"

"கொட்டித் தும்பைப்பூக் குவித்ததுபோல்...பிட்டு"

"எருமைமுது கென்புபோல் பண்ணிய
தங்கமணிக் கோவை"

"முல்லையரும்பாம் குருவியின் மூக்கு!
மல்லி பிளந்தது போன்றததன் கண்!"

"கூனன் புகுந்தாலும் குனிந்து புகுங் குடிசை"

இப்படியாய் உவமைநலம் எடுத்தெடுத்துச் சொல்வான்!
எல்லாமும் இயற்கையிலே விளைந்துவந்த ஆக்கம்!
தப்படியாய் அடித்துவிட்டுத் தம்மடிக்கே ஒப்பத்
தமுக்கடிக்கக் காசுகொடுத் தோரிருவர் வைக்கும்,
செப்படியாட் டப்புலவன் பாவேந்தன் அல்லன்!
சீர்த்தி, அறம், செழுமையொடும் இயற்கைபுனை மேலோன்!
மப்படிக்கே மயிலாடல் உண்மையதாம் என்றால்,
மனங்களிக்கப் பாவேந்தன் பாடியதும் உண்மை!
ஒன்றுரைப்பேன் நீங்களதை உணர்ந்துகொளல் வேண்டும்!
உலகமெலாம் அலைந்தாலும் இப்புதுமை காணீர்!
துன்றிருளும் தூங்குகின்ற இடங்காட்டு வீரா?

தோதுபல ஆய்ந்தாலும் தோற்றுத்தான் போவீர்!
இன்றன்றாம்; இனியன்றாம்; எந்நாளும் இதுபோல்
எப்புலவ னும்காட்டான் இயற்கைசெயும் கூத்தை!
ஒன்றன்மேல் ஒன்றடுக்குந் தாமைரைப்பூ விதழ்க்குள்
உறங்குகின்ற இருளை எவன் காட்டிவிட்டுப் போனான்?

பாடலினைக் கேளுங்கள்; '**அடுக்கிதழ்த்தா மரைப்பூ**
**இதழ்தோறும் அடிப்புறத்தில் படுத்திருப்பாய் நீதான்**''
ஓடவிழ்க்க வெளிப்படுமோர் ஒளிமுத்தம் போல
இயற்கையின துண்மையெலாம் கண்டுகண்டே உரைத்தான்!
தேடரிதாம் சொற்களெலாம் பாவேந்தன் உள்ளம்
தேடிவந்து குடிபுகுந்து தேவைவரும் போதில்
மூடரிதாம் வாயில்வழி தூவல்வழி யாக
மூண்டுவரும் பாட்டாகப் பாரதிதா சற்கே!

## 2. இனம்

இயற்கையினை ஒருவாறாய் ஈங்கெடுத்துச் சொன்னேன்!
இனம்பற்றிக் கூறுமவன் கருத்துநலன் கேட்பீர்!
செயற்கையிலாப் புலவனவன்! செந்தமிழ்த்தேன் ஊற்று!
செப்புகின்றான் கேளுங்கள்! எண்ணுங்கள் இதனை!

**''தமிழர்நாம் என்றால் நம்பால்**
**தமிழ்உண்டா? ஒழுக்கம் உண்டா?**
**அமைவுறச் சிறிது முண்டா**
**அன்றைய மறத்த னந்தான்?**
**கமழ்ந்திடல் உண்டா கல்வி?**
**கலைநலம் உண்டா? நெல்லின்**
**உமிமுனை அளவி லேனும்**
**ஒற்றுமை உண்டா?''** - என்ன?

மயற்கையுள்ள தமிழினத்தின் முன்வந்து நின்று
மற்றொன்றைக் கேட்கின்றான்! சொல்லுங்கள் பார்ப்போம்.

**''வெள்ளையன் ஆட்சி தொலைத்தோம்! - இனி**
**வேற்றுமை யுற்றுக் கிடந்தால்**
**எள்ளி நகைபுரி யாரோ? - நமை**
**இப்பெரு வையத்தில் உள்ளோர்?**
**கொள்கை திருத்திடு வீரே!''**

முயற்கையை யானைக்கை போல்மிகவே நீட்ட
முயல்கின்றோம் முயல்கின்றோம்? தோற்றுப்போ கின்றோம்.

அதைக்கண்டு வருந்துகின்றான் பாவேந்தன் இங்கே!
அப்பாட்டில் அவன் ஏக்கம் கனவெல்லாம் தோன்றும்!

**"சரிநிகர் மக்கள் என்னும் அரியதோர்**
**அமைதிக் குரலினை ஆர்தல் எந்நாள்?**
**சமயம் சாதி தவிர்வ தெந்நாள்?"**

**"வெள்ளம்போல் தமிழர் கூட்டம்**
**வீரங்கொள் கூட்டம்; அன்னார்**
**உள்ளத்தால் ஒருவரே மற்**
**றுடலினால் பலராய்க் காண்பார்!**
**கள்ளத்தால் நெருங்கொ ணாதே**
**எனவையம் கலங்கக் கண்டு**
**துள்ளுநாள் எந்நாள்? உள்ளம்**
**சொக்கும்நாள் எந்த நாளோ?"**

இதைக்கண்டு கொண்டோம் நாம்? என்செய்தோம்? இங்கே
ஏற்றத்தாழ் வொழிந்ததுவா? சாதிகள் மாய்ந் தனவா?
கதைக்கின்றோம் பாடுகின்றோம்! பாவேந்தன் சொன்ன
கருத்துக்கும் மதிப்பில்லை! விழாவெடுப்போம்! அதனால்
புதைக்கின்றோம் அவன்பெருமை! புகழ்ச்சிவெறுஞ் சொல்லா?
புரட்சிசொன்னான்! மருட்சியுற்றோம்! இருட்காட்டில் வாழ்வோம்!

**'இருட்டறையில் உள்ளதடா உலகமெலாம் சாதி**
**இருக்கின்ற தென்பானும் இருக்கின்றான்'** என்றான்!
திருட்டுக்கூட் டம்தமிழர் கூட்டமென்று சொல்வேன்.
தில்லுமல்லுக் கூட்டந்தான்; இல்லையென்று சொன்னால்
குருட்டடியாய்ப் பாவேந்தன்பாட்டையெல்லாம் கூட்டங்
கூட்டந்தோ றும்சொல்லிப் பெரும்புலவர் போல
மருட்டுவமா மக்களைநாம்? சொன்னவற்றுள் ஒன்றை
மதிப்பிற்கே னும்செய்து பெருமைபெற் றோமா?

இனம்பாடி இனம்பாடி இனம்விழிக்கும் என்றே
எதிர்பார்த்தான் எதிர்பார்த்தான்! இனும்விடியவில்லை!
மனம்போன படிவாழ்ந்து மாக்களினும் கேடாய்
மண்ணுலகில் தமிழினந்தான் பின்னடைந்த தென்று
பெனம்பெரிய பெருமையினை நாம்வாங்கிக் கொண்டோம்!
பேசுகின்றோம்! வீசுகின்றோம்! பெருத்தநடை போட்டோம்!
இனும்திருந்த வில்லையெனில் என்றுந்திருந் தோம்நாம்!
**'இன்னலிலே துயில்கின்றோம்'** பாவேந்தன் சொல்வான்!

**"இன்னலிலே தமிழ் நாட்டினிலே உள்ள**
**என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்!**
**அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கி,என்**
**ஆவியில் வந்து கலந்ததுவே!"**

இன்பத்தில் தூங்கிடலாம்! '**இன்னல்களுக் கிடையில்**
**என்தமிழ் மக்கள்துயில் கின்றனரே**' என்றான்!
துன்பத்தில் தூங்குபவன் நோயாளி, பேதை!
'**துயின்றிருந்தார் என்தமிழ் மக்க**'ளெனும் கூற்றில்
என்புதுமை காட்டுகின்றான்? தெரிந்தீரா? மற்ற
இனமக்கள் எல்லாரும் விழித்திருக்கின் றாராம்!
'**என்மக்கள் மட்டும்துயில் கின்றார்**'என் கின்றான்!
இதனாலே கழிவிரக்கம் கொள்கின்றான் நம்மேல்!

நம்மினத்தை அன்னவன்போல் விழிக்கவைக்கும் முயற்சி
நாளைவரை எப்புலவன் தமிழகத்தில் செய்தான்!
வெம்மனத்தைக் கொண்டுள்ளோம்! வீண்வாழ்க்கை வாழ்வோம்!
விடியாத மூஞ்சிகளாய்த் தூங்குகின்றோம் இன்னும்!
அம்மணமாய் நம்முன்னர் அலைந்தவர்கள் எல்லாம்
அழகழகாய் உடையுடுத்தே உலகஉலாப் போந்தார்!
கும்மிருளில் குருட்டாட்டம் போடுகின்றோம்! ஐயோ!
'கும்பிக்குச் சோறு'என்றால் தாயினைவிற் கின்றோம்!

### 3. சீர்திருத்தம்

அடுத்தபடி பாவேந்தன் சீர்திருத்தம் சொல்வான்!
அத்தனையும் நாம் கேட்டோம்; கேட்டுநடந் தோமா?
உடுத்தபடி உண்டபடி உறங்கியுறங் கியராய்
உயிர்த்துயிர்த்துச் சாகின்றோம்! உருப்படியாய் வாழோம்!
மடுத்திடுவீர் பெண்கள்நலம் பேசுகின்றான்; நாமும்
மாரடித்துப் படிக்கின்றோம்; நொண்டிநொண்டி நடப்போம்!
கொடுத்தாலும் வாங்குகிலோம்; கொண்டாலும் காக்கோம்!
குலம்பிழைக்கப் பெண்களைநாம் வாழவைப்போம், கேட்பீர்!

**'இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்**
**இலேசுவழி ஒன்றுண்டு; பெண்களைஆ டவர்கள்**
**எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்!**
**தாய்மையினை இழித்துரைக்கும் நூலும்ஒரு நூலா?**
**செவ்வையுற மகளிர்க்குக் கல்விநலம் தேடல்**
**செயற்பால தாயினுமே முதன்மைஎனக் கொண்டே**

**அவ்வகையே செயல்வேண்டும்! அறிவுமனை யாளால்**
**அமைதியுல குண்டாகும்!' . பாவேந்தன் சொல்வான்!**

**'பெண்டாட்டி என்று பெயரடைந்த நாள்முதலே**
**ஒண்டொடிக்கும் சொத்தில் ஒருபாதி உண்டுரிமை!**
**தன்மனைவி செத்தால்தான் வேறுமணம் தான் செயலாம்!**
**இன்னல் மனைவிக் கிழைத்தால் கொலைக்குற்றம்'**

**'ஆணுயர் வென்பதும் பெண்ணுயர் வென்பதும்**
**நீணிலத் தெங்கணும் இல்லை'**

தீண்டாமை பற்றியெல்லாம் மிகத்தெளிவாய்ச் சொன்னான்!
திராவிடர்தம் இனத்தலைவர் நம்பெரியார் சொன்ன
வேண்டாமைப் பட்டியல்கள் அனைத்தையும் பாட்டாய்
ஆரியர்கள் வெலவெலக்க ஆக்கியவன் தந்தான்!
**தீண்டாதார் எனுமவரும் பிறரும்ஓர் தாயின்**
**திருவயிற்றில் வந்தவரன் றோ?'** என்றே கேட்டான்!
ஈண்டெல்லாம் பெருச்சாளி கோயில்நுழை கையிலே
இவர்க்குமட்டும் கோயில்விலக் கேனென்றார்ப் பரித்தான்!

**"நித்தமும் சாக்கடை நீந்தும் பெருச்சாளி**
**நேரில் அக் கோயிலிலே - கண்டும்**
**ஒத்தபிறப்பின ரைமறுத் தீர்உங்கள்**
**கோயிலின் வாயிலிலே!'**

**'ஏகபரம் பொருள் என்பதை நோக்க - எல்**
**லாரும் உடன் பிறப்பே! - ஒரு**
**பாகத்தார் தீண்டப் படாதவர் என்பதி**
**லே,உள்ள தோ சிறப்பே!'**

**'இந்த உலகில் எண்ணிலா மதங்கள்**
**கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்**
**சாதிக்குச் சாவுமணி அடிக்க'**

சாதியொழிப் பதும்தமிழை வளர்ப்பதுமே நம்மோர்
செயவேண்டும் சீர்த்திருத்தம் எனத்தெளிவாய்ச் சொன்னான்.

**'சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல**
**தமிழ் வளர்த்தல்மற் றொன்று!**
**பாதியை நாடு மறந்தால் - மற்ற**
**பாதி துலங்குவ தில்லை.'**

சாதியொழி யாதஒரு மக்களினந் தன்னில்
சரிநிகர்த்த வாழ்வெங்ஙன் அமைந்துவிடும் - என்றான்.

**"சரிநிகர் மக்கள் என்னும் அரியதோர்**
**அமைதிக் குரலினை ஆர்தல் எந்நாள்?**
**சமயம் சாதி தவிர்தல் எந்நாள்?'**

**'என்றுதான் சுகப்படுவதோ? - நம்மில்**
**யாவரும் சமானம் என்ற நன்னிலை யில்லை - அந்தோ**
**ஒன்றுதான் இம் மானிடச் சாதி - இதில்**
**உயர்பிறப் பிழிபிறப் பென்பதும் உண்டோ'**

சாதியொழி யாநிலையில் குடியரசால் என்ன
சாய்த்துவிடப் போகின்றோம்? சட்டங்கள் வேண்டும்!
மீதிவகைத் திருத்தமெனப் பட்டியல்கள் சொல்வான்!
மேம்பட்ட புலவனவன் பாடுவது கேட்பீர்!

**'நாட்டினிலே குடியரசை நாட்டிவிட்டோம் இந்நாள்**
**நல்லபல சட்டங்கள் அமைத்திடுதல் வேண்டும்!**
**காட்டோமே சாதிமணம்! கலப்புமணம் ஒன்றே**
**நல்வழிக்குக் கைகாட்டி! கட்டாயக் கல்வி**
**ஊட்டிடுவோம் முதியோர்க்கும் மாணவர்க்கும் நன்றே!**
**உழையானை நோயாளி ஊர்திருடி என்போம்!**
**கேட்டையினி விலைகொடுத்து வாங்கோமே;சாதி**
**கீழ்மேல்என் றுரைப்பவர்கள் வாழுவது சிறையே'!**

**'ஒருகடவுள் உண்டென்போம்; உருவணக்கம் ஒப்போம்;**
**உள்ளபல சண்டையெல்லாம் ஒழியும்மதம் ஒழிந்தால்;**
**திருக்கோயில் தொழிற்சாலை'** என்றவனும் சொல்வான்!
தீமைதரும் தொல்லைகளை உடன்மாற்றக் கேட்டான்.
திருமணத்தும் சீர்திருத்தம் வேண்டுமென்று சொல்லித்
**'திராவிடர்க்குப் புரட்சியான திட்ட'**மொன்று தந்தான்
ஒருமணத்தை ஆதரித்தான்! மறுமணத்தை ஏற்றான்.
உயர்காதல் போற்றுதற்குக் கருத்தடையை ஏற்றான்.

**'காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்**
**கதவொன்று கண்டறிவோம்! இதிலென்ன குற்றம்?**
**சாதலுக்கோ பிள்ளை? அன்றித் தவிப்பதற்கோ'** என்று
சாட்டையடி யாய்க்கேட்டான் பல்லாண்டு முன்பே!
தீதில்லாப் பொதுவுடைமை வேண்டுமெனச் சொல்லும்
தெள்ளுதமிழ்ப் பாடல்களை உலகறிய வேண்டும்!

**'புதியதோர் உலகுசெய் வோம் - கெட்ட**
**போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்!'**

**'எல்லார்க்கும் எல்லாம் என் றிருப்ப தான**
**இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்!'**

**'எல்லார்க்கும் தேசம்! எல்லார்க்கும் உடைமையெலாம்!**
**எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!'**

கோதில்லா நெஞ்சத்தின் உயர்கருத்தாம்! இவற்றைக்
கோணல்உல கம்ஏற்று, நிலைநிமிரல் வேண்டும்!

**'கட்டாயக் கல்வியொடு பணிவேண்டும்'** என்பான்!
**'கல்விதராக் கசடர்க்குத் தூக்குமரம்'** என்றான்!
**'திட்டமிட்டுத் தொழிலாளர் ஒன்றுபடல் வேண்டும்,**
**தீங்குவரும் இல்லையென்றால்'** என்றறிக்கை செய்வான்!

**'வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம்**
**கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால்!**
**கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் இன்றுவரை**
**மூடிய தொழிற்சாலை முக்கோடி'** . என்பான்!

மட்டமெனத் தமிழ்மொழியை மதிக்கின்ற செயலை
மடமையெனக் கடிந்தொதுக்கித் தமிழர்களைப் - பார்த்துத்
திட்டமிட்ட படைவேண்டும் தமிழ்காக்க என்றான்
தெருவிலுள்ள பலகைகளில் தமிழ்வேண்டும் என்றான்!

**'வாணிகர்தம் முகவரியை வரைகின்ற பலகையில் ஆங்**
**கிலமா வேண்டும்?**
**மாணுயர்ந்த செந்தமிழால் வரைக என அன்னவர்க்குச்**
**சொல்லல் வேண்டும்!'**

தனித்தமிழை வற்புறுத்தித் **'தமிழியக்கம்'** செய்தான்!
தான்தொடக்கத் தெழுதிவிட்ட கலவைநடை போல
இனித்தாளில் எழுதிடுவ தில்லையெனச் சொன்னான்!
எம்மொழிக்கும் தமிழ்மொழியே தாய்மொழியென் றார்த்தான்!
தனித்தமிழை வற்புறுத்திப் பாவேந்தன் சொன்ன
தங்கவரிப் பாடல்களை நம்மிளைஞர் பாடிப்
பனித்தமிழை உலகமெலாம் பரப்பிடுதல் வேண்டும்!
பாவேந்தன் பாடுகின்றான் செவிமடுத்துக் கேட்பீர்!

'தொண்டர்படை ஒன்றமைத்துத் தமிழ்எதிர்ப்போர்
தொடர்ந்தெழுதும் ஏட்டையெல்லாம்
கண்டறிந்த படிஅவற்றை மக்களெல்லாம்
மறுக்கும்வண்ணம் கழற வேண்டும்!'

**'ஆங்கிலத்தைக் கற்கையிலும் அயல்மொழியைக்**
**கற்கையிலும் எந்த நாளும்**
**திங்கனியைச் செந்தமிழைத் தென்னாட்டின்**
**பொன்னேட்டை உயிராய்க் கொள்வீர்!'**

**'வடமொழியும் பிழைத்தமிழும் பெருகிவிட்டால்**
**வருநாளில் தமிழழியும் வடமொழிமே லோங்கும்'**

**'பிறமொழிக்குத் துணைநின்றும் தமிழ்மொழியின்**
**பீடழிக்கத் துணைநின்றும் தமிழ்மொழியின்**
**சிறுமையுறு வடமொழிக்குக்**
**கழகங்கள் இங்கமைத்தும் தீங்கு செய்வார்'**

**'நற்றமிழில், தமிழகத்தில் நல்லெண்ணம்**
**இல்லாத நரிக்கூட்டத்தைக்**
**கற்றுவைக்க அமைப்பதினும்**
**கடிநாயை அமைத்திடலாம்'**

மொழிநிலையிற் பாவேந்தர் தமிழர்க்குச் சொன்ன
முழுக்கருத்தும் தமிழர்களின் உளத்திருத்தல் வேண்டும்!
அழிநிலையில் உள்ளதமிழ் அழியஅழி யத்தான்
ஆன்றஇனம் அழிந்துவரும் உண்மையிது காண்பீர்!
விழிநிலையில் வைத்துதமிழ் காத்துவரல் ஒன்றே
வீழ்ந்தஇனம் மீண்டுமெழ வாய்ப்புநல்கும் என்பேன்!
பழிநிலைக்கே ஆளாக வேண்டாமே தமிழர்!
பாழ்விழுந்தால் தமிழினமே படிப்படியாய் மாளும்!

## 4. நாடு

இனியவனும் நாடுபற்றி எடுத்துரைத்த வெல்லாம்
இங்கெடுத்துக் கூறிவிடல் எளிதிலைகாண் பெரியீர்!
**'எனையீன்ற தந்தைக்கும் தாயினுக்கும் மக்கள்**
**தமையீன்ற தமிழ்நாடு தனக்குமென்ற னாலே**
**தினையளவும் நலமேனும் கிடைத்திடுவ தென்றால்**
**செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாம்'** என்றே
பனிமொழியில் சூளுரைத்துப் பாவேந்தன் சொன்னான்!
பாவலருள் எவரிந்த உரைசொன்னார்? பாரீர்!

எரிகின்ற நெஞ்சின்மேல் ஆணையிட்டுச் சொன்னான்!
இனியெங்கள் ஆட்சியிந்த நாட்டிலென்றே உரைத்தான்

எரிசருகு தமிழர்களை எதிர்த்திடுவோர் என்றான்!
இன்னுமவன் நாடுபற்றிச் சொன்னமொழிகேட்பீர்!

**'தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்!**
**செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்!'**

**'ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ**
**அல்லல்கள் வரின் ஏற்பேன்!**
**ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு**
**உவப்புடன் நான் சேர்ப்பேன்'**

**'செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க**
**நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்**
**வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்த தென்று**
**குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!'**

புரிகின்ற தமிழ்ப்போர்க்குப் புதுப்புரட்டுக் காரர்
புலைமனத்தால் தடையிடுவார் நாம்அஞ்சல் வேண்டாம்.
சரிகின்ற தமிழினத்தைக் காத்திடுதற் கென்றே
சாகாத உணர்வுடைய இளைஞர்க்கிவை சொல்வான்!

**'தமிழ்நிலத்தில் தமிழான பயிர்விளைச்சல் குறைவு!**
**தமிழ்நிலத்தில் அயல்மொழியாம் களைவிளைச்சல் மிகுதி!**
**தமிழ்நிலத்தில் தமிழ்க்கொள்கை எனும்விளைச்சல் குறைவு!**
**தமிழ்நிலத்தில் அயற்கொள்கைக் களைவிளைச்சல் மிகுதி!**
**'தமிழ்நிலத்தில் தமிழ்ஒழுக்கப் பயிர்விளைச்சல் குறைவு!**
**தமிழ்நிலத்தில் அயலொழுக்கக் களைவிளைச்சல் மிகுதி!**
**தமிழர்களே களைநீக்க வேண்டாமா? உங்கள்**
**சமையஉளத் தாலன்றித் தமிழ்உளத்தால் சொல்க!'**

**'தாய்த்திருநா டுயர்வெய்தும் நாளெந் நாளோ?**
**தமிழ்உயரும் நாளெந்நாள்'** என்றவனும் கவன்றான்!
வாய்த்தசெல்வம் அத்தனையும் ஏழையர்க்கே உதவும்
வழிசெய்ய வேண்டுமெனத் தமிழரைக்கேட் கின்றான்!
நோய்த்தமிழர் நோயுள்ளம் நோய்நீக்கி - நாட்டின்
நொடிவெல்லாம் நீங்கிநலம் பெறுதலென்றோ என்று
வாய்த்தமிழில் பாடியுளம் ஏங்கித்தவித் திட்டான்!
வருங்காலக் கனவுநலம் கூறுகின்றான் கேட்பீர்!

**'என்னருமைத் தமிழ்நாட்டை எழிற்றமிழால் நுகரேனோ?**
**செவியில் யாண்டும்**
**கன்னல்நிகர் தமிழிசையைக் கேளேனோ? கண்ணெதிரில்**
**காண்ப வெல்லாம்**

**தன்னேரில் லாததமிழ்த் தனிமொழியாய்க் காணேனோ?**
**இவ்வை யத்தில்**
**முன்னேறும் மொழிகளிலே தமிழ்மொழியும் ஒன்றெனவே**
**முழங்கே னோநான்!'**

## 5. வீரம்

வீரம்அவன் பாக்களிலே செறிந்தோடி நிற்கும்!
விளையாட்டுத் தமிழ்ப்பேச்சும் வெந்தணலாய்க் காய்ச்சும்!
ஈரம்அவன் தமிழ்ப்பாட்டில் இருந்தாலும் எதிரி
எலும்பினையும் நீறாக்கும் சொற்கள்விளை யாடும்!
பாருங்கள் வகைக்கொன்றாய்ப் பாவேந்தன் உள்ளம்
பகைமுன்னம் கனல்கக்கும் வரிகளைச்சொல் கின்றேன்!
சேருங்கள் ஒருமனமாய்! ஒருடலாய்! உயிராய்!
செந்தமிழின் பெரும்படையில் சேருங்கள் இனியே!

**'தமிழர்க்குத் தொண்டுசெயும் தமிழனுக்குத்**
**தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்'.**

**'இருளினை வறுமை நோயை**
**இடறுவேன்; என்னு டல்மேல்**
**உருள்கின்ற பகைக்குன் றைநான்**
**ஒருவனே எதிர்ப்பேன்'**

**'செழிப்போரே! இளைஞர்களே!**
**தென்னாட்டுச் சிங்கங்காள்!**
**எழுகநம் தாய்**

**மொழிப்போரே வேண்டுவது!**
**தொடக்கஞ்செய் வீர்வெல்வீர்!**
**மொழிப்போர் வெல்க!'**

**'கடல்போலும் எழுக! கடல் முழக்கம்போல்**
**கழறிடுக! தமிழ்வாழ் கென்று!**
**கெடல் எங்கே தமிழின் நலம்? அங்கெல்லாம்**
**தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!'**

**'அரசிருந்த தமிழன்னை ஆட்சியிலே**
**சூழ்ச்சி செய்யும் ஆட்கள் யாரும்**
**எரிசருகு! தமிழரிடை எழுச்சியுறும்**
**தமிழார்வம் கொழுத்த தீ!தீ!'**

**'சிம்புட் பறவையே சிறகை விரி!எழு!**
**சிங்க இளைஞனே திருப்புமுகம்!திறவிழி!**

..............................................

**வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!**
**கையிருப்பைக் காட்ட எழுந்திரு!**
**குறிக்கும் இளைஞர் கூட்டம் எங்கே?**
**மறிக்கொணாக் கடல்போல் மாப்பகை மேல்விடு**
**நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!'**

**'மனிதரில் நீயும்ஓர் மனிதன்; மண்ணன்று!**
**இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!**
**தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!**
**மீசையை முறுக்கி மேலே ஏற்று!**
**விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!**
**நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!**
**இதுதான் உன் வீடு'**

**"சிறுத்தையே வெளியில்வா!**
**எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்**
**புலிஎனச் செயல்செயப் புறப்படு வெளியில்!'**

**'கைவிரித்து வந்த கயவர் நம்மிடைப்**
**பொய்விரித்து நம் புலன்கள் மறைத்துத்**
**தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி**
**நமக்குள உரிமை தமக்கென் பாரெனில்**
**வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?**
**மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக!'**

**'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனைஎன்**
**தாய்தடுத் தாலும் விடேன்'**

**'தமிழ்எங்கள் உயிரென்ப தாலே - வெல்லுந்**
**தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே'**

**'உயர்தமிழ் உயர்நடை உயர்தனி வீரம்**
**இங்கிவை தமிழரின் உடைமை'**

எப்படித்தீ எழுப்புகின்ற செழுங்கூர்மைச் சொற்கள்!
ஈட்டியென - வேல்களென எதிரிகளின் நெஞ்சில்
அப்படியே போய்ப்பாய்ந்து குலைநடுங்க வைக்கும்!
அலையலையாய்த் தமிழினத்தின் வெற்றிகளைக் குவிக்கும்!
இப்படியார் எழுதியவர்? இழிவயிற்றுப் பசிக்கே
எழுதிநலந் தேடிடவே எல்லாரும் பாடி
முப்படியாய்த் தமிழ்நலத்தை தமிழினத்தைத் தீய்த்தார்!
மூண்டுவந்த எரிமலையாய்ப் பாவேந்தன் எழுந்தான்!

கம்பன்முதல் கண்ணனுக்குத் தாசன்வரை எல்லாம்
'கவி'யெழுதிப் பாட்டெழுதி உடல்வளர்த்த நாட்டில்
கொம்புயர்ந்த காளையென அரிமாவே என்ன
கொடுமுடியில் வீழ்ந்தஇடி முழக்கத்தைச் செய்து
நம்பிறழ்ந்த நிலையினையும் நம்மிழிவும் போக்க
நானென்றே எழுந்துவந்தான் பாவேந்தன் போல -
சிம்புள்எது? வேங்கைஎது? அடடா,ஓ!சீ!சீ!
சீரழியும் உடலுக்குள் மானமன்றோ வீரம்!

## 6. தமிழ்

செந்தமிழ்மேல் பாவேந்தன் வைத்தபெரும் அன்பைச்
சிறுமைபெற வெறியென்னும் வெறிநாய்கள் மட்டும்
தந்தம்மொழி மேல்வைக்க விலையாஇந் நாட்டில்!
தாய்மொழிமேல் அன்புவைத்தே இனம்பேணல் தீதா?
இந்திமொழி மேலவர்கள் வெறியின்றித் தானோ
'எல்லாரும் இந்திபடித் திடுக'என மொழிவார்!
சொந்தமொழிக் குயர்வின்றி இனந்தாழும் போது
சொத்தைமொழி - பிறமொழியைப் போற்றுவதே தீது!

பாவேந்தன் தமிழ்க்காதல் இயற்கை; அதில் தாழ்ச்சி
பகருவதே தாய்மொழிமேல் பற்றற்ற செய்கை!
ஈவேந்தும் தாயன்பு கொழித்திடும்தாய் மொழியில்!
எந்தாய்மேல் பற்றுவைக்கும் உணர்வு,வெறி என்றால்
சாவேந்தும் அக்கொள்கை; சழக்கேந்தி வீழும்!
சரிநிகர்க்கும் தாய்மொழியும் பிறமொழியும் என்றே
நாவேந்திக் கூறிடினும் ஒப்பிவிடோம் யாங்கள்!
நந்தமிழர் முன்னேற்றம் செந்தமிழ்முன் னேற்றம்!

நேற்றுவந்த இந்திமொழி தேசமொழி என்றால்,
நிலத்துமொழி யாவினுக்கும் தாயாகி நிற்கும்
ஊற்றுமொழி, உணர்வுமொழி, உண்மைமொழி, இந்த
உலகத்து மொழிகளுக்கும் மூத்தமொழி, மேலோர்
ஏற்றமொழி, இயற்கைமொழி, இனியமொழி, பண்டை
இலக்கியமும் இலக்கணமும் செறிந்தமொழி, இன்னும்
வேற்றுமொழி யாவையுமே கருவுயிர்க்காப் போதில்
விளைந்துபெரு மரமாகி நிற்குமொழி தமிழாம்!

செந்தமிழைத் தாய்மொழியென் றொருமுறையால் மட்டும்
சிறப்பதன்மேல் சாற்றவில்லை; தாய்உவமை யானால்

சொந்தமென ஒன்றிருக்கும்; உயர்வென்றால் சரியோ?
சொல்லுகின்ற சிறப்பெல்லாம் உலகப்பே ரறிவோர்
தந்தசிறப் பன்றோ?நம் தாய்என்றால் மட்டும்
தகுதியிலாப் பெருமையெலாம் உரிமையென்றே ஆமோ?
முந்துசிறப் பெனில்உலகம் ஒப்புதல்வேண் டாமோ?
முத்தமிழின் முழுச்சிறப்பில் எந்தவற்றைச் சொல்வீர்?

பலரறியும் வாய்ப்பொன்றால் ஒருமொழியைப் பிறரும்
படித்தறிய வேண்டுமெனில் அறிவுக்குயர் வெங்கே?
பலரறியும் கீழ்மைக்கும் மேன்மேலும் மேலும்
பல்வகையால் அதிகார வாய்ப்பளிப்ப தென்றால்
சிலரறியும் சிறப்புக்கும் கீழ்மைவா ராதோ?
சிந்தனைக்கும் உயர்வுக்கும் மற்றென்தான் பெருமை?
பலரறிவ தென்றில்லை; உங்கள்கர வெல்லாம்
பைந்தமிழ்க்குச் சிறப்புவரக் கூடாதென் பதுவே!

செந்தமிழ்க்கு வாய்ப்பளித்திங் குலகறியச் செய்தால்,
செத்தமொழி வடமொழிக்கும் இந்திக்கும் என்று
சொந்தநலம் ஒன்றிருக்கக் காணார்கள் யாரும்!
சோற்றுநலம் பெரிதென்பார் இங்கிருப்ப தாலே
எந்தமிழைப் பிறரறிய வாய்ப்பின்றிச் செய்தார்!
எதனிலுமே உயர்வுக்கே வாய்ப்பளிக்கும் ஆள்வோர்
செந்தமிழ்க்கு வேண்டாதார் - ஆரியர்என் பதனால்
சிறுமைக்கே வாய்ப்பளித்துப் பெருமைதனை யழிப்பார்!

எப்பெருமை சாற்றிடினும் ஆரியர்க்குச் சிறுமை
இம்மிவரக் கூடாதென் பதுவடவர் கொள்கை!
எப்பொழுதும் வடவோரே தலைமைதாங் குவதால்
எப்பொழுதும் தமிழுக்கே வாய்ப்பளிப்ப தில்லை!
இப்பொருளை - இவ்வுணர்வை - எந்தமிழர் எக்கால்
ஏற்றறிந்து கொள்வாரோ அப்பொழுதே தமிழ்க்கும்
முப்படியும் வாய்ப்புவரும்; இனமும்முன் னேறும்!
முன்னிழந்த பெருமையெலாம் பின்னெழுந்து சேரும்!

ஈங்கிதைத்தான் பாவேந்தன் எடுத்துரைக்கக் கேட்டோம்!
ஏற்றமிகு பாக்களினால் மாற்றம்வரக் காணோம்!
ஆங்கதையே பெருமையெனக் கருதிவிட்ட ததனால்
அவன்கருத்தை விட்டுவிட்டே அவன்பெருமை ஆர்ப்போம்!
தூங்குகின்றோம்; தூங்குகின்றோம்; தூங்குகின்றோம் இன்னும்!

தொடையினிலே கயிறுபிறர் திரிக்கத்தூங் குகின்றோம்!
ஏங்கினவன் பாவேந்தன்! எடுத்தெடுத்துச் சொன்னான்!
எந்தமிழர் கேளார்கள் எனவறிந்தும் சொன்னான்!

மன்றிருந்த தமிழ்வாழ இனம்வாழ, இங்கே
மலிந்திருந்த வளமெல்லாம் என்றென்றும் வாழ,
அன்றிருந்த பெருமையெலாம் நினைவூட்டிச் சொன்னான்;
அணுஅணுவாய் எந்தமிழர் சிதைந்தகதை சொன்னான்!
வென்றிருந்த தமிழ்ஒருகால் வீரம்எனும் கொம்பில்
வீறுபெறும் கொடியாகப் பறந்தகதை சொன்னான்!
இன்றிருக்கும் தமிழனுக்கோ சோற்றுருண்டை மீதில்
இருந்துவரும் ஆசையிலே எதையெண்ணிப் பார்ப்பான்?

**'செந்தமிழே உள்ளுயிரே நறுந்தேனே என்றன்**
**செயலெல்லாம் மூச்செல்லாம் உனக்களித்தேன் யானே!**
**நைந்தாய்,நீ எனில்நைந்து போகுமென்றன் வாழ்வே**
**நன்னிலைஇங் குனக்கென்னில் எனக்கும்அது தானே!'**

செந்தமிழில் இக்கருத்தை அவனெழுத வில்லை!
செங்குருதிச் சேற்றினிலே எலும்பொடித்துத் தோய்த்தே
எந்தமிழர் உணரட்டும் வாழட்டும் என்றே
எழுதிவிட்டுப் போனான்!நாம் புழுதியிலே போட்டோம்!

நல்லுயிரும் வல்லுடலும் செந்தமிழும் மூன்றும்
நான்நாளனென் றார்த்தெழுந்தான்; வீண்வீணாய்ப் போனான்!

சொல்லிலுயிர் கலந்தெழுதி மூச்சினிலே பாடிச்
சோர்ந்தவினம் ஆர்த்தெழவும் பார்த்திருந்தான் காலம்!
வெல்லுமடா எந்தமிழும்! வெற்றிநிலை வாய்க்கும்;
வீணரல்லர் தமிழர்'என வீறுபெறச் சொன்னான்!
மெல்லமெல்ல நந்தமிழர் அவன்பாடல் கேட்டார்!
வேற்றுமொழிக் காரனுக்கே அதையெடுத்து விற்றார்

தமிழையவன் காதலித்தான் அடடா,ஓ அடடா!
தமிழினத்தைக் காதலித்தான் அடடா,ஓ அடடா!
தமிழையவன் தாயென்றான் அடடா,ஓ அடடா!
தமிழினத்தை உயிரென்றான் அடடா,ஓ அடடா!
தமிழையவன் இறையென்றான் அடடா,ஓ அடடா!
தமிழினத்தை உடலென்றான் அடடா,ஓ அடடா!
தமிழையவன் காதலித்தும் தமிழினத்தைப் பார்த்தும்
தமிழாகிப் போனானே அடடா,ஓ அடடா!

**'கனியிடையில் ஏறிவரும் சுளையினையும் முற்றற்**
**கழையிடையில் ஊறிவரும் சாற்றினையும் வண்ணப்**
**பனிமலரில் ஏறிவரும் தேனினையும் காய்ச்சும்**
**பாகிடையில் ஏறிவரும் சுவையினையும் ஆங்கே**
**நனிஆக்கள் பொழிதருதீம் பாலினையும் தென்னை**
**நல்கியதோர் குளிர்மையிள நீரினையும் முற்றும்**
**இனியனஎன் பேன்எனினும் எந்தமிழை என்றன்**
**இன்னுயிர்என் பேன்கண்டீர்'** என்றான்பா வேந்தன்

மேலுமவன் செந்தமிழ்மேல் கொண்டிருந்த அன்பால்
மிழற்றுகின்ற செழும்பாடல் அவன்தமிழில் கேட்பீர்!

**"அரும்பு தந்த வெண்ணகையே!**
**அணிதந்த செந்தமிழே, அன்பே!"**

**'மடுத்துமகிழ் நறுந்தேனே,**
**வரைந்துமகிழ் ஓவியமே, அன்பே!'**

**'கண்டுவந்த திருவிளக்கே,**
**களிப்பருளும் செந்தமிழே, அன்பே!'**

**'உடலியக்கும் நல்லுயிரே,**
**உயிரியக்கும் நுண்கலையே**
**கடலியக்கும் சுவைப்பாட்டே,**
**கண்ணான செந்தமிழே, அன்பே!'**

**'ஐயத்திற் கறிவொளியே,**
**ஆடல்தரும் செந்தமிழே, அன்பே'** - என்று

ஏலும்வகை நூறுமுறை அன்பன்பே என்றே
இன்னுயிரைப் பிழிந்தூற்றித் தமிழ்வடித்த தாரே?
நாலுவகை நூல்களையும் படித்திருப்போம்! 'தமிழே
நான்தும்பி பூக்காடு நீ' யென்ற தாரே?
பாலிடையில் துளிநஞ்சா? பாவேந்தன் பதைத்தான்!
பைந்தமிழில் மொழிக்கலப்பைச் சாடுவதைக் கேட்பீர்!

**'தாய்ப்பாலில் நஞ்செனவே தமிழில்வட**
**மொழி சேர்த்தார் தவிர்தல் வேண்டும்!**
**தமிழ்ப்புலவர் தனித்தமிழில் நாடகங்கள்**
**படக்கதைகள் எழுதல் வேண்டும்!'**

**'முதல்நூலை அயலான், நஞ்சால்**
**முறித்ததும் காணுகின்றேன்'**

'தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு'

கமழும்உன் தமிழினை உயிரென ஓம்பு;
காணும் பிறமொழிக ளோவெறும் வேம்பு;
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு;
நம்உரிமை தனைக் கடித்ததப் பாம்பு!'

'தனித்தமிழில் இந்நாட்டுத் தக்கபுதுக்
காப்பியம்நன் னூல் இயற்ற
நினைப்பாரேல் நம்புலவர், நிலவாவோ
ஆயிரநூல் தமிழகத்தே!'

'அறிவிப்புப் பலகையெலாம் அருந்தமிழ்ச்சொல்
ஆக்குவதே அன்றி அச்சொல்
குறைவற்ற தொடராகக் குற்றமற்ற
சொல்லாக அமையுமாயின்
மறுவற்றுத் திகழாளோ செந்தமிழ்த்தாய்?
தமிழ்மக்கள் மகிழ்ந்தி டாரோ?'

'தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தால்
தூய்தமிழ் பிதற்றும் என்வாய்!'

தமிழ்வளர்ச்சி பற்றியவன் சாற்றுகின்றான் கேளீர்!
தமிழல்லால் முன்னேற்றம் சிறிதுமில்லை என்பான்!

'நமைவளர்ப்பான் நந்தமிழை வளர்ப்பவனும்
தமிழ்அல்லால் நம்முன்னேற்றம்
அமையாது; சிறிதுமிதில் ஐயமில்லை, ஐயமில்லை
அறிந்து கொண்டோம்'

'இன்பத் தமிழ் குன்றுமேல் - தமிழ்
நாடெங்கும் இருளாம்!'

'மொழியென்றால் உயிரின் நரம்பு . நம்
முத்தமிழ் மொழியோ தமிழர் வரம்பு'

'தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்
அறிவுயரும் அறமும் ஓங்கும்!
இமயமலை போலுயர்ந்த ஒருநாடும்
தன்மொழியில் தாழ்ந்தால் வீழும்'

'தாய்மொழி நூற்றுக்கு நூறுபெயர் - பெறத்
தக்கதோர் கட்டாயம் ஆக்கிவிட்டால்
போய்விடும் கல்லாமை'

'செந்நெல் மாற்றிய சோறும் - பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை - கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்
நம்மதுரஞ்செய் கிழங்கு - காணில்
நாவில் இனித்திடும் அப்பம்.
உன்னை வளர்ப்பன தமிழா - உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!'

தமிழ்வளர்ச்சி யாலிந்த வையகமே உயுமாம்!
தண்டமிழ்ப்பா வேந்தனவன் சொல்லுவதைக் கேட்பீர்!

'வையகமே உய்யுமாறு வாய்த்த தமிழ்
என்அரும் பேறு'

தமிழ்வளர்ச்சித் திட்டமொன்றே அவனின் தமிழ்இயக்கம்
'தமிழியக்கம்' நூல்போதும் அவன்பெருமை சாற்ற!

தமிழ்வளர்க்காத் தமிழினமோ தான்வளர்தல் இல்லை!
தன்மொழி,கா வாதஇனம் வளர்ந்ததுண்டோ உலகில்!

'ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன்முன் னேற்றம்'!

'உன்தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற
வெற்றியெலாம் உன்றன் வெற்றி'

'அரசினரின் மொழியாக, அரசியலார் மொழியாக
அரசியல் சார்
வரிசையுறு சட்டமன்றின் மொழியாக, வையம் அறி
மொழியாகத்
திருமலிந்த தமிழ்மொழிதான் ஆகும்வகை நம்புலவர்
சேர்ந்து தொண்டு
புரிகஎன வேண்டுகின்றோம்! பொழிகஎன வேண்டுகின்றோம்
பொன் மழை தான்!

இறுதியிலே உங்கட்குச் சொல்லுகின்றேன் பெரியீர்!
எந்தமிழத் தாய்மாரே! இளைஞர்களே! தமிழீர்!
உறுதியிலே நமக்குய்தி உண்டென்றால் முதலில்
உய்தியுற வேண்டும்தமிழ்! உலகுணர வேண்டும்!

வெறுமுடலில் ஓடுமுயி ரோடுகலந் தோடி
விரிந்துசெலும் நாடிநரம் பெலும்பிலெலாம் தமிழே
மறுவின்றித் திகழ்ந்துணர்வாய்ப் பாய்ந்தோடல் வேண்டும்!
மாபெரிய தமிழினமும் மிகச்செழிக்க வேண்டும்!

வரம்பொன்றால் தமிழ்வரம்பு! வாழ்வும்நமக் கதுவே!
வல்லுணர்வால் பாவேந்தன் முழங்குகின்றான் கேளீர்!
உரம்பெய்த செந்தமிழுக் கொன்றிங்குத் தீமை
ஒருநிலையில் நேர்ந்ததென நாமுரைக்கக் கேட்டால்
நரம்பெல்லாம் இரும்பாகி நனவெல்லாம் உணர்வாய்
நண்ணிடவும் வேண்டும்; செயல் முன்னிடவும் வேண்டும்!!
இரும்பன்றோ நம்தோள்கள்! எழவேண்டும் அன்றோ?
எந்தமிழப் பாவேந்தன் இடிமுழக்கம் கேளீர்!

**'ஆழிநிகர் படைசேர்ப்பாய்! பொருள் சேர்ப்பாய் இன்பத்தை**
**ஆக்குவிப்பாய்**
**ஊழியஞ்செய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும்**
**உணர்ச்சி கொண்டே!'**

**"நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு!**
**பொன்மொ ழிக்குநீ, புதுமை ஏற்றுவாய்!**
**மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!**
**செந்தமிழ்ச் சொல்லால் செயலால்**
**தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை!"**

# 12. புரட்சிப் பாவேந்தர் விழாப் பாட்டரங்கம்

**முன்னுரை:**

பேரன்பு மிக்க பெரியோரே! தாய்மாரே!
பேராசிரியப் பெருமக்காள்! நல்லிளைஞீர்!
பாட்டரங்கம் தன்னில் நலஞ்சுவைக்க வந்த, தமிழ்
அன்புடையீர்! இனநலம் ஆர்க்கின்ற நல்லவையீர்!
என்பு நெகிழ்ந்துருக யாவரையும் வணங்குகின்றேன்!

புரட்சிக்குப் பாவேந்தன்! பொங்குதமிழ்ப் பேரினத்தின்
மருட்சி நீக்கவந்த மாமருந்து! ஆரியத்தைப்
பாட்டால் அடித்துப் பதைபதைக்க வைத்ததமிழ்க்
கோட்டுக் களிறு! கொட்டிவைத்த பாக்குவியல்!
கூனாத நெஞ்சன்! குறைவுபடாக் கொள்கைமலை!
ஆனான பாட்டனெல்லாம் அவனடிக்குத் தாளாமல்
நெஞ்சை நசுக்கிக்கொண்ட நேர்ச்சியினை நாம் கண்டோம்!

பஞ்சைப் பா வலனல்லன்; பாய்ந்தெழுந்த தேனருவி!
அஞ்சாமல் யார்க்கும் அரிமாப்போல் முழங்கியவன்!
துஞ்சாமல் தோளுயர்த்தித் தமிழினத்தைத் தூக்கவந்தோன்!

பொன்புதுவைத் திருநகரில் பூத்தெழுந்த செங்கதிரோன்!
தன்பதவி வாழ்க்கை தன்மனைவி தன்மக்கள்
என்கின்ற தந்நலத்தார் இடுப்பொடிக்க வந்தமன்னன்!

நாளுக் கொருகொள்கை நாழிகைக்கோர் கட்சியதாய்
ஆளுக்குத் தக்கபடி அடிமடியை நிரப்புகின்ற
ஊத்தை அரசியலைத் தூவென் றுமிழ்ந்துவிட்டு
மாத்தமிழ்மேல் அன்பும் மாண்புத் தமிழினத்தின்
முன்னேற்றம் தன்னில் முழுநோக்கும் கொண்டவனாய்த்
தன்னேற்றம் பாராமல் தமிழே உயிரென்று
பாடல் குவித்த பாவல்லோன்! பாட்டுமலை!
ஊடல்மிகு காட்சிகளை உதிர்த்த உலுத்தனல்லன்!

குடியும்கூத் தியுமாகக் கொம்மாளம் போட்டபடி
விடியும்வரை விலைப்பெண்டிர் வெயர்வையிலே குளித்துவிட்டு
விடிந்தபின்னே 'அர்த்தமுள்ள இந்துமத வேதாந்தம்'

வடித்த புலவனல்லன்! வற்றாத கொள்கைவெள்ளம்!
திக்கித் திணறித் தெருத்திண்ணை மேலமர்ந்து
எக்கியெக்கி மோனைக்கும் எதுகைக்கும் ஏங்கிநின்று,
பாதையிலே போகும் பாவையர்மேல் கண்மொய்த்தே
ஊத்தைச் சதையின் உருட்சியிலும் திரட்சியிலும்
முன்னழகைப் பாடி முத்தமிழைக் காசாக்கிப்
பின்னழகைப் பாடிப் பிழைப்பை நடத்துகின்ற
பேடிப் புலவனல்லன்! பீற்றைப் பா வலனல்லன்!
கோடிகொடுத்தாலும் கொள்கை நழுவாமல்
தமிழைத் தமிழினத்தைத் தமிழ்நாட்டை உய்விக்க
அமிழ்த மொழியால் அழகுதமிழ் பாடியவன்!

எந்தமிழைச் சேறாக்கி, இழிவுணர்வைச் சோறாக்கும்
மந்த மதியனல்லன்! மாணிக்கப் பாட்டரசன்!
காமத்தைச் சொல்லாக்கிக் கழிசடையைப் பாட்டாக்கி
ஆமாம்போட் டரசவையை ஆண்ட புலவனல்லன்!
புண்பட்டுப் போன பொய்யாத் தமிழ்க்கதையைப்
பண்பட்ட சொல்லால் பதப்படுத்திக் காட்டியவன்!

காலத்தால் வீழ்ந்துவிட்ட காய்த்த தமிழ்மரத்தை
ஞாலத்தில் தோள்கொடுத்துத் தாங்கிநிலை நாட்டியவன்!
நெருப்புப் பொறிபறக்கும் நெற்றுதமிழ்ச் சொல்லெடுத்து,
விருப்பத் தமிழ்ப்பாட்டாய் விளைவித்து, நம்மினத்தின்
மானத்தைக் காக்கவந்த மாவேந்தன்! மண்டுதமிழ்ப்
பானல் மொழிகாத்த பாவேந்தன்! பைந்தமிழை
நாள்தோறும் பாய்ச்சிவிட்ட நாவேந்தன்! நாட்டுணர்வை
மூள்வித்துக் காத்ததமிழ் மூவேந்தன்! மொய்ம்பனவன்!

விருத்தத்தில் கம்பன்! வெண்பாவில் புகழேந்தி!
கருத்தினிலே நக்கீரன்! காட்சியிலே கபிலன்!
பொருத்தமாய்ச் செஞ்சொல் புனைவதிலே பரணன்!சீர்
திருத்தத்தில் - புரட்சி செய்ததிலே - பாவேந்தன்!

இத்தகைய மெச்சுபுகழ் ஏற்றத்தில் என்றென்றும்
முத்தமிழும் உள்ளவரை முழுவுலகும் உள்ளவரை
புரட்சிப்பா வேந்தன் புகழும் நிலைத்திருக்கும்!
வரட்சி தமிழ்க்கில்லை; வாழும்அவன் பாடல்களால்!

பாரதிக்கு தாசனென்று பண்பால் தனையழைத்தான்!
பாரதியோர் பார்ப்பான்! எனவே பெயர்பெற்றான்!

மற்றபடி பாரதிக்கே மதிகொடுக்கும் நல்லாசான்!
கற்றபடி தானே கணக்குவைத்துப் பேசிடுவோம்!

ஈங்கதனால் தானே இவனுக்கு விழாவெடுத்தார்!
தூங்குகின்ற நந்தமிழர் உணர்வுக்குத் தீவைத்தார்!
புரட்சிப்பா வேந்தர்க்குப் போற்றுவிழா அமைத்ததனால்
மருட்சி யடைந்திருப்பார் நம்பகைவர் மனம் நைந்தே!

வீரமணி தளபதியாய் வீற்றிருக்கும் கழகத்தின்
சாரம் மிகுந்திருக்கும் சாயாத் தமிழ்மறவர்
கூட்டமிது! இங்கே கூடிநின்று பாவேந்தைப்
பாட்டால் வணங்குகின்ற பாவலர்கள் வந்துள்ளார்!
பாவேந்தைப் பாடினால் பணம்வந்து சேராது!
ஆவல் அடங்கும்! அடிவயிறு தான்குளிரும்!
மேனியெலாம் நன்றியெனும் நல்லுணர்வால் மேல்
(சிலிர்க்கும்!
தேனில் விழுந்ததுபோல் நாவெல்லாம் தித்திக்கும்!
உள்ளம் கிளர்ச்சியுறும்! உயிரும் உவகைபெறும்!
குள்ள நினைவழியும்! கோபுரமாய் வாழ்வுயரும்!
மூவா யிரமாண்டாய் முழுநலமும் வீழ்ந்துவிட்ட
காவாத் தமிழினமும் காலெழுந்து வீறுபெறும்!

அத்தகைய ஆண்மையின் அரசர்க் கரசனவன்!
புத்தொளியைப் பாய்ச்சிவிட்ட புரட்சிப்பா வேந்தனவன்!

புதுவையிலே பிறந்தகுயில்! புரட்சிப்பண் இசைத்தகுயில்!
எதுசெய்வோம் நாட்டுக்கே எனத்துடித்த இளைஞர்களைத்
'தமிழுக்குத் தொண்டுசெய்க; தமிழனுக்குத் தொண்டுசெய்க;
அமிழாத நல்லுணர்வால் ஆட்சி அமைத்திடுக'
எனத்தட்டி எழுப்பி எழுச்சிக் கனல்மூட்டி
மனத்திட்டை மேடாக்கி மாமலையைக் கடுகாக்கி
'முன்னேறு முன்னேறு' எனவுணர்ச்சி மூட்டியவன்!
இந்நேரம் அவனிருந்தால் எந்தமிழர் இங்கேவோர்
நல்லாட்சி கண்டிருப்பார்! நாற்புறமும் வென்றிருப்பார்!
பொல்லாதஆட்சிப் பொடியரெலாம் வீழ்ந்திருப்பார்!

பாக்கலைக்கே உயிர்தந்த பாவேந்தன் இன்றிருந்தால்
மூக்கறைகள் சாக்கறைகள் முன்னேறி மேல்வருமா?
சந்தியிலே புரண்டெழுந்து சாய்க்கடைகள் பாட்டெழுதும்
இந்த இழிநிலைதான் எந்தமிழ்க்கு வந்திடுமா?

மதுப்புட்டில் உடைந்ததுபோல் மடக்கு வரியெழுதிப்
புதுப்பாட்டு என்றுரைக்கும் புன்மைநிலை தோன்றிடுமா?
எம்பாடல் வேந்தனவன் இல்லாத போழ்திலன்றோ
தம்பாடல் மேலென்று தமுக்கடித்துத் திரிகின்றார்!

(வேறு)

"தென்திசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்கு தடடா!
அன்றந்த இலங்கையினை ஆண்டமறத் தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்!
குன்றெடுக்கும் பெருந்தோளான்! கொடைகொடுக்கும் கையான்!
குள்ளநரிச் செயல்செய்யும் கூட்டத்தின் கூற்றம்!
என்தமிழர் மூதாதை! என்தமிழர் பெருமான்!
இராவணன்காண்! அவன்நாமம் இவ்வுலகம் அறியும்!"

(வேறு)

"சிங்களஞ் சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரென்று ஊதூது சங்கே!
பொங்கு தமிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு"

(வேறு)

- என்றெல்லாம் பாடியவன் இன்றிருந்தால், இலங்கையிலே
கொன்று குவிக்கப் படுவாரா எந்தமிழர்?
பொற்பிழந்தும் சொத்திழந்தும் பிழைக்க வழியிழந்தும்
கற்பிழந்தும் வாடுகின்ற கன்னித் தமிழ்மகளிர்
கண்ணீரைக் கண்டு கனல்பறக்கும் நெஞ்சோடு
செந்நீரால் பாட்டெழுதிச் சீறித் தடுக்கானா?

இனநலத்தைக் காக்கவந்த எந்தைப் பெரியார்க்கு
மனநலத்தை ஊக்கவந்த மாணிக்கப் பரிதியவன்!

அத்தகைய பாவேந்தர்க் கமைத்த விழாவிதுவாம்!
முத்தனைய பாடல்களை முழங்குதற்குப் பாவலர்கள்
வந்திங்கே வீற்றிருப்பார்! வாழ்வுயரப் பாடிடுவார்!
நொந்த உளத்தினது நோக்காட்டைப் போக்கிடுவார்!
பாவேந்தன் முன்னரே பாடிவைத்தான் தம்பிறப்பை!
ஆவலால் அதைச்சொல்வேன் அமைந்ததனைக் கேளுங்கள்!

(வேறு)

**'நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்**
**நான் நான் நான்!**
**கல்வியில் என்னை வெல்ல நினைப்பதும்**
**ஏன் ஏன் ஏன்?'**

**'சீர்த்தியால் அறத்தால் செழுமையால் வையப்**
**போர்த்திறத்தால் இயற்கை புனைந்தஓர் உயிர் நான்'**

அவனுரைத்த சூள்தன்னை அவன்வாயால் கேளுங்கள்!
எவனுரைத்தான் இவ்வாறாய் எந்தமிழ்ப்பா வேந்தனல்லால்!

(வேறு)

**"நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்**
**நலிவதை நான் கண்டும்**
**ஓயுதல்இன்றி அவர்நலம் எண்ணி**
**உழைத்திட நான் தவறேன்'**

(வேறு)

சாவேந்தாப் புகழ்பெற்ற நல்லுணர்வுச் சான்றோன்,அப்
பாவேந்தன் குறிக்கோளைப் பாடுகின்றான் கேளுங்கள்!

(வேறு)

**"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும், மக்கள்**
**தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்**
**தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்**
**செத்தொழியும் நாளெனக்குத் திருநாள் ஆகும்"**

(வேறு)

இவ்வாறாய்ப்

புதுவைக் குயிலொலித்த 'புரட்சிக் குரல்' தன்னை
வெதுவெதுப் பூட்டும் 'விடுதலைக் குரல்' ஒலியை
'பகுத்தறிவுக் குரலை'ப் பெண்ணுரி மைக்குரலை'த்
தொகுத்த 'இனமானம் தோய்குரலை'ப் பாவலர்கள்
இங்கெடுத்துப் பாட இருக்கின்றார்! நீங்களெல்லாம்
பொங்கும் உணர்வோடும் பூரிக்கும் நெஞ்சோடும்
அமைந்திருந்து கேட்குமாறு ஆவலினால் வேண்டுகின்றேன்!
இமைதிறந்து கண்பார்த்(து) இருந்து!
முதன் முதலாய்,
தனிமானம் வேண்டாம்; தமிழர் இனியேனும்
இனமா னக்குரல் எழுப்புக என்றே

புதுக்கோட்டைக் **கவிதைப் பித்தன்** புகலுவார்!
மதுக்கூட்டைத் திறந்ததுபோல் மாண்பு சிறக்கவே!

அடுத்து,
பாவேந்தர் சொன்ன **'பகுத்தறிவுக் கொள்கை'**யினை
நாவேந்திச் சொல்லிடுவார்; நந்தமிழ்ப்பே ராசிரியர்
**குருவிக் கரம்பை சண்முகனார்;** அவரோர்
அருவி தமிழ்ப்பாட்டில்! அவர்பாடல் கேட்போம்!

அடுத்து,
**'விடுதலைக் குரலை'**ஒலிக்க வருகின்றார்!
கொடுதலை என்றாலும் கொடுப்பார்; **பாவலர்**
**குடியரசு** என்பார்! கூறுவது கேட்போம்!
விடியட்டும் உரிமையால்! விரைவில்நம் நாடே!

இறுதியாக,
**'புரட்சிக் குரல்'**தன்னைப் **பொன்னி வளவனெனும்**
தெருட்சிப் புலவரவர் தீந்தமிழில் பாவரசர்
வந்தொலித்துக் காட்டுவார்! வாழ்த்தி அழைக்கின்றேன்
சிந்தொலிக்கும் பாவடியால் தேர்ந்து!

**முடிவுரை:**

பாவலர் யாவரும் பாடினர் நன்றே!
பாவேந்தர் கருத்தினைப் புகழினை இங்கே!
ஆவலாய்க் கேட்டீர்கள்! அனைவர்க்கும் நன்றி!
அடுத்தென்றன் கருத்தையும் கேட்பீர்கள் நன்கு!
காவலாய்த் தமிழுக்கும் இனத்திற்கும் நின்றான்!
கனித்தமிழ் பாடினான் புதுவைப்பா வேந்தன்!
கூவலாய் அழைக்கின்றேன் தமிழரெல்லாரும்
கூடிஒன் றாய்நிற்பின் இனமீட்சி கூடும்!

## 1. புரட்சிக்குரல்!

பழந்தமிழப் புலவர்போல் அவனெழுத வில்லை;
பாவேந்தன் புதுமைக்குக் குரல்தந்து நின்றான்!
இழந்திட்ட புகழ்மீட்க எந்தமிழைப் பாடி
எழுத்தாலே புரட்சிக்குக் கனல்மூட்டி வந்தான்!
முழந்தேடிச் சொற்களையும் வரிகளையும் எழுதல்
முழுவதுமே புலமைக்குத் திறம்என்றெண் ணாமல்
குழந்தைக்கும் விளங்குகின்ற எளியசொல் லாலே
குமுகாயச் சீர்மைக்குப் பாடல்கள் யாத்தான்!

எழுச்சிக்குக் குரல்கொடுத்தான் தமிழர்எல்லாரும்
இனமீட்க எழுந்தொருங்கே வாருங்கள் என்றான்!
முழுச்சிதைவே வுற்றிருக்கும் இனநலமுன் னேற்றம்.
முன்பிருந்த வரலாற்றைப் புதுக்குகின்ற நோக்கம்.
மழுச்சிதைவே இல்லாமல் உழவேண்டும் தமிழர்
மறுமலர்ச்சி பெறவேண்டும் தமிழ்இனமும் நாடும்!
குழுச்சிதைவாய் இல்லாமல் கட்சிசிதை வின்றிக்
கூடிநின்றால் தமிழர்க்கு வெற்றியுண்டாம் என்றான்!

பாவேந்தன் புரட்சியுரை கேட்பீர்கள் இங்கே!
பாக்களிலே கருத்திருக்கும் உணர்விருக்கும் பாரீர்!
ஈவேந்தா நோக்கினிலே இழப்பேந்திச் சொன்னான்!
எழுகஇன்றே தமிழரெல்லாம் எனஆர்த்து நின்றான்!
சாவேந்தாப் புகழ்பெற்றோன் தமிழ்த்தொண்டு செய்வோன்
சாவதில்லை சாவதில்லை எனக்கூறிச் சென்றான்!
நாவேந்தும் கருத்துகளைப் பலநூறு பாட்டில்
நாள்தோறும் குயில்குரலில் நம்மவர்க்குச் சொன்னான்!

1. அவன்செய்த தமிழ்ப்புரட்சிக் கார்த்தகுரல் இதுவாம்!
ஆரிதுபோல் சொல்லிவைத்தார்? அனைவரும்கேட் பீர்கள்!

(வேறு)

தமிழனே இதுகேளாய் - உன்பால்
சாற்ற நினைத்தேன் பலநாளாய் (தமிழனே)

கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு
காணும் பிறமொழிக ளோவெறும் வேம்பு
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு
நம்முரிமை தனைக் கடித்ததப் பாம்பு (தமிழனே)

வஞ்சகர் வந்தவர் தமிழால் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்
நாமுணர்ந்தோம் இந்நாள் அவரஞ்சி விழித்தார் (தமிழனே)

தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தின் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போல்பல நூலெல்லாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு (தமிழனே)

"உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு வருந்திமை
உனக்குவருந் திமையன்றோ?
பிணிநீக்க எழுந்திரு, நீ இளந்தமிழா
வரிப்புலியே...."

"அதிர்ந்தெழுக! தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் அழகுகாப்பாய்!
இதுதான்நீ செயத்தக்க எப்பணிக்கும்
முதற்பணியாம் எழுகநன்றே"

(வேறு)

2. அவன்செய்த தொழிலாளர் புரட்சியுரை கேட்பீர்!
அன்னவர்கள் முன்னேற்றம் கருதியிவை சொன்னான்!

(வேறு)

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?

கேட்டான் பாவேந்தன்!

கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக் (சுரங்கம்)
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளை கடல்முத்தை மணிக்குலத்தைப்
போயெடுக்க அடக்கியமுச் செவரின் மூச்சு?

(வேறு)

சித்திரச் சோலைகளே! உமைநன்கு
திருத்த, இப் பாரினிலே,முன்னர்
எத்தனைத் தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ, உங்கள் வேரினிலே!

(புல்கானின் குருசேவ் தாஜ்மகால் கருத்து)

"நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே - உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே"

"தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்தஅக் காலத்திலே . எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே!"

"மாமிகு பாதைகளே! உமை இப்பெரு
வையமெ லாம் வகுத்தார் - அவர்
ஆமை எனப் புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெ லாம் உழைத்தார்!"

(வேறு)

மண்மீதில் உழைப்போ ரெல்லாம்
வறியராம்; உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம்;இதைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!

3. அவன் பாடல் பொதுவுடைமைக் குரல்கொடுத்து நிற்கும்!
ஆர்க்கின்ற புரட்சிக்கு வழிவகைகள் செய்யும்!

(வேறு)

"ஒப்பிட எவர்க்கும் ஒருவீடு ஒருநிலம்
ஒருதொழில் ஓர்ஏர் உழவு மாடுகள்"
"ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்
உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்"
"எல்லாக்கும் தேசம், எல்லார்க்கும் உடைமையெலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே"
"புகல்வேன் உடைமை மக்களுக் குப்பொது:
புவியை நடத்து பொதுவில் நடத்து"
"புதியதோர் உலகுசெய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்"
"இருக்கும் நிலை மாற்றஒரு புரட்சிமனப் பான்மை
ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்!"

4. அவனடித்த சாவுமணி - சாதிக்கு - கேட்பீர்
அனைவருமே சமமென்றால் அதிலென்ன தொல்லை?!
"சரிநிகர் மக்கள் என்னும் அரியதோர்
அமைதிக் குரலினை ஆர்தல் எந்நாள்?
சமயம் சாதி தவிர்தல் எந்நாள்?"

## தீண்டாமை ஒழிப்பு

(வேறு)

"அற்பத் தீண்டாதார் என்னும் அவரும் பிறரும் ஓர்தாய்
கர்ப்பத்தில் வந்தா ரன்றோ - சகியே! (கர்ப்பத்தில்)
பொற்புடை முல்லைக் கொத்தில் புளியம்பூ பூத்ததென்றால்
சொற்படி யார்நம்பு வார் - சகியே" (சொற்படி)

(வேறு)

"ஏகபரம்பொருள் என்பதை நோக்கஎல்
லாரும் உடன் பிறப்பே - ஒரு
பாகத்தார் தீண்டப் படாதவர் என்பதி
லே, உள்ள தோ, சிறப் பே!"

(வேறு)

புதுவைக் குயிலின் புரட்சிக் குரலொலி
இதுவரை மட்டுமா? இன்னமும் கேளீர்!

(வேறு)

" ..................................... வயிற்றுக்கு ஊற்றக்
கூழின்றி வாடுகின்றார் எழுந்திருநீ இளந்தமிழா
குறை தவிர்க்க!
ஆழிநிகர் படைசேர்ப்பாய்! பொருள்சேர்ப்பாய்!
இன்பத்தை ஆக்குவிப்பாய்!"

(வேறு)

"எதுசெய்ய நாட்டுக்கே எனத்துடித்த சிங்கமே
இன்றே இன்னே
புதுநாளை உண்டாக்கித் தமிழ்காப்பாய்!
புத்துணர்வைக் கொணர்வாய் இங்கே!"

(வேறு)

"பேச்சாலும் எழுத்தாலும் பாட்டாலும்
கூத்தாலும் பிறர் உவக்க
ஓச்சுகவே மணிமுரசு! வீதியெலாம்
உலவா நிற்பீர்!
ஏச்சாலும் எதிர்ப்பாலும் வருகின்ற
இன்னலுக்குள் இன்பவெள்ளம்
பாய்ச்சாதோ பொதுத் தொண்டு
பைந்தமிழ்க்குச் செயுந்தொண்டு
பருக வாரீர்"

(வேறு)

“நாட்டினிலே குடியரசை நாட்டிவிட்டோம் இந்நாள்!
நல்லபல சட்டங்கள் அமைத்திடுதல் வேண்டும்!
காட்டோமே சாதிமணம்! கலப்புமணம் ஒன்றே!
நல்வழிக்குக் கைகாட்டி! கட்டாயக் கல்வி!
ஊட்டிடுவோம் முதியோர்க்கும் மாணவர்க்கும் நன்றே!
உழையானை நோயாளி ஊர்திருடி என்போம்!
கேட்டையினி விலைகொடுத்து வாங்கோமே; சாதி
கீழ்மேல்என் றுரைப்பவர்கள் வாழுவது சிறையே!

(வேறு)

குடும்பநலத் திட்டம் கொள்கை வராதமுன்
இடும்பை தவிர முதற்குரல் எடுத்தவன்
புரட்சிப் பாவலன் புதுமைப் பாவலனே!

காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?
சாதலுக்கோ பிள்ளை? அன்றித் தவிப்பதற்கோ பிள்ளை?
சந்தான முறைநன்று! தவிர்க்கும்முறை தீதோ?

## 2. விடுதலைக்குரல்

மொழிவிடு தலையும் இனவிடு தலையும்
பழியிலாப் பாவலர் விரும்பிய கொள்கை!
நாட்டு விடுதலையும் நன்றென மொழிந்தார்!
வாட்டு ஆரியத்தினும் வடவர்சூழ்ச் சியினும்
தமிழக மக்கள் தப்பிட வேண்டில்
தமிழகம் பிரிதலும் தக்கதே என்றார்!

(வேறு)

“விடுதலை பெறுவது முதல் வேலை!
அடிமையில் உழல்வது முடியாது!
விழிதுயில் வதுமிகு தவறாகும்! - எழுவீரே!”

- என்று எழுச்சி பாடினார்.

“செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தனல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!”

“எரிகின்ற எங்களின் நெஞ்சுமேல் ஆணை!
இனியெங்கள் ஆட்சியிந் நாட்டிலே!”

"ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்!
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்"

"சிம்புட் பறவையே சிறகை விரி, எழு!
சிங்க இளைஞனே! திருப்புமுகம்! திற விழி!
இங்குன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?"

"வடநாடு தென்னாட்டை வீழ்த்தச் - செய்த
வஞ்சங்கள் சிறிதல்ல தம்பி!
இடைநாளில் மட்டுமா? சென்ற
இரண்டாயிரத்தாண்டு பார்த்தார்!
விடுவா யடா தன்னலத்தை - உன்
விடுதலை திராவிடர் விடுதலையி லுண்டு!"

"வஞ்ச நரிகள் புலிக்காட்டை ஆளுமோ?
வடக்கர் எம்மை ஆளவும் மாளுமோ?
அஞ்சும் வழக்கம் திராவிடர்க் கில்லை!
ஆள்வலி தோள்வலிக் குப்பஞ்சம் இல்லை!"

"சிங்கக் குகையினில் நரிக்கிடம் தந்தோம்!
செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம்!
பொங்கும் உணர்வால் எழும்தமி ழரசு!
போர்தொடங் கிற்றுக் கொட்டடா முரசு!"

"என்தமிழ் அன்னை துன்பம் நீங்கித்
தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்!
என்தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்
துலங்குதல் காண்பேன் தமிழர்
நலங்காண் பேன்நான் நானில மீதிலே!"
"வீடெல்லாம் விடுதலை முழக்கம் மேவுக!
ஊரெலாம் விடுதலை முழக்கம் உயர்க!
காலையில் விடுதலை முழக்கம் காட்டுக!
உண்ணுமுன் விடுதலை முழக்கி உண்க!
உறங்குமுன் விடுதலை முழக்கி உறங்குக!

## 3. பகுத்தறிவுக் குரல்.

### சாதியொழிப்புக் குரல்!

சாதியும் மதமும் சாய்க்கடைப் பழைமையும்
பாதியில் தமிழரின் பண்பைக் கெடுத்தன!
பாவேந்தர் அவற்றைப் பதைபதைப் போடு
சாவடி அடித்துச் சாடி யுரைப்பார்!

"வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்"

"இந்த உலகில் எண்ணிலா மதங்கள்
கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்"

"இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழுகின்றார்!
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?"

"சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடை பெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்"

"சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல
தமிழ்வளர்த்தல் மற் றொன்று!
பாதியை நாடு மறந்தால் - மற்ற
பாதி துலங்குவ தில்லை"

### பகுத்தறிவுக் குரல்!

"பச்சைப் புளுகெலாம் மெய்யாக நம்பிப்
பல்பொருள் இழப்பார்கள் மடமை விரும்பி!"

"புனைசுருட்டுக் குப்பை அன்றோ - பழம்
புராண வழக்கங்கள் யாவும்?
இனிமேலும் விட்டுவைக் காதே!
எடு துடைப்பத்தைஇப் போதே"

"பாழ்படும் பழமை சூழ்வது திறமா?
பகுத்தறி வால்நலம் வகுப்பது திறமா?

"ஊர்ப்பானை தன்னை உருட்டி உயிர்வாழும்
பார்ப்பானை நீக்கிப் பழிகாரர் - தீர்ப்பான
னையும் சடங்ககற்றி நற்றமிழர் ஒப்புமணம்
செய்வாயா?"

"குடிக்கவும் நீரற்றிருக்கும் - ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல் கொடுந்தடி யர்க்கு
மடங்கட்டி வைத்ததினாலே - தம்பி
வசங்கெட்டுப் போனது நமதுநன் னாடு"

"கடவுள் கடவுள் என்றெதற்கும்
கதறுகின்ற மனிதர்காள்
கடவுள் என்ற நாமதேயம்
கழறி டாத நாளிலும்
உடைமை யாவும் பொதுமையாக
உலகு நன்று வாழ்ந்ததாம்!

"உடை சுமந்த கழுதைகொண்டு
உழைத்ததோர் நிலைமையும்
உடைமை முற்றும் படையை ஏவி
அடையும் மன்னர் நிலைமையும்
கடவு ளாணை யாயின், அந்த
உடை வெளுக்கும் தோழைரைக்
கடவுள்தான் முன்னேற்றுமோ - தன்
கழுதைதான் முன்னேற்றுமோ"

(வேறு)

- இப்படிப் பலவாறாக எழுதினார் பாவின் வேந்தர்!
தப்படிக் கூற்றாய் முன்னம் தகவிலார் கட்டி வைத்த
செப்படி வேலை யெல்லாம் சிறுமையை இகழ்வை எல்லாம்
முப்படி அடித்துத் தள்ளி மூடக்கொள் கைகடிந்தார்!

## 4. பெண்ணுரிமைக்குரல்!

தாலாட்டுப் பாட்டிலேயே பெண்ணுரிமை பேசுகின்றார்.

"மூடத் தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!"

"வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி"

**பெண்ணுரிமை:**

"பெண்களால் முன்னேறக் கூடும் - நம்
பைந்தமிழ் நாடும்எந் நாடும்"

"ஆண்உயர் வென்பதும் பெண்உயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை!
வாணிகம் செய்யலாம் பெண்கள் - நல்
வானூர்தி ஓட்டலாம் பெண்கள்!"

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"

"இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்
இலேசுவழி ஒன்றுண்டு; பெண்களைஆ டவர்கள்
எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்;
தாய்மையினை இழித்துரைக்கும் நூலும் ஒரு நூலா?"

"அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்
அழகிய தமிழ்நாட்டின் கண்கள்!"

**கல்வி நலம்:**

தலைவாரிப் பூச்சூடி உன்னைப் - பாட
சாலைக்குப் போஎன்று சொன்னாள்உன் அன்னை!

சிலைபோல ஏனங்கு நின்றாய் - நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்!
மலைவாழை யல்லவோ கல்வி - நீ
வாயார உண்ணுவாய் போ,என் புதல்வி!

படியாத பெண்ணாயிருந்தால் - கேலி
பண்ணுவார் என்னைஇவ் வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடுமுன் ஓடு - என்
கண்ணல்ல அண்டைவீட்டுப்பெண்க ளோடு!

கடிதாயிருக்கும் இப்போது - கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியும்அப் போது!
கடல் சூழ்ந்த இத்தமிழ்நாடு - பெண்
கல்வி பெண்கல்விஎன் கின்ற தன்போடு!"

(வேறு)

"காலுக்குப் புன்னையிலை போலும் செருப்பணிந்து
கையில் விரித்தகுடை தூக்கி - நல்ல
கல்விக் கழகமதை நோக்கிக் - காய்ச்சும்
பாலுக்கு நிகர்மொழிப் பாவை நீ செல்லுவதைப்
பார்க்கும் இன்பந்தானடி பாக்கி''

"மேலுக்குச் சட்டையிட்டு மெல்லியசிற் றாடைகட்டி
வீட்டினின்றும் ஆட்டமயில் போலே - கைம்
மேற்சுவடி யோடுதெரு மேலே - கூர்
வேலுக்கு நிகர்விழி மெல்லி நீ செல் வதைக்காண
வேண்டுமே இப் பெற்றவள்கண் ணாலே!''

(வேறு)

"பெற்றநல் தாய்தந்தை மாரே - நும்
பெண்களைக் கற்கவைப் பீரே!''

**மணவுரிமை!**

"மாவடு நிகர்விழிச் சின்னஞ் சிறுமியே, நீ
மங்கை எனும் பருவம் கொண்டு - காதல்
வாழ்வுக் கோர் மாப்பிள்ளையைக் கண்டு - காட்டித்
'தேவை இவன்' எனவே செப்பும் மொழி எனக்குத்
தேன், கனி, தித்திக்கும் கற் கண்டு''

(வேறு)

"கலியாணம் ஆகாத பெண்ணே- உன்
கதிதன்னை நீ நிச்சயம் செய்க கண்ணே
வல்லமை பேசியுன் வீட்டில் - பெண்
வாங்கவே வந்திடு வார்சில பேர்கள்!
நல்லவிலை பேசுவார்கள் - உன்னை
நாளும் நலிந்து சுமந்துபெற் றோர்கள்!

கல்லென உன்னை மதிப்பார் - கண்ணில்
கல்யாண மாப்பிள்ளை தன்னையும் காட்டார்!
வல்லி உனக்கொரு நீதி! - இந்த
வஞ்சகத் தரகர்க்கு நீ அஞ்ச வேண்டாம்!
கற்றவளே ஒன்று சொல்வேன் - உன்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவன் நாதன்!''!
"ஞாயந் தராவிடில் விடுதலை மேற்கொள்''
"மண்ணாய்ப் போக மண்ணாய்ப் போக
மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப் போக''

**இல்லற உரிமை:**

"பெண்டாட்டி என்று பெயரடைந்த நாள்முதலே
ஒண்டொடிக்கும் சொத்தில் ஒருபாதி உண்டுரிமை!
தன்மனைவி செத்தால்தான் வேறுமணம் தான் செயலாம்!
இன்னல் மனைவிக் கிழைத்தால் கொலைக்குற்றம்"

"கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்
கடைத்தேற வழியின்றி விழிக்கின் றார்கள்!
புல்லென்றே நினைக்கின்றீர் மனைவிமாரை
புருஷர்களின் உபயோகம் பெரிதென்கின்றீர்"

**மறுமண உரிமை:**

"துணைவி இறந்தபின் வேறு துணைவியைத்
தேடுமோர் ஆடவன் போல் - பெண்ணும்
துணைவன் இறந்தபின் வேறு துணைதேடச்
சொல்லிடு வோம்புவிமேல்!"

(வேறு)

"ஆடவரின் காதலுக்கும் பெண்கள்கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட் கின்றான்!
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?

"துணையிழந்த பெண்கட்குக் காதல் பொய்யோ?
சுகம்வேண்டா திருப்பதுண்டோ அவர்கள் உள்ளம்
அணையாத காதலினை அணைக்கச் சொன்னீர்!
அணைகடந்தால் உங்கள் நடை எந்தமூலை?"

**பொதுத்தொண்டு உரிமை:**

(வேறு)

"தமிழ்காத்து நாட்டினைக் காப்பாய் - பெண்ணே
தமிழரின் மேன்மையைக் காப்பாய்!
தமிழகம் நம்மதென் றார்ப்பாய்!"
தடையினைக் காலினால் தேய்ப்பாய்!"

**5. இனமானக்குரல்!**

"தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்!
செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்"

"தமிழென்ற உணர்வினைக் குவியடா யார்க்கும்
தமிழருக் கிங்குள்ள குறையெலாம் தீர்க்கும்"

"தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய்தடுத்தாலும் விடேன்!
எமை நத்து வாயென எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும் தொடேன்!"

"உயர்தமிழ், உயர்நடை, உயர்தனி வீரம்
இங்கிவை தமிழரின் உடைமை"

"பண்டிருந்த தமிழர் மேன்மை
பழுதாக முழுதுமே
கண்டிருந்தும் குகையிற் புலிபோல்
கண்ணுறக்கம் ஏனோ?"

"தனி உலகை ஆண்டனை முன்னாள்
தன்மானம் இழந்திடாதே இந்நாள்!"

"சின்ன நினைப்புகள் தன்மானமற்ற
செயல்களை இனிவிட்டு வையோம்"

"தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன்சீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு, தமிழ மக்கள்
தமிழ்என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்த தில்லை."
(வேறு)

"இனமான திராவிடர் பண்பின்
எழில்காண உணர்வுவிளக் கேற்று!"

"தமிழ் எங்கள் உயிரென்ப தாலே . வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!"
(வேறு)

உன் மறத்தனம் எங்கே?

"கைவிரித்து வந்த கயவர் நம்மிடைப்
பொய்விரித்து நம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென் பாரெனில்
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?"

தமிழனுக்கெதிரான ஆட்சி நிலைக்காது.

"தன்னினம் மாய்க்கும் தறுதலை யாட்சி
சற்றும் நிலைக்காது மாளும்"

"வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையிருப் பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணாக் கடல்போல் மாப்பகை மேல்விடு!

மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
செந்தமிழ்ச் சொல்லால் செயலால் தடம்பெருந்
தோளால் தொடங்குக பணியை!

சிறுத்தையே! வெளியில்வா!
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலியெனச் செயல்செயப் புறப்படு!

சூத்திரன் இல்லை!
மனிதரில் நீயுமோர் மனிதன்! மண்ணன்று!
இமை திற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு! (முகம் தொங்கிக் கிடக்காதே)
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!"

"அடக்குமுறை செய்திடல் முடியும் - கொள்கை
அழிக்குமுறை எவ்வாறு முடியும்?

ஆண் பிள்ளைத் தாலாட்டு!

"ஆரியர்கள் இங்கே அடிவைக்கு முன்னமே
வேரிட்டு வாழ்ந்த வெற்றித் திராவிடரின்
பேரர்க்குப் பேரனே!"

(வேறு)

"வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்
றுடலினால் பலராய்க் காண்பார்!
கள்ளத்தால் நெருங்கொ ணாதே
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளுநாள் எந்நாள்? உள்ளம்
சொக்குநாள் எந்த நாளோ?"

(வேறு)

"ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
..................................................."

(வேறு)

"தமிழர்க்குத் தொண்டுசெயும் தமிழனுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்!"

(வேறு)

"தமிழனொரு தமிழனுக்குத் தீங்கு செய்தால்
தனிமுறையிற் செய்ததென அதை மறந்து
தமிழரது பொதுநலத்துக் குயிரும் தந்து
தமிழரது பண்பைநிலை நிறுத்தல் வேண்டும்!
தமிழனுக்குத் தனிமுறையில் செய்த தீமை
தமிழர்க்குச் செய்ததென நினைத்தல் நன்றா?
தமிழரெல்லாம் ஒன்றுபடத் தக்கநேரம்
தமிழரிதை மறப்பாரேல் இனமே சாகும்!

**முடிவு:**

பாரதி தாசனார் பாட்டுகள் ஆரியர்
வேரை அறுப்பன! விளைவைத் தடுப்பன!
வேதப் புரட்டுகள் தமைவெருட் டுவன!
புராணப் புளுகினைப் புதைத்துமூ டுவன!
சாதிக் கொள்கையைச் சாகடித் திடுவன!
மதப் புரட்டுகளை மாய்த்துத் தொலைப்பன!
மூடக் கொள்கைக்குத் தீமூட் டுவன!
தமிழனுக் குணர்வைத் தந்திடும் தணல்அவை!
அமிழாக் கொள்கையை ஆர்க்கும் முரசவை!
வளைந்த கூனை நிமிர்த்தும் வகையின!
குலைந்த அவன்றன் குலத்தை இணைப்பன!
தமிழ்மொழிக் கவை எரு! தாழ்ச்சிக்கு நெருப்பு!
அமிழ்ந்த புகழை அகழும் மண் வெட்டிகள்!

தூங்கிக் கிடந்த தமிழர் தோள்களை
வீங்க வைத்தன பாவேந்தர் பாக்கள்!

வாடிக் கிடந்த தமிழர் நரம்பினில்
ஓடிக் கிளர்ந்தது செந்தமிழ்க் குருதி!

அடைத்துக் கிடந்த தமிழரின் உணர்வுகள்
புடைத்துப் பொருமின பாவேந்தர் பாட்டால்!

புரட்சிப் பாவலர் புகட்டிய மறப்பால்
குறட்டை விட்ட தமிழரின் குரலையும்
வறண்ட நெஞ்சையும் நனைத்ததும் தமிழர்
அரண்டு விழித்தனர்; ஆர்த்தெழுந் துருமினர்!

மறந்த தமிழ்நலம் பேணத் தொடங்கினர்!
இறந்த பழம்புகழ் தமிழ்மேல் ஏற்றினர்!

ஆரியப் பகையின் அடிவயிறு கலக்கினர்!
ஏறிய அவர்திறம் இறக்கிக் காட்டினர்!

(வேறு)

ஈங்கிதைத்தான் பாவேந்தன் எடுத்துரைக்கக் கேட்டோம்!
ஏற்றமிகு பாக்களினால் மாற்றம்வரக் காணோம்!
ஆங்கதையே பெருமை யெனக் கருதிவிட்ட ததனால்
அவன்கருத்தை விட்டுவிட்டே அவன்பெருமை ஆர்ப்போம்!
தூங்குகின்றோம்; தூங்குகின்றோம்; தூங்குகின்றோம் இன்னும்!
தொடையினிலே கயிறுபிறர் திரிக்கத்தூங் குகின்றோம்!
ஏங்கினவன் பாவேந்தன்! எடுத்தெடுத்துச் சொன்னான்!
எந்தமிழர் கேளார்கள் எனவறிந்தும் சொன்னான்!
இறுதியிலே உங்கட்குச் சொல்லுகின்றேன் பெரியீர்!
எந்தமிழத் தாய்மாரே! இளைஞர்களே! தமிழீர்!
உறுதியிலே நமக்குய்தி வேண்டுமென்றால் முதலில்
உணர்வுபெற நாமெல்லாம் ஒன்றாதல் வேண்டும்!
அறுதியிட்டுச் சொல்கின்றேன் தமிழொன்றே நம்மை
அனைவரையும் ஒன்றிணைக்கும்! ஓரினமாய் ஆக்கும்!
மறுதிசையில் முகந்திருப்பா துளந்திருப்பா திருப்பின்
மறுநொடியில் இனம்செழிக்கும்! தமிழ்நாடும் கிடைக்கும்!

வாழ்க தமிழ்!
வெல்க தமிழர்!
வருக தமிழராட்சி!
வணக்கம்.

# 13. பாவேந்தர் உள்ளம்!

(புதுச்சேரி கம்பன் கலையரங்கத்தில் பாவேந்தர் தமிழ் இயக்கத்தின் சார்பில் 1.6.87 அன்று நடைபெற்ற பாவேந்தர் விழா பாட்டரங்கில் தலைமையேற்றுப் பாடியது.)

## முன்னுரை!

பேரன்பு மிக்க பெரியோரே! தாய்மாரே!
போராசிரியப் பெருமக்காள்! நல்லிளைஞீர்!
பாட்டரங்கம் ஏறவந்த பாப்புலவீர்! பாவேந்தை
நாட்டரங்கம் தன்னில் நலஞ்சுவைக்க வந்த, தமிழ்
அன்புடையீர்! இனநலம் ஆர்க்கின்ற நல்லவையீர்!
என்பு நெகிழ்ந்துருக யாவரையும் வணங்குகின்றேன்!

புரட்சிக்குப் பாவேந்தன்! பொங்குதமிழ்ப் பேரினத்தின்
மருட்சி நீக்கவந்த மாமருந்து! ஆரியத்தைப்
பாட்டால் அடித்துப் பதைபதைக்க வைத்ததமிழ்க்
கோட்டுக் களிறு! கொட்டிவைத்த பாக்குவியல்!
கூனாத நெஞ்சன்! குறைவுபடாக் கொள்கைமலை!
ஆனான பாட்டனெல்லாம் அவனடிக்குத் தாளாமல்
நெஞ்சை நசுக்கிக்கொண்ட நேர்ச்சியினை நாம் கண்டோம்!
பஞ்சைப்பா வலனல்லன்; பாய்ந்தெழுந்த தேனருவி!
அஞ்சாமல் யார்க்கும் அரிமாப்போல் முழங்கியவன்!
துஞ்சாமல் தோளுயர்த்தித் தமிழினத்தைத் தூக்க வந்தோன்!

ஈங்கதனால் தானே இவனுக்கு விழாவெடுத்தார்!
தூங்குகின்ற நந்தமிழர் உணர்வுக்குத் தீவைத்தார்!
புரட்சிப்பா வேந்தனுக்குப் போற்றுவிழா அமைந்ததனால்
மருட்சி யடைந்திருப்பார் நம்பகைவர் மனம்வைத்தே!

பாவேந்தைப் பாடினால் பணம்வந்து சேராது!
ஆவல் அடங்கும்! அடிவயிறு தான்குளிரும்!
மேனியெலாம் நன்றியெனும் நல்லுணர்வால் மேல்சிலிர்க்கும்!
தேனில் விழுந்ததுபோல் நாவெல்லாம் தித்திக்கும்!
உள்ளம் கிளர்ச்சியுறும்! உயிரும் உவகைபெறும்!
குள்ள நினைவழியும்! கோபுரமாய் வாழ்வுயரும்!
அவனுரைத்த சூள்தன்னை அவன்வாயால் கேளுங்கள்!
எவனுரைத்தான் இவ்வாறாய், எந்தமிழ்ப்பா வேந்தனல்லால்?

(வேறு)

**"நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்**
**நலிவதை நான் கண்டும்**
**ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி**
**உழைத்திட நான் தவறேன்''**

(வேறு)

சாவேந்தாப் புகழ்பெற்ற நல்லுணர்வுச் சான்றோன்,அப்
பாவேந்தன் குறிக்கோளைப் பாடுகின்றான் கேளுங்கள்!

(வேறு)

புதுவைக் குயிலொலித்த புதுமைக் குரல்தன்னில்
பொதுமை உணர்வால் பொலிந்த **தமிழுள்ளம்**
இன்றுவரை பிறர்அறியா **இனவுணர் வுள்ளம்**
நம்மவரை மேலுயர்த்தும் **நாட்டுணர் வுள்ளம்**
எம்மவர்க்கே இன்பூட்டும் **இயற்கை வுணர்வுள்ளம்**
காளையர்க்கும் கன்னியர்க்கும் இனிக்கும் **காதலுள்ளம்**
என்றெல்லாம் பாவலர்கள் இங்கெடுத்துப் பாடவுள்ளார்!
தொன்றெழுந்த உள்ளுணர்வால் எழுச்சி தோற்றுவிப்பார்!
இங்கெடுத்துப் பாடுகின்ற பாடல்களை நீங்களெல்லாம்
பொங்கும் உணர்வோடும் பூரிக்கும் நெஞ்சோடும்
அமைந்திருந்து கேட்கும்படி ஆவலினால் வேண்டுகின்றேன்!
இமைதிறந்து கண்பார்த் திருந்து!

**1. தமிழுள்ளம் -புலவர் இறைக்குருவனார் வருகை அழைப்பு**

பாவேந்தர் உள்ளமெனும் பாத்தோப்பில் **தமிழுள்ளம்**
பாடுவார் இறைக்குருவ னார்!
பைந்தமிழில் புலவரவர்; பாவேந்தர் உளமறிவார்!
பன்னூல்கள் யாத்த திறவோர்!
தேவேந்தன் அழைத்தாலும் தமிழ்க்கொள்கை மாறாதார்!
தீமைக்குத் துணைபோகாதார்!
திரு.வி.க., மறைமலை சார் தீந்தமிழின் வழிமரபார்;
தேவநேயர்க்கும் துணைவர்!
நாவேந்தும் தனித்தமிழில் நயமுறவே பயிற்றுவிக்கும்
நற்றிறமும் வாய்ந்த திருவார்!
நாளிதழாம் முரசொலியில் கலைஞர்க்குத் துணையாக
நாள்தோறும் தொண்டுசெய்வார்!

ஈவேந்தும் தென்மொழியின் தொடக்கநிலைத் தொண்டரவர்!
இனியவுரைப் பொழிவில் வல்லார்!
இசைப்புலவர்; உரைப்புலவர்; இவண்வருவார்; பாவேந்தர்
இனியதமிழ் உள்ளம் காண்பார்!

**2. இனவுணர்வு - அரிமாப் பாண்டியன்**

பெரியார் கொள்கையின்
அரிமாப் பாண்டியன்
அரிய இனவுணர் வளிக்கும் பாவலர்!
ஆனைமுத் தீன்ற அணிமுத்தைச் சூடியவர்!
கோணைக் கொள்கையர் அல்லர்! என்றும்
குனியாக் கொள்கையர்! தனித்தமிழ் உணர்வினர்!
இனநல உணர்வை எடுத்திங் குரைத்திட!
அன்புடன் அவரை அழைப்போம்! அவரும்
தென்புடன் நறும்பா திகழ்ந்திடத் தருவார்!

**3. நாட்டுணர்வு . தமிழியக்கன்**

தனித்தமிழ்ப் பாவலர் தமிழியக்கனார்
இனித்த தமிழில் இலக்கியம் வடிப்பவர்!
தென்மொழி தமிழ்ச்சிட் டிதழ்களில் தெவிட்டா
நன்முறை அறிவியல் உயிரியல் பற்றிப்
பற்பல பாக்கள் பயன்மிக எழுதி
நற்புகழ் பெற்றவர்! நற்றமிழ் வளர்ப்பவர்!
அன்ன புலவர்தாம் அரும்பா வேந்தர்
நன்னரும் உணர்வில் நாட்டுணர் வூட்டிடும்
இன்னரும் பாக்களை எடுத்திங் கியம்புவார்!
இந்நாள் அவர்குரலுக் கேற்றம் பலவாம்!
இளைஞர்க் கவர்குரல் ஏற்ற நறுங்குரல்!
வினைவலர் பலரை விளைவித் திடும்வகை
அவர்குரல் அமைக! ஆர்வம் பொங்குக!
எவரும் மகிழ்ந்திட இவரையாம் அழைப்போம்!

**4. இயற்கை -கலியபெருமாள்**

கவின்தமிழ்ப் பாவலர் கலிய பெருமாள்!
செவியும் உள்ளமும் சிலிர்த்து மகிழ்ந்திட
பாவேந்தர் இயற்கையைப் பாடிய உணர்வினை

நாவேந்தி உரைத்திட நம்மிடை வருவார்!
அருந்தமிழ் பயிற்றும் ஆசிரியர் என்னும்
பெருந்தமிழ்ப் பணியால் பைந்தமிழ் வளர்ப்பவர்!
அன்னவர் தம்மை அழைப்போம்! இயற்கையின்
நன்னரும் பாக்களை நயமுடன் வழங்கவே!

**5. பாவேந்தர் பொதுமையுள்ளம் - பாவலர் முல்லைவாணன்**

பாவலர் முல்லை வாணன்
பாவேந்தர் பொதுமை யுள்ளம்
ஆவலால் வந்துரைப் பார்!
அவர்வரவை வாழ்த்துவோம்!
மேவியிருந்தசிங்கை யிலிருந்து
மேன்மைத் தமிழ்வளர்த்தவர்!
ஆவியால் தமிழையும்
உடலால் இனத்தையும் கொண்டவர்!
பாவேந்தர் பொதுமை யுள்ளம்
பாடுவார் முல்லை வாணன்!
மூவேந்தர் இருந்தால் இங்கே
பாவேந்தர்க்கு ஊரளிப்பார்!

**6. காதலுணர்வு - பொன்னடியான்**

புதுவைப்பா வேந்தன்வழிப்
பூத்திருக்கும் பாமலருள்
பொன்னடியான் என்னும்
புரட்சிமலர் ஒன்றாகும்!
நன்னரும் இம்மலர் நாடறிந்த பாமலர்!
கடற்கரைப் பாவரங்கம் கூட்டும் கவின்மலர்!
கெடற்கரிய பாக்கள் கிடைத்துள் ளனஅவரால்!
முல்லைச் சரமென்னும் முழுப்பாடல் நல்லிதழை
நல்ல நல்ல பாக்களுடன் நயந்தளிக்கும் பாட்டறிஞர்!
அன்ன பாவலர்தம் ஆசிரியர் உள்ளத்தில்
காதல் உணர்வு களிக்கின்ற உணர்வுதனை
ஈங்கெடுத்துச் சொல்வார்! இருந்துநாம் கேட்போம்.

**முடிவுப்பா:**

புலவர் இறைக்குருவனார் பாவேந்தர் தமிழுள்ளம்
இலகுசெந் தமிழில் நன்கெடுத்துக் காட்டினார்.

அடுத்து,

அரிமாப் பாண்டியன் அழகுத் தமிழில்
அரிமா முழக்கமாய் பாவேந்தர் உரைப்பதுபோல்
அவரின் இனஉணர்வு எடுத்துக் காட்டினார்.
இருந்து கேட்போம்! இனி,

அடுத்து,

பாவலர் தமிழியக்கன் பாடினார் பாவேந்தர்
நாவால் உதிர்த்த நாட்டுணர்வை கேட்டோம்!
இற்றைத் தமிழர்க்கு இன்றியமையா உணர்வது
அற்றைப் பெருமையை ஆக்குவது அவ்வுணர்வு!

அடுத்து,

பாவேந்தர் இயற்கை உணர்வினை எடுத்தே
ஆவலாய் இங்கே அருமைப் பாவலர்!
கலிய பெருமாள் களிப்பெழப் பாடினார்!
பொலிந்த வாணிதாசன் மருகர் வாழ்க!

**முடிவுரை**

பாவேந்தர் கருத்துநலன் பாப்புலவர் சொன்னார்!
பழகுதமிழ்ச் சொல்லருமை கேட்டிருந்தோம் நாமும்!
பூவேந்தும் நறுந்தேனைச் சுவைத்திடும்தே னீக்கள்
போலன்றோ நாம்சுவைத்தோம்! புலவரெலாம் வாழ்க!
சாவேந்திச் சென்றதெனப் பாவேந்தைச் சொன்னார்!
சரியில்லை என்போம் நாம்! செந்தமிழ்த்தீம் புலவர்
நாவேந்தி வாழ்கின்றார் பாவேந்தர்! உண்மை!
நாடெல்லாம் வீடெல்லாம் அவர்வாழ்கின் றாரே!

**1. தமிழுணர்வு:**

செந்தமிழ்க்கே அவர்பிறந்தார்;! செந்தமிழ்க்கே வாழ்ந்தார்!
செந்தமிழ்க்கே மூச்சுயிர்த்தார்; செந்தமிழ்க்கே பேசிச்
செந்தமிழ்க்கே அவருழைத்தார்! செந்தமிழாய் நின்றார்!
செந்தமிழ்க்கே ஒளியேற்றிச் செந்தமிழ்க்கே மாய்ந்தார்!
செந்தமிழ்க்கே பாவேந்தால் செழும்பெருமை யன்றோ?

செந்தமிழ்க்கே நாமிருப்போம் என்னில்,அவர் கொடையே!
செந்தமிழ்க்கே வாழ்ந்தவரும் செத்தொழிவ துண்டோ?
செந்தமிழும் வாழும்வரை அவர்தமிழும் வாழும்!

செந்தமிழ்மேல் பாவேந்தன் வைத்தபெரும் அன்பைச்
சிறுமைபெற வெறியென்னும் வெறிநாய்கள் மட்டும்
தந்தம்மொழி மேல்வைக்க விலையா,இந் நாட்டில்?
தாய்மொழிமேல் அன்புவைத்தே இனம்பேணல் தீதா?
இந்திமொழி மேலவர்கள் வெறியின்றித் தானோ
'எல்லாரும் இந்திபடித் திடுக' என மொழிவார்!
சொந்தமொழிக் குயர்வின்றி இனந்தாழும் போது
சொத்தைமொழி - பிறமொழியைப் போற்றுவதே தீது.

**செந்நெல் மாற்றிய சோறும் - பசுநெய்**
**தேக்கிய கறியின் வகையும்,**
**தன்னிகர் தானியம் முதிரை - கட்டித்**
**தயிரொடு மிளகின் சாறும்**
**நன்மது ரஞ்செய் கிழங்கு - காணில்**
**நாவில் இனித்திடும் அப்பம்**
**உன்னை வளர்ப்பன தமிழா - உயிரை**
**உணர்வை வளர்ப்பது தமிழே!**

தமிழ்வளர்ச்சி யாலிந்த வையகமே உய்மாம்!
தண்டமிழ்ப்பா வேந்தனவன் சொல்லுவதைக் கேட்பீர்!

**'வையகமே உய்யுமாறு, வாய்த்த தமிழ்**
**என் அரும் பேறு'**

தமிழ்வளர்ச்சித் திட்டமொன்றே அவனின் தமிழியக்கம்
தமிழியக்கம் நூல்போதும் அவன்பெருமை சாற்ற!
தமிழ்வளர்க்காத் தமிழினமோ தான்வளர்தல் இல்லை!
தன்மொழிகா வாதஇனம் வளர்ந்ததுண்டோ உலகில்?

**ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்**
**ஒவ்வொன்றும் உன்முன் னேற்றம்!**

**உன்தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற**
**வெற்றியெலாம் உன்றன் வெற்றி.**

**2. இனவுணர்வு!**

இனம்பாடி இனம்பாடி இனம்விழிக்கும் என்றே
எதிர்பார்த்தான் பாவேந்தன்! இனும்விடிய வில்லை.
மனம்போன படிவாழ்ந்து மாக்களினும் கேடாய்
மண்ணுலகில் தமிழினந்தான் பின்னடைந்த தென்று
பெனம்பெரிய பெருமையினை நாம்வாங்கிக் கொண்டோம்
பேசுகின்றோம்! வீசுகின்றோம்! பெருத்தநடை போட்டோம்!
இனும்திருந்த வில்லையெனில் என்றுந்திருந் தோம்நாம்!
'இன்னலிலே துயில்கின்றோம்' பாவேந்தன் சொல்வான்!

**'இன்னலிலேதமிழ் நாட்டினிலே உள்ள**
**என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்!**
**அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கி,என்**
**ஆவியில் வந்து கலந்ததுவே!'**

**'இருட்டறையில் உள்ளதடா உலகமெலாம் சாதி**
**இருக்கின்ற தென்பானும் இருக்கின்றான்'** என்றான்!

திருட்டுக்கூட் டம்தமிழர் கூட்டமென்று சொல்வேன்!
தில்லுமல்லுக் கூட்டமிது; இல்லையென்று சொன்னால்
குருட்டடியாய்ப் பாவேந்தன் பாட்டையெல்லாம் கூட்டங்
கூட்டந்தோ றும்சொல்லிப் பெரும்புலவர் போல
மருட்டுவமா மக்களைநாம்? சொன்னவற்றுள் ஒன்றை
மதிப்பிற்கே னும்செய்து பெருமைபெற் றோமா?

அதைக்கண்டு வருந்துகின்றான் பாவேந்தன் இங்கே!
அப்பாட்டில் அவன்ஏக்கம் கனவெல்லாம் தோன்றும்!

**"தமிழர்நாம் என்றால் நம்பால்**
**தமிழுண்டா? ஒழுக்கம் உண்டா?**
**அமைவுறச் சிறிதுமுண்டா**
**அன்றைய மறத்த னந்தான்?**
**கமழ்ந்திடல் உண்டா கல்வி?**
**கலைநலம் உண்டா? நெல்லின்**
**உமிமுனை அளவி லேனும்**
**ஒற்றுமை உண்டா?"**

**'சரிநிகர் மக்கள் என்னும் அரியதோர்**
**அமைதிக் குரலினை ஆர்தல் எந்நாள்?**
**சமயம் சாதி தவிர்வ தெந்நாள்?**

**‘வெள்ளம்போல் தமிழர் கூட்டம்**
**வீரங்கொள் கூட்டம்! அன்னார்**
**உள்ளத்தால் ஒருவ ரேமற்**
**றுடலினால் பலராய்க் காண்பார்!**
**கள்ளத்தால் நெருங்கொ ணாதே’.**
**எனவையம் கலங்கக் கண்டு**
**துள்ளுநாள் எந்நாள்? உள்ளம்**
**சொக்குநாள் எந்த நாளோ?**

இதைக்கண்டு கொண்டோமா நாம்? என்செய்தோம்? இங்கே
ஏற்றத்தாழ் வொழிந்ததுவா? சாதிகள்மாய்ந் தனவா?
கதைக்கின்றோம் பாடுகின்றோம்! பாவேந்தன் சொன்ன
கருத்துக்கு மதிப்பில்லை! விழாவெடுப்போம்! அதனால்
புதைக்கின்றோம் அவன்பெருமை! புகழ்ச்சிவெறுஞ்சொல்லா?
புரட்சிசொன்னான்! மருட்சியுற்றோம் இருட்காட்டில் வாழ்வோம்!

பழந்தமிழ்ப் புலவர்போல் அவனெழுத வில்லை;
பாவேந்தன் புதுமைக்குக் குரல்தந்து நின்றான்!
இழந்திட்ட புகழ்மீட்க எந்தமிழைப் பாடி
எழுத்தாலே புரட்சிக்குக் கனல்மூட்டி வந்தான்!
முழந்தேடிச் சொற்களையும் வரிகளையும் எழுதல்
முழுவதுமே புலமைக்குத் திறம்என்றெண் ணாமல்
குழந்தைக்கும் விளங்குகின்ற எளியசொல் லாலே
குமுகாயச் சீர்மைக்குப் பாடல்கள் யாத்தான்!

எழுச்சிக்குக் குரல்கொடுத்தான் தமிழர்எல் லாரும்
இனம்மீட்க எழுந்தொருங்கே வாருங்கள் என்றான்!
முழுச்சிதைவே உற்றிருக்கும் இனநலமுன் னேற்றம்.
முன்பிருந்த வரலாற்றைப் புதுக்குகின்ற நோக்கம்.
மழுச்சிதைவே இல்லாமல் உழவேண்டும் தமிழர்!
மறுமலர்ச்சி பெறவேண்டும் தமிழ்இனமும் நாடும்!
குழுச்சிதைவாய் இல்லாமல் கட்சிசிதை வின்றிக்
கூடிநின்றால் தமிழர்க்கு வெற்றியுண்டாம் என்றான்!

(வேறு)

‘தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்!
செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்!’

‘தமிழென்ற உணர்வினைக் குவியடா யார்க்கும்
தமிழருக் கிங்குள்ள குறையெலாம் தீர்க்கும்’

‘தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய்தடுத்தாலும் விடேன்!
எமைநத்து வாயென எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும் விடேன்’’

‘உயர்தமிழ், உயர்நடை, உயர்தனி வீரம்
இங்கிவை தமிழரின் உடைமை’

‘பண்டிருந்த தமிழர் மேன்மை
பழுதாக முழுதுமே
கண்டிருந்தும் குகையிற் புலிபோல்
கண்ணுறக்கம் ஏனோ?’

‘தனி உலகை ஆண்டனை முன்னாள்
தன்மானம் இழந்திடாதே இந்நாள்’’

‘சின்ன நினைப்புகள் தன்மான மற்ற,
செயல்களை இனிவிட்டு வையோம்’

‘தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் சீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு தமிழமக்கள்
தமிழ் என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ் நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை’

‘இனமான திராவிடர் பண்பின்
எழில்காண உணர்வுவிளக் கேற்று’

‘தமிழ்எங்கள் உயிரென்ப தாலே - வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!
‘கைவிரித்து வந்த கயவர் நம்மிடைப்
பொய்விரித்து நம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென் பாரெனில்
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?

**'தன்னினம் மாய்க்கும் தறுதலை யாட்சி**
**சற்றும் நிலைக்காது மாளும்'**

**'ஆரியர்கள் இங்கே அடிவைக்கும் முன்னமே**
**வேரிட்டு வாழ்ந்த வெற்றித் திராவிடரின்**
**பேரர்க்குப் பேரனே!'**

- புதுவைக் குயிலின் புரட்சிக் குரலொலி
இதுவரை மட்டுமா? இன்னமும் கேளீர்!

**தமிழனொரு தமிழனுக்குத் தீங்கு செய்தால்**
**தனிமுறையிற் செய்ததென அதை மறந்து**
**தமிழரது பொதுநலத்துக் குயிரும் தந்து**
**தமிழரது பண்பைநிலை நிறுத்தல் வேண்டும்!**
**தமிழனுக்குத் தனிமுறையில் செய்த தீமை**
**தமிழர்க்குச் செய்ததென நினைத்தல் நன்றா?**
**தமிழரெல்லாம் ஒன்றுபடத் தக்க நேரம்**
**தமிழரிதை மறப்பாரேல் இனமே சாகும்!**

நம்மினத்தை அன்னவன்போல் விழிக்கவைத்த முயற்சி
நாளைவரை எப்புலவன் தமிழகத்தில் செய்தான்!
வெம்மனத்தைக் கொண்டுள்ளோம்! வீண்வாழ்க்கை வாழ்வோம்!
விடியாத மூஞ்சிகளாய்த் தூங்குகின்றோம் இன்னும்!
அம்மணமாய் நம்முன்னர் அலைந்தவர்கள் எல்லாம்
அழகழகாய் உடையுடுத்தே உலகஉலாப் போந்தார்!
கும்மிருளில் குருட்டாட்டம் போடுகின்றோம்! ஐயோ!
'கும்பிக்குச் சோறு'என்றால் தாயினைவிற் கின்றோம்!

**3. நாட்டுணர்வுள்ளம்:**

மொழிவிடு தலையும் இனவிடு தலையும்
பழியிலாப் பாவலன் விரும்பிய கொள்கை!
நாட்டு விடுதலையும் நன்றென மொழிந்தான்!
வாட்டு ஆரியத்தினும் வடவர்சூழ்ச் சியினும்
தமிழக மக்கள் தப்பிட வேண்டில்
தமிழகம் பிரிதலும் தக்கதே என்றான்!

**“விடுதலை பெறுவது முதல் வேலை!**
**அடிமையில் உழல்வது முடியாது!**
**விழிதுயில் வதுமிகு தவறாகும் எழுவீரே”**

- என்று எழுச்சி பாடினான்

இனியவனும் நாடுபற்றி எடுத்துரைத்த வெல்லாம்
இங்கெடுத்துக் கூறிவிடல் எளிதிலைகாண் பெரியீர்!
‘எனையீன்ற தந்தைக்கும் தாயினுக்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்குமென்ற னாலே
தினையளவும் நலமேனும் கிடைத்திடுவ தென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாம்’என்றே
பனிமொழியில் சூளுரைத்துப் பாவேந்தன் சொன்னான்!
பாவலருள் எவரிந்த உரைசொன்னார்? பாரீர்!

எரிகின்ற நெஞ்சின்மேல் ஆணையிட்டுச் சொன்னான்!
இனியெங்கள் ஆட்சியிந்த நாட்டிலென்றே உரைத்தான்!
எரிசருகு தமிழர்களை எதிர்த்திடுவோர் என்றான்!
இன்னுமவன் நாடுபற்றிச் சொன்னமொழி கேட்பீர்!

**‘ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ**
**அல்லல்கள் வரின் ஏற்பேன்!**
**ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு**
**உவப்புடன் நான் சேர்ப்பேன்’**

**‘செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க**
**நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்**
**வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று**
**குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!**

புரிகின்ற தமிழ்ப்போர்க்குப் புதுப்புரட்டுக் காரர்
புலைமனத்தால் தடையிடுவார் நாம்அஞ்சல் வேண்டாம்!
சரிகின்ற தமிழினத்தைக் காத்திடுதற் கென்றே
சாகாத உணர்வுடைய இளைஞர்க்கிவை சொல்வான்!

**‘சிம்புட் பறவையே சிறகை விரி! எழு!**
**சிங்க இளைஞனே! திருப்புமுகம்! திற விழி!**
**இங்குன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?’**

வஞ்சங்கள் சிறிதல்ல தம்பி!
இடைநாளில் மட்டுமா? சென்ற
இரண்டாயிரத்தாண்டு பார்த்தார்!
விடுவா யடா தன்னலத்தை - உன்
விடுதலை திராவிடர் விடுதலையில் உண்டு!"

"வஞ்ச நரிகள் புலிக்காட்டை ஆளுமோ?
வடக்கர் எம்மை ஆளவும் மாளுமோ?
அஞ்சும் வழக்கம் திராவிடர்க் கில்லை!
ஆள்வலி தோள்வலிக் குப்பஞ்சம் இல்லை!"

"சிங்கக் குகையினில் நரிக்கிடம் தந்தோம்!
செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம்!
பொங்கும் உணர்வால் எழும்தமி ழரசு!
போர்தொடங் கிற்றுக் கொட்டடா முரசு!"

'எந்தமிழ் அன்னை துன்பம் நீங்கித்
தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்!
என்தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்
துலங்குதல் காண்பேன் தமிழர்
நலங்காண் பேன்நான் நானில மீதிலே!"

'வீடெல்லாம் விடுதலை முழக்கம் மேவுக!
ஊரெல்லாம் விடுதலை முழக்கம் உயர்க!
காலையில் விடுதலை முழக்கம் காட்டுக!
உண்ணுமுன் விடுதலை முழக்கி உண்க!
உறங்குமுன் விடுதலை முழக்கி உறங்குக!

## 4. இயற்கை உணர்வுள்ளம்!

இருக்கின்ற பாவலர்கள் இருகோடி என்றால்
இயற்கைப்பா வலர்அவருள் இருபதுபேர் இருப்பர்!
கருக்குழியில் ஒளியேறி உணர்வேறித் திருவில்
கற்பனையாம் பொலிவேறிப் பாட்டுணர்வும் ஏறி,
உருக்கொண்டு தாய்மடிமேல் வீழ்ந்தபின்னே அவளின்
ஒளிமார்புக் காம்புவழித் தமிழேறிப் பாய்ந்தால்,
தெருக்கடையில் இறங்குகையில் பாட்டுவரும் தெளிவீர்!
தெம்மாங்குச் செந்நாவில் எழுந்துவிளை யாடும்!
அன்னவரைத் தாம்இயற்கைப் பாவலர்கள் என்போம்!

அப்படித்தான் **'கனகசுப்பு ரத்தினம்' 'பா வேந்தன்'**
இன்னவரைப் போல்இயற்கை இயற்றிவைத்த பேருள்
இவர் அவரின் ஆசானுக் காசான்என் றுரைப்போம்!
முன்னவரைப் - **பாரதியைக்** - குறைசொல்ல வில்லை!
மூச்சில்இவர் தமிழுயிர்த்தால் பேச்சில்அவர் என்போம்!
என்னபடி பார்த்தாலும் பாரதிபாட் டுக்கே
ஏழுபடி மேலிருக்கும் பாவேந்தன் பாட்டு!

நடுநிலையில் லாமலிதை நாம்சொல் வில்லை!
நாமவரின் வழிவந்த நன்றியுரை இல்லை!
கெடுநிலையில் பார்ப்பனர்கள் பாவேந்தர் பாட்டைக்
கீழ்வைத்துப் பேசுகின்றார்; நாமவர்க்குச் சொல்வோம்!
தொடுநிலையில் - பாட்டுணர்வில் - தோய்கின்ற நிலையில்.
தூய்தமிழை மனங்கொண்டு பாடுகின்ற நிலையில்,
நெடுநிலையில் - மலைப்புனலாய்ப் பொழிந்திருக்கும் நிலையில் -
நிலைத்திருக்கும் நிலையினிலே - பாவேந்தன் வெல்வான்!

தன் விளக்கம் பாடுகின்றான் பாவேந்தன் இங்கே!
தமிழ்ப்புலவன் செம்மாப்பைக் கேளுங்களிப் பாட்டால்!!

**'சீர்த்தியால் அறத்தால் செழுமையால் வையப்**
**போர்த்திறத்தால் இயற்கை புனைந்தஓர் உயிர், நான்!'**

இன்விளக்கம் இதுவாகும்! 'இயற்கைதந்த உயிர்நான்'
என்றுரைக்க வில்லையவன்; **'புனைந்தஉயிர்'** என்றான்!
என்விளக்கம்! உணர்ந்தீரா? இருக்கும்உயிர் யாவும்
இயற்கைத்தாய் செய்தெடுத்து வீசிவிட்ட உயிராம்!
என்வியப்பு! பாவேந்தன் உயிரைமட்டும் நன்றாய்
எழில்சீர்த்தி அறம்செழுமை வீரத்தொடு புனைந்தாள்!

பாவேந்தன் சொல்கின்றான்! யாரிவன்போல் சொன்னார்?
பாருங்கள் மேன்மேலும் அவன்கையின் வண்ணம்!
நாவேந்திப் பிறர்சொன்னால் உணர்வேந்திச் சொல்வான்!
நல்லதமிழ் பிறர்சொன்னால் உயிர்த்தமிழைச் சொல்வான்!
காவேந்திக் கொண்டிருக்கும் பூவேந்தித் தேனைக்
களிமதர்ப்பக் குடித்திசைக்கும் தேனீப்போல் தமிழின்
ஈவேந்தித் தருகின்றான் செந்தமிழாய்! பாவாய்!
இயற்கையினை இவனைப்போல் படம்பிடித்த தெவரே?

'கடல்நீரும் நீலவானும் கைகோக்கும்' என்றே
கற்பனைக்கும் கற்பனையாய் யார்சொன்னார்? கேட்பீர்!

'கடல்நீரும் நீல வானும்
கைகோக்கும்! அதற்கி தற்கும்
இடையிலே கிடக்கும் வெள்ளம்!
எழில்வீணை! அவ்வீ ணைமேல்
அடிக்கின்ற காற்றோ வீணை
நரம்பினை அசைத்தின் பத்தை
வடிக்கின்ற புலவன்! தம்பி
வன்கடல் பண்பாடல் கேள்!

உடலிலவன் நறுந்தென்றல் உணர்வுபெற்றுப் பேசும்
ஒருபாட்டைக் காட்டுகிறேன் கேளுங்கள் நன்றாய்!

'களிச்சிறு தும்பி பெற்ற
கண்ணாடிச் சிறகில் மின்னித்
துளிச்சிறு மலர்இ தழ்மேல்
கூத்தாடித் துளிதேன் சிந்தி
வெளிச்சிறு பிள்ளை யாடும்
பந்தோடு விளையா டிப்போய்க்
கிளிச்சிற காடை பற்றிக்
கிழிக்கின்றாய் தென்றே லே, நீ!

செருந்தி, ஆச் சா,இலந்தை
தேக்கீந்து, கொன்றை, எல்லாம்
பெருங்காட்டின் கூரை! அந்தப்
பெருங்கூரை மேலே நீண்ட
ஒருமூங்கில்; இருகுரங்கு
கண்டேன்பொன் னூசல்ஆடல்!

# 14. பாவேந்தர் பாராட்டரங்கம்

(முத்தமிழ் மன்றம், ஊரகம் (B.H.E.L) திருச்சி,
பாவேந்தர் நூற்றாண்டு விழா - 22-1-1991)

பேரன்பும் பெருமதிப்பும் கொண்ட பெரியோரே!
சீரன்பு கொண்டிலங்கும் செந்தமிழத் தாய்மாரே!
சாகாத் தமிழ்ப்பண்பு கொண்ட நறுஞ் சான்றோரே!
ஏகாத் தமிழ் வீரம் இலங்கும் இளைஞர்களே!
உங்கள் அனைவர்க்கும் உளங்கனிந்த நல்வணக்கம்!

திங்கள், பரிதி திகழ்கின்ற காலமட்டும்
எங்கள் குலவிளக்காய் இளையோர் தம் கைவிளக்காய்
மங்காத் தமிழ்வளர்த்து மாயா இனம் வளர்த்துப்
பொங்குகின்ற நல்லுணர்வைப் புதுக்கிய நம் பாவேந்தர்
நூற்றாண்டு விழாப்பொழுதில் நடக்கும் இந் நிகழ்ச்சியினைப்
போற்றி மகிழ்கின்றேன் பொழிகின்ற நல்லுரையைக்
கேட்டுப் பெருவீறு கிளர்க்கின்ற நோக்கத்தில்
வீட்டுப் பணிமறந்து வீற்றிருக்கும் உங்களுடை
நல்லுணர்வை - நல்வரவை - நன்றியுடன் வாழ்த்துகின்றேன்
வெல்லுணர்வைஅவ்வுணர்வு விளங்கிடவும் வேண்டுகின்றேன்

இவ்விழாவில் உங்களுடன் என் கருத்தை வைப்பதற்கு
இவ்வூ ரகத்தில் இருக்கும் மிகு மின் நிலைய -
முத்தமிழ் மன்றத்தார் முழுவாய்ப்பைத் தந்துள்ளார்.
அத்தமிழ் மன்றிற்கும் அகங்கனிந்த நன்றி சொல்வேன்!
செத்தழியும் நம் மினத்துச் செய்தியினைப் பேசாமல்
ஒத்தூதி ஒத்தூதி உருக்குலைந்து போயிருக்கும் -
போலி அரசியலை - பொய்ம்மைப் பொருளியலைக்
காலித் தனத்தின் கயமை மிகு கலையியலைக்
கூறுவதால் என்னபயன்? கூத்தாட்டக் காரரெல்லாம்
ஏறுகின்ற ஆட்சி இயங்குகின்ற காலமிது!

இக் காலக் கட்டத்தில் இருக்கின்ற நல்லோர்கள் -
திக் காலுக் கோரிருவ ராய்த் தெரியும் நற்றமிழர் -
அங்கொன்றும் இங் கொன்றுமாய் அழிந்து மடியாமல்
தங்கும் இனவுணர்வு - தாழாத நாட்டுணர்வு -
நல்லதமிழ்ப் பற்றெல்லாம் - நசிந்துபோ காதிருக்கும்
வல்லதமிழ்ச் சான்றோரும் வாழ்ந்துவரு கின்றார்கள்
என்பதற்கோர் சான்றேஆம் இம் மன்ற விழா - என்க!

தின்பதற்கும் துய்ப்பதற்கு மே, தமிழர் திரிகின்றார்!
மன்பதைக்கு நலஞ்சேர்க்க மாந்தர் உழைக்காமல்
விலங்குகளா வந்துழைக்கும்? நாகரிக வேகத்தில்
கலங்குகின்ற மக்களிடம் காசடிக்கும் கூட்டங்கள்-
ஏமாற்றி வாழ்கின்ற எத்தர்களின் கும்பல்கள் -
தாமாற்றும் கயமைக்கெலாம் தமிழை முன் வைத்துப்

பெயரும் பணமும் பெறமுயலும் பீற்றல்கள் -
அயருகின்ற மக்களிடம் ஆர்ப்பரித்து, விளம்பரத்தால்
தேர்தலில் நின்றுவெற்றி தேடும் அரசியல்கள் -
சேர்கின்ற கூட்டத்தில் மதத்தைச் சிக்கவைத்தே
எல்லா நன் மக்களையும் இளித்தவா யர்களாக்கும்
மதவெறியர் கூத்துகள்! மாதலைவர் பெரியாரால்
புதைகுழிக்குப் போய்விட்ட சாதிகளைப் புறந்தோண்டிக்
கதைசெய்து சாதிகளைக் காசாக்கும் கொடுமைகள் -
- இவ்வாறாய்த் தமிழினத்தை இழுபறிக்கே ஆளாக்கிக்
கவ்வி யிழுத்துக் கைவேறு கால்வேறாய்ச்
செய்துவரும் காலத்தில் சிக்கியிருக் கின்றோம், நாம் !
எய்திவரும் துயருக்கோர் எல்லையில்லை, அன்பர்களே!

இந்த நிலைகளெல்லாம் எப்படித்தான் நம்மினத்தை
வந்து கவ்வினவோ? என்று கலங்குகின்றீர்!
வரலாறு தெரியாத வகையினர்தாம் இவ்வாறு
நிரல்நிறையாய் எண்ணத் தெரியாமல் நின்றழுவார்!

உண்மை தெரிந்தால் ஊமையராய் வீற்றிருக்கார்!
மண்மேல் தமிழஇனம் மண்டியிட்டு வாழ்ந்ததில்லை!
எத்திக்கும் சென்றே ஏற்றம் விளைவித்த
முத்தமிழர் வரலாறு முளைக்கும் போ தே,வீரம்
கொப்புளித்துப் பொங்கும் குலைநடுங்கும் வரலாறாம்!

தப்புத் தவறாக நாம்படிக்கும் வரலாற்றில்
இராவணற்குத் தாழ்ச்சி; இராமனுக்கோ ஏற்றம்!
இரணியனுக் கிழிவு! ஏற்றம், பிரக லாதனுக்கு
மாவலிக்கு வீழ்ச்சி! மறையோனுக் குயரெழுச்சி!

தாவி இமயமலை தலைமேல் புலிக்கொடியும்
விற்கொடியும் பொறித்த வீரவர லாறு - எங்கே?
கற்குடைந்து தூக்கிவந்த கனகவிசை யர் - எங்கே?

ஆரியர்கள் தங்கட்கே ஆக்கந் தரும்வகையில்
வீரத்தமிழ் வரலாற்றை வெறும்வரலா நாக்கிவிட்டார்
இந்த நிலைதெரிந்தால் ஏமாறி இருக்கோம், நாம்!
சொந்த இனத்தைச் சோற்றுக்குக் காட்டிக்கொடோம்!
வீடணர்கள் இன்னும் வெற்றியுடன் வாழார்கள்!
பீடழித்த பிரகலா தன்களிங்குப் பிறவார்கள்!

என்னசெய்வ தினிநாம்? எண்ணிப்பார்த் திடல்வேண்டும்
சொன்னசொற் கள்கோடி! சொத்தைகளாய்ப் போயினவே!
எத்தனைச் சான்றோர்கள் இருந்தார்கள் நம்மிடையில்!
எத்தனையோ பெரும்புலவர் இருந்து மறைந்துவிட்டார்!
வள்ளுவர்போல் இன்னொருவர் வருவாரா இனி, இங்கே?
தெள்ளுதமிழ் இளங்கோபோல் சாத்தன்போல் திகழ்வாரா?
பெரியார்போல் இன்னொருவர் பிறந்தினிமேல் வருவாரா!
அரியார்கள் எல்லாரும் அன்றிருந்து மாய்ந்துவிட்டார்!

இனிமேலும் நமையுயர்த்த எவரொருவர் வந்திடுவார்?
முனியாமல் - ஒன்றும் முணுமுணுப்புக் கொள்ளாமல்
சிந்தித்துப் பாருங்கள்! என்னசெய்யப் போகின்றோம்?
முந்தித் தவமிருந்து முத்தமிழ்த்தாய் பெற்றெடுத்து
வந்துசென்றார் எத்தனைப்பேர் வரலாற்றைப் பாருங்கள்!
நொந்துநொந்து சாவதல்லால் நுடங்கிவிட்ட நம்மினத்தைத்
தூக்கி நிறுத்திட, யார் தோன்றிவிடப் போகின்றார்?
மூக்கில் விரல் நிறுத்தி முடிவாக எண்ணிடுங்கள்!

கடந்தகா லத்துக் கதையினையோர் கணநேரம் -
நடந்துவந்த வரலாற்றை - நடக்கின்ற நிகழ்ச்சிகளோ
டொருநிமையம் நன்றாக ஒப்பிட்டுப் பாருங்கள்!
தெருநாய்க்கும் உரிமையுண்டு! திரிகின்ற பறவைக்கெலாம்
வாழ்வுரிமை உண்டு! என்றும் வாழ்விலவை தாழ்ந்ததில்லை!
வீழ்ந்துவிட்ட தமிழரினம் விழிப்பதுதான் என்றைக்கோ?
ஆழமாய்ச் சிந்தியுங்கள்! அன்றிருந்த நிலைகளென்ன?
வாழாமல் நந்தமிழர் வாழ்ந்துவரும் நிலைகளென்ன?
சிந்தித்துச் சிந்தித்து, ஓர் சிறந்த முடிவெடுங்கள்!
வெந்து மடிந்து நாம் வீணாகக் கூடாது!
இவ்விடத்தில் முன்னர்நாம் இழந்த வரலாற்றைச்
செவ்வையாய் நொடிப்பொழுது சிந்தித்துப் பார்த்திடுவோம்!
நாவேந்தும் செந்தமிழின் நல்லினத்தார் இடையினிலே -
மூவேந்தர் காலத்தில் - முழுவதுமாய் அடிமையுற்றுச்
சாவேந்தி வாழ்ந்திருந்து ஆரியத்தால் தந்துவந்த

ஈவேந்திக் கொண்டிருந்தார்; இருபதாம் நூற்றண்டில்
காவேந்த ராய்வந்தார், நம்பெரியார்! அவர் வழியில்
பாவேந்தர் தலைநின்றார்! பாட்டாலே பெரும்புரட்சி
செய்திடவும் சீர்த்தெழுந்தார்; செத்திருந்த தமிழினத்தார்
உய்திபெற் றெழுந்திடவே உணர்ச்சிப் பிழம்பாகச்
செந்தமிழை வெந்தணலில் தோய்த்தெடுத்தே எந்தமிழர்
முத்தி யிழந்திருந்த மொய்ம்புகளை நினைவூட்டி,

**'நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்**
**நான் நான் நான்'** - என்று ஆர்ப்பரித்து வீறார்ந்து,

**"தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்;**
**செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்"**

**"ஆளஎன் தமிழர் ஆட்சியை நிறுவ**
**அல்லல்கள் வரின் ஏற்பேன்;**
**ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு**
**உவப்புடன் நான் சேர்ப்பேன்"**

என்று மொழிந்து எழுந்துநின்றே ஆர்ப்பரித்தார்;
ஒன்றுபட் டியங்கிடவே தமிழ்மொழியும் உண்டென்றார்;
மொழியை முன்வைத்து முழுஇனத்தை இணைத்திடுமோர்
வழியினைக் கண்டுசொன்னார்! வரம்பதுவே என்று சொன்னார்!

**"மொழியென்றால் உயிரின் நரம்பு - நம்**
**முத்தமிழ் மொழியோ தமிழர் வரம்பு"** - என
மொழிவரம்பு கட்டியராய், மூட்டிவிட்டார் செந்தணலை!
விழிக்கூர்மை காட்டி வெளியார்க்குச் செய்தி சொன்னார்!

**"செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க**
**நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்**
**வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததெனக்**
**குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே"**

- என்றபடி கருங்குயிலை எச்சரிக்கை செய்யச்சென்னார்!
அன்றையவர் தொடங்கிவைத்த அழகுதமிழ் ஏட்டிற்குக்
'குயில்' என்று பெயர்வைத்துக் குவலயத்தில் கூவ விட்டார்!

**"எரிகின்ற எங்களின் நெஞ்சுமேல் ஆணை!**
**இனியெங்கள் ஆட்சியிந் நாட்டிலே"** - என முழங்கி,
**"இருக்கும் நிலைமாற்ற! ஒரு புரட்சிமனப் பான்மை**
**ஏற்படுத்தல் கடன்"** என்று எழுத்தாளர்க் கெல்லாம்
கடனுரைத்து அன்னவர்க்குக் கருத்தும் தொடுத் துரைத்தார்

**"உரம்பெய்த செந்தமிழுக் கொன்றிங்கு**
**நேர்ந்ததென உரைக்கக் கேட்டால்,**
**நரம்பெல்லாம் இரும்பாகி, நனவெல்லாம்**
**உணர்வாகி, நண்ணி டாரோ"**

- என்றவா றெந்தமிழர் என்புகளில் நரம்புகளில்
நின்றிருந்த நல்லுணர்வில் நெருப்புணர்வை மூட்டிவிட்டார்!
தூங்கிக் கிடக்கின்ற தமிழர் தொடைகளிலே
நீங்காமல் கயிறுதிரிக் கின்றநெடுங் கூட்டத்தின்
முன்னர் இளைஞர்களை முடுக்கிவிட்டே எழச்சொன்னார்!
பின்னர் வரும்வரிகள் பேரரிமாச் சீற்றமன்றோ?

**"வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!**
**கையிருப்பைக் காட்ட எழுந்திரு!**
**குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?**
**மறிக்கொணாக் கடல்போல் மாப்பகை மேல்விடு!**
**நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு!**
**பொன் மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்!**
**மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!**
**செந்தமிழ்ச் சொல்லால் செயலால்**
**தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை"!**

- பாவேந்தர் பணிக்குப் பைந்தமிழே கைக்கருவி!
நாவூறும் செந்தமிழால் நற்றமிழர் வாழ்வுவரும்!
என்றே உணர்த்த, அவர் எழிற்றமிழை முன்வைத்தே
ஒன்றாயித் தமிழினமும் உறக்கத்தை விட்டெழவே,
பல்லா யிரக்கணக்கில் பாடல்களை முழக்கிநின்றார்!
எல்லாமும் எடுத்தியம்பல் இயலாது தோழர்களே!
திசைமாறிச் செல்லும் இளைஞர்களைத் திசைதிருப்பப்
பிசைந்தெடுத்த வீரத்தில் பைந்தமிழைத் தான்கலந்து
வீறு முழக்கிநின்றார் வெந்தணலைச் சொல்லாக்கி!
பீறி அடிக்கின்ற எரிக்குழம்பைப் பாருங்கள்:

**"... சிறுத்தையே! வெளியில் வா!**
**எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்**
**புலி எனச் செயல்செயப் புறப்படு வெளியில்!**
**சிங்க இளைஞனே திருப்புமுகம்! திற விழி!**
**இங்கு உன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?**
**கைவிரித்து வந்த கயவர் நம்மிடைப்**
**பொய் விரித்து நம் புலன்கள் மறைத்துத்**
**தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி**

நமக்குள உரிமை தமக்கென்பார், எனில்
வழிவழி வந்த உன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற்று எழுக!''

"மனிதரில் நீயும்ஓர் மனிதன்; மண்ணன்று;
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து!! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!
இது உன் வீடு!'' -

பாவேந்தர் பற்றவைத்த பைந்தமிழத் தணல்வரிகள்!
ஏவுகின்ற கட்டளைகள்! எரிபந்தக் கருத்துகள்!

குகைக்குள் ளே தூங்கிக் கொண்டிருக்கும் சிறுத்தைகளைப்
பகைக்கெதிராய் வந்துநிற்கப் பதைபதைத்தே எழுப்புகின்றார்!

சிறுத்தைப் புலிகளைச் சீண்டிஎழுப்பிவிட்ட
திறத்தைப் புரிந்துகொண்ட தினவுப் புலிகளெல்லாம்
இலங்கையிலே ஆர்த்தெழுந்தே ஏறுநடைபோடுவதைக்
கலங்கியே ஓடிவந்த காவல் படையிடத்தில்
கேட்டால் தெரிந்துவிடும்! கிறுக்குப் பிடித்திருக்கும்
வீட்டிலுள்ள பூனைகட்கு வீரம் விளங்கிடுமா?
வாழப்பா டிக்கும் வாயாடி நடிகைக்கும்
கூழுக்குக் கும்பிடிடும் கூனிநிற்கும் தலைவர்க்கும்
எங்கே விளங்கிவிடும்? எப்படித்தான் புரிந்துவிடும்?
சங்கே முழங்கென்று பாவேந்தர் சாற்றுகின்றார்;

"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!''
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு'' என்றார்!

"சீர்த்தியால் அறத்தால் செழுமையால் வையப்
போர்த்திறத்தால் இயற்கை புனைந்த ஓர் உயிர்'' அவர்!
"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாள்'' - என்றே

மெத்த வுணர்ந்துரைத்த மேதையவர்; வீரரவர்!
செயலினையும் மூச்சினையும் செந்தமிழுக் கியக்கியநல்
வயவரவர்! வண்டமிழ்க்கு வாழ்வளித்த வள்ளலவர்!
நைந்தது தமிழென்றால் நைந்ததுஅவர் வாழ்வென்றார்!
உய்ந்தது தமிழென்றால் உய்ந்ததவர் உயிரென்றார்!

- இவ்வாறு தம்முயிரை எழில்தமிழோ டிணைத்தபடி
ஒவ்வாத பதவிக்கும் பணத்துக்கும் உழலாமல்
தமிழாக வே பிறந்து, தமிழாக வே, வாழ்ந்த
தமிழ்ப்புலவர் அவர்போலத் தமிழகத்து வரலாற்றில்
எந்த ஒரு புலவர் எப்பொழுது வாழ்ந்து சென்றார்?
சிந்தித்துப் பாருங்கள்! சிந்தனைக்கும் ஒருவருண்டா?

அவர் கனவு ஒன்றிரண்டா? அவர்விழிப்பு தமிழ்விழிப்பு!
அவர் தூக்கம் கூட அழகு தமிழ்த் தூக்கமன்றோ?
ஊக்கத்தால் மிகையுணர்வால் உரைக்கவில்லை!;

அன்பர்களே!

மாக்களைப்போல் நாம்உறங்கும் வேளையிலே உளறுகின்றோம்;
பாக்களெல்லாம் தமிழ்கொழிக்கும் பாவேந்தர் கூறுகின்றார்!
**“தூக்கத்தில் பிதற்றினாலும் தூய்தமிழ் பிதற்றும் என்வாய்”**
நாமும் இது போல மெச்சுதற்குப் பாடிடலாம்!
ஊமையனை மூங்கையனை உளறுவா யனையெல்லாம்
கவியரசர், பெருங்கவிக்கோ, கவிவாணர் - என்றபடி
ஆவி வருந்திடவே அழைக்கின்ற காலமிது!

நொந்து நொந்து வருந்திப்பன் னூறாண்டுத் தவமிருந்து
செந்தமிழ்த்தாய் பெற்ற செழும்பிள்ளை, பாவேந்தர்!

பாராட்டுக் காக, இப் பாட்டரங்கத் திற்காகச்
சீராட்டுஞ் சொற்களிலே செப்பவில்லை நண்பர்களே!

உண்மை உரைக்கின்றேன்; தமிழை உயிரென்றும்
கண்ணின் மணியென்றும் காக்கின்ற தாயென்றும்
சொன்ன புலவனெவன்?

(- காதலியைத் தான் சொல்வான்?)

- சொல்லியவன் முன்னரில்லை!

பின்னொருவன் இருப்பானேல் - பாவேந்தைப் பின்பற்றி
வயிற்றுப் பிழைப்புக்கு - வாய் வீச்சாய் நம்மிடையில்
கயிற்றைத் திரித்திருப்பான்! காலம் விடைசொல்லும்!

கன்னித் தமிழ்த்தாயைக் கற்பழிக்கும் கயவனெல்லாம்
மின்னித் திரிகின்ற காலமிது! மிகக்கொடுமை!

பாவேந்தர் கதறியவை பழிகாரர்க் கெங்குஉறைக்கும்!
கூவிக்கூவி, அழுதார்! கொஞ்சம் நினைத்தோமா?

"கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு!
காணும் பிறமொழிக ளோ, வெறும் வேம்பு!
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு?
நம்உரி மைதனைக் கடித்ததப் பாம்பு!

தமிழனே! இதுகேளாய்! - உன்பால்
சாற்ற நினைத்தேன் பல நாளாய்!
தமிழனே! இதுகேளாய்!

வஞ்சகர் வந்தவர் தமிழால் செழித்தார்!
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்!
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்!
நாமுணர்ந்தோம் இந்நாள் அவர் அஞ்சி விழித்தார்!
தமிழனே! இதுகேளாய்!

பாவேந்தர் நம்மை விழிப்பித்த பாடலிது!
சாவேந்தும் போதும் தமிழ் வளர்த்துச் சாகாதார்!

வறுமையிலே வெந்து நொந்து வாடியபோ தும்கூட
வெறுமைப் பயல்களைப்போல் வீணரைப்போல் இல்லாமல்
நிமிர்ந்துநின்றே வீழ்ந்த நெடுங்குன்றம் பாவேந்தர்!
திமிர்ந்துரைத்த அன்னவர்தம் பாட்டடிகள் தீர்வு சொல்லும்!

"தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை - என்
தாய் தடுத்தாலும் விடேன்!
எமைநத்து வாய் - என எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும்தொடேன்!"

எதிரியிடும் எச்சிலுக்கே எந்தமிழை விலைபோக்கும்
உதிரிப் புலவரிடை - ஒண்டமிழ்செய் பாவேந்தர்-
தமக்கு விழாவெடுக்கும் தகுதிநமக் குண்டென்று
நமக்குப் படவில்லை; நம் உரைக்கும் வருந்தாதீர்!

அவர்கண்ட கனவென்ன? அவர் கொண்ட கொள்கையென்ன?
இவர்க்கு விழா எடுப்பதெனில் இவை முடிக்க வேண்டாமா?
நாவேந்தர் சொன்னவற்றை நாம்செய்ய வேண்டாமா?
பாவேந்தர் பகர்கின்றர்! பாட்டடிகள் கேளுங்கள்;

**"என்தமிழ் அன்னை துன்பம் நீங்கித்**
**தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்!**
**என்தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்**
**துலங்கிடுதல் காண்பேன்! - தமிழர்**
**நலங்காண் பேன், நான் நானில மீதிலே!"**

என்றைக்கிந்தப் பாட்டடிகள் இலக்குநிறை வேறிடுமோ
அன்றைக்குத்தான் நாமவர்க்கே ஆர்க்கும் விழாவெடுக்க
வேண்டுமென்பேன்! இஃதென் வேண்டுகோள் மட்டுமன்று?

மூண்டெழுந்த புரட்சிப் பாவேந்தர் முழக்கமன்றோ
அதற்குநாம் முதற்கண் அணியமாக வேண்டாமா?
இதற்குமொரு தீர்வைப் பாவேந்தர் எடுத்துரைப்பார்:

சாதி ஒழித்தோமா? இல்லையே! நமக்குள்நாம்
மோதிக் கொண்டன்றோ மூண்டழியப் பார்க்கின்றோம்!
நல்லதமிழ் வளர்த்தோமா? இல்லையே! நாமின்றும்
தில்லியனுக் கஞ்சியன்றோ இந்தியிலே இளிக்கின்றோம்!
கொச்சைத் தமிழில் குரலெடுப்பாய்ப் பேசிவிட்டுப்
பச்சைத் தமிழனென்றும் பைந்தமிழில் அறிஞரென்றும்
உச்சி குளிர்கின்றோம்! ஊரை ஏ மாற்றுகின்றோம்!
மெச்சிடவே பாவேந்தர் செந்தமிழர் மேன்மைக்குக்
காட்டும்வழி தானென்ன? கவனிக்க வேண்டாமா?
நீட்டி முழக்கவில்லை; நின்றிதனைக் கேளுங்கள்!

**"சாதி ஒழித்திடல் ஒன்று! - நல்ல**
**தமிழ் வளர்த்தல் மற்றொன்று!**
**பாதியை நாடு மறந்தால் - மற்ற**
**பாதி துலங்குவ தில்லை!**

இந்த நினைவுகளோ டிங்குநிகழ் பாட்டரங்கை
வந்திருக்கும் சான்றோரே! வணங்கத்தகு தாய்மாரே!
அமைந்திருந்து கேளுங்கள்! அருந்தமிழ்செய் பாவலர்கள்
நமைஉயர்த்திப் போயிருக்கும் நற்றமிழப் பாவேந்தர்-

“பைந்தமிழ்த் தேர்ப்பாகன்” என்றொருவர் பாடுகின்றர்!
“நீடுதுயில் நீக்கிடவே பாடிவந்த நிலா” வென்றே
பாடுவார் மற்றெருவர்; பாவேந்தர் பாடல்களில்

“கற்பனை ஊற்றைக், ‘கருத்தின் புதையல்களைச்”
சொற்படுத்திக் காட்டுகின்றார், சொல்வல்லார் வேறொருவர்!

‘படருகின்ற சாதிக்கு, நம் பாவேந்தர் மருந்தெடுத்துத்
தடவ வருகின்றார் தக்கவொரு பாப்புலவர்!

‘புரட்சிப் புயலென்றும் புதுமைப் புனலென்றும்’
திரட்சித் தமிழ்ச்சொற்கள் தேர்ந்தெடுத்துக் கூறுதிறன்
வல்லஒரு சொல்லாய்வை வாழ்வாய் அமைத்துக் கொண்ட
நல்லஒரு பாப்புலவர் நாட்டிடவும் வந்துள்ளார்!

அன்னவரின் பாடல்களை அமர்ந்து அமைந்திருந்து
உன்னிப்பாய்ச் செவிமடுக்க உங்களைநான் வேண்டுகிறேன்!
முதற்கண்,
கருத்தாயும் செம்புலவர் **கடவூர் மணிமாறன்**
திருத்தமிழ்க்குப் பாவேந்தன் தேர்ப்பாகன் என்பதனை
நிறுத்தாய்ந்து பாவரங்கை நிகழ்த்தித் தொடங்கிவைப்பார்-
பொறுத்தாய்ந்து பாருங்கள்! பூரிப்பில் மிதப்பீர்கள்!

**கருவூர்க் கன்னல்** கலைஞர்க்குச் செல்லப்பிள்ளை
மருவில்லாத் தூய்தமிழில் மணக்கின்ற பாட்டிசைப்பார்!
‘கற்பனை ஊற்றாம் கருத்தின் புதைய’ லென்று
சொற்புனையும் பாவேந்தைச் சோர்வின்றிக் காட்டிடுவார்!

பாவலர் **எழில்வாணன்** பதறாமல் பாட்டிசைக்கும்
ஆவலர்; தூயதமிழ் ஆர்வலர்! பாவேந்தர்,
‘படரும் சாதிக்குத் தந்த படைமருந்தைத்
தடவ வருகின்றார்; தனித்தமிழில் பாடல் சொல்வார்

எல்லாமாய் இருக்கின்ற ஏற்றமுற்ற தமிழ்மொழியின்
சொல்லாய் வறிஞர், சோர்வின்றிப் பாட்டிசைக்கும்
வல்லாளர் பாவேந்தர் வாழ்ந்திருந்த ஊர்க்காரர்!
பொல்லார் நடுக்கமுற, ‘புரட்சிப் புயல்’ என்றும்
‘புதுமைப் புனல்’ என்றும் பாவேந்தைப் புறந்தருவார்
பாவலர் அருளி பொங்கிவிடும் பாச்சுவைபோல்!



பாட்டரங்கம் கூடிப் பலர்பாடி நிற்பதுவும்
கேட்டு அரங்கக் கூரை கிடுகிடுக்கக் கைகொட்டிப்
பாராட்டிப் போவதுமே பார்க்கின்றோம் நாட்டிடையில்!
பாராட்டல் தீதன்று! பாராட்டால் என்னபயன்?

நாமணந்து கொண்டபெண்ணை நான்குபேர் முன்னிறுத்தி
நாமணக்க வாய்மணக்க நல்லோர் செவிமணக்கப்
பாராட்டிப் பேசிப் பலவாய்ப் புகழ்ந்துரைத்துச்
சீராட்டிக் கொண்டிருப்ப தொன்றே சிறப்பாமோ?
இல்லறம்மேற் கொண்டொழுக வேண்டாவா? இல்லறமும்
நல்லறவோர் கண்டு நயந்துரைக்க வேண்டாவா?

அவ்வுன்ரக்குப் பின்னும் அனைத்துலகும் தாமகிழ
ஒவ்விப் பொதுத்தொண்டால் ஒங்குயர வேண்டாவா?
இந்தப் பயன்தானே எல்லாரும் கண்டபயன்!
அந்தப் பயன்தான் அனைத்துக்கும் வேரென்பேன்!

செந்தமிழும் மேன்மையுறச் செப்பினார் பல்வழிகள்.
அந்தவழி கேட்டபின்னும் அப்படியே நின்றமெனில்
பாட்டரங்கால் கண்ட பயனென்ன? மாணவரீர்!
கூட்டுக்குள் ஆவி குடிகொண்ட நாள்தொடங்கி
நாம்தமிழர் என்றே நனியுரைத்துக் கொள்கின்றோம்!
ஆம் தமிழர் தாம்; அதற்கே அட்டியில்லை; ஆனாலும்
எப்படிநாம் வாழ்கின்றோம்? எப்படிநாம் வாழ்ந்திருந்தோம்?
அப்படிக்கு மேலே அரைப்படியைத் தாண்டினமா?